
# TNPSC தேர்வுப் பெட்டகம்

## நடப்பு நிகழ்வுகள் - மே 2021

**www.tnpscthervupettagam.com**






















SHANKAR IAS ACADEMY™
The Best IAS Academy In South India SINCE 2004

Plot No. 1742, I Floor, 18th Main Road,
Anna Nagar, Chenai - 600 040.
Phone: 04-26216435, 4353 3445, Mobile: 9444166435
www.shankariasacademy.com

# உள்ளடக்கம்

TNPSC துளிகள் ..... 11
தமிழ்நாடு செய்திகள் ..... 24
“பைரசோல்” திட்டம் ..... 24
முப்பரிமாணத்தில் அச்சிடப்பட்ட வீடு ..... 24
காவல் கரங்கள் ..... 24
15வது சட்டமன்றம் தமிழக ஆளுநரால் கலைப்பு ..... 25
தமிழ்நாடு அமைச்சரவை 2021 ..... 25
முதல்வர் ஸ்டாலின் அவர்களுடைய முதல் 5 அரசாணைகள் ..... 26
சைலோபிஸ் தீபக்கி ..... 27
கோவிட் – 19 கட்டுப்பாட்டுக் கட்டளை மையம் ..... 27
முக்கிய நியமனங்கள் – தமிழ்நாடு ..... 28
16வது தமிழக சட்டசபை ..... 29
சப்டோலூசெப்ஸ் நீல்கிரியென்சிஸ் ..... 29
பீமா மூங்கில் ..... 30
பிளாட்டிசெப்ஸ் ஜோசெப்பி ..... 31
தேசியச் செய்திகள் ..... 31
E-2025 முன்னெடுப்பு ..... 31
லடாக் உத்வேகமளிக்கப்பட்ட மனம் திட்டம் ..... 32
LAC திட்டம் ..... 32
ஒற்றைப் படிக இறக்கைகள் ..... 32
கர்ப்பிணிப் பெண்களுக்கான உதவி எண் ..... 33
கோவிட்-19 மாதிரிகளைச் சேகரிக்கும் புதிய தொழில்நுட்பம் ..... 33
நிகர பூஜ்ஜிய பசுமை இல்ல வாயு வெளியீடு – விப்ரோ ..... 33
தேர்தல் முடிவுகள் 2021 ..... 33
புதிய சோயா அவரை வகை ..... 34
மாநிலப் பேரிடர் நிவாரண நிதி ..... 35
உணவு தானிய உற்பத்தி ..... 35
முதலாவது பசுமை சூரிய ஆற்றல் உற்பத்தி ஆலை ..... 35
சமுத்திர சேது II நடவடிக்கை ..... 36
P–8I ரக ரோந்து விமானம் ..... 36
உணவுப் பதப்படுத்தும் தொழிற்சாலைகளுக்கான உற்பத்தி ஊக்குவிப்புத் திட்டம் ..... 37
PRAYAAS திட்டம் ..... 37
Road Map 2030 (செயல்திட்டம் 2030) ..... 37
மிகவும் செல்வாக்குமிக்க 100 இந்திய நிறுவனங்கள் - SAIL ..... 38
5G சோதனைகளை மேற்கொள்ளும் தொலைதொடர்பு நிறுவனங்கள் ..... 39
ஆயுஷ் 64 ..... 39

சமூகம் மற்றும் பொருளாதார ரீதியில் பிற்படுத்தப் பட்ட சமுதாயத்தினை அடையாளம் காணுதல் – மத்திய அரசு ............ 39
ஹீலாக் கிப்பன்ஸ் ............ 40
சமூகப் பாதுகாப்பு நெறிமுறை – 142வது பிரிவு ............ 41
மராத்தா சமூகத்தினருக்கான இட ஒதுக்கீடு செல்லாது – உச்சநீதிமன்றம் ............ 41
வாகனங்களில் இருந்த படியே (ட்ரைவ் இன்) தடுப்பூசியைப் பெறுவதற்கான மையம் ............ 42
மிஷன் பாரத் O2 ............ 42
2-DG வாய்வழியாக உட்கொள்ளும் வகையிலான மருந்து ............ 42
மாதிரி காப்பீட்டுக் கிராமங்கள் ............ 43
கோடைக்காலப் பயிர்களின் பரப்பளவு அதிகரிப்பு ............ 43
இந்திய இராணுவத்தின் காவல் படையில் பெண் வீராங்கனைகள் ............ 44
CO-JEET ............ 44
VINCOV – 19 ............ 45
உள்ளார்ந்த டிஜிட்டல் முறையை கொண்ட பாரதம் ............ 45
மேம்படுத்தப் பட்ட வேதிக்கல மின்கல அடுக்குச் சேமிப்பிற்கான தேசிய திட்டம் ............ 46
ஐவர்மெக்டின் ............ 46
கோவிசீல்ட் தடுப்பூசியின் இரு தவணைகளுக்கிடையேயான கால இடைவெளி ............ 47
இந்தியாவில் ஸ்புட்னிக் V ............ 47
டவ்தே புயல் ............ 48
பிரதம மந்திரி கிசான் சம்மன் நிதியின் 8வது தவணை ............ 49
SWAMIH நிதி ............ 49
Go First விமான நிறுவனம் ............ 50
இரயில் தண்டவாளங்களில் 186 யானைகள் கொல்லப்பட்டுள்ளன ............ 50
அரிசி மற்றும் கோதுமை ஏற்றுமதி அதிகரிப்பு ............ 51
நாரதா லஞ்ச வழக்கு ............ 52
பருப்பு வகைகளின் இறக்குமதிக்கான வழிமுறைகள் ............ 52
ஜல் ஜீவன் திட்டம் – முதல் தவணை ............ 52
SAMVEDNA ............ 53
பழங்குடியினர் பள்ளிகளில் டிஜிட்டல் மாற்றம் ............ 54
இந்தியாவின் வேலை நிலை குறித்த அறிக்கை ............ 54
இந்தியாவின் சுகாதார நலன் குறித்த அறிக்கை ............ 55
யுனெஸ்கோவின் தற்காலிக உலகப் பாரம்பரியத் தளங்களின் பட்டியல் ............ 55
EY குறியீட்டில் இந்தியா மூன்றாவது இடம் ............ 56
உலகின் முதலாவது தனியார் டிஜிட்டல் நீதிமன்றம் ............ 56
கோவா கடல்சார் கருத்தரங்கம் – 21 ............ 57
பொருட்காட்சி மற்றும் மாநாட்டு மையங்களுக்கு “உள்கட்டமைப்பு” எனும் தகுதி ............ 57
ஐஎன்எஸ் ராஜ்புத் கப்பல் பணியிலிருந்து விடுவிப்பு ............ 58
DIPCOVAN ............ 58
இந்தியாவில் மேற்கொள்ளப்பட்ட சிறந்த கோவிட் நடவடிக்கைகள் – சுகாதார அமைச்சகம் ............ 59

யாஸ் புயல் ..... 60
கியாசானூர் வன நோய் ..... 60
இந்தியாவில் சிறுத்தைகள் மீண்டும் அறிமுகம் ..... 61
சமூகப் பரவல் ..... 61
உயிரிப் பொருட்கள் பயன்பாடு மீதான தேசியத் திட்டம் ..... 62
இந்தோ-இஸ்ரேலிய வேளாண் செயல்திட்டம் ..... 63
MCA21 பதிப்பு 3.0 ..... 63
கோவாக்சின் தடுப்பு மருந்திற்கு WHO மற்றும் EU ஆகியவற்றின் ஒப்புதல் ..... 63
தீர்வு காணும் மையத் திட்டம் ..... 64
சட்ட அறிக்கை ..... 64
SeHAT OPD தளம் ..... 65
UNITE AWARE ..... 65
பொது தனியார் கூட்டமைப்பு அடிப்படையிலான முதல் ஆராய்ச்சி உலை ..... 65
தாராவி முன்மாதிரி ..... 66
மதிய உணவுத் திட்டம் - நேரடி பயன் பரிமாற்றம் ..... 66
இணையதள விளையாட்டுகளுக்கு GST விதிப்பு – ஆய்வுக் குழு ..... 66
லட்சத்தீவுப் பிரச்சினை ..... 67
சர்வதேசச் செய்திகள் ..... 68
சன்ட்லெர் நல்லரசு குறியீடு ..... 68
கண் இமை அழற்சி நோய் ஒழிப்பு – கேம்பியா ..... 68
உலகளாவிய நோய் தடுப்பு உத்தி – உலக சுகாதார அமைப்பு ..... 69
2021 ஆம் ஆண்டு டைம் இதழின் பட்டியல் ..... 69
உலக இராணுவச் செலவினங்களின் போக்கு - அறிக்கை ..... 70
நோய்த் தடுப்புச் செயல்பாட்டு நிரல்கள் 2030 ..... 70
ஆர்மேனியர்கள் படுகொலை என்பது இனப்படுகொலை ..... 70
இந்தியா – ரஷ்யா 2+2 அமைச்சரவைகளுக்கு இடையேயான பேச்சுவார்த்தை ..... 71
உலகளாவிய மின்சார வாகனக் கண்ணோட்ட அறிக்கை ..... 71
உலகின் மிகப்பெரிய விமானம் ..... 72
விலங்குகளுக்கான கொரோனா தடுப்பூசி ..... 72
உலகளாவிய வன இலக்குகள் அறிக்கை ..... 72
பிராண்ட் பைனான்ஸ் காப்பீடு 100 அறிக்கை – 2021 ..... 73
TPLF - தீவிரவாதக் குழு ..... 73
mRNA – 1273 ..... 73
சிறப்பு 301 அறிக்கை ..... 73
எபோலா பெருந்தொற்றின் முடிவு – காங்கோ ..... 74
SEEDS அமைப்புடன் கைகோர்க்கும் பெப்சிகோ பவுண்டேசன் நிறுவனம் ..... 74
R 21 / மேட்ரிக்ஸ் M ..... 75
உணவு நெருக்கடிகள் மீதான உலகளாவிய அறிக்கை - 2021 ..... 75
பழமையான மனிதக் கல்லறை ..... 75

உணவு விலைக் குறியீடு ........ 76
ஆசிய மேம்பாட்டுக் கண்ணோட்ட அறிக்கை 2021 ........ 76
PESCO அமைப்பில் அமெரிக்காவின் பங்கேற்பு ........ 77
சைனோபார்ம் தடுப்பு மருந்திற்கு அனுமதி – WHO ........ 77
இந்தியா, இஸ்ரேல் மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய நாடுகளின் முத்தரப்பு ஒப்பந்தம் ........ 78
உலகளாவிய பிரதானக் குடியிருப்புக் குறியீடு ........ 78
3வது ஆர்க்டிக் அறிவியல் துறை அமைச்சர்கள் சந்திப்பு ........ 79
சீனாவின் மக்கள்தொகை வளர்ச்சி ........ 80
எவரெஸ்ட்டில் கோவிட்-19 தொற்று வரம்பினை குறிக்கும் எல்லைக் கோடு ........ 80
BRICS அமைப்பின் வேலைவாய்ப்பிற்கான செயற்குழுச் சந்திப்பு ........ 81
பசிபிக் புட்பால் மீன் ........ 81
அமெரிக்காவிலிருந்து கூகுள் பே மூலமாக இந்தியா மற்றும் சிங்கப்பூர் ........ 81
Live Wire – ஹார்லி டேவிட்சன் ........ 82
OCHA அமைப்பின் புதிய தலைவர் - மார்டின் கிரிஃபித்ஸ் ........ 82
செயற்கையான கஞ்சாப் பொருட்களுக்குத் தடை – சீனா ........ 83
எலிகளின் எண்ணிக்கை உயர்வு – ஆஸ்திரேலியா ........ 83
டலடோலோபஸ் கலோரம் ........ 83
2020 ஆம் ஆண்டின் பிரபஞ்ச அழகி – ஆண்ட்ரியா மெஸா ........ 84
வின்ச்கோம்பே விண்கல் ........ 84
இஸ்ரேல் – பாலஸ்தீன மோதல் ........ 85
இரும்புக் கவசம் – இஸ்ரேல் ........ 85
நீண்டநேரம் வேலை செய்தல் பற்றிய ஆய்வு ........ 86
சீனா, வியட்நாம் மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளின் மீது பொருள் குவிப்பிற்கு எதிரான விசாரணை ........ 86
5 ஆழ்கடல் ஆய்வுகள் ........ 87
80 மில்லியன் தடுப்பு மருந்துகளைப் பகிர்ந்தளிக்கும் அமெரிக்க அரசு ........ 88
சுலவேசி தீவு ........ 88
ஜான்சன் & ஜான்சன் – பயோலாஜிகல் இ ........ 88
மிகப்பெரிய அணுசக்தி மின்நிலையம் – ரஷ்யா மற்றும் சீனா ........ 89
ஏழை நாடுகளுக்கு 2 மில்லியன் கோவிட்-19 தடுப்பு மருந்துகள் ........ 89
உலகளாவிய G20 சுகாதார உச்சி மாநாடு – இத்தாலி ........ 89
50 பில்லியன் டாலர் மதிப்பிலான உலகளாவிய தடுப்பூசி வழங்கும் திட்டம் ........ 90
ஊடுருவல் இனங்கள் – ஆப்பிரிக்கா ........ 90
நியிராகோங்கோ எரிமலை ........ 90
முழுவதும் டிஜிட்டல் மயமாக்கப்பட்ட எல்லை – பிரிட்டன் ........ 91
சீனாவின் 17+1 ஒத்துழைப்பு மன்றத்திலிருந்து வெளியேறும் லித்துவேனியா ........ 91
“One Health” (ஒரே மாதிரியான சுகாதாரம்) குழு ........ 92
74வது உலக சுகாதார மன்றம் ........ 92
மாலியின் இராணுவ நடவடிக்கை ........ 93

மாலத்தீவுகளில் இந்தியாவின் புதிய தலைமைத் தூதரகம் ..... 93
உலக சுகாதார அமைப்பின் உயிரி மையம் ..... 93
உலகம் முழுவதுமுள்ள புகைபிடிப்பவர்களின் எண்ணிக்கை ..... 94
பலி பீடம் – சீனா ..... 94
அமெரிக்கா மற்றும் திறந்தநிலை விண்வெளி ஒப்பந்தம் ..... 94
பொருளாதாரச் செய்திகள் ..... 95
இந்திய ரிசர்வ் வங்கியின் புதிய வழிமுறைகள் ..... 95
நிதித்துறையைப் பசுமை மயமாக்குவதற்கான பிணையம் ..... 95
உலகின் பழமையான நீர் – கனடா ..... 96
T. ராபி சங்கர் – 4வது துணை ஆளுநர் ..... 96
ரூ.1.41 லட்சம் கோடி GST வருவாய் ..... 96
உலகளாவிய அந்நிய நேரடி முதலீடு ..... 97
சிறப்பு நீண்டகால ரெப்போ நடவடிக்கை ..... 97
கிரீன் உர்ஜா விருது ..... 97
"I Choose My Number" வசதி ..... 98
2022 ஆம் ஆண்டில் இந்தியப் பொருளாதாரத்தின் வளர்ச்சி ..... 98
இடம்பெயர்வு மற்றும் மேம்பாடு குறித்த அறிக்கை ..... 99
2020 ஆம் ஆண்டில் அதிக அளவில் பணவரவினைப் பெற்ற நாடு - இந்தியா ..... 99
டிஜிகோல்டு ..... 100
மொத்த விற்பனை விலையில் பணவீக்கமானது 10.49% ஆக உயர்வு ..... 101
கௌதம் அதானி – ஆசியாவின் இரண்டாவது பெரும் பணக்காரர் ..... 101
பொதுமக்களிடம் புழக்கத்திலுள்ள பணத்தின் அளவு அதிகரிப்பு ..... 102
இந்தியாவில் 2021 ஆம் ஆண்டு அந்நிய நேரடி முதலீடு ..... 102
'ரிக்கோசெட் தாக்கம்' ..... 103
அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள் ..... 104
சுரோங் ..... 104
அதிவேகக் கணினி – ஐக்கிய ராஜ்ஜியம் ..... 104
NEO – 01 ..... 104
டியான்காங் விண்வெளி நிலையம் ..... 105
பைத்தான் 5 ..... 105
ALISC ..... 105
வெடித்துச் சிதறும் நிலையிலுள்ள முதல் அண்டம் ..... 106
யுரேனியம் – 214 ..... 106
மில்லி விநாடி பல்சர்கள் ..... 106
வெள்ளிக் கோளிலிருந்து வெளிப்படும் ரேடியோ சமிக்ஞைகள் ..... 107
மேஃபிளவர் 400 ..... 107
முதலாவது மரபணு மாற்றப்பட்ட கொசு ..... 108
ஆஸ்டியோசைட்ஸ் ..... 108
ஸ்டார்சிப் SN15 – Space X ..... 108

Lightening Cleanser ... 109
2 நானோமீட்டர் அளவிலான சில்லுகள் தயாரிக்கும் தொழில்நுட்பம் ... 109
இந்தியப் பெருங்கடலில் விழுந்தது சீனாவின் ராக்கெட் ... 110
நிலவிற்கு அனுப்பப்படும் DOGE – 1 செயற்கைக் கோள் ... 110
OSIRIS – Rex ... 111
மிஷன் Ax – 1 ... 111
சங்சே 2C ராக்கெட் ... 112
TIFR நிறுவனத்தின் கார்பன் ஆக்சைடை மாற்றும் செயல்முறை ... 112
பிளாஸ்மா அலை உமிழ்வு – வாயேஜர் 1 ... 113
Deep Shake ... 113
செவ்வாயில் தியான்வென் 1 விண்கலம் ... 114
ஆக்சிஜன் உற்பத்தியில் ஜியோலைட்டுகள் ... 114
செவ்வாய் கிரகத்தின் உத்தோபியா பிளானீசியா ... 114
Jupiter Icy Moon Explorer – ஐரோப்பிய விண்வெளி நிறுவனம் ... 115
சிமோர்க் அதிவேகக் கணினி ... 115
கடலடி கம்பிவடப் பிணையம் ... 116
SPOT ... 116
SBRIS Geo – 5 ஏவுகணை குறித்த எச்சரிக்கை வழங்கும் செயற்கைக்கோள் ... 116
Fake Buster ... 117
அதிஉயர் ஆற்றல் உடைய காமா கதிர்கள் ... 117
VIPER சுற்றித் திரியும் விண்கலம் ... 117
ஆம்போடெரிசின் – பி ... 118
நவீன ஜன்னல் தயாரிப்புப் பொருள் ... 118
Princess of Asturias விருது ... 118
டாக்டர் D. நாகேஷ்வர் ரெட்டி ... 118
சுற்றுச்சூழல் செய்திகள் ... 119
மாவி ஓங்கில்கள் (டால்பின்கள்) ... 119
ஆலிவ் ரெட்லி இன ஆமைகள் (சிற்றாமைகள்) ... 120
குரோசிடுரா நோர்கொண்டமைகா ... 121
சமையல் எண்ணெயிலிருந்து தயாரிக்கப்பட்ட உயிரி எரிபொருள் (பயோ டீசல்) ... 121
மீத்தேன் உமிழ்வு மீதான உலகளாவிய மதிப்பீடு ... 122
தானே சிற்றோடை பிளமிங்கோ சரணாலயம் - சுற்றுச்சூழல் பாதுகாப்பு மண்டலம் ... 122
மோதல் மற்றும் பாதுகாப்பு பற்றிய அறிக்கை ... 123
சீனாவின் பசுமை இல்ல வாயு உமிழ்வு ... 124
2021 ஆம் ஆண்டு புதுப்பிக்கத்தக்க ஆற்றல் சந்தையின் மேம்பாடு ... 124
300 ஆண்டுகளுக்குப் பிறகு அயர்லாந்திற்குத் திரும்பி வரும் நாரைகள் ... 124
சுற்றுச்சூழல் இடர் கண்ணோட்ட அறிக்கை – 2021 ... 125
சுற்றுச்சூழலுக்கு உகந்த மின்னணு தகன அமைப்பு ... 125
2060 ஆம் ஆண்டுக்குள் பருவநிலை அழிவு நிலையை நோக்கி நகரும் அண்டார்டிகா ... 126

சர்வதேச எரிசக்தி முகமையின் சிறப்பு அறிக்கை ....126
உள்நாட்டு இடப்பெயர்வு குறித்த உலகளாவிய அறிக்கை – 2021 ....127
பான்னி புல்வெளிகளில் மேய்ப்பர்களுக்கான உரிமைக்கு தேசியப் பசுமைத் தீர்ப்பாயம் ஆதரவு ....128
பாதுகாக்கப்பட்ட கோள் அறிக்கை 2020 ....128
ஒரு வருடம் முதல் பத்தாண்டு காலம் வரையிலான உலகளாவிய பருவநிலை அறிக்கை ....129
மாநிலச் செய்திகள் ....129
மின்னணுப் பஞ்சாயத்து புரஷ்கர் விருது 2021 ....129
மேகாலயாவில் சௌரோபோட்ஸ் டைனோசரின் எலும்புகள் ....130
அசாமில் நிலநடுக்கம் ....130
கிளைபோசேட்டு மருந்துகளுக்கு தடை – தெலுங்கானா ....131
வனத் தடாகங்கள் (குளங்கள்) – இமாச்சலப் பிரதேசம் ....131
ஹர் கர் ஜல் – புதுச்சேரி ....132
மிஷன் ஹவுஸ்லா ....132
குரங்குகளின் கணக்கெடுப்பு – ஹரியானா ....133
மகாராஷ்டிரா மிஷன் ஆக்சிஜன் திட்டம் ....133
COVAX வசதி – பஞ்சாப் ....133
கருப்புப் பூஞ்சை நோய் – ஹரியானா ....134
முதலாவது வேளாண் பொருள் ஏற்றுமதி வசதி வழங்கும் மையம் ....134
சட்டமேலவை – மேற்கு வங்காளம் ....135
சுகாதாரம் மற்றும் ஆரோக்கிய நல மையங்களை நிறுவுவதில் கர்நாடகா முதலிடம் ....135
பொலிவுறு நகரங்கள் திட்டம் – ஜார்க்கண்ட் ....135
ஆயுஷ்மான் பாரத் – பிரதான் மந்திரி ஜன் ஆரோக்கிய யோஜனா ஆரோக்யஸ்ரீ ....135
கோவிட்-19 சம்பந்தப்பட்ட மருத்துவப் பொருட்கள் மீதான GST வரிகளைத் திரும்பச் செலுத்துதல் ....136
வத்சல்ய யோஜனா ....136
ஆப்பிரிக்க ஊதா நிறப்பூச் செடி – மிசோரம் ....136
புல்வாய் மான் – ஒடிசா ....137
பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள் ....138
Where abouts – ஜீம்பா லஹிரி ....138
ஆஸ்கார் விருது 2021 ....138
மைக்கேல் கோலின்ஸ் மறைவு ....139
சோலி ஜஹாங்கீர் சொராப்ஜி மறைவு ....139
"Order of Rising Sun" விருது ....140
குரு தேக் பகதூரின் 400வது பிரகாஷ் பூரப் ....140
நீதிபதி பிரஃபுல்லா சந்திர பந்த் ....140
சந்த்ரோ தோமர் ....141
யுனெஸ்கோ உலகப் பத்திரிக்கைச் சுதந்திர விருது 2021 ....141
V. கல்யாணம் காலமானார் ....141
அர்லைன் பச்த் குளோபல் விஷன் விருது 2021 ....142
டாக்டர் பிலிப்போஸ் மார் கிரைஸ்டோம் காலமானார் ....143

கமி ரீட்டா ஷெர்பா ....143
அனுபம் கேர் – சிறந்த நடிகர் விருது ....144
மனோஜ் தாஸ் சர்வதேச இலக்கிய விருது ....144
K.R. கௌரி அம்மா மறைவு ....144
15வது சேக் சையது புத்தக விருது ....145
2021 ஆம் ஆண்டு உலக உணவுப் பரிசு ....146
நுக்லு ஃபோம் – விட்லே விருது ....146
V. சந்திரசேகர் மறைவு ....147
ஜசிந்தா அர்டெர்ன் ....147
மிங்க்மா தென்ஜி செர்பா ....148
எழுத்தாளர் கி. ராஜநாராயணன் ....148
பேராசிரியர் M.S. நரசிம்மன் ....149
International Invincible Gold Medal – டாக்டர் ரமேஷ் பொக்ரியால் ....150
புமோரி மலையில் ஏறிய முதலாவது இந்தியப் பெண்கள் ....150
உலக நடனக் கலை விருது 2020 ....150
சுந்தர்லால் பகுகுணா ....150
டெம்பிள்டன் விருது 2021 ....151
எட்டியெனே கிளிகிச் விருது ....152
நரீந்தர் பத்ரா ....152
இந்திய உயிரிப் பல்லுயிர்ப் பெருக்க விருதுகள் 2021 ....152
யுவான் லாங்பிங் ....153
ஒலிம்பிக் தடகள வீரரான லீ இவான்ஸ் காலமானார் ....153
கோல்டு ஸ்டீவி விருது 2021 – Spice Health ....154
ஓஎன்வி விருது ....154
முதலாவது விமானச் சோதனை ஓட்டப் பொறியாளர் ....154
விளையாட்டுச் செய்திகள் ....155
உலக ஸ்னூக்கர் சாம்பியன் ....155
அர்ஷன் நக்வஷ்வல்லா ....155
2021 ஆம் ஆண்டு லாரஸ் உலக விளையாட்டு விருதுகள் ....156
மருத்துவ ஆக்சிஜன்களை ஒதுக்கீடு செய்வதற்கான சிறப்பு தேசியப் படை ....157
இத்தாலிய ஓபன் 2021 ....157
கோபி பிரையன்ட் – ஹால் ஆஃப் ஃபேம் ....158
17 வயதிற்குட்பட்ட மகளிர் FIFA உலகக் கோப்பை – 2022 ....158
டார்கெட் ஒலிம்பிக் அரங்க திட்டம் ....158
2021 ஆம் ஆண்டு PGA சாம்பியன்சிப் ....159
சாங் இன் ஹங் ....159
முக்கிய தினங்கள் ....160
மகாராஷ்டிரா மற்றும் குஜராத் தினம் – மே 01 ....160
சர்வதேச உழைப்பாளர்கள் தினம் – மே 1 ....161

உலக சிரிப்பு தினம் – மே 02 ... 161
உலக பத்திரிக்கைச் சுதந்திர தினம் – மே 03 ... 162
சர்வதேச தீயணைப்பு வீரர்கள் தினம் – மே 04 ... 162
உலக ஆஸ்துமா தினம் – மே 04 ... 163
உலக கை ஆரோக்கிய தினம் – மே 05 ... 163
சர்வதேச மருத்துவத் தாதிகள் தினம் – மே 05 ... 164
சர்வதேச உணவுக் கட்டுப்பாடு இல்லா தினம் – மே 06 ... 164
உலக போர்ச்சுக்கீசிய மொழி தினம் – மே 05 ... 164
உலக தடகள தினம் – மே 07 ... 165
எல்லை சாலைகள் அமைப்பின் 61வது எழுச்சி தினம் – மே 07 ... 165
உலக செஞ்சிலுவை மற்றும் செம்பிறை நாள் – மே 08 ... 166
உலக தலசீமியா தினம் – மே 08 ... 167
சர்வதேச அர்கேனியா தினம் – மே 10 ... 167
தேசியத் தொழில்நுட்ப தினம் – மே 11 ... 168
சர்வதேச செவிலியர்கள் தினம் – மே 12 ... 168
சர்வதேச குடும்பங்கள் தினம் – மே 15 ... 169
உலக வேளாண் சுற்றுலா தினம் – மே 16 ... 169
சிக்கிம் மாநில நிறுவன தினம் – மே 16 ... 170
தேசிய டெங்கு தினம் – மே 16 ... 170
உலகத் தொலைதொடர்பு மற்றும் தகவல் சமூக தினம் – மே 17 ... 171
உலக உயர் இரத்த அழுத்த தினம் – மே 17 ... 171
ஐ.நா.வின் உலகளாவிய சாலைப் பாதுகாப்பு வாரம் (மே 17 – 23) ... 172
ஹோமோஃபோபியா, டிரான்ஸ்போபியா, பைஃபோபியா ஆகியவற்றிற்கு எதிரான சர்வதேச தினம் – மே 17 ... 173
சர்வதேச அருங்காட்சியக தினம் – மே 18 ... 173
உலக தேனீ தினம் – மே 20 ... 174
சர்வதேச தேநீர் தினம் – மே 21 ... 174
பேச்சுவார்த்தை மற்றும் மேம்பாட்டிற்கான கலாச்சாரப் பன்முகத் தன்மையின் உலக தினம் – மே 21 ... 175
தேசிய தீவிரவாத எதிர்ப்பு தினம் – மே 21 ... 175
அருகி வரும் இனங்களுக்கான தேசிய தினம் – மே 21 ... 176
உலகக் கடல் ஆமைகள் தினம் – மே 23 ... 176
சர்வதேச மகப்பேறியல் புழை ஒழிப்பு தினம் – மே 23 ... 177
காணாமல் போன குழந்தைகளுக்கான சர்வதேச தினம் – மே 25 ... 177
உலக தைராய்டு தினம் – மே 25 ... 177
வெசாக் தினம் – மே 26 ... 178
பெண்களின் ஆரோக்கியத்திற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான சர்வதேச தினம் – மே 28 ... 178
உலக மாதவிடாய் சுகாதார தினம் – மே 28 ... 178
உலக பசி தினம் – மே 28 ... 179

சர்வதேச எவரெஸ்ட் தினம் – மே 29 ........ 179
கோவா மாநில நிறுவன நாள் – மே 30........ 179
இதரச் செய்திகள் ........ 180
DANTAK திட்டம் ........ 180
சி.டி. மதிப்பு ........ 180
பதப்படுத்தப்பட்ட கர்ப்பிணிப் பெண்ணின் உடல் ........ 181
புவியினுடைய அச்சில் ஏற்படும் மாற்றத்தில் அதிகரிப்பு ........ 181
SUTRA மாதிரி ........ 182
பனிச் சிறுத்தையின் வாழ்விடங்கள் ........ 182
வெள்ளைப் பூஞ்சை நோய் ........ 183
மஞ்சள் பூஞ்சை நோய் ........ 184

# TNPSC துளிகள்

- காலநிலை மாற்றம் மீதான பாரிஸ் உடன்படிக்கையினை அமல்படுத்துவதற்கு ஆதரவு அளிப்பதற்காக எண்ணெய் மற்றும் எரிவாயு உற்பத்தியாளர்களுக்கான "நிகர பூஜ்ஜிய உற்பத்தியாளர்கள் மன்றத்தினை" (Net Zero Producers Forum) சவுதி அரேபியா, அமெரிக்கா, கனடா, நார்வே மற்றும் கத்தார் ஆகிய நாடுகள் அமைக்க உள்ளன.
- 'டீப் டைம்' (Deep Time - ஆழ்நேர திட்டம்) என்ற திட்டத்தின் ஓர் அங்கமாக பிரான்சில் 15 நபர்கள் கொண்ட குழு ஒன்று 40 நாட்கள் மற்றும் 40 இரவுகளுக்கு ஒரு குகையினுள் ஆய்வு செய்தனர்.
    - வாழ்க்கை நிலைகள் மற்றும் சூழ்நிலைகளில் ஏற்படும் மாற்றங்களோடு மக்கள் எவ்வாறு ஒன்றிணைந்து வாழ்கின்றனர் என்பதைப் பற்றிய ஆய்வினை மேற்கொள்வதே "டீப் டைம்" திட்டத்தின் நோக்கமாகும்.
- இந்தோ-பசிபிக் பகுதிகளில் விநியோகத் தொடர் சங்கிலியில் சீனாவின் ஆதிக்கத்திற்கு எதிராக இந்தியா, ஜப்பான் மற்றும் ஆஸ்திரேலியாவின் வர்த்தக அமைச்சர்கள் இணைந்து விநியோகத் தொடர் சங்கிலி நெகிழ்திறன் என்ற முன்னெடுப்பினை (Supply Chain Resilience Initiative – SCRI) தொடங்கியுள்ளனர்.
    - எஸ்.சி.ஆர்.ஐ முன்னெடுப்பானது தனது பிராந்தியத்தில் வலுவான, நிலையான, சீரான மற்றும் அனைத்தையும் உள்ளடக்கிய வளர்ச்சியை அடைவதற்கான ஒரு நோக்கத்துடன் விநியோகத் தொடர் சங்கிலி நெகிழ்திறனை மேம்படுத்தச் செய்வதற்கான ஒரு பலன் ஈட்டும் சுழற்சி முறையை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- வைசாலி S. ஹிவாஷே என்பவர், இந்தியாவின் எல்லைப்புறச் சாலைகள் அமைப்பின் (BRO) தலைமை அலுவலராக நியமிக்கப்பட உள்ள முதல் பெண் அலுவலர் ஆவார்.
    - இந்தோ-சீன எல்லைப் பகுதியின் சாலைகள் மூலம் இரு பகுதிகளுக்கும் இடையே தொடர்பினை உருவாக்குவதற்கான பொறுப்பு இவருக்கு வழங்கப்படும்.
- சிவாலிக் சிறு நிதி வங்கியானது 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் 26 முதல் ஒரு சிறு நிதி வங்கியாகச் செயல்படத் தொடங்கியுள்ளது.
    - சிறு நிதி வங்கியாக (Small Finance Bank – SFB) செயல்படுவதற்கு இந்திய ரிசர்வ் வங்கியிலிருந்து உரிமம் பெற்ற இந்தியாவின் முதல் நகர்ப்புற கூட்டுறவு வங்கி இதுவாகும்.
- பெங்களூருவிலுள்ள வனவிலங்கு ஆய்வு மையத்தில் (Centre for Wildlife Studies – CWS) தலைமை வளங்காப்பு அறிவியலாளராக பணிபுரியும் டாக்டர் கீர்த்தி K. கரந்த் அவர்கள், 2021 ஆம் ஆண்டிற்கான வனக் கண்டுபிடிப்பாளர் விருதினைப் பெற்ற முதல் இந்திய மற்றும் ஆசியப் பெண்மணி ஆவார்.
    - இந்த விருது "WILD ELEMENTS FOUNDATIONS" எனும் நிறுவனத்தால் வழங்கப் படுகிறது.
- தானியங்கு வாகனங்களை குறைவான வேகத்தில் இயக்குவதற்கான கட்டுப்பாட்டுகளை அறிவித்த முதல் நாடு ஐக்கிய ராஜ்ஜியமாகும்.
    - அந்த வேக வரம்பானது மணிக்கு 37 மைல்கள் எனவும் அவை சாலையின் ஒரு பாதைக் கோட்டில் (lane) மட்டுமே இயங்க வேண்டும் எனவும் சில கட்டுப்பாடுகள் விதிக்கப் பட்டுள்ளன.

- ❖ அமெரிக்காவின் மக்கள் தொகையானது 7.4% உயர்ந்துள்ளதாக மத்திய அமெரிக்க வாரியம் (Central Bureau of United States) சமீபத்தில் அறிவித்துள்ளது.
  - ○ பெரும் பொருளாதார வீழ்ச்சி காலத்திற்குப் பிறகு அமெரிக்க மக்கள்தொகையில் ஏற்பட்ட இரண்டாவது குறைவான வளர்ச்சி வீதம் இதுவாகும்.
- ❖ கௌரி அசோகன் அவர்களின் தலைமையில் பெண்களுக்கான மாநில ஆணையத்தினை தமிழக அரசு சமீபத்தில் மீண்டும் அமைத்துள்ளது.
  - ○ இந்த ஆணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் மூன்று ஆண்டு காலத்திற்குப் பதவியிலிருப்பர்.
- ❖ ஏழை மக்களின் ஆரோக்கியத்தையும் நல்வாழ்வையும் மேம்படுத்துவதற்காகவும் அவர்களுக்குப் பயனளிக்கும் வகையில் காப்பீட்டு உதவிகளை வழங்குவதற்காகவும் வேண்டி ஏப்ரல் 30 அன்று ஒவ்வொரு ஆண்டும் ஆயுஷ்மான் பாரத் திவாஸ் கொண்டாடப் படுகிறது.
  - ○ 2018 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஆயுஷ்மான் பாரத் திட்டம் தொடங்கப்பட்டது.
- ❖ வட அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பானது (NATO - North Atlantic Treaty Organization) அல்பேனியாவில் “DEFENDER – Europe 21” எனப்படும் கூட்டு இராணுவப் பயிற்சியினைத் தொடங்கியுள்ளது.
  - ○ மேற்கு பால்கன் நாட்டில் இரண்டாம் உலகப்போருக்குப் பின்னர் நடைபெறும் இது போன்ற மிகப்பெரிய முதலாவது இராணுவப் பயிற்சியானது அமெரிக்கா மற்றும் மற்ற பிற நாடுகளின் ஆயிரக்கணக்கான இராணுவப் படைகளுடன் தொடங்கப் பட்டுள்ளது.
- ❖ ஐக்கிய நாடுகள் அமைப்பினால் சூரை மீனின் (tuna fish) முக்கியத்துவம் பற்றிய ஒரு விழிப்புணர்வினை ஏற்படுத்துவதற்காக மே 02 ஆம் தேதியானது உலகளவில் உலக சூரை மீன் தினமாக அனுசரிக்கப்படுகிறது.
  - ○ இந்த தினம் முதல்முறையாக 2017 ஆம் ஆண்டில் கடைபிடிக்கப்பட்டது.
- ❖ பாதசாரிகளுக்கான உலகின் மிகவும் நீளமான தொங்கும் பாலமானது போர்ச்சுகல் நாட்டில் திறக்கப் பட்டுள்ளது.
  - ○ இது பைவா என்ற நதிக்கு மேல் 175 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ளது.
- ❖ HCL டெக்னாலஜிஸ் நிறுவனத்தின் ரூ.2.62 டிரில்லியன் மதிப்பிலான சந்தை மூலதனத்தை வீழ்த்தி ரூ.2.65 டிரில்லியன் மதிப்பிலான சந்தை மூலதனத்துடன் இந்தியாவின் மூன்றாவது மிகப்பெரிய தகவல் தொழில்நுட்பச் சேவை நிறுவனமாக மீண்டும் விப்ரோ நிறுவனம் உருவெடுத்துள்ளது.
  - ○ ரூ.11.51 டிரில்லியன் மதிப்பிலான சந்தை மூலதனத்துடன் TCS நிறுவனம் தொடர்ந்து இப்பட்டியலில் முதலிடத்தில் இருந்து வருகிறது, அதனையடுத்து இன்போசிஸ் நிறுவனம் உள்ளது.
- ❖ வாசிங்டன் டிசி நகரத்தை அமெரிக்காவின் 51வது மாகாணமாக அறிவிப்பதற்கான ஒரு மசோதாவினை நிறைவேற்ற அமெரிக்க காங்கிரசின் கீழவை (House of representatives) ஒப்புதல் அளித்தது.
  - ○ இந்த மசோதா இன்னும் மேலவையில் (Senate) நிறைவேற்றப்படவில்லை.
- ❖ தொழிற்புரட்சியின் சமயத்தில் அடையாளம் காணப் பெறாத சில மாபெரும் வீரர்களின் கடின உழைப்பிற்கு அங்கீகாரம் வழங்க வேண்டி மே 04 ஆம் தேதியன்று சுரங்கத் தொழிலாளர்கள் தினமானது கொண்டாடப்படுகிறது.

- நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளர்களுக்குப் பாராட்டுகளை வழங்கவும் அவர்களின் சாதனைகளுக்கு வெகுவாக மரியாதை அளிக்கவும் வேண்டி இந்தத் தினமானது கொண்டாடப் படுகிறது.

❖ ஹைதராபாத்தின் நேரு விலங்கியல் பூங்காவில் வாழும் சுமார் எட்டு ஆசியச் சிங்கங்களுக்கு கொரோனா தொற்று இருப்பதாக உறுதியாகியுள்ளது.

- இந்தியாவில் மனிதனிடமிருந்து விலங்கிற்கு வைரஸ் தொற்று பரவியுள்ளதாகக் கண்டுபிடிக்கப் படுவது இதுவே முதல்முறையாகும்.

❖ ஜம்மு & காஷ்மீரின் முன்னாள் ஆளுநரான ஜெக்மோகன் மல்ஹோத்ரா காலமானார்.

- ஜெக்மோகன் 1984 முதல் 1989 வரை ஒரு முறையும், பின்னர் 1990 ஆம் ஆண்டு ஜனவரி முதல் 1990 ஆம் ஆண்டு மே வரையிலும் என இரண்டு முறை ஜம்மு & காஷ்மீரின் ஆளுநராக பணியாற்றி உள்ளார்.

❖ தொல்பொருள்களை ஆய்வு செய்யும் சர்வதேச தொல்லியல் வல்லுநர்கள் குழு ஒன்று ஹட்ரோசார் (hadrosaur) / வாத்தினைப் போன்ற அலகினைக் கொண்ட டைனோசரின் புதிய பேரினம் மற்றும் சிற்றினங்களை அடையாளம் கண்டுள்ளனர்.

- இந்த உயிரினத்திற்கு யமடோசரஸ் இசாநாகி (Yamatosaurus izanagii) எனப் பெயரிடப் பட்டுள்ளது.

❖ புத்னியிலுள்ள (மத்தியப் பிரதேசம்) மத்திய வேளாண் இயந்திரப் பயிற்சி மற்றும் சோதனை நிறுவனமானது தனது முதல் மின்சார டிராக்டரினை (இழுவை வாகனம்) பரிசோதித்துள்ளது.

- மற்ற வகை டிராக்டர்களை விட இந்த மின்சார டிராக்டர்கள் சுற்றுச்சூழலுக்கு மிகவும் ஏற்றதாக இருக்கும்.

❖ 2020 ஆம் ஆண்டில் இந்தியாவும் தென் ஆப்பிரிக்காவும் உலக வர்த்தக அமைப்பில் (World Trade Organisation – WTO) அறிவுசார் சொத்துரிமைகளின் மீதான் தள்ளுபடிக்கான கோரிக்கையை முன்மொழிந்து உள்ளன.

- உலகளவில் கோவிட்- 19 தடுப்பு மருந்துகள் மீதான காப்புரிமையினைத் தள்ளுபடி செய்வதற்கு ஆதரவளிப்பதாகவும் அது பற்றி உலக வர்த்தக அமைப்பில் பேச்சு வார்த்தையை மேற்கொள்ள இருப்பதாகவும் தற்போதைய அமெரிக்க அதிபரான ஜோ பைடனின் நிர்வாகமானது அறிவித்துள்ளது.

❖ ஹாலிவுட்டின் நட்சத்திர நடிகரான டைலர் பெர்ரி என்பவர் 2021 ஆம் ஆண்டு ஆஸ்கர் விருது வழங்கும் விழாவில் ஜீன் ஹெர்சோல்ட் மனிதநேய விருதினைப் பெற்றுள்ளார்.

- இவர் கொரோனா வைரஸ் பெருந்தொற்றுக் காலங்களில் பொழுதுபோக்கு (திரைப்படதம்) துறையின் மீட்சிக்கு ஒரு முதன்மை ஆதரவாளராக திகழ்கிறார்.

❖ இந்தியாவின் வெளியுறவுத் துறை அமைச்சரான S. ஜெய்சங்கர் அவர்கள் லண்டனில் காணொலி மூலம் நடைபெற்ற G7 வெளியுறவுத் துறை அமைச்சர்கள் சந்திப்பில் பங்கேற்றார்.

- அவர் இந்த நிகழ்ச்சி நிரலில் COVAX எனப்படும் உலகளாவிய தடுப்பு மருந்து விநியோகத் திட்டத்திற்கான ஆதரவை அதிகரிப்பது குறித்தும் பெண்களின் கல்வி, தடுப்புக் காவல் மற்றும் ஊடக சுதந்திரம் போன்றவற்றோடுத் தடுப்பு மருந்துகளை நியாயமான முறையில் பெறுவதை உறுதி செய்வது குறித்தும் விவாதித்தார்.

❖ சீனா-ஆஸ்திரேலியா உத்திசார் பொருளாதார பேச்சுவார்த்தையின் கீழான அனைத்து நடவடிக்கைகளையும் சீனா “காலவரையரையின்றி” நிறுத்தியுள்ளது.

- சமீபத்திய வர்த்தக தடைகளானது மதுபானம், பார்லி மற்றும் நிலக்கரி உள்ளிட்ட ஆஸ்திரேலியாவின் பல முக்கிய தொழில்துறைகளை வெகுவாகப் பாதித்துள்ளது.

❖ உயிரைக் கொல்லும் மருந்து ஊசிகள் கையில் இருப்பில் இல்லாத போது துப்பாக்கிச் சுடும் வீரர்களைக் கொண்டு கைதிகளின் மரண தண்டனையை நிறைவேற்றுவதை அனுமதிக்கும் மசோதா ஒன்றினை தெற்கு கரோலினாவின் சட்டமன்ற உறுப்பினர்கள் இயற்றி உள்ளனர்.

- இந்த மசோதாவானது சட்டமாக நிறைவேற்றப்பட்டால், மரண தண்டனையை விதிப்பதற்கான முறைகளுள் ஒன்றாக இந்த முறையை ஏற்றுக் கொண்ட அமெரிக்காவின் 4வது மாகாணமாக தெற்கு கரோலினாவானது உருவெடுக்கும்.

❖ G7 வெளியுறவுத் துறை அமைச்சர்களின் சந்திப்பின் பின்னணியில் இந்தியா-பிரான்சு-ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளின் வெளியுறவு அமைச்சரவைகளின் முதலாவது முத்தரப்புப் பேச்சுவார்த்தையானது ஐக்கிய ராஜ்ஜியத்திலுள்ள லண்டனில் நடத்தப் பட்டது.

- இந்தியாவின் வெளியுறவு விவகாரங்கள் துறை அமைச்சரான டாக்டர் S. ஜெய்சங்கர், பிரான்சின் ஐரோப்பிய மற்றும் வெளியுறவு விவகாரங்கள் துறை அமைச்சரான திரு. ஜீன் யவ்ஸ் லே டிரையன் மற்றும் ஆஸ்திரேலியாவின் வெளியுறவு விவகாரங்கள் துறை அமைச்சரான மேலவை உறுப்பினர் மரைஸ் பெய்ன் ஆகியோர் இந்த சந்திப்பில் பங்கேற்றனர்.

❖ ஹீமாந்த் பிஸ்வா சர்மா அவர்கள் அசாமின் 15வது முதலமைச்சராகப் பதவி ஏற்க உள்ளார்.

- இவர் தற்போதைய முதல்வரான சர்பானந்தா சோனோவால் அவர்களின் ஆட்சிக் காலம் முடிவடைந்ததை அடுத்து முதல்வர் பொறுப்பினை ஏற்க உள்ளார்.

❖ ஐக்கிய நாடுகள் அமைப்பானது ஒவ்வொரு ஆண்டும் மே 08 மற்றும் 09 ஆகிய தேதிகளை இரண்டாம் உலகப் போரின் போது உயிரிழந்தவர்களின் நினைவு மற்றும் நல்லிணக்க நாளாக கடைபிடித்து வருகிறது.

- இரண்டாம் உலகப் போரினால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் இந்த தினத்தில் அஞ்சலி செலுத்தப் படுகிறது. இந்த ஆண்டானது இரண்டாம் உலகப்போரின் 76வது நிறைவு ஆண்டு ஆகும்.

❖ 2021 ஆம் ஆண்டின் உலக இடம்பெயரும் பறவைகள் தினமானது உலகம் முழுவதும் மே 08 ஆம் தேதியன்று அனுசரிக்கப்பட்டது.

- இடம்பெயரும் பறவைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும் அவற்றைப் பாதுகாப்பதில் சர்வதேச நாடுகளின் ஒத்துழைப்பினுடைய முக்கியத்துவத்தை உணர்த்துவதுமே இந்த தினம் அனுசரிக்கப் படுவதன் நோக்கமாகும்.

❖ இரண்டாம் உலகப் போரில் ஜெர்மானியர்கள் சரணடைந்ததை நினைவு கூறும் வகையில் ரஷ்ய நாட்டில் வெற்றி தினமானது (Victory day) கொண்டாடப் படுகிறது.

- 2021 ஆம் ஆண்டு மே 09 ஆம் தேதியானது இரண்டாம் உலகப் போரில் ரஷ்யா வெற்றி பெற்றதன் 76வது ஆண்டு நிறைவினைக் குறிக்கிறது.

❖ இந்தோனேசியாவிலுள்ள சினாபங்க் எரிமலையானது சமீபத்தில் வெடித்தது.

- கிட்டத்தட்ட 400 ஆண்டுகளாக செயலற்ற நிலையில் இருந்த இந்த எரிமலையானது 2010 ஆம் ஆண்டிலிருந்து வெடிக்கத் தொடங்கியுள்ளது.

- அசாம் மாநிலப் பேரிடர் மேலாண்மை அமைப்பு மற்றும் யுனிசெப் (UNICEF) ஆகியவை ஒன்றிணைந்து இணையதள வெள்ள முன்னெச்சரிக்கை (முன்னறிவிப்பு) முறை ஒன்றினை உருவாக்கியுள்ளன.
  - வெள்ளத்தின் போது ஏற்படும் தாக்கங்களின் குறிகாட்டிகளைக் கண்டறிவதற்கு டிஜிட்டல் முன்னெச்சரிக்கை முறையினைப் பின்பற்றும் முதலாவது மாநிலமாக அசாம் மாநிலம் திகழ்கிறது.
- ஃபைசர்-பயோன்டெக் எனும் கோவிட்-19 தடுப்பு மருந்தினை 12 முதல் 15 வயது வரையிலான குழந்தைகளுக்குச் செலுத்துவதற்காக அமெரிக்காவின் உணவு மற்றும் மருந்து நிர்வாக அமைப்பானது அதன் அவசரகாலப் பயன்பாட்டிற்கான அனுமதியை வழங்கியுள்ளது.
- முன்னாள் தமிழக முதலமைச்சரும் அ.இ.அ.தி.மு.க கட்சியின் இணை ஒருங்கிணைப்பாளருமான எடப்பாடி K. பழனிச்சாமி அவர்கள் தமிழக சட்டசபையின் எதிர்க் கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- தமிழக அரசின் தலைமைக் கொறடாவாக கோவி. செழியன் அவர்கள் நியமிக்கப் பட்டுள்ளார்.
  - இவர் தி.மு.க கட்சியினைச் சேர்ந்த திருவிடைமருதூர் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராவார்.
- ஒருங்கிணைந்த முப்படைகளின் (மருத்துவம்) துணைத் தளபதியான கனித்கர் அவர்கள் ஆயுதப் படைகளிலேயே மூன்று நட்சத்திரத் தகுதியுடைய படைத் தலைவர் என்ற பொறுப்பை ஏற்ற மூன்றாவது பெண் ஆவார்.
  - துணைக் கடற்படைத் தலைவரான டாக்டர். புனிதா அரோரோ மற்றும் விமானப் படைத் தலைவர் பத்மாவதி பந்தோபத்யாய் ஆகியோர் இந்த வகையிலான பொறுப்பினை ஏற்ற முதல் இரண்டு பெண்மணிகளாவர்.
- 2021 ஆம் ஆண்டில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் அமைப்பின் வருடாந்திர நினைவு நாளில் ஐ.நா.வின் பொதுச் செயலாளரான அண்டோனியா குட்டெரஸ் அவர்கள் ஐ.நா. அமைப்பிற்கான இந்தியாவின் அமைதிக் காப்புப் பணி அதிகாரியான யுவராஜ் சிங் அவர்களுக்கு அஞ்சலி செலுத்தினார்.
  - அவர் 2020 ஆம் ஆண்டில் தனது கடமையை ஆற்றிக் கொண்டிருக்கும் தருவாயில் உயிரிழந்தார்.
- கோவிட்-19 பெருந்தொற்றுக் காலங்களில் தங்களது அத்தியாவசிய தேவைகளைப் பெற சிரமப்படும் முதியவர்க்களுக்கு உதவுவதற்காக டெல்லி காவல் துறையானது ஒரு உதவி எண்ணினை அறிவித்துள்ளது.
  - தேசியத் தலைநகரின் தென்மாவட்டக் காவல் துறையானது முதியவர்களுக்காக COVI Van என்பதின் ஒரு உதவி எண்ணினை (012 – 26241077) அறிவித்துள்ளது.
- பாரத் ஸ்டேட் வங்கியின் பத்மகுமார் மாதவன் நாயர் அவர்கள் மோசமான வங்கி என்ற ஒரு வங்கியின் தலைமை நிர்வாக அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.
  - மோசமான வங்கி என்பது தேசியச் சொத்து மறுசீரமைப்பு நிறுவனத்தினால் (National Asset Reconstruction Company – NARC) உருவாக்கப்பட்டுள்ள நிறுவனமாகும்.
- நேபாளப் பிரதமர் சர்மா ஒலி அவர்கள் நம்பிக்கை வாக்கெடுப்பில் தோல்வி அடைந்ததையடுத்து நேபாளக் குடியரசுத் தலைவர் பித்யா தேவி பண்டாரி அவர்கள் சமீபத்தில் அந்நாட்டின் பாராளுமன்றத்தை ஒத்தி வைத்துள்ளார்.

- ஒத்தி வைப்பு என்பது பாராளுமன்றம் (அ) சட்டமன்றத்தின் கூட்டத்தை நிறுத்தி வைப்பதாகும்.

❖ இங்கிலாந்தின் மான்செஸ்டர் நகரக் கால்பந்து அணியானது நான்கு பருவங்களில் மூன்று முறை பீரிமியர் லீக் சாம்பியன் பட்டத்தை வென்றுள்ளது.

❖ K.P. சர்மா ஒலி அவர்கள் நேபாளத்தின் பிரதமராக மூன்றாவது முறையாக பதவியேற்றுள்ளார்.

- எதிர்க்கட்சியானது தனது பெரும்பான்மையை நிரூபிக்க இயலாததால் ஒலி அவர்கள், மீண்டும் அங்கு பிரதமராக நியமிக்கப் பட்டுள்ளார்.

❖ மத்திய அசாமின் நாகாவ்ன் மாவட்டத்தில் குறைந்தது 18 யானைகள் மின்னல் தாக்கி உயிரிழந்ததாக கூறப்படுகிறது.

- வனத் துறையின் கத்தியத்தோலி வரம்பிலுள்ள ஒரு பாதுகாக்கப்பட்ட வனப் பகுதி என்று அறிவிக்கப்பட உள்ள மலைப்பாங்கான பகுதியான கந்தலி எனும் ஒரு பகுதியில் இந்தச் சம்பவம் நேர்ந்துள்ளது.

❖ மேற்கு வங்காளத்தின் பக்னான் என்ற நகரிலுள்ள யுனைடெட் கோ-ஆப்ரேட்டிவ் என்ற வங்கியின் (ஒன்றியக் கூட்டுறவு வங்கி) உரிமத்தினை இந்திய ரிசர்வ் வங்கியானது ரத்து செய்து உள்ளது.

- யுனைடெட் வங்கியிடம் போதிய நிதி ஆதாரங்களும், வருமானம் ஈட்டுவதற்கான காரணிகளும் இல்லாத காரணத்தால் ரிசர்வ் வங்கியானது இந்தக் கூட்டுறவு வங்கியின் உரிமத்தை ரத்து செய்வதாக கூறியுள்ளது.

❖ டவ்தே புயலானது ஒரு தீவிரப் புயலாக வலுப்பெறும் என்றும் அதன் பிறகு அது மேலும் அதிதீவிரப் புயலாக மாறும் என்றும் இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்து உள்ளது.

- கடந்த 20 ஆண்டுகளில் மேற்குக் கடற்கரைப் பகுதிகளில் ஏற்பட்ட புயல்களிலேயே மிகவும் வலுவான புயலாக இது இருக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது.

❖ வாள்வீச்சு வீராங்கனையான பவானி தேவி அவர்கள் ஒலிம்பிக் போட்டிகளுக்குத் தேர்வான முதல் இந்திய வாள் வீச்சு வீரர் எனும் ஒரு வரலாற்றைப் படைத்துள்ளார்.

- மார்ச் மாதத்தில் நடைபெற்ற புத்தாபெஸ்ட் உலகக் கோப்பைப் போட்டிக்குப் பிறகு சரி செய்யப்பட்ட அதிகாரப் பூர்வ தரவரிசை (Adjusted Official Ranking – AOR) முறையின் மூலம் இவர் ஒலிம்பிக் போட்டிக்குத் தேர்வு செய்யப்பட்டார்.

❖ அமைதி, சகிப்புத் தன்மை, அனைவரையும் உள்ளடக்குதல், புரிதல் மற்றும் ஒற்றுமை போன்றவற்றை மேம்படுத்துவதில் சர்வதேச சமூக அமைப்புகள் மேற்கொள்ளும் முயற்சிகளை ஒன்று திரட்டுவதற்கான ஒரு உபாயமாக மே 16 ஆம் தேதியினை அமைதியில் ஒன்றிணைந்து வாழ்தலுக்கான சர்வதேச தினமாக ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது அறிவித்துள்ளது.

- ஐக்கிய நாடுகள் பொதுச் சபையனது மே 16 ஆம் தேதியினை அமைதியில் ஒன்றிணைந்து வாழ்தலுக்கான சர்வதேச தினமாக கடைபிடிப்பதற்கான முடிவினை 2017 ஆம் ஆண்டு டிசம்பர் 08 ஆம் தேதியன்று மேற்கொண்டது.

❖ 1960 ஆம் ஆண்டில் இயற்பியல் வல்லுநரும் பொறியாளருமான தியோடர் மெய்மன் என்பவர் மேற்கொண்ட முதலாவது வெற்றிகரமான லேசர் செயல்பாடுகளை நினைவு கூறும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் மே 16 ஆம் தேதியன்று சர்வதேச ஒளி தினமானது கொண்டாடப்படுகிறது.

- இந்த ஆண்டின் சர்வதேச ஒளி தினத்திற்கான கருத்துரு, "Trust Science" (அறிவியலை நம்புங்கள்) என்பதாகும்.

❖ ஸ்புட்நிக் V தடுப்பு மருந்தின் உற்பத்தித் திறனை அதிகரிக்கும் முயற்சியில் சில்பா மெடிகேர் எனும் ஒரு இந்திய நிறுவனமும் அதற்காக இணைந்துள்ளது.

- இந்தியாவில் ஸ்புட்நிக் V தடுப்பு மருந்தின் மருத்துவச் சோதனைகளை மேற்கொள்ளவும், அதன் விநியோக உரிமைகளைப் பெற்றிடவும் வேண்டி ஹைதராபாத்தில் அமைந்துள்ள டாக்டர் ரெட்டீஸ் ஆய்வகமானது கடந்த ஆண்டில் ரஷ்ய நேரடி முதலீட்டு நிதியத்துடன் இணைந்து செயல்படத் தொடங்கியது.

❖ கோவிட்-19 சிகிச்சையில் பிளாஸ்மா சிகிச்சை முறையினைப் பயன்படுத்துவதை இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகமானது சமீபத்தில் கை விட்டது.

- இந்தச் சிகிச்சை முறையானது எவ்விதப் பயனும் அற்றது எனக் கண்டறியப் பட்டதையடுத்து இந்த முடிவானது மேற்கொள்ளப் பட்டு உள்ளது.

❖ ஒவ்வொரு ஆண்டும் மே 18 ஆம் தேதியன்று உலக எய்ட்ஸ் தடுப்பூசி தினம் / HIV தடுப்பூசி பற்றிய விழிப்புணர்வு தினமானது கடைபிடிக்கப் படுகிறது.

- இந்த ஆண்டிற்கான உலக எய்ட்ஸ் தடுப்பூசி தினத்தின் கருத்துரு, " Global Solidarity'" (உலகளாவிய ஒற்றுமை) என்பதாகும்.

❖ நாடு கடந்த திபெத்தியப் பாராளுமன்றத்தின் (Tibet's parliament-in-exile) முன்னாள் சபாநாயகரான பென்பா செரிங் அவர்கள் நாடு கடந்த திபெத்திய அரசின் புதிய குடியரசுத் தலைவராக தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்.

- அரசியலிலிருந்து தலாய் லாமா விலகியதையடுத்து தலைமைப் பொறுப்பிற்கு நடத்தப்படும் மூன்றாவது நேரடி தேர்தல் இதுவாகும்.

❖ பஞ்சாபில் இஸ்லாமிய இன மக்களை பெரும்பான்மையாகக் கொண்ட ஒரு நகரமான மலெர்கோட்லா என்ற நகரமானது அந்த மாநிலத்தின் 23வது மாவட்டமாக அறிவிக்கப் பட்டுள்ளது.

- இது சங்க்ரூர் என்ற மாவட்டத்திலிருந்து பிரித்தெடுக்கப் பட்டுள்ளது.

❖ கொரோனா தடுப்பு மருந்துகள் மீதான அறிவுசார் சொத்துரிமையின் வர்த்தகம் தொடர்பான அம்சங்கள் மீதான சர்வதேச உடன்படிக்கையை (TRIPS - Trade-Related Aspects of Intellectual Property Rights) தற்காலிகமாக தள்ளுபடி செய்வதற்கான இந்தியா மற்றும் தென் ஆப்பிரிக்காவின் ஒரு முன்மொழிதலுக்கு சீனா ஆதரவு அளிக்க உள்ளது.

❖ ஈரான் அரசானது ஒரு மாபெரும் எரிவாயுக் கிணற்றை உருவாக்குவதற்கான ஒரு ஒப்பந்தத்தை ஒரு உள்ளூர் நிறுவனத்தற்கு வழங்கியதையடுத்து பாரசீக வளைகுடாவில் ONGC விதேஷ் நிறுவனம் கண்டறிந்த பர்ஷத்-பி என்ற ஒரு எரிவாயுக் கிணற்றின் மீதான உரிமையை இந்தியா இழந்துள்ளது.

- அந்த நிலையத்தை மேம்படுத்துவதற்காக பெட்ரோபார்ஸ் (Petropars) எனும் குழுவுடன் ஈரான் அரசு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது.

❖ ஐக்கிய ராஜ்ஜியம் தான் விதித்த அனைத்து கொரோனா கட்டுப்பாடுகளையும் தளர்த்தி, உணவகங்கள், தங்கும் விடுதிகள், திரையரங்குகள் மற்றும் அருங்காட்சியகங்கள் போன்றவற்றை விரைவில் திறப்பதற்கு வேண்டிய ஒரு அனுமதியினை வழங்கியுள்ளது.

- இந்தக் கட்டுப்பாட்டு விதிகள் இங்கிலாந்து, வேல்ஸ் மற்றும் ஸ்காட்லாந்தின் பெரும்பாலான பகுதிகள் ஆகிய இடங்களில் தளர்வு படுத்தப் பட்டுள்ளன.

- கேரள அரசானது ஒரு சிறுபான்மை இனத்தினைச் சேர்ந்த அரசியல் தலைவரை அம்மாநிலத்தின் தேவஸ்வம் அமைச்சராக (Devaswom ministry) நியமித்து வரலாறு படைத்துள்ளது.
  - மூத்த கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் K. இராதாகிருஷ்ணன் அவர்கள் புதிய அமைச்சரவையில் தேவஸ்வம் அமைச்சகத்தின் பொறுப்பினை ஏற்க உள்ளார்.
- இந்திய அரசானது உரங்களுக்கான மானியத்தை மூட்டைக்கு ரூ.1200 என உயர்த்தி உள்ளது.
  - இதற்கு முன்பாக மூட்டைக்கு ரூ.500 என்ற அளவில் மானியம் வழங்கப்பட்டு வந்தது, எனவே இத்துடன் மானியமானது 140% வரை உயர்த்தப் பட்டிருக்கின்றது.
- இராஜஸ்தான் அரசானது மியூகோர்மைகோசிஸ் (அ) கருப்புப் பூஞ்சை நோயினைத் தொற்று நோயாக அறிவித்துள்ளது.
  - இராஜஸ்தானைத் தவிர பல மாநிலங்களிலும் கருப்புப் பூஞ்சை நோய்த் தொற்று பதிவாகியுள்ளது.
- ஆசிய–பசிபிக் பகுதியிலேயே இரண்டாவது மிகப்பெரிய காப்பீட்டுத் தொழில் நுட்பச் சந்தையாக இந்தியா விளங்குகிறது.
  - இது S&P குளோபல் மார்க்கெட் இன்டலிஜன்ஸ் எனும் அமைப்பின் தரவுகளின் அடிப்படையில் கூறப்பட்டுள்ளது.
- ஒவ்வோர் ஆண்டும் மே 20 ஆம் தேதியன்று உலக அளவியல் தினமானது உலகம் முழுவதும் அனுசரிக்கப்படுகின்றது.
  - 2021 ஆம் ஆண்டிற்கான உலக அளவியல் தினத்தின் கருத்துரு, "ஆரோக்கியத்திற்கான அளவீடு" (Measurement for Health) என்பதாகும்.
- நாசா மற்றும் ஐரோப்பிய விண்வெளி நிறுவனத்தின் சூரியனைச் சுற்றி வரும் விண்கலமானது சூரியனின் மேற்பரப்பில் நிகழும் சூரிய வெடிப்பினை முதன்முறையாக படம் பிடித்துள்ளது.
  - இந்த வெடிப்புகளானது ஒளிவட்ட நிறை வெளியேற்றம் (Coronal Mass Ejections) எனவும் அழைக்கப் படுகிறது.
- தமிழக அரசானது கருப்புப் பூஞ்சை (மியுகோர்மைகோசிஸ்) நோயினை 1897 ஆம் ஆண்டு தொற்று நோய்கள் சட்டத்தின் கீழ் ஒரு அறிவிக்கப்பட்ட நோயாகப் பட்டியல் இட்டுள்ளது.
  - ஏற்கனவே தெலுங்கானா மாநில அரசானது 1897 ஆம் ஆண்டு தொற்று நோய்கள் சட்டத்தின் கீழ் கருப்புப் பூஞ்சை நோயினை ஒரு அறிவிக்கப்பட்ட நோயாகப் பட்டியலிட்டுள்ளது.
- பல்லுயிர்ப் பெருக்கத்தினைப் பற்றிய ஒரு புரிதலையும் விழிப்புணர்வினையும் அதிகரிக்க வேண்டி ஐக்கிய நாடுகள் அமைப்பானது மே 22 ஆம் தேதியினை சர்வதேச பல்லுயிர்ப் பெருக்க தினமாக அறிவித்துள்ளது.
  - 2021 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "நாம் தீர்வுகளின் ஓர் அங்கமாவோம்" (We are part of solution) என்பதாகும்.
- அருணாச்சலப் பிரதேசத்தைச் சேர்ந்த செல்வி தஷி யங்ஜோம் என்பவர் 2021 ஆம் ஆண்டில் எவரெஸ்ட் சிகரத்தில் ஏறிய முதல் இந்தியப் பெண்மணி ஆவார்.
  - இவர் அருணாச்சலப் பிரதேசத்தின் திராங்க்கிலுள்ள (Dirang) தேசிய மலையேற்றம் மற்றும் மலையேற்றம் சார்ந்த விளையாட்டுப் போட்டிகள் என்ற நிறுவனத்தில்

(National Institute of Mountaintering & Allied Sports – NIMAS) பயிற்சி அளிக்கப் பெற்றார்.

- ❖ கோவிட் – 19 தொற்றின் மீது ஒரு விரைவான ஆண்டிஜன் எனும் சோதனையினை மேற்கொள்வதற்காக கோவிசெல்ஃப் எனும் இந்தியாவின் முதல் சுயப் பரிசோதனை கருவிக்கு இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகத்திடமிருந்து ஒப்புதல் பெற்று விட்டதாக மைலேப் டிஸ்கவரி சொல்யூசன்ஸ் நிறுவனம் அறிவித்துள்ளது.
  - ○ இந்தக் கருவிகளை மருந்துக் குறிப்பு எதுவுமின்றி உள்ளூர் மருந்தகங்களிலேயே 250 ரூபாய்க்கு வாங்க இயலும்.
- ❖ மார்த்தா கரம்பு கூமே என்பவர் கென்யாவின் முதல் பெண் தலைமை நீதிபதி ஆவார்.
  - ○ அந்நாட்டு அரசின் மூன்று பிரிவுகளுள் ஏதேனும் ஒன்றிற்கு தலைமைப் பொறுப்பு ஏற்ற முதல் பெண்மணியும் இவரேயாவார்.
- ❖ மத்திய ரிசர்வ் வங்கி அறிவித்த சில விதிமுறைகளை மீறியதற்காக சிட்டி யூனியன் வங்கி, தமிழ்நாடு மெர்கன்டைல் வங்கி, அகமதாபாத்தின் நூதன் நாகரிக் சஹகாரி வங்கி, மற்றும் பூனாவின் டெய்ம்லெர் பைனான்சியல் சர்வீசஸ் இந்தியா லிமிடெட் ஆகியவை மீது இந்திய ரிசர்வ் வங்கியானது அபராதம் விதித்துள்ளது.
- ❖ மருத்துவமனை படுக்கைகளை இணையதளம் வாயிலாக முன்பதிவு செய்வதற்காக ‘அம்ரித் வாஹினி’ எனும் ஒரு கைபேசி செயலியினை ஜார்க்கண்ட் மாநிலம் தொடங்கியுள்ளது.
  - ○ முதல்வர் ஹேமந்த் சோரன் அவர்களால் தொடங்கப்பட்ட இந்த ‘அம்ரித் வாஹினி’ செயலியின் மூலம் ஜார்க்கண்ட்டில் உள்ள கொரோனா நோயாளிகள் இணைய தளம் வாயிலாக மருத்துவமனைகளில் படுக்கைகளை முன்பதிவு செய்ய இயலும்.
- ❖ இந்திய ரிசர்வ் வங்கியின் மைய வாரியமானது 99,122 கோடி ரூபாயை மத்திய அரசிற்கு உபரித் தொகையாக வழங்குவதற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.
  - ○ இது மார்ச் 31 அன்று முடிவடைந்த கணக்குப் பதிவு காலமான 9 மாதங்களுக்கானது மட்டுமல்லாமல் அவசரகால இடையக நிதியினை 5.50 சதவீதமாக வைத்திருப்பதற்கும் அந்த வாரியம் முடிவு செய்துள்ளது.
- ❖ நேபாளத்தின் அதிபரான பித்யா தேவி பண்டாரி அவர்கள் 2021 ஆம் ஆண்டு மே 22 ஆம் தேதியன்று அந்நாட்டின் பிரதிநிதிகள் சபையைக் கலைத்தார்.
  - ○ அந்நாட்டின் தற்காலிகப் பிரதமரான K.P. சர்மா ஒலி அவர்கள் தலைமையிலான அமைச்சரவைக் குழுவின் பரிந்துரையின் படி இந்த முடிவானது மேற்கொள்ளப் பட்டதோடு அதற்கான தேர்தல் 2021 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் நடத்தப் படும் என அறிவிக்கப் பட்டுள்ளது.
- ❖ பீகார் அரசானது மாநிலம் முழுவதும் கோவிட் – 19 தொற்றால் பாதிக்கப்பட்டு வீட்டில் தனிமைப்படுத்தப் பட்டிருக்கும் நோயாளிகளை முறையாக கண்காணிப்பதனை உறுதி செய்வதற்காக “HIT Covid” எனும் செயலியைத் தொடங்கியுள்ளது.
  - ○ HIT (Home Isolation Tracks) என்பதன் விரிவாக்கம் வீட்டில் தனிமைப்படுத்தப் பட்டோரைக் கண்காணித்தல் என்பதாகும்.
- ❖ கேரளாவில் “கிழங்குப் பயிர்களின் நாயகன்” என அன்போடு அழைக்கப்படுகின்ற N.M. சாஜி அவர்களுக்கு “Conservation of domesticated species” (உள்நாட்டு உயிரினங்களைப் பாதுகாத்தல்) எனும் தனிப் பிரிவில் 2021 ஆம் ஆண்டிற்கான இந்தியப் பல்லுயிர்ப் பெருக்க விருதானது வழங்கப் பட்டுள்ளது.

- மேலும் இவர் புதுடெல்லியிலுள்ள PPV&FR ஆணையத்தால் தொடங்கப்பட்ட தாவரக் குடும்ப இனங்காப்பாளர் விருது 2015 உட்பட பல மாநில விருதுகளையும் பெற்றுள்ளார்.

❖ இந்தியாவில் காமன்வெல்த் தினமானது மே 24 அன்று கொண்டாடப் படுகின்றது.

- பேரரசு தினம் எனவும் அறியப்படும் இந்த காமன்வெல்த் தினமானது இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சி நிறுவப் பட்டதையும் பிரிட்டனின் ஏனைய பிற காலனி ஆட்சிகள் நிறுவப்பட்டதையும் நினைவு கூறுகிறது.

❖ கோவிட்-19 தொற்று இருக்கிறதா என சோதித்து ஒரு நிமிடத்திற்குள்ளேயே துல்லியமான முடிவுகளை அளிக்கும் கோவிட் சுவாசப் பரிசோதனைக்கு சிங்கப்பூர் அரசானது ஒப்புதல் அளித்துள்ளது.

- இந்தப் பரிசோதனை முறையானது Breathonix எனப்படும் ஒரு புத்தாக்க நிறுவனத்தினால் உருவாக்கப்பட்டது ஆகும்.

❖ அனா எனப்படும் துணை வெப்பமண்டலப் புயலானது பெர்முடா பகுதியில் மழைப் பொழிவை ஏற்படுத்தியதைத் தொடர்ந்து அட்லாண்டிக் பெருங்கடலினூடே வடகிழக்கு நோக்கி நகர்வதாக மியாமியில் உள்ள தேசிய சூறாவளி மையம் அறிவித்துள்ளது.

- எனவே இந்தப் பருவத்தின் முதல் புயலாக பெயரிடப்பட்ட இந்த அட்லாண்டிக் புயலானது நிலப் பகுதிக்கு எவ்வித சேதமும் ஏற்படுத்தாமல் விரைவில் கலைந்து விடும்.

❖ "India and Aisan Geopolitics : The Past, Present" என்று தலையிடப்பட்ட ஒரு புத்தகத்தினை சிவசங்கர் மேனன் அவர்கள் எழுதியுள்ளார்.

- இவர் பிரதமரின் முன்னாள் தேசியப் பாதுகாப்பு ஆலோசகரும் வெளியுறவுத் துறைச் செயலாளரும் ஆவார்.

❖ "Nehru, Tibet and China" என்று தலைப்பிடப்பட்ட ஒரு புத்தகத்தினை அவ்தார் சிங் பசீன் அவர்கள் எழுதியுள்ளார்.

- இப்புத்தகத்தில் 1949 முதல் 1962 ஆம் ஆண்டு வரை நடைபெற்ற இந்திய சீனப் போர் வரையிலான நிகழ்வுகளையும் அதனால் ஏற்பட்ட விளைவுகளையும் பற்றி கூர்ந்து ஆராயப் பட்டுள்ளது.

❖ உலகப் பாரம்பரியத் தளக் குறியீட்டைப் பெறுவதற்காக தனது மாநிலத்தின் 14 கோட்டைகளின் பெயர்கள் அடங்கிய ஒரு தற்காலிகப் பரிந்துரை தொடர் வரிசைப் பட்டியலை மகாராஷ்டிர அரசானது தயாரித்துச் சமர்ப்பித்துள்ளது.

- இவை பேஷ்வா ஆட்சிக் காலத்தை (அ) மராத்தியர் மற்றும் முகலாயர்களுக்கு இடையிலான போர்களைக் குறிப்பதாக இருப்பதோடு, அதில் சில கோட்டைகள் மராத்திய வீரர்களுக்கான கடற்படை (அ) இராணுவத் தளங்களாகவும் விளங்கின.

❖ ஃபோர்ப்ஸ் நிறுவனமானது அதிக சம்பளம் வாங்கும் பத்து விளையாட்டு வீரர்களின் வருடாந்திரப் பட்டியலை வெளியிட்டுள்ளது.

- UFC அணியின் நட்சத்திர வீரரான கோனெர் மெக்கிரிகர் (Conor McGregor) என்பவர் கடந்த ஆண்டில் 180 மில்லியன் டாலர் தொகையைச் சம்பளமாகப் பெற்று கால்பந்து விளையாட்டு விரர்களான லியோனெல் மெஸ்ஸியையும் (130 மில்லியன் டாலர்) கிறிஸ்டியானோ ரொனால்டோவையும் (120 மில்லியன் டாலர்) வீழ்த்தி உலகிலேயே அதிகளவு சம்பளம் வாங்கும் விளையாட்டு வீரர் எனும் பெருமையைப் பெற்றுள்ளார்.

- அத்லெடிகோ மாட்ரிட் (Atletico Madrid) அணியானது ரியல் மாட்ரிட் அணியைத் தோற்கடித்து லா லிகா கால்பந்துப் போட்டியில் சாம்பியன் பட்டத்தினை வென்று உள்ளது.
  - லூயிஸ் சுவாரெஷ் என்பவர் 2-1 என்ற கோல் கணக்கில் ரியல் வல்லாடோலிட்டை தோற்கடித்து தமது அணிக்கு வெற்றியை ஈட்டித் தந்தார்.
- 2021 ஆம் ஆண்டின் முதல் சந்திர கிரகணமானது மே 26 ஆம் தேதியன்று நிகழ்ந்தது.
  - சூப்பர் மூன், சந்திர கிரகணம் மற்றும் இரத்த நிற நிலவு (Blood Moon) போன்ற அனைத்தும் ஒரே நேரத்தில் நிகழ்ந்ததால் இது சிறப்பு சந்திர நிகழ்வாக (Super Lunar Event) கூறப் படுகிறது.
- கோவிட்-19 பெருந்தொற்றினாலும் அதன் இரண்டாவது அலையினாலும் இந்தியாவில் ஏற்பட்ட இறப்புகளின் எண்ணிக்கை 3 லட்சத்தைத் தாண்டியுள்ளது.
  - இத்துடன் அமெரிக்கா மற்றும் பிரேசில் ஆகிய நாடுகளின் வரிசையில் இந்த எண்ணிக்கையைக் கடந்த மூன்றாவது நாடாக இந்தியா மாறியுள்ளது.
- வின்டோஸ் 10 மென்பொருளின் சில பதிப்புகளில் இன்டர்நெட் எக்ஸ்ப்ளோரர் 11 எனும் கணினி உலாவிகள் (Browser) 2022 ஆம் ஆண்டு ஜூன் 15 ஆம் தேதி முதல் செயல்படாது என மைக்ரோசாஃப்ட் நிறுவனம் சமீபத்தில் அறிவித்துள்ளது.
  - இருப்பினும் இன்டர்நெட் எக்ஸ்ப்ளோரரைச் சார்ந்த இணையதளங்கள் மற்றும் செயலிகள் 2029 ஆம் ஆண்டு வரை "New Microsoft Edge" எனும் செயல்முறையில் இயங்கும் என அறிவிக்கப் பட்டுள்ளது.
- ஐக்கிய நாடுகள் அமைப்பானது 2021 ஆம் ஆண்டு மே 25 முதல் மே 31 வரை சுயராஜ்ஜியமற்ற பிராந்திய மக்களுடனான சர்வதேச ஒற்றுமை வாரத்தினை (International Week of Solidarity with the Peoples of Non-Self-Governing Territories) அனுசரிக்கிறது.
  - ஐக்கிய நாடுகள் அமைப்பின் சாசனத்தின் படி, சுயராஜ்ஜியமற்ற பிராந்தியங்கள் என்பது மக்கள் முழு அளவிலான சுயராஜ்ஜியத்தை அடையாத பிராந்தியங்கள் ஆகும்.
- நாய்களிடமிருந்து தோன்றியிருக்கலாம் என நம்பப்படும் CCoV-HuPn-2018 எனும் புதிய வகை கொரோனா வைரசானது 2017-2018 ஆம் ஆண்டில் நிமோனியா நோய் சிகிச்சைக்காக வேண்டி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு இருந்த சில நோயாளிகளிடம் கண்டுபிடிக்கப் பட்டது.
  - இது ஒரு நோய்க் கிருமி என உறுதி செய்யப்பட்டால் மனிதனில் நோயை உண்டாக்கக் கூடிய தனித்துவம் வாய்ந்த எட்டாவது கொரோனா வைரஸ் வகையாக இது இருக்கும்.
- ஹரியானாவின் முதலமைச்சரான மனோகர் லால் கட்டார் அவர்கள் 'சஞ்சீவனி பரியோஜனா' எனும் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.
  - கிராமப்புறப் பகுதிகளில் லேசானது முதல் மிதமான அறிகுறிகளை உடைய மக்கள் தங்கள் வீட்டை விட்டு வெளியேறி மருத்துவமனைக்குச் செல்லாமலேயே விரைவான மருத்துவ சேவைகளைப் பெறுவதற்கு இந்த முன்னெடுப்பானது வழிவகை செய்யும்.
- 2021 ஆம் ஆண்டிற்கான பில்போர்டு இசை விருதுகள் மே 23 ஆம் தேதியன்று நிறைவடைந்தது.
  - இந்த ஆண்டு BTS இசைக் குழுவானது முன்னணி இரட்டை/குழு, விற்பனையில் முன்னணியிலுள்ள பாடல் கலைஞர், முன்னணி சமூக கலைஞர் மற்றும் விற்பனையில் முன்னணியிலுள்ள பாடல் போன்றவற்றிற்குப் பரிந்துரைக்கப் பட்டு அந்த நான்கு விருதுகளையும் வென்றது.

❖ பருவநிலை மாற்றம், காட்டுத் தீ மற்றும் புயல்கள் போன்ற இடர்களைத் தணிப்பதில் உதவும் ஒரு புதிய புவி அமைப்பு ஆய்வகத்தினை நாசா அமைத்துள்ளது.
  ○ இது நிகழ் நேர வேளாண்மைக்கும் உதவியாக இருக்கும்.

❖ பானேசியா பயோடெக் (இந்திய மருந்து உற்பத்தியாளர்) நிறுவனமானது ரஷ்ய நேரடி முதலீட்டு நிதியத்துடன் இணைந்து இந்தியாவில் ஸ்புட்நிக் V கொரோனா தடுப்பு மருந்தின் உற்பத்தியைத் தொடங்கியுள்ளது.
  ○ பானேசியா மற்றும் ரஷ்ய நேரடி முதலீட்டு நிதியம் ஆகியவை இந்தியாவில் ஓர் ஆண்டிற்கு 100 மில்லியன் அளவிலான ஸ்புட்நிக் V தடுப்பு மருந்துகளை உற்பத்தி செய்வதற்கான தங்களது திட்டத்தை அறிவித்துள்ளன.

❖ இஸ்ரேலியப் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு அவர்கள் அந்நாட்டின் உளவு அமைப்பான மொசாட்டின் புதிய தலைவராக டேவிட் பார்னியா அவர்களை நியமித்துள்ளார்.
  ○ முன்னாள் நெடுங்கால மொசாட் இயக்குநரான பார்னியா அவர்கள் யோஷி கோஹெனையடுத்து இஸ்ரேலின் உளவு அமைப்பினுடையத் தலைவராகப் பொறுப்பேற்க உள்ளார்.

❖ சிரியாவில் சமீபத்தில் நடைபெற்ற அதிபர் தேர்தலானது பத்து வருடத்திற்கு முன்பு சிரியாவில் போராக உருமாறிய கிளர்ச்சியைத் தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது தேர்தலாகும்.
  ○ சமீபத்திய தேர்தலிலும் அதிபர் பசார்-அல் ஆசாத் அவர்கள் நான்காவது முறையாக தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்.

❖ மாநிலத்தில் பொலிவுறு (நவீன) சமையலறைத் திட்டத்தினை அமல்படுத்துவதற்கான வழிமுறைகளையும் பரிந்துரைகளையும் உருவாக்குவதற்கு வேண்டி செயலர்நிலை குழு ஒன்று அமைக்கப்படும் என கேரள முதல்வர் அறிவித்துள்ளார்.
  ○ இந்தத் திட்டத்தின் கீழ் அந்த மாநிலத்தில் உள்ள பெண்களுக்கு அவர்களது சமையலறையைப் புதுப்பிப்பதற்காக வேண்டி கடன் வழங்கப்படும்.

❖ வாகனங்கள் காத்திருக்கும் நேரத்தினை ஒரு வாகனத்திற்கு 10 விநாடிகள் எனக் குறைக்குமாறு சுங்கச் சாவடிகளுக்கு இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் சில வழிமுறைகளை வழங்கியுள்ளது.

❖ இமாச்சலப் பிரதேசத்தின் மாண்டியிலுள்ள இந்திய தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தின் (Indian Institute of Technology, Mandi) ஆராய்ச்சியாளர்கள், கொரோனா வைரசினுடைய முக்கியப் புரத அமைப்பின் ஒரு பகுதியை வெளிக் கொணர்ந்து உள்ளனர்.
  ○ கொரோனா வைரசினுடைய புரத அமைப்பானது, கோவிட்-19 தொற்றுநோயில் அதன் செயல்பாடு மற்றும் நோயின் பரவல் மற்றும் தீவிரத்தன்மையில் அதன் பங்கு ஆகியவற்றைப் புரிந்து கொள்ளவும் வைரஸ் எதிர்ப்பு சிகிச்சை முறைகளை உருவாக்கவும் உதவுகிறது.

❖ சர்வதேச ஐக்கிய நாடுகள் அமைதிகாப்புப் படையினர் தினமானது ஒவ்வோர் ஆண்டும் மே 29 ஆம் தேதியன்று கடைபிடிக்கப்படுகிறது.
  ○ இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "நீடித்த அமைதிக்கான பாதை : அமைதி மற்றும் பாதுகாப்பிற்கான இளைஞர்களின் சக்தியை வலுப்படுத்துதல்" என்பதாகும்.

❖ உலக இரையகக் குடலியவியல் அமைப்பினால் (World Gastro Enterology Organisation – WGO) தொடங்கப்பட்ட உலக செரிமான ஆரோக்கிய தினமானது மக்கள் எதிர்கொள்ளும்

செரிமான நோய் (அ) கோளாறு குறித்து அவர்களிடையே ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் ஒவ்வோர் ஆண்டும் மே 09 ஆம் தேதியன்று அனுசரிக்கப் படுகின்றது.

- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "உடல் பருமன்: நடப்பிலிருக்கும் ஒரு பரவலான நோய்" என்பதாகும்.

❖ புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மூலங்கள் மற்றும் அவற்றின் சேமிப்பு குறித்த ஆராய்ச்சிக்காக, பாரத் ரத்னா விருது பெற்ற பேராசிரியர் C.N.R. ராவ் அவர்களுக்கு 2020 ஆம் ஆண்டின் சர்வதேச ENI விருது வழங்கப்பட்டுள்ளது.

- பேராசிரியர் C.N.R. ராவ் அவர்கள் மனித குலத்திற்குப் பயன்தரும் வகையில் ஹைட்ரஜன் ஆற்றல் ஒன்றையே ஒரே ஒரு ஆற்றல் மூலமாக மாற்றுவதற்கான ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளார்.

❖ கோவிட்-19 வைரசை சமநிலைப்படுத்தும் ஒரின நகல் நோய் எதிர்ப்பொருள் சிகிச்சை (ZRC – 3308) முறையினை மருத்துவச் சோதனைக்கு உட்படுத்துவதற்கு இந்தியத் தலைமை மருந்துக் கட்டுப்பாடு அமைப்பிடம் (DGCI) ஒப்புதல் கோரி உள்ளதாக சைடஸ் கேடிலா நிறுவனம் அறிவித்துள்ளது.

- இத்தகைய ஒரின நகல் நோய் எதிர்ப்பொருள் சிகிச்சை முறையை உருவாக்கிய ஒரே இந்திய நிறுவனம் சைடஸ் கேடிலா ஆகும்.

❖ பிரான்சு நாட்டின் அதிபர் இமானுவேல் மாக்ரான் அவர்கள் 1994 ஆம் ஆண்டு நடைபெற்ற ருவாண்டா இனப்படுகொலையில் பிரான்சின் பங்கு இருந்ததை உறுதி செய்து அதற்காக வேண்டி மன்னிப்பினையும் கோரியுள்ளார்.

- இந்த இனப்படுகொலையில் கொல்லப்பட்ட 2,50,000 பேரின் உடல்கள் புதைக்கப் பட்டிருக்கும் கிகாலி இனப்படுகொலை நினைவிடத்தில் ஆற்றிய உரையில் அவர் இதனைக் கூறினார்.

❖ எலான் மஸ்க் தலைமையிலான ஸ்பேக்ஸ் எக்ஸ் நிறுவனமானது ஃபால்கன் 9 ராக்கெட்டின் முதல்நிலை உந்திகளின் உதவியுடன் 60 ஸ்டார்லிங்க் அகண்ட அலைவரிசை (Broad Band) செயற்கைக் கோள்களை விண்ணில் ஏவி அவற்றைச் சுற்று வட்டப் பாதையில் நிலை நிறுத்தியுள்ளது.

- இந்தச் செயற்கைக் கோள்கள் அமெரிக்காவின் ஃபுளோரிடாவிலுள்ள 40 என்ற விண்வெளி ஏவுதள வளாகத்திலிருந்து ஏவப்பட்டன.

❖ ஆன்டி ஜெசி என்பவர் அமேசானின் தலைமை நிர்வாக இயக்குநராக அதிகாரப் பூர்வமாக பொறுப்பேற்க உள்ளார்.

- அமேசானின் இணையதள சேவையின் தற்போதைய தலைமை நிர்வாக இயக்குநராக இருக்கும் ஆன்டி ஜெசி அவர்கள் ஜெஃப் பெசோசினையடுத்து பிப்ரவரி மாதத்தில் நிறுவனத்தின் தலைமை நிர்வாகப் பொறுப்பை ஏற்க உள்ளார்.

❖ கலைசார்ந்த வரலாற்று ஆசிரியரும் அருங்காட்சியக மேற்பார்வையாளருமான லாரன்ஸ் டெஸ் கார்ஸ் அவர்கள் லூவ்ரே என்ற அருங்காட்சியகத்தின் 228 ஆண்டு கால வரலாற்றிலேயே அதன் தலைவராக நியமிக்கப்பட்ட முதல் பெண்மணி ஆவார்.

- லூவ்ரே அருங்காட்சியகமானது பிரான்சின் பாரீசிலுள்ள உலகின் மிகப்பெரிய கலை அருங்காட்சியகமாகும்.

# தமிழ்நாடு செய்திகள்

## "பைரசோல்" திட்டம்

- சென்னையில் ஒருங்கிணைந்த சூரிய ஆற்றல் உலர்த்தி மற்றும் வெப்பத்தாற்பகுப்பு சோதனை ஆலைக்கான (Pyrolysis pilot plant) அடிக்கல் நாட்டப்பட்டது.
- இச்சோதனை ஆலையானது இந்தோ-ஜெர்மானிய திட்டமான "பைரசோலின்" ஓர் அங்கமாகும்.
- இத்திட்டம் இந்தோ-ஜெர்மானிய அறிவியல் & தொழில்நுட்ப மையத்தினால் CSIR-CLRI நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டது.
- இந்தியாவின் திறன்மிகு நகரங்களிலும் மற்ற நகர்ப்புற மையங்களிலும் நகர்ப்புற கரிமக் கழிவுகள் மற்றும் கழிவுநீர் கசடுகளை உயிரிக் கரிமப் பொருட்களாகவும் (Biochar) ஆற்றலாகவும் மாற்றுவதற்கான தொழில்நுட்ப வளர்ச்சிக்கு இத்திட்டம் வழி வகுக்கும்.

## முப்பரிமாணத்தில் அச்சிடப்பட்ட வீடு

- மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் அவர்கள் சென்னையின் இந்திய தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தில் அமைக்கப்பட்டுள்ள முப்பரிமாணத்தில் அச்சிடப்பட்ட முதல் வீட்டினைத் திறந்து வைத்தார்.
- இந்த வீடானது முப்பரிமாண அச்சிடல் (3D Printed) தொழில்நுட்பத்தைப் பயன்படுத்திக் கட்டப் பட்டது.
- இந்த வீடு வெறும் 5 ஆண்டுகளில் கட்டி முடிக்கப்பட்டது.
- சென்னையிலுள்ள இந்தியத் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தின் முன்னாள் மாணவருடைய கோட்பாட்டின் அடிப்படையில் 'TVASTA Manufacturing Solutions' எனும் நிறுவனத்தினால் இந்த வீடு கட்டி முடிக்கப்பட்டது.
- முப்பரிமாண அச்சிடல் முறை என்பது டிஜிட்டல் வழிகாட்டுதல்கள் மூலம் முப்பரிமாணப் பொருட்களை உருவாக்கும் ஒரு செயல்முறையாகும்.



## காவல் கரங்கள்

- சென்னையில் 'காவல் கரங்கள்' என்ற புதிய ஒருங்கிணைந்த திட்டத்தை காவல்துறை ஆணையர் மகேஷ்குமார் அகர்வால் துவக்கி வைத்தார்.

❖ சாலைகளில் ஆதரவின்றி தவிக்கும் முதியோர், பெண்கள், சிறுவர்கள், மனநலம் பாதிக்கப்பட்டவர்களை மீட்டு, அவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்யும் வகையில் காவல் கரங்கள் என்ற புதிய திட்டத்தை சென்னைப் பெருநகர காவல்துறை தொடங்கி உள்ளது.

## 15வது சட்டமன்றம் தமிழக ஆளுநரால் கலைப்பு

❖ 2021 ஆம் ஆண்டு மே மாதம் 03 ஆம் தேதியன்று பிற்பகல் முதல், முதலமைச்சர் திரு. எடப்பாடி பழனிச்சாமி மற்றும் அவரின் அமைச்சர்கள் குழுவானது ராஜினாமா செய்வதற்கு அளித்த ஒரு கடிதத்தினை தமிழக ஆளுநர் ஏற்றுக் கொண்டுள்ளார்.

❖ இருப்பினும், மாற்று ஏற்பாடுகள் செய்யப்படும் வரை அப்பொறுப்பைத் தொடருமாறு திரு. எடப்பாடி K. பழனிச்சாமி அவர்களையும் அவருடைய அமைச்சரவையையும் ஆளுநர் திரு. புரோகித் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

❖ 15வது (2016-21) தமிழகச் சட்டமன்றத்தினை 2021 ஆம் ஆண்டு மே 03 அன்று ஆளுநர் கலைத்து உத்தரவிட்டுள்ளார்.

## தமிழ்நாடு அமைச்சரவை 2021

1) மு.க.ஸ்டாலின் - முதலமைச்சர் - பொதுநிர்வாகம் -இந்திய ஆட்சிப்பணி - இந்திய காவல்பணி- மாவட்ட வருவாய் -உள்துறை -மாற்றுத்திறனாளிகள் நலன் -சிறப்புத் திட்ட செயலாக்கம்
2) துரைமுருகன் - நீர்பாசனத்துறை மற்றும் கனிமங்கள் சுரங்கங்கள்
3) கே.என்.நேரு - நகராட்சி நிர்வாகம் -நகர்புறம்- குடிநீர் வழங்கல்
4) ஐ பெரியசாமி -கூட்டுறவு மற்றும் புள்ளியியல் -முன்னாள் ராணுவத்தினர் நலன்
5) க.பொன்முடி - உயர்கல்வித்துறை
6) எம்.ஆர்.கே பன்னீர்செல்வம் - வேளாண்மைத்துறை
7) கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் -வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை
8)தங்கம் தென்னரசு -தொழில்துறை மற்றும் தமிழ் வளர்ச்சித்துறை
9) எஸ்.ரகுபதி -சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை
10) எ.வ.வேலு -பொதுப்பணித்துறை மற்றும் நெடுஞ்சாலைத்துறை
11) முத்துசாமி -வீட்டுவசதித்துறை மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம்
12) கே.ஆர் பெரியகருப்பன் -ஊரக வளர்ச்சித்துறை
13) தா.மோ. அன்பரசன் -சிறுதொழில் மற்றும் குடிசை மாற்று வாரியம்
14) வெள்ளக்கோவில் சாமிநாதன் -செய்தி மற்றும் விளம்பரத்துறை
15) கீதாஜீவன் -சமூக நலத்துறை
16)அனிதா ராதாகிருஷ்ணன் -மீன்வளம் மற்றும் கால்நடை பராமரிப்பு
17) ராஜகண்ணப்பன் -போக்குவரத்துத் துறை
18) கா.ராமச்சந்திரன் - வனம்
19) சக்கரபாணி -உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு
20) செந்தில்பாலாஜி -மின்சாரத்துறை
21) ஆர்.காந்தி -கைத்தறி மற்றும் துணிநூல் துறை
22) மா.சுப்பிரமணியன் -சுகாதாரத்துறை
23) பி.மூர்த்தி -வணிகவரித்துறை
24) எஸ்.எஸ்.சிவசங்கர் -பிற்படுத்தப்பட்டோர் நலன்
25) சேகர்பாபு -இந்து சமய அறநிலையத்துறை
26) பழனிவேல் தியாகராஜன் -நிதித்துறை
27) ஆவடி சா.மு.நாசர் - பால்வளத்துறை
28) செஞ்சி மஸ்தான் -சிறுபான்மையினர் நலன்
29) அன்பில் மகேஸ் -பள்ளிக்கல்வித்துறை
30) மெய்யநாதன் -சுற்றுச்சூழல்துறை
31) சி.வி.கணேசன் - தொழிலாளர்கள் நலன்
32) மனோ தங்கராஜ் -தகவல் தொழில்நுட்பத்துறை
33) மதிவேந்தன் -சுற்றுலாத்துறை
34) கயல்விழி செல்வராஜ் -ஆதிதிராவிடர் நலத்துறை

- தமிழக ஆளுநர் பன்வாரிலால் புரோகித் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவரான மு.க. ஸ்டாலின் அவர்களை 2021 ஆம் ஆண்டு மே 05 அன்று தமிழக முதல்வராக நியமனம் செய்தார்.
- மேலும், புதிய தமிழக அமைச்சரவையினை அமைக்கவும் 2021 ஆம் ஆண்டு மே 07 அன்று சென்னையிலுள்ள ராஜ் பவனில் பதவியேற்பு விழாவினை நடத்தவும் ஆளுநர் அவருக்கு அழைப்பு விடுத்தார்.
- மு.க. ஸ்டாலின் அவர்கள் தனது அமைச்சரவையில் அங்கம் வகிக்க உள்ள 34 அமைச்சர்களின் ஒரு பட்டியலையும் வெளியிட்டுள்ளார்.
- அமைச்சர்களின் பெயர்களும் அவர்களுக்கான துறைகளின் பெயர்களும் ஆளுநரின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டு அதற்கு ஒப்புதலும் வழங்கப்பட்டுள்ளது.




## முதல்வர் ஸ்டாலின் அவர்களுடைய முதல் 5 அரசாணைகள்

- கொரோனா வைரஸ் பெருந்தொற்றினால் பாதிக்கப்பட்டுத் தவித்து வரும் மக்களுக்கு நிவாரணமளிக்கும் வகையில் தமிழக மாநில முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 5 அரசாணைகளில் கையெழுத்திட்டுள்ளார்.
- பெருந்தொற்று காலங்களில் மக்களுக்கு சில நிவாரணங்கள் வழங்குவதற்காக இந்த மாநிலத்தில் அரிசி குடும்ப அட்டை வைத்துள்ள அனைத்து குடும்பங்களுக்கும் 4000 ரூபாய் வழங்கப் படும்.
- அந்த 4000 ரூபாயில் 2000 ரூபாயானது மே மாதத்திலிலேயே வழங்கப்பட்டு, மீதமுள்ள தொகையானது பின்னர் வழங்கப்படும்.
- ஆவின் பால் விலையானது லிட்டர் ஒன்றுக்கு மூன்று ரூபாய் குறைக்கப்படும்.
- மே 8 ஆம் தேதி முதல் தமிழக அரசினால் இயக்கப்படும் பேருந்துகளில் (சாதாரணக் கட்டணப் பேருந்துகள்), பணி புரியும் மகளிர் மற்றும் மாணவியர் உள்ளிட்ட அனைத்து மகளிரும் இலவசமாகப் பயணம் செய்யலாம்.

- திமு.க. ஆட்சிக்கு வந்த 100 நாட்களுக்குள் மக்களின் பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்கப்படும் எனும் வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில் அதற்காக ஒரு புதிய துறையானது உருவாக்கப்படும்.
- தனியார் மருத்துவமனைகளில் மேற்கொள்ளப்படும் கொரோனா சிகிச்சைக்கான செலவுகள் அனைத்தும் முதலமைச்சரின் சுகாதாரக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டு அந்த மருத்துவமனைகளுக்கு மாநில அரசே கட்டணத்தினைச் செலுத்தும்.




## சைலோபிஸ் தீபக்கி

- இந்திய இருவாழ்விகள் உயிரியல் (herpetologist) வல்லுநரான தீபக் வீரப்பனின் நினைவாக சிறிய பாம்பு ஒன்றிற்கு சைலோப்ஸ் தீபக்கி என பெயரிடப்பட்டுள்ளது.
- மரத்தில் வாழும் பாம்பு இனங்களைப் பட்டியலிடுவதற்காக சைலோபைனே எனப்படும் ஒரு புதிய துணைக் குடும்பத்தை உருவாக்குவதில் அவர் ஆற்றியப் பங்களிப்பிற்காக இந்தக் கௌரவமானது அவருக்கு வழங்கப்பட்டுள்ளது.
- இந்த இனத்திற்குப் பெயரிடுவதற்குப் பரிந்துரைக்கப்பட்ட பெயர் "தீபக்கின் மரப் பாம்பு" என்பதாகும்.
- சைலோபிஸ் தீபக்கி என்பது வெறும் 20 செ.மீ. நீளமுள்ள ஒளிரும் செதில்களையுடைய ஒரு சிறிய பாம்பு வகையாகும்.
- இந்த பாம்பு இனமானது கன்னியாகுமரியின் தென்னந் தோப்புகளில் காணப் படுகிறது.
- இந்த பாம்பு இனமானது தமிழ்நாட்டைப் பூர்வீகமாகக் கொண்டது எனவும் மேற்குத் தொடர்ச்சி மலையின் தெற்குப் பகுதியின் சில இடங்களிலும் இவைக் காணப் படுவதாகவும் கூறப்படுகிறது.
- இவை வறண்டப் பகுதிகளிலும் அகத்திய மலையைச் சுற்றியுள்ள தாழ் உயரப் பகுதிகளிலும் காணப் படுகின்றன.

## கோவிட் – 19 கட்டுப்பாட்டுக் கட்டளை மையம்

- கோவிட்-19 கட்டுப்பாடுக் கட்டளை மையமாக (War Room) செயல்பட உள்ள ஒருங்கிணைந்த கட்டுப்பாட்டுக் கட்டளை மையத்தினுடைய (Unified Command Centre – UCC) ஆறு முதன்மை அலுவலர்களின் பெயர்களை தமிழக அரசு அறிவித்துள்ளது.
- வழிகாட்டு நெறிமுறைகளுக்கான நிர்வாக இயக்குநர் தரேஷ் அகமத் அவர்கள் UCC

மையத்தின் தலைமைப் பொறுப்பினையும் கட்டளை மையத்தினுடைய ஒட்டுமொத்த ஒருங்கிணைப்பிற்கானப் பொறுப்பினையும் ஏற்க உள்ளார்.

- தமிழ்நாடு குடிமைப் பணிகள் ஆணையத்தின் செயலரான K. நந்தகுமார் அவர்கள் மாநில அளவிலான ஆக்சிஜன் கண்காணிப்பு மற்றும் அவசரகாலத் தேவைகளைப் பூர்த்தி செய்தல் ஆகியவற்றுக்கான முதன்மை அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.
- திரு. நந்தகுமார் அவர்கள் தமிழ்நாடு மருத்துவ கருவிகள் வழங்கீட்டுக் கழகத்துடன் இணைந்து அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் நிலவும் திரவ ஆக்சிஜன் தேவை தொடர்பான அனைத்துப் பிரச்சினைகளையும் எதிர் கொள்வார்.
- கூடுதல் ஆட்சியரான (வளர்ச்சி) டாக்டர். S. உமா அவர்கள் அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் படுக்கை வசதிகளின் மீதான மேலாண்மை விவகாரத்தினைக் கண்காணிப்பதற்கான தலைமை அதிகாரியாக நியமிக்கப் பட்டு உள்ளார்.
- TANGEDCO (Tamil Nadu Generation and Distribution Corporation Limited) அமைப்பின் இணை நிர்வாக இயக்குநரான டாக்டர் S. வினீத் அவர்கள் சென்னை மற்றும் அதனைச் சுற்றியுள்ள அனைத்துப் பதிவு செய்யப்பட்ட மற்றும் பதிவு செய்யப்படாத தனியார் மருத்துவமனைகளை நேரில் சென்று ஆய்வு செய்யும் பணிகளை மேற்கொள்வார்.
- வேலூரின் துணை ஆட்சியரான R. ஐஸ்வர்யா மற்றும் திருவள்ளூரின் ஆட்சியரான அனாமிகா ரமேஷ் ஆகியோர் இவருக்கு உதவிகரமாக இருப்பர்.
- சென்னை மற்றும் அதனைச் சுற்றியுள்ளப் பகுதிகளிலுள்ள முக்கிய அரசு மருத்துவக் கல்லூரிகள் (பிரத்தியேக கோவிட் – 19 மருத்துவமனைகள்) மற்றும் இதர பிரத்தியேக கோவிட் – 19 மருத்துவமனைகள் ஆகியவற்றைக் கண்காணிக்கும் பணிகளை TIDCO (Tamil Nadu Industrial Development Corporation) அமைப்பின் நிர்வாக இயக்குநரான K.P. கார்த்திகேயன் அவர்கள் மேற்கொள்வார்.
- கட்டுப்பாட்டுக் கட்டளை மையத்தின் தரத்தினைப் பராமரித்தல் மற்றும் அதன் சேவைகள் திறம்பட கிடைக்கப் பெறச் செய்வதற்கான பணிகளை TANFINET அமைப்பின் பொது மேலாளரான R. அழகுமீனா அவர்கள் மேற்கொள்வார்.

## முக்கிய நியமனங்கள் – தமிழ்நாடு

- இந்திய ஆட்சிப் பணி (ஐ.ஏ.எஸ்) அதிகாரியான V. இறையன்பு அவர்கள் தமிழக தலைமைச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- நூறு நாட்களுள் மக்களின் குறைகளுக்குத் தீர்வு வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அமைக்கப்பட்ட ஒரு சிறப்புப் பிரிவின் தலைவராக இந்திய ஆட்சிப் பணி அதிகாரியான சில்பா பிரபாகர் சதீஷ் அவர்களை தி.மு.க அரசானது நியமித்து உள்ளது.
- 1993 ஆம் ஆண்டு ஆட்சிப்பணி அதிகாரிகள் குழுவைச் சேர்ந்த மூத்த ஐ.ஏ.எஸ். அதிகாரியான ககன்தீப் சிங் பேடி அவர்கள் சென்னை மாநகராட்சி ஆணையராக நியமிக்கப் பட்டுள்ளார்.
- R. சண்முக சுந்தரம் அவர்கள் தமிழ்நாட்டின் புதிய தலைமை வழக்குரைஞராக நியமிக்கப் பட்டுள்ளார்.
- இவர் 1996 முதல் 2001 ஆம் ஆண்டு வரை மாநிலத்தின் அரசுத் தரப்பு வழக்கறிஞராக பணியாற்றிய மூத்த வழக்கறிஞராவார்.

*நான்கு புதிய செயலாளர்கள்*

- முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுடைய புதிய செயலாளர்களாக, தமிழக அரசானது நான்கு இந்திய ஆட்சிப் பணி அதிகாரிகளை நியமித்துள்ளது.
- அந்த நான்கு அதிகாரிகள்
    - தொல்லியல் துறை ஆணையரான T. உதயச்சந்திரன், முதன்மைச் செயலாளர்,
    - தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழகத்தின் மேலாண்மை இயக்குநரான P. உமாநாத், இரண்டாம் செயலாளர்,
    - அருங்காட்சியங்களின் ஆணையரான M.S. சண்முகம், மூன்றாம் செயலாளர் மற்றும்
    - தொழில்துறை ஆணையர் மற்றும் தொழில் துறை மற்றும் வர்த்தக இயக்குநரான அனு ஜார்ஜ், நான்காம் செயலாளர் ஆவர்.

## 16வது தமிழக சட்டசபை

- 16வது தமிழக சட்டசபையின் முதல் கூட்டமானது மே 11 ஆம் தேதியன்று கூட்டப் பட்டது.
- புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட 234 சட்டசபை உறுப்பினர்களுக்குத் தற்கால அவைத் தலைவரான (Pro tem speakers) K. பிச்சாண்டி அவர்களால் பதவிப் பிரமாணம் செய்யப் பட்டது.
- அவைத் தலைவர் பதவிக்காக தி.மு.க.வின் மூத்த உறுப்பினரான அப்பாவு அவர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டு உள்ளார்.
- தி.மு.க.வின் K. பிச்சாண்டி அவர்கள் துணை சபா நாயகர் பதவிக்குப் பரிந்துரைக்கப் பட்டுள்ளார்.




## சப்டோலூசெப்ஸ் நீல்கிரியென்சிஸ்

- இது கோயம்புத்தூரின் ஆனைக்கட்டி மலைகளில் சமீபத்தில் கண்டறியப்பட்ட ஒரு மெலிதான ஆசிய அரணை வகையின் புதிய இனமாகும்.
- இது கடந்த ஆயிரமாண்டுகளில் இந்தியாவில் கண்டறியப்பட்ட மூன்றாவது அரணை இனமாகும்.
- மணற்பழுப்பு நிறத்தில் காணப்படுகின்ற மற்றும் ஊர்வன இனத்தைச் சேர்ந்த இவை வெறும் 7 செ.மீ. அளவே உடைய மெல்லிய உடலைக் கொண்டதாகும்.

- பெரும்பாலான அரணைகள் பகல் மற்றும் இரவு ஆகிய இரு பொழுதுகளிலும் காணப் படுவதோடு விஷமற்ற தன்மையையும் கொண்டவையாகும்.
- இவை கரையான்கள், சிறுவண்டுகள் மற்றும் சிறு சிலந்திகள் போன்ற பூச்சிகளை உண்ணுகின்றன.
- இவை தற்போது ஒரு பாதிக்கப்படக் கூடிய இனமாக (vulnerable species) வகைப்படுத்தப் பட்டுள்ளன.



## பீமா மூங்கில்

- கோயம்புத்தூரிலுள்ள தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகமானது பீமா மூங்கிலைக் கொண்டு தனது வளாகத்திற்குள்ளேயே ஒரு "ஆக்சிஜன் பூங்காவை" அமைத்துள்ளது.
- பீமா மூங்கிலானது பாம்புசா பல்கூவா எனும் அதிக உயிரி பொருட்களை வழங்குகின்ற மூங்கில் இனத்திலிருந்துத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு உயர் ரக மரபார்ந்த மூங்கில் செடியாகும்.
- இந்த மூங்கிலானது எந்த விதையையும் வழங்காமலும் பல ஆண்டுகளுக்கு மடியாமலும் வளர்ந்து கொண்டே இருக்கும்.
- இந்த இனமானது கார்பன்டை ஆக்சைடு உமிழ்வினைத் தணிக்கும் ஒரு சிறந்த 'கார்பன் மடு' (கார்பன் ஈர்ப்பு) ஆகும்.
- 4 ஆண்டுகளான பீமா மூங்கில் மரங்களால் ஆண்டொன்றிற்கு 400 கிலோ கார்பன்டை ஆக்சைட் வரை உள்ளிழுத்துக் கொள்ள முடியும்.
- செழித்து வளர்ந்த ஒரு பீமா மூங்கில் மரமானது ஆண்டொன்றிற்கு 300 கிலோ ஆக்சிஜனை வெளியிடும்.



### பிளாட்டிசெப்ஸ் ஜோசெப்பி

- சர்வதேச ஆராய்ச்சிக் குழு ஒன்று தமிழ்நாட்டின் தூத்துக்குடி மாவட்டத்தில் ரேவர் வகை பாம்பின் (raver snake) புதிய இனம் ஒன்றைக் கண்டறிந்துள்ளது.
- இந்தப் புதிய இனத்திற்கு மறைந்த ஊர்வன இன அறிவியல் வல்லுநரான நவீன் ஜோசப் அவர்களின் நினைவாக பிளாட்டிசெப்ஸ் ஜோசெப்பி எனப் பெயரிடப் பட்டு உள்ளது.
- இந்தப் புதிய இனத்தின் கண்டுபிடிப்பு பற்றி முதுகின விலங்கியல் (Vertebrate Zoology) எனும் இதழில் வெளியிடப்பட்டது.
- சர்வதேச இயற்கைப் பாதுகாப்பு அமைப்பின் விதிமுறைகளின் படி இந்தப் புதிய உயிரினமானது எளிதில் பாதிக்கப்படக் கூடிய உயிரினங்கள் பிரிவில் (vulnerable) உள்ள ஒரு இனமாக கருதப்பட வேண்டும் என அந்த குழு தெரிவித்துள்ளது.
- பிளாட்டிசெப்ஸ் ஜோசெப்பி இனப் பாம்புகள் அவற்றின் உடலில் ஒரு தனித்துவம் வாய்ந்த வெள்ளைப் பட்டைகளையும் அவற்றின் தலையில் ஒழுங்கற்ற முறையில் அமைந்த வெள்ளைப் புள்ளிகளையும் கொண்டுள்ளன.
- இது தமிழ்நாட்டினைப் பூர்வீகமாகக் கொண்ட, விஷமற்ற, நிலத்தில் வாழும் ஒரு வகை பாம்பாகும்.



# தேசியச் செய்திகள்

### E-2025 முன்னெடுப்பு

- 2025 ஆம் ஆண்டுக்குள் மலேரியாவை ஒழிப்பதற்கு உண்டான திறனுடைய 25 நாடுகளை சமீபத்தில் உலக சுகாதார அமைப்பு (WHO) அடையாளம் கண்டுள்ளது.
- இது E-2025 முன்னெடுப்பு என்றழைக்கப் படுகிறது.
- இதன் கீழ், இந்த நாடுகளுக்கு உலக சுகாதார அமைப்பு தொழில்நுட்ப வழிகாட்டுதல் மற்றும் நிபுணத்துவ உதவி ஆகியவற்றை வழங்கும்.
- இந்த நாடுகளில் மூன்று நாடுகள் ஆப்பிரிக்காவைச் சேர்ந்தவை.
- அவை எஸ்வத்னி, போட்ஸ்வானா மற்றும் தென் ஆப்பிரிக்கா ஆகியனவாகும்.

## லடாக் உத்வேகமளிக்கப்பட்ட மனம் திட்டம்

- கார்கில் மற்றும் லடாக் மாவட்டத்தைச் சேர்ந்த லடாக்கிய மாணவர்களுக்கு கல்வி வாய்ப்புகளை வழங்குவதற்காக இந்திய இராணுவமானது 'லடாக் உத்வேகமளிக்கப் பட்ட மனம்' என்ற திட்டத்தினை தொடங்கியது.
- இதற்காக HPCL (இந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிடெட்) மற்றும் கான்பூரைச் சேர்ந்த தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் கல்வி மேம்பாட்டு அமைப்பு (National Integrity and Educational Development Organisation) எனப்படும் அரசு சாரா அமைப்பு ஆகியவற்றுக்கு இடையே ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

## LAC திட்டம்

- சமீபத்தில் அந்தமான் மற்றும் நிக்கோபர் தீவுகளில் உள்ள சுமார் 14,491 ஹெக்டேர் நிலங்களை இயற்கை நிலங்கள் என வேளாண் மற்றும் விவசாயிகள் நல அமைச்சகம் சான்றிதழ் வழங்கியுள்ளது.
- இந்த அரசுத் திட்டத்தின் கீழ் சான்றிதழ் பெற்ற முதலாவது பெரிய அருகருகேமைந்த ஒரு நிலப்பரப்பு இதுவாகும்.
- இந்த இயற்கை நிலச் சான்றிதழானது பங்கேற்பு உத்தரவாதச் சான்றிதழ் வழங்கும் திட்டத்தின் பெரிய நிலப்பரப்புகளுக்கு சான்றிதழ் வழங்கும் திட்டத்தின் (Large Area Certification – LAC) கீழ் வழங்கப்படுகிறது.
- இந்தத் திட்டமானது பரம்பராகத் கிரிஷி விகாஷ் யோஜனா (Paramparagat Krishi Vikas Yojana) என்ற ஒரு திட்டத்தின் கீழ் தொடங்கப் பட்டது.

## ஒற்றைப் படிக இறக்கைகள்



- ஹெலிகாப்டர்களுக்கான ஒற்றைப் படிக இறக்கைகள் என்ற தொழில்நுட்பத்தினை பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு (DRDO) உருவாக்கியுள்ளது.
- அந்நிறுவனம் அம்மாதிரியிலான 60 இறக்கைகளை இந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் லிமிடெட் (HAL) நிறுவனத்திற்கு வழங்கியுள்ளது.
- இந்த ஒற்றைப் படிக உயர் அழுத்த சுழல் இறக்கைகள் (High Pressure Turbine) நிக்கலை அடிப்படையாகக் கொண்ட மீவெப்ப உலோகக் கலவையினால் (Super alloy) ஆனது.

## கர்ப்பிணிப் பெண்களுக்கான உதவி எண்

- பெண்களுக்கான தேசிய ஆணையமானது சமீபத்தில் கர்ப்பிணிப் பெண்களுக்கான கட்செவி அஞ்சல் (வாட்ஸ்அப்) உதவி எண்ணினை வெளியிட்டது.
- அந்த உதவி எண் 9354954224 ஆகும்.
- இந்த எண்ணிற்குக் குறுஞ்செய்தி மட்டுமே அனுப்ப முடியும்.
- இந்த எண் நாடு முழுவதுமுள்ள மகப்பேறு நிலையில் உள்ள தாய்மார்களுக்கு மருத்துவ உதவி வழங்குவதற்காக நாள் முழுவதும் செயல்படும் வகையிலானதாகும்.
- பெண்களுக்கான தேசிய ஆணையமானது 1992 ஆம் ஆண்டில் பெண்களுக்கான தேசிய ஆணையச் சட்டத்தின் கீழ் இயற்றப்பட்டது.

## கோவிட்-19 மாதிரிகளைச் சேகரிக்கும் புதிய தொழில்நுட்பம்

- செல் மற்றும் மூலக்கூறு உயிரியல் மையத்தின் இயக்குநரான ராகேஷ் மிஷ்ரா, கோவிட் – 19 மாதிரிகளைச் சேகரிப்பதற்கான ஒரு புதிய உலர்ந்த ஸ்வாப் தொழில் நுட்பத்தை உருவாக்கியுள்ளதாக கூறியுள்ளார்.
- உலர்ந்த ஸ்வாப் தொழில்நுட்பத்தின் மூலம் கோவிட்-19 மாதிரிகளைச் சேகரிக்கும் முறையானது நோய்க்கிருமியை ஒரு ஊடகம் மூலம் எடுத்துச் செல்லும் முறையினைப் போன்று அல்லாது நாசியிலிருந்து எடுக்கப்பட்ட ஸ்வாப் மாதிரிகளை உலர் நிலையில் வைத்து சோதனைக்குக் கொண்டு செல்லும் முறையாகும்.
- நோய்க்கிருமியை ஒரு ஊடகம் மூலம் எடுத்துச் செல்லும் முறையில் (Viral Transport Medium – VTM) வைரஸ் மேலும் பரவுவதற்கான சாத்தியக் கூறுகள் உள்ளன.
- உலர்ந்த ஸ்வாப் மூலம் மாதிரி சேகரித்தல் (Dry Swab Technique) முறையானது பாதுகாப்பான, விரைவான, மலிவான மற்றும் மிகவும் துல்லியமான முறையாகும்.

## நிகர பூஜ்ஜிய பசுமை இல்ல வாயு வெளியீடு – விப்ரோ

- 2040 ஆம் ஆண்டுக்குள் பசுமை இல்ல வாயுக்களின் வெளியீட்டினை நிகர பூஜ்ஜியம் என்ற அளவில் (Net Zero) குறைப்பதற்கான தனது உறுதிமொழியினை விப்ரோ நிறுவனமானது அறிவித்துள்ளது.
- இது வெப்பநிலை உயர்வினை 1.5°C எனும் வரம்பில் வைத்திருப்பதற்கான பாரீஸ் உடன்படிக்கையின் குறிக்கோளுடன் ஒத்திருக்கிறது.
- 2016-17 எனும் அடிப்படை ஆண்டுடன் ஒப்பிடுகையில் பசுமை இல்ல வாயுக்களின் முழுமையான வெளியீடுகளை 2030 ஆம் ஆண்டுக்குள் 55% என்ற அளவிற்குக் குறைப்பதற்கான இடைநிலை இலக்கினையும் இந்நிறுவனம் நிர்ணயித்துள்ளது.

## தேர்தல் முடிவுகள் 2021

- மேற்கு வங்கம், அசாம், தமிழ்நாடு, கேரளா மற்றும் புதுச்சேரி ஆகிய மாநிலச் சட்டமன்றங்களுக்கான 2021 ஆம் ஆண்டின் தேர்தல் முடிவுகள் மே 02 ஆம் தேதி அறிவிக்கப் பட்டன.

***மேற்கு வங்காளம் (294 தொகுதிகள்)***

- மேற்கு வங்காளத்தில் திரிணாமுல் காங்கிரஸ் மாபெரும் வெற்றியைப் பெற்றுள்ளது.
- மேற்கு வங்காளத்தில் தொடர்ந்து மூன்றாவது முறையாக திரிணாமுல் காங்கிரஸ் ஆட்சி அமைக்க உள்ளது.

***தமிழ்நாடு (234 இடங்கள்)***

- தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவரான மு.க. ஸ்டாலின் மாநில முதல்வராக பொறுப்பேற்க உள்ளார்.

| Seats Won by Parties | | | | | |
|---|---|---|---|---|---|
| State | Seats Won | Party and Alliances | | | |
| Assam | 126/126 | BJP+ | INC+ | OTH/IND | |
| | | 75 | 50 | 1 | |
| Kerala | 140/140 | LDF | UDF | BJP+ | OTH |
| | | 94 | 40 | 0 | 6 |
| West Bengal | 292/292 | TMC+ | BJP | LEFT+ | OTH/IND |
| | | 213 | 77 | 1 | 1 |
| Tamil Nadu | 234/234 | DMK+ | AIADMK+ | MNM | OTH/IND |
| | | 159 | 75 | 0 | 0 |
| Puducherry | 30/30 | BJP+NRC | INC+ | OTH/IND | |
| | | 16 | 8 | 6 | |

***கேரளா (140 தொகுதிகள்)***

- பினராயி விஜயன் தலைமையிலான இடதுசாரி ஜனநாயக முற்போக்கு அரசானது அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொண்டு வரலாறு படைத்துள்ளது.
- இங்கு 40 ஆண்டுகளில் ஒரே அணியானது தொடர்ந்து இரண்டாவது முறையாக ஆட்சி அமைப்பது இதுவே முதல்முறையாகும்.

***அசாம் (126 தொகுதிகள்)***

- அசாமில் பாரதிய ஜனதா கட்சியானது ஆட்சியைத் தக்க வைத்துக் கொண்டுள்ளது.

***புதுச்சேரி (30 தொகுதிகள்)***

- NR காங்கிரஸ் மற்றும் அதன் கூட்டணிக் கட்சியான பா.ஜ.க உள்ளிட்ட தேசிய ஜனநாயக கூட்டணியானது 30 உறுப்பினர்களைக் கொண்ட சட்டமன்றத்தில் தனது ஆட்சியினை அமைக்க உள்ளது.

## புதிய சோயா அவரை வகை

- இந்திய அறிவியலாளர்கள் சமீபத்தில் “MACS 1407” எனப்படும் புதிய (சோயா பீன்) சோயா அவரை வகையினை உருவாக்கியுள்ளனர்.
- இந்தப் புதிய வகையானது பூனாவின் அகார்கர் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம் ஆகியவற்றால் உருவாக்கப்பட்டது.
- MACS 1407 சோயா அவரை வகையானது 2022 ஆம் ஆண்டு காரிப் பருவ காலத்தின் போது விவசாயிகளுக்கு கிடைக்கப் பெறும்.

## மாநிலப் பேரிடர் நிவாரண நிதி

- நிதி அமைச்சகம் சமீபத்தில் மாநிலப் பேரிடர் நிவாரண நிதியின் முதல் தவணையை வழங்கியுள்ளது.
- நிதி ஆணையத்தின் பரிந்துரையின்படி, இந்த நிதியானது 2021 ஆம் ஆண்டு ஜுன் மாதத்தில் வழங்கப்பட இருந்தது.
- தற்போது இந்த நிதியானது முன்னதாகவே வழங்கப்பட்டுள்ளது.
- 2021-22 ஆம் ஆண்டிற்காக வழங்கப்படும் மொத்த மாநிலப் பேரிடர் நிவாரண நிதித் தொகை ரூ.8,873 கோடியாகும்.
- நிதி அமைச்சகமானது இந்த நிதியின் 50% தொகையினை அதாவது ரூ.4,436.8 கோடியினை மாநிலங்களுக்கு வழங்கியுள்ளது.
- மாநிலப் பேரிடர் நிவாரண நிதியானது 2005 ஆம் ஆண்டு பேரிடர் மேலாண்மைச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டது.

## உணவு தானிய உற்பத்தி

- 2021-2022 ஆம் பயிர் ஆண்டிற்கான உணவு தானிய உற்பத்தி இலக்கினை 307.31 மில்லியன் டன்களாக அரசு நிர்ணயித்துள்ளது.
- இதனுள்,
    - காரிப் (கோடைகால) பருவகாலத்தின் போது 151.43 மில்லியன் டன்களும்
    - ராபி (குளிர்கால) பருவகாலத்தின் போது 155.88 மில்லியன் டன்களும்

  உற்பத்தி செய்யப்பட இலக்கு நிர்ணயிக்கப் பட்டுள்ளது.
- கடந்த ஆண்டு மதிப்பிடப்பட்ட 303.34 மில்லியன் டன் அளவிலான உணவு தானிய உற்பத்தியை விட இந்த ஆண்டு நிர்ணயிக்கப்பட்ட உற்பத்தியானது1.3% அதிகமாகும்.

## முதலாவது பசுமை சூரிய ஆற்றல் உற்பத்தி ஆலை

- இந்திய இராணுவமானது வடக்கு சிக்கிமில் அமைக்கப்பட்டுள்ள 56 KVA (கிலோ வோல்ட் – ஆம்பியர்) திறனுடைய தனது முதலாவது பசுமை சூரிய ஆற்றல் உற்பத்தி ஆலையைத் திறந்து வைத்தது.
- இந்த ஆலையானது வனேடியத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு மின்கல தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி செயல்படுகிறது.
- இந்த ஆலை 16000 அடி உயரத்தில் அமைந்துள்ளது.
- இந்த ஆலையானது பம்பாய் இந்திய தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்துடன் (IIT – Mumbai) இணைந்து நிறைவு செய்யப்பட்டுள்ளது.
- IIT மும்பையின் பேராசிரியர் பிரகாஷ் கோஷ் ஆகியோரால் தலைமையிலான ஒரு குழு மற்றும் இந்திய இராணுவ வீரர்கள் ஆகியோரால் இந்த ஆலை நிறைவு செய்யப் பட்டுள்ளது.

## சமுத்திர சேது II நடவடிக்கை

- இந்தியக் கடற்படையானது சமீபத்தில் சமுத்திர சேது – II என்ற நடவடிக்கையினை தொடங்கி உள்ளது.
- நாட்டின் ஆக்சிஜன் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் இந்த நடவடிக்கை உதவியாக இருக்கும்.
- இந்த நடவடிக்கையின் கீழ், திரவ ஆக்சிஜன் நிரப்பப்பட்ட கிரையோஜெனிக் கொள்கலன்களைக் கொண்டு செல்ல போர்க் கப்பல்கள் பயன்படுத்தப் படுகின்றன.
- ஐ.என்.எஸ் தால்வார் எனும் கப்பலானது மனாமாவிலிருந்து மும்பைக்கு 40 மில்லியன் டன் ஆக்சிஜனைக் கொண்டு செல்ல உள்ளது.
- ஐ.என்.எஸ். கொல்கத்தா எனும் கப்பலானது முதலில் தோஹாவிற்குச் சென்று மருத்துவம் சார்ந்த பொருட்களைப் பெற்று பின்னர் திரவ ஆக்சிஜன் கலன்களைப் பெறுவதற்கு வேண்டி குவைத் நாட்டிற்குச் செல்ல உள்ளது.
- ஐ.என்.எஸ். ஐராவத் எனும் கப்பலானது திரவ ஆக்சிஜன் கலன்களைப் பெறுவதற்காக சிங்கப்பூருக்குச் செல்கிறது.
- ஐ.என்.எஸ். ஜலஷ்வா எனும் கப்பலும் இந்தத் திட்டத்திற்கு வேண்டி பயன்படுத்தப்பட உள்ளது.
- தெற்குக் கடற்படைக் குழுவின் ஐ.என்.எஸ். சார்துல் எனும் கப்பலும் இந்த நடவடிக்கையில் இணைய தயாராக உள்ளது.
- இந்த நடவடிக்கையானது ஏற்கனவே இந்திய இரயில்வேயினால் மேற்கொள்ளப்பட்ட ஆக்சிஜன் விரைவு இரயில் திட்டத்திற்கு உந்தமளிக்கும்.

## P–8I ரக ரோந்து விமானம்

- P–8I ரக ரோந்து விமானங்களை இந்தியாவிற்கு விற்பனை செய்வதற்கு அமெரிக்கா சமீபத்தில் ஒப்புதல் அளித்துள்ளது.
- இது அதிஉயர் வரம்புடைய ஒரு ரோந்து விமானமாகும்.
- இந்த விமானமானது இந்தியக் கடற்படைக்காக போயிங் நிறுவனத்தால் உருவாக்கப் பட்டதாகும்.



- இந்த விமானமானது P–8A போசிடனின் (Poseidon) வகையாகும்.
- போசிடன் ரோந்து விமானமானது அமெரிக்கக் கடற்படையினால் இயக்கப்படும் விமானமாகும்.

- P – 8I ரக விமானமானது கடல்சார் ரோந்து பணிகள், நீர்மூழ்கி எதிர்ப்புப் போர்கள், உளவுப் பணிகள் மற்றும் கண்காணிப்புப் பணிகளை மேற்கொள்ளும் திறன் உடையதாகும்.

## உணவுப் பதப்படுத்தும் தொழிற்சாலைகளுக்கான உற்பத்தி ஊக்குவிப்புத் திட்டம்

- உணவுப் பதப்படுத்தும் தொழிற்துறை அமைச்சகமானது உணவுப் பதப்படுத்தும் தொழிற்சாலைகளுக்கான உற்பத்தி ஊக்குவிப்புத் திட்டத்திற்கான (Production Linked Incentive Scheme for Food Processing Industry – PLISFPI) இணையவழித் தளத்தினைத் தொடங்கியுள்ளது.
- மத்திய அரசின் இந்தத் திட்டமானது 2021-22 முதல் 2026-27 வரையிலான காலக் கட்டத்தில் அமல்படுத்தப்பட உள்ளது.
- இந்தத் திட்டமானது பிரதமர் அறிவித்த ஆத்ம நிர்பர் பாரத் அபியான் திட்டத்தின் ஓர் அங்கமாகும்.
- இந்தியாவின் இயற்கை வளங்களைக் கொண்டு உலகளாவிய உணவு உற்பத்திப் பெரு நிறுவனங்களை உருவாக்குவதற்கும் சர்வதேசச் சந்தைகளில் இந்திய உணவு உற்பத்திப் பொருட்களைக் கொண்டு செல்வதற்கும் இந்தத் திட்டம் உதவும்.
- இந்தத் திட்டத்தில் இரண்டு கூறுகள் உள்ளன. அவை,
  - சமைக்க/சாப்பிட தயார் நிலையிலுள்ள உணவுகள், பதப்படுத்தப்பட்ட பழங்கள் மற்றும் காய்கறிகள், கடல்சார் உற்பத்திப் பொருட்கள், மொசரெல்லா (இத்தாலியப் பாலாடைக்கட்டி) போன்ற நான்கு முக்கிய உணவு உற்பத்திப் பொருட்களின் தயாரிப்பிற்கு விற்பனை சார்ந்த ஊக்கத் தொகைகளை வழங்குதல்.
  - வெளிநாடுகளில் இந்தப் பொருட்களுக்கு அடையாளக் குறியிடுதல் (bronding) மற்றும் சந்தைப்படுத்துதல் போன்றவற்றை மேற்கொள்வதற்காக சில மானியங்களை வழங்குதல்.

## PRAYAAS திட்டம்

- தொழிலாளர்கள் வருங்கால வைப்பு நிதி அமைப்பானது (Employees Provident Fund Organisation – EPFO), 1995 ஆம் ஆண்டு தொழிலாளர்கள் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ், ஓய்வு பெறும் தொழிலாளர்களுக்கு "PRAYAAS" என்ற முன்னெடுப்பின் மூலம் ஓய்வூதிய வழங்கீட்டு ஆணைகளை அனுப்பியுள்ளது.
- "PRAYAAS" என்பது ஓய்வு பெறும் போதே ஓய்வூதிய வழங்கீட்டு ஆணையை வழங்குவதற்கான EPFO அமைப்பின் ஒரு முன்னெடுப்பாகும்.

## Road Map 2030 (செயல்திட்டம் 2030)

- காணொலி மூலம் நடைபெற்ற இருதரப்பு உச்சி மாநாட்டில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியும் ஐக்கிய ராஜ்ஜிய பிரதமர் போரிஸ் ஜான்சனும் பங்கேற்றனர்.
- இந்த உச்சி மாநாட்டின் போது "Road Map 2030" (செயல்திட்டம் 2030) எனப்படும் ஒரு இலட்சியம் மிக்கத் திட்டத்தினை இரு தலைவர்களும் ஏற்றுக் கொண்டனர்.
- இரு நாடுகளிடையே இருதரப்பு உறவுகளை மேம்படுத்த இத்திட்டமானது உதவும்.

*முக்கிய குறிப்புகள்*

- ❖ இந்தியாவிலேயே தயாரிக்கப்படுகின்ற மார்க் 2 எனப்படும் இலகுரக போர் விமானத்தினை உருவாக்குவதில் இணைந்து செயல்படுவதற்கு இந்தியாவும் ஐக்கிய ராஜ்ஜியமும் ஒப்புக் கொண்டுள்ளன.
- ❖ COP 26 மாநாட்டில் ஒரு மகத்தான பலனை வழங்குவதற்காக இரு நாடுகளும் இணைந்து செயல்படும்.
- ❖ இந்தச் செயல்திட்டமானது இந்தியாவுக்கும் ஐக்கிய ராஜ்ஜியத்துக்கும் இடையே சுகாதாரத் துறையின் மீதான கூட்டாண்மையை விரிவுபடுத்தும்.
- ❖ இரு நாடுகளுக்கிடையேயான வர்த்தகத் தடைகளை நீக்கவும் தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் (Free Trade Agreement – FTA) குறித்த பேச்சுவார்த்தைகளைத் தொடங்கவும் இரு நாடுகளின் தலைவர்களும் ஒப்புக் கொண்டுள்ளனர்.
- ❖ "இந்தியா-ஐக்கிய ராஜ்ஜிய ஒன்றிணைவு" அமலாக்கம் (Implement "India-UK Together") (SAATH – SAATH) என்பது ஒரு கூட்டு கலாச்சாரப் பரிமாற்றத் திட்டமாகும்.
- ❖ மேலும் குஜராத் சர்வதேச நிதியியல் தொழில்நுட்ப நகரின் (GIFT City) மேம்பாட்டினைத் துரிதப்படுத்துவதற்கான ஒத்துழைப்பினை அதிகப்படுத்துவதற்கும் இரு நாடுகளும் ஒப்புக் கொண்டுள்ளன.

## மிகவும் செல்வாக்குமிக்க 100 இந்திய நிறுவனங்கள் - SAIL

- ❖ மும்பைப் பங்குச் சந்தையில் SAIL நிறுவனத்தின் பங்கானது ஒன்பது ஆண்டுகளில் இல்லாத அளவில் ரூ.135.60 என்ற அளவிற்கு உயர்ந்துள்ளது.
- ❖ கடந்த ஆறு வாரங்களில் SAIL நிறுவனத்தின் பங்குகள் 85% உயர்ந்துள்ளன.
- ❖ இந்த நிறுவனமானது மிகவும் செல்வாக்குமிக்க இந்திய நிறுவனங்கள் பட்டியலில் இடம் பெற்றுள்ளது.
- ❖ SAIL என்றால் இந்திய எஃகு ஆணையம் (Steel Authority of India Limited) என்பதாகும்.
- ❖ இது எஃகு நிறுவனங்கள் அமைச்சகத்தின் கீழ் இயங்குகிறது.
- ❖ இது ஐந்து பெரிய ஒருங்கிணைந்த எஃகு ஆலைகளை உள்ளடக்கியது. அவை,
    - ○ ரூர்கேலா எஃகு ஆலை,
    - ○ பிலாய் எஃகு ஆலை,
    - ○ துர்காபூர் எஃகு ஆலை,
    - ○ IISCO மற்றும்
    - ○ பொக்காரோ எஃகு ஆலை.
- ❖ மேலும் இந்த நிறுவனம் 3 சிறப்பு எஃகு ஆலைகளையும் உள்ளடக்கியுள்ளது. அவை,
    - ○ விஸ்வேஸ்வரய்யா இரும்பு மற்றும் எஃகு ஆலை
    - ○ சேலம் எஃகு ஆலை
    - ○ எஃகு உலோகக் கலவை ஆலை மற்றும் ஃபெரோ உலோகக் கலவை ஆலை, சந்திராப்பூர்

## 5G சோதனைகளை மேற்கொள்ளும் தொலைதொடர்பு நிறுவனங்கள்

- தொலைதொடர்புத் துறையானது சமீபத்தில் நாட்டில் 5G சோதனைகளை மேற்கொள்வதற்கு தொலைதொடர்பு சேவை வழங்கும் நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கி உள்ளது.
- தொலைதொடர்புத் துறையானது இந்தியாவில் 5G சோதனைகளை மேற்கொள்ளச் செய்வதற்கு வேண்டி பாரதி ஏர்டெல், ரிலையன்ஸ் ஜியோ, வோடபோன், ஐடியா மற்றும் MTNL (Mahanagar Telephone Nigam Limited) போன்ற தொலைதொடர்பு சேவை வழங்கும் நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கியுள்ளது.
- இந்த நிறுவனங்கள் நோக்கியா, எரிக்சன், சாம்சங் உள்ளிட்ட அசல் கைபேசி உபகரண உற்பத்தியாளர்களுடன் ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளன.
- ரிலையன்ஸ் ஜியோ நிறுவனம் தனது சொந்த தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி 5G சோதனைகளை மேற்கொள்ள உள்ளது.
- சீன நிறுவனங்களுக்கு 5G சோதனைகளை மேற்கொள்வதற்கு அனுமதி இல்லை.

## ஆயுஷ் 64

- ஆயுஷ் 64 (AYUSH 64) எனும் மருந்தின் விநியோகத்தினைச் சீரமைப்பதற்காக சில நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக ஆயுஷ் அமைச்சகம் அறிவித்துள்ளது.
- ஆயுஷ் 64 என்பது பல மூலிகைகளை உள்ளடக்கிய ஒரு ஆயுர்வேத மருந்தாகும்.
- இதனை கொரோனா வைரசின் லேசானது முதல் மிதமான தொற்றுகளுக்குச் சிகிச்சையளிப்பதற்காக பயன்படுத்தலாம்.
- ஆயுஷ் 64 எனும் மருந்தானது முதலில் 1980 ஆம் ஆண்டில் மலேரியாவின் சிகிச்சைக்காக உருவாக்கப்பட்டது.
- இந்த மருந்தானது, மருந்தியல் சார்ந்த அனைத்து ஒழுங்குமுறைத் தேவைகள் மற்றும் தரங்களுடனும் ஒத்திருக்கிறது.




## சமூகம் மற்றும் பொருளாதார ரீதியில் பிற்படுத்தப் பட்ட சமுதாயத்தினை அடையாளம் காணுதல் – மத்திய அரசு

- சமீபத்தில் உச்சநீதிமன்றமானது சமூகம் மற்றும் பொருளாதார ரீதியில் பிற்படுத்தப் பட்ட சமுதாயத்தினரை அடையாளம் காணுதல் குறித்த முடிவுகளை குடியரசுத் தலைவர் மட்டுமே மேற்கொள்ள இயலும் என்று கூறியுள்ளது.

- இந்தத் தீர்ப்பானது 102வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தை நிலைநிறுத்தும் வகையில் பிறப்பிக்கப்பட்டுள்ளது.
- சமூகம் மற்றும் பொருளாதார ரீதியில் பிற்படுத்தப் பட்ட சமுதாயத்தினரை நிர்ணயம் செய்வதற்கான மாநில அரசுகளின் அதிகாரங்களை 102வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம் பறித்து விட்டதாக உச்சநீதிமன்றம் கூறியுள்ளது.
- 102வது அரசியலமைப்புச் திருத்தச் சட்டமானது சட்டப் பிரிவு 338B மற்றும் சட்டப் பிரிவு 342A ஆகியவற்றை அரசியலமைப்பினுள் சேர்த்துள்ளது.
- சட்டப் பிரிவு 338 B ஆனது பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான தேசிய ஆணையத்தின் அமைப்பு, அதிகாரம் மற்றும் கடமைகள் பற்றியதாகும்.
- சட்டப் பிரிவு 342 A ஆனது ஒரு குறிப்பிட்ட சாதியினரை சமூகம் மற்றும் பொருளாதார ரீதியில் பிற்படுத்தப் பட்டவர்கள் என அறிவிப்பதற்கான குடியரசுத் தலைவரின் அதிகாரம் பற்றியதாகும்.

## ஹூலாக் கிப்பன்ஸ்

- ஹூலாக் கிப்பன்ஸ் (Hoolock Gibbons) என்பவை சிறிய அளவிலான குரங்குகளாகும்.
- சியாமங்கையடுத்து (Siamang) கிப்பன்ஸ் வகை குரங்குகளில் இரண்டாவது பெரிய குரங்கு வகை இதுவாகும்.



- மூன்று வகை ஹூலாக் கிப்பன்ஸ் குரங்கு இனங்கள் உள்ளன.
- அவை,
  - மேற்கத்திய ஹூலாக் கிப்பன்
  - ஸ்கைவாக்கர் ஹூலாக் கிப்பன் மற்றும்
  - கிழக்கத்திய ஹூலாக் கிப்பன் ஆகும்.
- முன்னதாக கிழக்கத்திய ஹூலாக் கிப்பன் மற்றும் மேற்கத்திய ஹூலாக் கிப்பன் ஆகிய இனங்களின் இருப்பிடமாக இந்தியா (வடகிழக்கு இந்தியா) இருந்ததாக கூறப்பட்டு வருகிறது.
- இருப்பினும் மேற்கத்திய ஹூலாக் கிப்பன் இனம் மட்டுமே இந்தியாவில் காணப் படுவதாக செல் மற்றும் மூலக்கூறு உயிரியல் மையத்தின் சமீபத்திய ஆய்வுகள் கூறுகின்றன.

## சமூகப் பாதுகாப்பு நெறிமுறை – 142வது பிரிவு

- தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு அமைச்சகமானது சமீபத்தில் 2020 ஆம் ஆண்டின் சமூகப் பாதுகாப்பு நெறிமுறையின் 142வது பிரிவினை அறிவித்துள்ளது.
- இந்தப் பிரிவானது ஆதார் எவற்றிற்கெல்லாம் பொருந்தும் என்பது பற்றி விவரிக்கச் செய்கிறது.
- இந்த அறிவிப்பானது பல்வேறு சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின் பயனாளர்களிடமிருந்து ஆதார் தகவல்களைச் சேகரிப்பதற்கு தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகத்திற்கு உதவும்.
- இதனுள் புலம்பெயர் தொழிலாளர்களும் அடங்குவர்.
- ஒரு ஊழியர் (அ) அமைப்பு சாரா நபர் (அ) வேறு எவரும் அரசுத் திட்டங்களின் மூலம் பயன் பெறுவதற்கு ஆதார் தகவல்கள் கட்டாயம் என 142வது பிரிவு கூறுகிறது.
- இதன் மூலம் பெறப்படும் பயன்களாவன : மருத்துவ சிகிச்சைக்கானப் பண உதவி, தொழில் சேவை மையங்களை அணுகுதல், மகப்பேறு உதவிகள், காப்பீட்டுத் தொகையினைப் பெறுதல் போன்றவையாகும்.
- சமூகப் பாதுகாப்பு நெறிமுறையானது 2019 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது.


## மராத்தா சமூகத்தினருக்கான இட ஒதுக்கீடு செல்லாது – உச்சநீதிமன்றம்

- மராத்தா சமூகத்தினருக்கு இட ஒதுக்கீடு வழங்குவதற்கான மகாராஷ்டிராவின் சட்டமானது செல்லாது என உச்சநீதிமன்றத்தின் 5 நீதிபதிகள் கொண்ட ஒரு அமர்வு ஒரு மனதாக அறிவித்துள்ளது.
- இது ஏனெனில் ஒரு குறிப்பிட்ட சமூகமானது அந்த மாநிலத்தின் 50 சதவீத இட ஒதுக்கீட்டு வரம்பினை மீறி இட ஒதுக்கீட்டைப் பெறுவதே இதற்குக் காரணமாகும்.
- மேலும் மராத்தா சமுதாயத்தினருக்கு வழங்கப்படும் தனி இடஒதுக்கீடானது சட்டப் பிரிவு 14 (சம உரிமை) மற்றும் சட்டப் பிரிவு 21 (சட்டத்தின் முறைமை) ஆகியவற்றை மீறுவதாகவும் உச்சநீதிமன்றம் கூறுகிறது.
- மராத்தா இட ஒதுக்கீட்டுச் சட்டம் இயற்றப்பட்டதற்கு வழிவகுத்த நீதிபதி N.G. கெயிக்வாட் ஆணையத்தின் தகவல்களும் செல்லாது என உச்சநீதிமன்றம் கூறி உள்ளது.
- மகாராஷ்டிராவின் சமூகம் மற்றும் கல்வியில் பிற்படுத்தப் பட்ட பிரிவினருக்கான இட ஒதுக்கீட்டுச் சட்டம், 2018 என்ற சட்டத்தினைச் செல்லும் என்று அறிவித்த மும்பை உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பினையும் உச்ச நீதிமன்றம் புறக்கணித்துள்ளது.
- 2019 ஆம் ஆண்டு ஜுன் மாதத்தில், மும்பை உயர்நீதிமன்றமானது மராத்தா சமூகத்தினருக்கான 16% இட ஒதுக்கீட்டு அளவினை கெயிக்வாட் ஆணையத்தின் பரிந்துரையின் படி கல்வியில் 12 சதவீதம் எனவும் வேலைவாய்ப்பில் 13 சதவீதம் எனவும் குறைத்தது.
- உயர்நீதிமன்றத்தால் வழங்கப்பட்டுள்ள இந்த குறைக்கப்பட்ட இட ஒதுக்கீடும் கூட ஒரு அதிகார மீறல் என உச்சநீதிமன்றம் தற்போது கூறியுள்ளது.

### வாகனங்களில் இருந்த படியே (ட்ரைவ் இன்) தடுப்பூசியைப் பெறுவதற்கான மையம்

- இந்தியாவின் முதலாவது டிரைவ்-இன் தடுப்பு மருந்து மையத்தினைப் பாராளுமன்ற உறுப்பினர் ராகுல் செவாலே மும்பையில் தொடங்கி வைத்தார்.
- இந்த மையமானது தாதரில் உள்ள கோகினூர் சதுக்கம் என்ற கட்டிடத்தின் வாகன நிறுத்த தளத்தில் அமைக்கப் பட்டுள்ளது.
- தடுப்பு மருந்து வழங்கும் மையங்களை அடைவதில் மாற்றுத் திறனாளிகள் எதிர் கொள்ளும் இன்னல்களைப் போக்கும் வகையில் நாட்டில் முதல்முறையாக இவ்வகை வசதியானது செய்யப்பட்டுள்ளது.

### மிஷன் பாரத் O2




- கான்பூரிலுள்ள இந்தியத் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தினுடைய (IIT – Kanpur) புத்தாக்க நிறுவனங்களைக் காத்தல் மற்றும் புத்தாக்கத்திற்கான மையமானது (Starup Incubation and Innovation Centre – SIIC) மிஷன் பாரத் $O_2$ எனும் திட்டத்தைத் தொடங்கி உள்ளது.
- இது அவரசகாலத்தை எதிர்கொள்வதற்காக உள்நாட்டிலேயே தயாரிக்கப்படும் உயர்தர, விரைவான ஆக்சிஜன் உற்பத்தி அலகுகளை 45 நாட்களுக்குள் தயாரிப்பதற்கான ஒரு சவாலாகும்.
- SIIC மையமானது கடந்த ஆண்டிலும் சுவாசா N - 95 முகக் கவசம் மற்றும் நோக்கர்க் V310 சுவாசக் கருவி (Ventilator) போன்ற உள்நாட்டு உற்பத்திப் பொருட்களைத் தயாரிப்பதற்காக தனது காப்பு நிறுவனங்களுக்கு ஆதரவினை வழங்கியது.

### 2-DG வாய்வழியாக உட்கொள்ளும் வகையிலான மருந்து

- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி அமைப்பினால் (DRDO - Defence Research Development Organisation) உருவாக்கப்பட்ட 2-DG என்ற மருந்திற்கான அவசரகாலப் பயன்பாட்டிற்கு வேண்டி அதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
- 2-DG என்றால் 2-டி ஆக்சி-டி-குளுக்கோஸ் (2-Deoxy-D-Glucose) என்பதாகும்.
- Dr. ரெட்டி ஆய்வகத்துடன் இணைந்து இந்த மருந்தானது உருவாக்கப்பட்டுள்ளது.

- லேசானது முதல் மிதமான கோவிட்-19 தொற்றுள்ள நோயாளிகளுக்கு இந்த மருந்தினை வழங்குவதற்கான அவசரகாலப் பயன்பாட்டிற்கு இந்தியத் தலைமை மருந்துக் கட்டுப்பாட்டு அமைப்பானது அனுமதி வழங்கியுள்ளது.




## மாதிரி காப்பீட்டுக் கிராமங்கள்

- இந்தியக் காப்பீட்டு ஒழுங்குமுறை மற்றும் வளர்ச்சி ஆணையமானது (IRDAI – Insurance Regulatory and Development Authority) மாதிரி காப்பீட்டுக் கிராமங்கள் (Model Insurance Villages – MIV) எனப்படும் ஒரு புதிய திட்டத்தைக் கொண்டு வர முடிவு செய்துள்ளது.
- கிராம மக்களை எளிதில் பாதிக்கக்கூடிய, காப்பீடு பெறும் வகையிலான பெரிய ஆபத்துகளிலிருந்து அவர்களுக்குப் பாதுகாப்பு வழங்குவதற்கான விரிவான ஒரு காப்பீட்டு வசதியினை வழங்குவதும் அந்தக் காப்பீட்டு வசதிகளை மலிவான விலையில் கிடைக்கச் செய்வதுமே இந்த திட்டம் கொண்டு வரப்பட்டதற்கான ஒரு முக்கிய நோக்கமாகும்.
- இத்தகைய மாதிரி காப்பீட்டுக் கிராமங்கள் வெள்ளம் மற்றும் நிலநடுக்கம் போன்ற இயற்கைப் பேரிடரினால் ஏற்படும் இழப்புகளை எதிர்கொள்ளும் என எதிர்பார்க்கப் படுகிறது.
- இந்தியாவில் தற்போது வரை பேரிடர் காப்பீட்டுத் திட்டமானது நடைமுறையில் இல்லை.

## கோடைக்காலப் பயிர்களின் பரப்பளவு அதிகரிப்பு

- 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் கோடைக்காலப் பயிர்களின் பரப்பு 21.58% என்ற அளவிற்கு அதிகரித்துள்ளதாக வேளாண் மற்றும் விவசாய நலத்துறை அமைச்சகமானது சமீபத்தில் அறிவித்தது.
- இந்த அதிகரிப்பானது கிட்டத்தட்ட இரண்டு மடங்காகும்.
- கோடைக்காலப் பயிர்கள் சயத் பயிர்கள் (Zaid) எனவும் அழைக்கப்படுகிறது.
- இவை மார்ச் மற்றும் ஜுன் ஆகிய மாதங்களுக்கிடையே பயிரிடப் படுகின்றன.

- 2021 ஆம் ஆண்டின் கோடைக்காலப் பயிர்களின் பரப்பளவு 12.75 ஹெக்டேர் அளவிற்கு அதிகரித்துள்ளது.
- 2020 ஆம் ஆண்டில் அதன் பரப்பளவு 6.45 ஹெக்டேர்களாகும்.



| | Current year 2021 | Last Year 2020 | % diff over 2020 |
|---|---|---|---|
| Rice | 39.43 | 34.13 | 15.52 |
| Pulses | 17.75 | 10.49 | 69.22 |
| Moong | 14.42 | 8.29 | 74.03 |
| Urad | 2.94 | 1.95 | 50.95 |
| Coarse Cereals | 12.11 | 11.62 | 4.22 |
| Bajra | 3.42 | 3.46 | -1.01 |
| Maize | 7.81 | 7.19 | 8.60 |
| Oilseeds | 10.74 | 9.58 | 12.05 |
| Groundnut | 5.87 | 5.23 | 12.33 |
| Sesamum | 4.25 | 3.80 | 11.71 |
| Total | [illegible] | [illegible] | [illegible] |

## இந்திய இராணுவத்தின் காவல் படையில் பெண் வீராங்கனைகள்

- 83 பெண் வீராங்கனைகள் அடங்கிய முதல் குழுவானது பெங்களூருவில் உள்ள துரோணாச்சாரியா அணிவகுப்பு மைதானத்தில் இராணுவக் காவல் படைவீரர்கள் பயிற்சி மையம் மற்றும் பள்ளியினால் இந்திய இராணுவத்தின் காவல் படையில் சேர்க்கப் பட்டது.
- அலுவலர் அல்லாத பிரிவில் (non-officer category) பெண்கள் சேர்க்கப்படுவது இதுவே முதல் முறையாகும்.
- இந்த வீராங்கனைகள் ஆண் இராணுவக் காவல் படைவீரர்கள் மேற்கொள்ளும் பணிகளை ஒத்த செயல்பாடுகளை மேற்கொள்வர்.



## CO-JEET

- கோவிட்-19 தொற்றுக்கு எதிரான முயற்சிகளுக்கு உதவுவதற்காக இந்திய ஆயுதப் படைகளானது CO-JEET எனும் நடவடிக்கையைத் தொடங்கியுள்ளது.

- இந்தியாவின் மருத்துவச் செயல்பாட்டு முறையையும் ஆக்சிஜன் வழங்கீடுகளையும் வலுப்படுத்துவதில் இவை ஈடுபாடு செலுத்தும்.
- மேலும் CO-JEET ஆனது மக்களின் மனநலனை உறுதி செய்யவும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

## VINCOV – 19

- கோவிட் – 19 தொற்றுக்குச் சிகிச்சை அளிப்பதற்காக உருவாக்கப் பட்ட வின்கோவ் – 19 (VINCOV – 19) எனப்படும் ஒரு புதிய எதிர்ப்பு மருந்தினை (நோய் எதிர்ப்பு பொருள்) மருத்துவச் சோதனைக்கு உட்படுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
- இது,
  - ஹைதராபாத் பல்கலைக்கழகம் (UOH)
  - CSIR நிருவனத்தின் செல் மற்றும் மூலக்கூறு உயிரியல் மையம் (CSIR – CCMB) மற்றும்
  - வின்ஸ் பயோ பிராடக்ட்ஸ் லிமிடெட் ஆகியவற்றின் ஒரு கூட்டு முயற்சியாகும்.
- கோவிட்-19 பெருந்தொற்றிற்கு எதிராக இந்த மருந்தைப் பயன்படுத்தலாமா என்பதை பரிசோதிப்பதற்காக வேண்டி இதனை மருத்துவச் சோதனைக்கு உட்படுத்த இந்தியத் தலைமை மருந்து கட்டுப்பாட்டு அமைப்பானது ஒப்புதல் வழங்கி உள்ளது.

## உள்ளார்ந்த டிஜிட்டல் முறையை கொண்ட பாரதம்

- நிதி ஆயோக் மற்றும் மாஸ்டர்கார்டு ஆகியவை இணைந்து "ஒன்றிணைக்கப்பட்ட வர்த்தகம்: உள்ளார்ந்த டிஜிட்டல் முறையை கொண்ட ஒரு பாரதத்தை உருவாக்கச் செய்வதற்கான செயல்திட்டத்தை உருவாக்குதல்" (Connected Commerce: Creating a Roadmap for a Digitally Inclusive Bharat) என்று தலைப்பிடப்பட்ட அறிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ளன.
- இந்தியாவில் டிஜிட்டல் நிதி உள்ளடக்கத்தினை விரைவுபடுத்தச் செய்வதிலுள்ள சவால்களை இந்த அறிக்கையானது அடையாளம் காண்கிறது.
- நாட்டின் 1.3 பில்லியன் குடிமக்களும் டிஜிட்டல் சேவையைப் பெறச் செய்வதற்கான பரிந்துரைகளையும் இந்த அறிக்கை வழங்குகிறது.


***முக்கியப் பரிந்துரைகள்***

- வங்கியல்லாத நிதியியல் நிறுவனங்கள் மற்றும் வங்கிகளுக்கான செயல்பாட்டுத் தளங்களை வலுப்படுத்துவதற்காக பண வழங்கீட்டு கட்டமைப்பு முறைகளை வலுப்படுத்துதல்.
- சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் பதிவு முறை மற்றும் குறைதீர்ப்பு முறையை டிஜிட்டல்மயமாக்கல் மற்றும் அவற்றிற்கான கடன் மூலங்களை பரவலாக்கல்.
- தகவல் பரிமாற்றுமுறைகளை உருவாக்குதல் மற்றும் நுகர்வோரிடையே மோசடி பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான எச்சரிக்கைகளை இணையதள டிஜிட்டல் வர்த்தக தளங்கள் கொண்டுள்ளனவா என்பதை உறுதி செய்தல்.
- வேளாண்மைக்கான வங்கியல்லாத நிதியியல் நிறுவனங்களை குறைந்த செலவிலான மூலதனத்தினை பெறச் செய்தல் மற்றும் டிஜிட்டல் முறையின் மூலம் நீண்ட காலம் பயனடைவதற்காக "Phygital" (Physical + digital) என்ற மாதிரியைப் பயன்படுத்துதல்.




## மேம்படுத்தப் பட்ட வேதிக்கல மின்கல அடுக்குச் சேமிப்பிற்கான தேசிய திட்டம்

- மத்திய அமைச்சரவையானது "மேம்படுத்தப் பட்ட வேதிக்கல மின்கல அடுக்குச் சேமிப்பிற்கான தேசியத் திட்டம்" (National Programme on Advanced Chemistry Cell (ACC) Battery Storage) எனும் உற்பத்தி ஊக்குவிப்புத் திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.
- மேம்படுத்தப் பட்ட வேதிக்கல மின்கல அடுக்குச் சேமிப்பு (Advanced Chemistry Cell – ACC) என்பது மின்னாற்றலை மின்வேதி (அ) வேதி ஆற்றலாக சேமித்து வைத்து பிறகு தேவைப்படும் போது அதனை மீண்டும் மின்னாற்றலாக மாற்றத்தக்க புதிய மேம்படுத்தப் பட்ட ஒரு சேமிப்புத் தொழில்நுட்பமாகும்.
- இந்திய நாடானது ACC கலங்களின் இறக்குமதிகளைச் சார்ந்திருக்கும் நிலையை மாற்றுவதற்காக 50 Gwh திறனுடைய ACC மற்றும் 5 Gwh திறனுடைய "பிரத்தியேக" ACC போன்ற அளவில் உற்பத்தித் திறனை அடைவதே இந்த திட்டத்தின் குறிக்கோளாகும்.





## ஐவர்மெக்டின்

- ஒரு ஒட்டுண்ணி எதிர்ப்பு மருந்தான ஐவர்மெக்டினைக் கொண்டு நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிக்க உள்ளதாக இரண்டு இந்திய மாநிலங்கள் தெரிவித்துள்ளன.
- மருத்துவமனைகளில் ஆபத்தான நிலையில் உள்ள கோவிட் நோயாளிகளின் எண்ணிக்கையானது அளவை மிஞ்சி அதிகரித்து வருவதால் இந்தத் தீவிரமான கோவிட்-19 தொற்றிலிருந்துப் பாதுகாத்து கொள்வதற்காக வேண்டி இந்த நடவடிக்கை மேற்கொள்ளப் படுகிறது.

- கோவா மற்றும் உத்தரகாண்ட் ஆகிய மாநிலங்களால் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது.
- மருத்துவ சோதனைகளைத் தவிர்த்து ஐவர்மெக்டின் மருந்தினை கொரோனா நோயாளிகளுக்குச் சிகிச்சையளிக்கப் பயன்படுத்தக்கூடாது என உலக சுகாதார அமைப்பானது பரிந்துரைத்துள்ளது.
- இந்த மருந்தின் செயல்திறனை நிரூபிப்பதற்கு போதுமான எந்தவொரு தகவல்களும் முறையான சான்றுகளும் இல்லை என்பதால் இந்த மருந்தை உபயோகிக்கக் கூடாது என உலக சுகாதார அமைப்பு எச்சரித்துள்ளது.
- ஐவர்மெக்டின் மருந்தானது ஆன்கோசெர்சியாசிஸ் மற்றும் ஃபைலேரியாசிஸ் (Onchocerciasis and filariasis) ஆகிய இரு உயிர்க்கொல்லி நோய்களுக்குச் சிகிச்சை அளிக்கவும் அவற்றை முற்றிலுமாக ஒழிப்பதற்காகவும் பயன்படுத்தப்படுகிறது.

## கோவிசீல்ட் தடுப்பூசியின் இரு தவணைகளுக்கிடையேயான கால இடைவெளி

- கோவிசீல்ட் தடுப்பூசியின் இரு தவணைகளைப் பெறுவதற்கான கால இடைவெளியை அதிகரித்துள்ளதாக இந்திய அரசு சமீபத்தில் அறிவித்துள்ளது.
- இந்த கால இடைவெளியோனது 6 முதல் 8 வாரங்களிலிருந்து 12 முதல் 16 வாரங்களாக அதிகரிக்கப் பட்டுள்ளது.
- தடுப்பூசியின் இரு தவணைகளைப் பெறுவதற்கான கால இடைவெளியானது 6 முதல் 8 வாரங்களிலிருந்து 12 முதல் 16 வாரங்களாக அதிகரிக்கப்பட்டால் கொரோனாவுக்கு எதிரான பாதுகாப்பானது (செயல்திறன்) 55.1% என்ற அளவிலிருந்து 81.3% என்ற அளவாக அதிகரிக்கும் என லான்செட் ஆய்வு கூறுகிறது.




## இந்தியாவில் ஸ்புட்னிக் V

- இந்தியாவில் ஸ்புட்னிக் V தடுப்பு மருந்தினை அறிமுகப்படுத்துவதாக Dr. ரெட்டிஸ் ஆய்வகமானது அறிவித்துள்ளது.
- இந்தத் தடுப்பு மருந்தானது ரஷ்யாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு Dr. ரெட்டிஸ் ஆய்வகத்தினால் விநியோகிக்கப்படுகிறது.
- தற்போது, ஸ்புட்னிக் V தடுப்பு மருந்தானது நாட்டின் இரண்டாவது விலையுயர்ந்த கோவிட்-19 தடுப்பு மருந்தாகும்.
- ஸ்புட்னிக் V தடுப்பு மருந்தின் ஒரு தவணை மருந்தளவின் (Dosage) விலை ரூ.995 ஆகும்.

- கோவிசீல்டினுடைய ஒரு தவணை மருந்தளவின் விலையானது ரூ.400 ஆகும்.
- சமீபத்தில் இதன் விலையானது ஒரு தவணைக்கு ரூ.300 ஆக குறைக்கப்பட்டது.
- இந்த மருந்தினை சீரம் இன்ஸ்டிடியூட் ஆஃப் இந்தியா எனும் நிறுவனமானது உள்நாட்டிலேயே தயாரிக்கிறது.
- கோவாக்சின் தடுப்பு மருந்தானது மாநில அரசுகளிடம் ஒரு தவணைக்கு ரூ.600 என்ற விலையிலும் தனியார் மருத்துவமனைகளிடம் ஒரு தவணைக்கு ரூ.1200 என்ற விலையிலும் வழங்கப் படுகிறது.

***ஸ்புட்நிக் V பற்றிய தகவல்கள்***

- ஸ்புட்நிக் V தடுப்பு மருந்தானது மாஸ்கோவிலுள்ள காம்லியா தொற்று நோயியல் மற்றும் நுண்ணுயிரியல் ஆராய்ச்சி நிறுவனத்தினால் உருவாக்கப்பட்டதாகும்.
- இது இரண்டு தவணை (Dose) தடுப்பூசியாகும்.
- இருப்பினும் ரஷ்யாவில் ஒற்றைத் தவணை ஸ்புட்நிக் V தடுப்பு மருந்து சமீபத்தில் தயாரிக்கப் பட்டுள்ளது.
- இது ஸ்புட்நிக் லைட் ஒற்றைத் தவணை தடுப்பு மருந்து என அழைக்கப்படுகிறது.
- இந்திய நாடானது ஸ்புட்நிக் V இரட்டைத் தவணை தடுப்பு மருந்தினையே தற்போது வழங்குகிறது.
- ஸ்புட்நிக் V தடுப்பு மருந்தானது வெவ்வேறு மனித அடினோ வைரஸ்களை (Human Adenoviruses) பயன்படுத்தி உருவாக்கப் பட்டுள்ளது.
- இந்த தடுப்பு மருந்தின் செயல்திறன் 91% ஆகும்.
- ஸ்புட்நிக் V தடுப்பு மருந்தின் முதல் தவணையானது ஹைதராபாத்தில் வழங்கப் பட்டது.





## டவ்தே புயல்

- அரபிக் கடலில் காற்றழுத்த தாழ்வு நிலையாக உருவான இந்த டவ்தே புயலானது 2021 ஆம் ஆண்டில் இந்தியாவில் உருவான முதல் புயலாகும்.
- இப்புயலால் கேரள அரசானது "ரெட் அலெர்ட்" என்ற ஒரு சிவப்பு நிற எச்சரிக்கையை விடுத்துள்ளது.
- டவ்தே எனும் பெயர் மியான்மர் நாட்டினால் பரிந்துரைக்கப்பட்டதாகும்.

- இதற்கு பர்மிய மொழியில் “கெக்கோ” (Gecko), அதாவது தனித்தன்மை வாய்ந்த ஒரு வீட்டுப் பல்லி என்று பொருளாகும்.

## பிரதம மந்திரி கிசான் சம்மன் நிதியின் 8வது தவணை

- பிரதம மந்திரி கிசான் சம்மன் நிதியின் 8வது தவணைத் தொகையானது சமீபத்தில் வழங்கப் பட்டுள்ளது.
- இந்திய அரசானது சிறு மற்றும் குறு விவசாயிகளின் கணக்கில் 6000 ரூபாய் தொகையினை செலுத்துகிறது.
- இந்த நிதியானது மூன்று தவணைகளாக செலுத்தப் படுகிறது.
- முதல் தவணையான 2000 ரூபாயானது ஏப்ரல் முதல் ஜுன் இடையிலான காலக் கட்டத்திலும், இரண்டாவது தவணையானது ஆக்ஸ்ட் முதல் நவம்பர் வரையிலான காலக் கட்டத்திலும் மூன்றாவது தவணையானது டிசம்பர் முதல் மார்ச் வரையிலான காலக் கட்டத்திலும் வழங்கப் படுகிறது.
- இந்தத் திட்டமானது 2018 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.




## SWAMIH நிதி

- மத்திய அரசின் மலிவான மற்றும் நடுத்தர வர்க்கத்தினருக்கு வீட்டு வசதி வழங்கும் சிறப்புத் திட்டத்தின் (Special Window for Affordable & Mid Income Housing - SWAMIH) முதல் குடியிருப்பு வசதி திட்டமானது நிறைவடைந்துள்ளது.
- மும்பையின் புறநகர்ப் பகுதியிலுள்ள ரிவாலி பூங்காவில் கட்டப்பட்டுள்ள இந்தக் குடியிருப்பானது இந்தியாவில் SWAMIH நிதியின் கீழ் நிதி உதவி பெறும் முதல் குடியிருப்பு வசதி வழங்கும் திட்டமாகும்.
- SWAMIH நிதியானது 2019 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் சீதாராமன் அவர்களால் தொடங்கப் பட்டது.
- நிதிப் பற்றாக்குறையினால் கட்டுமானப் பணிகள் நிறுத்தப்பட்ட மற்றும் நடுத்தர வர்க்கத்தினருக்கான குடியிருப்பு வசதி திட்டத்தின் கட்டுமானப் பணிகளை நிறைவு செய்வதற்காக SWAMIH முதலீட்டு நிதியானது உருவாக்கப் பட்டது.
- நிதி அமைச்சகத்தின் பொருளாதார விவகாரங்கள் துறையின் செயலாளர் தான் இந்த நிதியின் நிர்வாகி ஆவார்.

## Go First விமான நிறுவனம்




- வாடியா குழுவினருக்குச் சொந்தமான "Go Air" விமான நிறுவனத்திற்கு "Go First" என பெயரிடப்பட்டுள்ளது.
- இதன் புதிய முழக்கமானது "You Come First" என்பதாகும்.
- 15 வருடங்களுக்குப் பிறகு இதன் பெயர் மாற்றப்படுவது என்பது கோவிட்- 19 பெருந் தொற்றின் தாக்கத்திலிருந்து மீள்வதற்காக விமானப் பயணங்களை மிகக் குறைவான விலையில் இயக்குவதற்காக அந்த நிறுவனம் மேற்கொண்ட முயற்சியின் ஓர் அங்கம் ஆகும்.

## இரயில் தண்டவாளங்களில் 186 யானைகள் கொல்லப்பட்டுள்ளன

**Elephant deaths in India due to train hits from 2009-10 to 2020-21**

| STATE | NO. OF DEATHS |
|---|---|
| Assam | 62 |
| West Bengal | 57 |
| Odisha | 27 |
| Uttarakhand | 14 |
| Kerala | 9 |
| Jharkhand | 7 |
| Tamil Nadu | 5 |
| Karnataka | 3 |
| Tripura | 1 |
| U.P | 1 |
| Total | 186 |

Source: MoEFCC. Data up to December 31, 2020

- 2009 – 10 முதல் 2020 – 21 வரையிலான காலக் கட்டத்தில் இந்தியா முழுவதும் 186 யானைகள் இரயில்கள் மோதி உயிரிழந்ததாக சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகம் கூறுகிறது.

- அசாம் மாநிலத்தில் தான் அதிக எண்ணிக்கையிலான யானைகள் (62) இரயில்கள் மோதி உயிரிழந்துள்ளன, இதனையடுத்து மேற்கு வங்காளம் (57) மற்றும் ஒடிசா (27) ஆகிய மாநிலங்கள் உள்ளன.
- சுற்றுச்சூழல் சார்ந்த பாலங்களை அமைப்பதே இதற்கான ஒரே ஒரு தீர்வாகும்.
- சுற்றுச்சூழல் சார்ந்த பாலங்கள் என்பவை இரண்டு பெரிய ஒரே மாதிரியான வனவிலங்கு வாழ்விடங்களை இணைப்பதற்கான ஒரு இணைப்புப் பகுதியாகச் செயல்படும் வனவிலங்கு வழித்தடங்களாகும்.

## அரிசி மற்றும் கோதுமை ஏற்றுமதி அதிகரிப்பு

- 2020 – 21 ஆம் ஆண்டில் இந்தியாவானது கிட்டத்தட்ட 20 மில்லியன் டன் எடையுள்ள உணவு தானியங்களை ஏற்றுமதி செய்துள்ளதோடு, 92 மில்லியன் டன் எடையுள்ள அரிசி மற்றும் கோதுமை ஆகியவற்றை விநியோகித்து ஒரு சாதனையையும் படைத்து உள்ளது.
- மத்திய அரசின் கிடங்கிலிருந்து விநியோகிக்கப்பட்ட 92 மில்லியன் டன் உணவு தானியங்களில்,
  - தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம் மற்றும் இதர பிற நலத் திட்டங்களின் கீழ் 60.32 மில்லியன் டன் தானியங்களும்,
  - பிரதான் மந்திரி கரிப் கல்யாண் அன்ன யோஜனா, ஆத்ம நிர்பார் பாரத் திட்டம் (திரும்பி வரும் இடம்பெயர்ந்த தொழிலாளர்களுக்காக) மற்றும் கோவிட்-19 பெருந்தொற்றுக் காலத்தில் தொடங்கப்பட்ட வேறு சில திட்டங்களின் கீழ் 31.52 மில்லியன் டன் தானியங்களும் விநியோகிக்கப்பட்டுள்ளன.
- 2020-21 ஆம் ஆண்டில் பொது விநியோக முறை (PDS - Public distribution system) மூலம் விநியோகிக்கப்பட்ட மொத்த தானியங்களின் அளவானது மற்ற சாதாரண ஆண்டுகளைக் காட்டிலும் கிட்டத்தட்ட 50% அதிகமாகும்.

**EXPORTS AND CENTRAL POOL OFFTAKE OF FOODGRAINS (in lakh tonnes)**

| | EXPORTS | | | CENTRAL POOL OFFTAKE | |
|---|---|---|---|---|---|
| | Wheat | Basmati | Non-basmati | Wheat | Rice |
| 2012-13 | 65.15 | 34.60 | 66.88 | 332.09 | 326.37 |
| 2013-14 | 55.72 | 37.54 | 71.48 | 306.22 | 292.11 |
| 2014-15 | 29.15 | 37.02 | 82.26 | 252.54 | 306.73 |
| 2015-16 | 6.14 | 40.45 | 63.74 | 313.97 | 318.01 |
| 2016-17 | 2.62 | 40.00 | 68.13 | 289.98 | 327.80 |
| 2017-18 | 2.30 | 40.52 | 86.33 | 253.33 | 350.40 |
| 2018-19 | 1.83 | 44.15 | 75.34 | 314.71 | 344.35 |
| 2019-20 | 2.17 | 44.55 | 50.36 | 272.16 | 349.74 |
| 2020-21 | 20.86 | 46.32 | 130.88 | 360.56 | 557.78 |

*Source: Departments of Commerce and Food & Public Distribution.*

## நாரதா லஞ்ச வழக்கு

- மேற்கு வங்காளத்தின் திரிணாமுல் காங்கிரசைச் சேர்ந்த அமைச்சர்களான சுப்ரதா முகர்ஜி, ஃபிர்ஹத் ஹக்கீம், சட்டமன்ற உறுப்பினர் மதன் மித்ரா மற்றும் சோவன் சட்டோ உபாத்யாய் (கல்கத்தாவின் முன்னாள் மாநகராட்சித் தலைவர்) ஆகியோரை மத்தியப் புலனாய்வு அமைப்பானது கைது செய்துள்ளது.
- நாரதா லஞ்ச வழக்கில் அந்த மாநில அமைச்சர்கள் லட்சம் பெறுவதாக ஒரு வீடியோ ஆதாரம் உள்ளது.
- 2017 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் நாரதா லஞ்ச வழக்கில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைக்கு எதிராக ஒரு ஆய்வினை மேற்கொள்ளுமாறு மத்தியப் புலனாய்வு அமைப்பிற்கு கல்கத்தா உயர்நீதிமன்றம் ஆணையிட்டுள்ளது.
- மாநில அரசின் ஒப்புதலைப் பெற்ற பிறகு தான் மத்தியப் புலனாய்வு அமைப்பானது ஒரு குற்றத்தினைப் பற்றிய விசாரணையை அந்த மாநிலத்தில் மேற்கொள்ள இயலும்.
- இருப்பினும், நாட்டின் எந்தவொரு பகுதியிலும் விசாரணையை மேற்கொள்ள வேண்டி மத்தியப் புலனாய்வு அமைப்பிற்கு உச்சநீதிமன்றமோ (அ) உயர்நீதிமன்றமோ உத்தரவிடலாம்.

## பருப்பு வகைகளின் இறக்குமதிக்கான வழிமுறைகள்

- இந்திய அரசானது சமீபத்தில் துவரை, பாசிப் பயிறு மற்றும் உளுந்து போன்ற பருப்பு வகைகளின் இறக்குமதியினை எவ்வித கட்டுப்பாடுமின்றி மேற்கொள்வதற்கு அனுமதி வழங்கியுள்ளது.
- இந்த மூன்று பருப்பு வகைகளும் தடை செய்யப்படாத பட்டியலில் சேர்க்கப் பட்டு உள்ளன.
- வர்த்தககர்களிடம் குறைந்த அளவிலேயே இருப்பு உள்ளதன் காரணமாக கடந்த சில வாரங்களாக இவற்றின் விற்பனை விலையானது அதிகரித்துள்ளதையடுத்து இந்த முடிவு மேற்கொள்ளப் பட்டுள்ளது.
- மேலும் 2021 ஆம் ஆண்டு நவம்பர் 30 ஆம் தேதிக்கு முன்பாக இறக்குமதி செய்யப்பட வேண்டிய சரக்குப் பொருட்களுக்குக் கட்டாயம் அனுமதி வழங்கப்பட்டிருக்க வேண்டும் எனவும் இந்திய அரசு அறிவித்துள்ளது.
- இந்தியா பெரும்பாலும் இந்த வகை பருப்புகளை மியான்மர் மற்றும் ஆப்பிரிக்க நாடுகளில் இருந்து இறக்குமதி செய்கின்றது.

## ஜல் ஜீவன் திட்டம் – முதல் தவணை

- ஜல் ஜீவன் திட்டத்தினைச் செயல்படுத்துவதற்காக மத்திய அரசானது 5,968 கோடி ரூபாயை வழங்கியுள்ளது.
- இந்த நிதியானது 15 மாநிலங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.
- இது 2021-22 ஆம் ஆண்டில் வெளியிடப்பட உள்ள நான்கு தவணைகளில் முதல் தவணையாகும்.
- 2021 ஆம் ஆண்டில் இந்திய அரசானது தனது நிதிநிலை அறிக்கையில் ஜல் ஜீவன் திட்டத்திற்காக 50,011 கோடி ரூபாயை ஒதுக்கியது.

❖ ஜல்ஜீவன் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட மொத்தத் தொகையில்
  - 93 சதவீதமானது குடிநீர் வழங்கும் உள்கட்டமைப்பு வசதிகளை கட்டமைக்கப் பயன்படுத்தப்படும்.
  - 2 சதவீதமானது நீரின் தர ஆய்வு மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படும்.
  - மற்றும் 5 சதவீதமானது அது சார்ந்த வேறு நடவடிக்கைகளுக்கும் பயன்படுத்தப் படும்.





## SAMVEDNA

❖ SAMVEDNA என்பது உணர்ச்சி மேம்பாடு மற்றும் அவசியமான ஏற்பு மூலம் மனநலப் பாதிப்பு குறித்த உணர்திறன் நடவடிக்கைகளை மேற்கொள்தல் (Sensitizing Action on Mental Health Vulnerability through Emotional Development Necessary Acceptance) என்பதாகும்.

❖ இது கோவிட்-19 பெருந்தொற்றின் போது ஒரு கட்டணமில்லாத உதவி எண்ணின் மூலம் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு ஆலோசனை வழங்கும் ஒரு சேவையாகும்.

❖ குழந்தைகளுக்கு மனநலம் சார்ந்த முதலுதவியையும் உணர்வுப் பூர்வமான ஒரு ஆதரவையும் வழங்குவதே சம்வேத்னாவின் (SAMVEDNA) முக்கிய நோக்கமாகும்.

❖ பாதிக்கப்பட்ட குழந்தைகள் மூன்று பிரிவுகளாக பிரிக்கப்பட்டு அவர்களுக்குத் தொலைபேசி மூலம் ஆலோசனை வழங்கப்படுகிறது.
  - கோவிட்-19 தொற்றினால் தன் பெற்றோரை இழந்த குழந்தைகள்.
  - கோவிட் நல மையங்களில் தனிமைப் படுத்தப்பட்டிருக்கும் குழந்தைகள்.
  - கோவிட்-19 தொற்றினால் பாதிக்கப்பட்ட பெற்றோர்கள் (அ) உறவினர்களுடன் வாழும் குழந்தைகள்.




## பழங்குடியினர் பள்ளிகளில் டிஜிட்டல் மாற்றம்

- ❖ பழங்குடியினர் பள்ளிகளை டிஜிட்டல் முறையில் மாற்றுவதற்கான ஒரு கூட்டு முயற்சிக்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் பழங்குடியினர் விவகார அமைச்சகமும் மைக்ரோசாஃப்ட் நிறுவனமும் கையெழுத்திட்டுள்ளன.
- ❖ பழங்குடியினர் வாழும் பகுதிகளில் ஆசிரமப் பள்ளிகள் மற்றும் ஏகலைவா மாதிரி உறைவிடப் பள்ளிகள் போன்றவற்றை உருவாக்குதலும் இத்திட்டத்தினுள் அடங்கும்.
- ❖ இந்தத் திட்டத்தினுடைய முதல் கட்டத்தில் 250 ஏகலைவா மாதிரி உறைவிடப் பள்ளிகள் நிறுவப்படும்.

## இந்தியாவின் வேலை நிலை குறித்த அறிக்கை

- ❖ 2021 ஆம் ஆண்டிற்கான இந்தியாவின் வேலை நிலை குறித்த அறிக்கையானது கர்நாடகாவின் அசிம் பிரேம்ஜி பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சியாளர்களால் தயாரிக்கப் பட்டுள்ளது.
- ❖ இந்தியாவில் ஏற்பட்ட கோவிட்-19 பெருந்தொற்றானது இந்த ஒரு வருடத்தில் வேலை, வருமானம், சமத்துவமின்மை மற்றும் வறுமை ஆகியவை மீது எவ்விதமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்பது பற்றி இந்த வருடாந்திர அறிக்கையானது ஆவணப் படுத்தியுள்ளது.

- இந்த அறிக்கையின்படி,
    - இந்த பெருந்தொற்றானது மக்களை முறையான வேலையை விட்டு ஒரு சாதாரண மற்றும் குறைந்த வருமானம் கொண்ட வேலையை மேற்கொள்ளும் நிலைக்குத் தள்ளி அவர்களின் வருமானத்தையும் குறைத்துள்ளது.
    - கடந்த ஆண்டில் வறுமை நிலையில் திடீர் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.
    - மகாராஷ்டிரா, கேரளா, தமிழ்நாடு, உத்தரப் பிரதேசம் மற்றும் டெல்லி ஆகிய பகுதிகளில் தான் அதிகளவில் வேலை இழப்பு ஏற்பட்டுள்ளது.

## இந்தியாவின் சுகாதார நலன் குறித்த அறிக்கை

- "State of Healthcare in India – Indian cities through the lens of healthcare" (இந்தியாவின் சுகாதார நலன் – சுகாதார நலன் என்ற பட்டகத்தின் மூலம் இந்திய நகரங்கள்) எனத் தலைப்பிடப்பட்ட ஒரு அறிக்கையானது நாட்டிலுள்ள மிகவும் நகரமயமாக்கப்பட்ட 8 நகரங்களை அவற்றின் சுகாதார நல உட்கட்டமைப்பு வசதிகள் ரீதியில் தரவரிசைப் படுத்தி உள்ளது.
- சுகாதாரம் எனும் பரிமாணத்தில் புனே ஆனது மற்ற அனைத்து நகரங்களையும் பின்னுக்குத் தள்ளியுள்ளது.
- அகமதாபாத் நகரமானது துப்புரவு மற்றும் திடக்கழிவு மேலாண்மை ஆகியவற்றில் அதிக மதிப்பினையும் தண்ணீரில் தரம் மற்றும் இருப்பு போன்றவற்றில் குறைவான மதிப்பினையும் பெற்றுள்ளது.
- மற்ற 8 முன்னணி நகரங்களுடன் ஒப்பிடுகையில் பெங்களூரு நகரமானது அதிக எண்ணிக்கையிலான மருத்துவமனை படுக்கை வசதிகளைக் கொண்டுள்ளது.
- ஹைதராபாத் நகரமானது மருத்துவமனை படுக்கைகளின் எண்ணிக்கை மற்றும் எளிதான வாழ்க்கை முறை போன்றவற்றில் குறைவாகவும் காற்றின் தரம், துப்புரவு மற்றும் திடக்கழிவு மேலாண்மை போன்றவற்றில் நல்ல மதிப்பினையும் பெற்றுள்ளது.
- சென்னை மாநகரமானது காற்றின் தரத்தில் முதலிடத்தில் விளங்கினாலும், இங்கு நிலவும் நீர் பற்றாக்குறை அதன் தரத்தைக் குறைத்து விட்டிருக்கின்றது.
- கொல்கத்தா நகரமானது போதுமான மருத்துவமனை படுக்கை வசதிகள் இல்லாததாலும் எளிதான வாழ்க்கை முறை இல்லை என்பதாலும் கடைசி இடத்திற்கு தள்ளப் பட்டுள்ளது, ஆனால் காற்றின் தரம் மற்றும் நீர் இருப்பு போன்றவற்றில் நல்ல மதிப்பினைப் பெற்றுள்ளது.
- டெல்லி தேசியத் தலைநகர் பகுதியானது போதுமான மருத்துவமனை படுக்கை வசதிகள் இல்லாததாலும், மோசமான காற்றுத் தரத்தினாலும் வாழ்வாதாரக் குறியீட்டில் மோசமான மதிப்பினைக் கொண்டிருப்பதாலும் குறைவான மதிப்பினையே பெற்றுள்ளது.

## யுனெஸ்கோவின் தற்காலிக உலகப் பாரம்பரியத் தளங்களின் பட்டியல்

- யுனெஸ்கோவின் தற்காலிக உலக பாரம்பரியத் தளங்களின் பட்டியலில் சுமார் ஆறு கலாச்சாரப் பாரம்பரியத் தளங்கள் சேர்க்கப் பட்டுள்ளதாக மத்தியக் கலாச்சாரத் துறை அமைச்சரான பிரஹலாத் சிங் பட்டேல் அவர்கள் சமீபத்தில் அறிவித்தார்.
- அவை,

- வாரணாசியின் கங்கை கரை,
- தமிழ்நாட்டில் காஞ்சிபுரத்தில் உள்ள ஆலயங்கள்,
- மத்தியப் பிரதேசத்திலுள்ள சாத்பூரா புலிகள் காப்பகம்,
- மகாராஷ்டிராவின் இராணுவ கட்டிடக் கலை
- ஹைர் பெங்கால் (Hire Benkal) பெருங்கற்கால தளம் மத்தியப் பிரதேசத்தின் நர்மதா பள்ளத்தாக்கிலுள்ள பெதாகாட் லேமத்தகாட் (Bhedaghat Lametaghat) (இந்தியாவின் மாபெரும் செங்குத்துப் பள்ளதாக்கு)

❖ இத்துடன் யுனெஸ்கோவின் தற்காலிக உலக பாரம்பரியத் தளங்களின் பட்டியலில் சேர்க்கப் பட்டுள்ள மொத்த தளங்களின் எண்ணிக்கையானது 48 ஆக உயர்ந்துள்ளது.

## EY குறியீட்டில் இந்தியா மூன்றாவது இடம்

❖ EY நிறுவனத்தின் புதுப்பிக்கத்தக்க ஆற்றலில் ஒரு நாட்டின் ஈர்ப்பு நிலை குறித்த குறியீட்டில் நமது இந்திய நாடானது மூன்றாவது இடத்திற்கு (நான்காவது இடத்திலிருந்து) நகர்ந்துள்ளது.

❖ சூரிய ஆற்றலூட்டப்பட்ட ஒளி மின்னழுத்த கல உற்பத்தித் துறையில் ஆற்றிய மகத்தான செயல்திறனின் காரணமாக இந்த நிலையை எட்ட முடிந்தது.

❖ இந்தக் குறியீட்டில் அமெரிக்கா தனது முதலிடத்தையும் சீனா தனது இரண்டாம் இடத்தையும் தக்க வைத்து கொண்டுள்ளன.

❖ சமீபத்தில் அமெரிக்காவினால் ஏற்பாடு செய்யப்பட்ட காலநிலை உச்சி மாநாட்டில் 2030 ஆம் ஆண்டுக்குள் 450 GW திறனுடைய புதுப்பிக்கத் தக்க ஆற்றல் நிலையங்களை அமைப்பதற்கு இந்திய நாடானது உறுதி பூண்டுள்ளது.

## உலகின் முதலாவது தனியார் டிஜிட்டல் நீதிமன்றம்




❖ சண்டிகரில் அமைந்துள்ள ‘ஜுப்பிடைஸ் ஜஸ்டீஸ் டெக்னாலஜீஸ்’ எனும் தொடக்க நிறுவனமானது உலகின் முதலாவது தனியார் டிஜிட்டல் நீதிமன்றத்தினை (தொடர் சங்கிலி மற்றும் செயற்கை நுண்ணறிவு ஆகியவற்றின் உதவியுடன்) தொடங்கி உள்ளது.

- தனியார் நீதி அமைப்பின் கீழ் மோதல்களுக்கு மாற்று வழியில் தீர்வு காணும் முறையின் (Alternative Dispute Redressal - ADR) மூலம் மோதல்களுக்குத் தீர்வு காணச் செய்வதற்காக இந்த நீதிமன்றமானது அமைக்கப்பட்டுள்ளது.
- இந்தத் தளமானது நடுவர் தீர்ப்பாயம், சமரசம், மத்தியஸ்தம் மற்றும் பேச்சுவார்த்தை போன்ற தனியார் நீதி முறைக்காக உருவாக்கப்பட்டுள்ளது.
- மோதலில் ஈடுபட்ட பிரிவனர் ஒரு நிர்வாக அமைப்பினுடைய உதவியின்றித் தீர்ப்பு வழங்குதல், சமரசம் (அ) மத்தியஸ்தம் ஆகியவற்றை மேற்கொள்வதற்கு இந்தத் தளம் வழி வகுக்கிறது.
- ஜுப்பிடைஸ் தளத்தின் மூலம் பெற்ற இணையதள தீர்ப்பானது ஒரு நீதிமன்றத்தின் ஆணையைப் போன்றே சட்டப்படி செயல்படுத்தக் கூடியது ஆகும்.

## கோவா கடல்சார் கருத்தரங்கம் – 21

- இந்தியக் கடற்படையானது கோவாவிலுள்ள கடற்படைப் போர் கல்லூரி வளாகத்தினுள் "கோவா கடல்சார் கருத்தரங்கம் – 21" என்ற ஒரு கருத்தரங்கினை நடத்தியது.
- இந்த நிகழ்வானது முதல்முறையாக காணொலி மூலம் நடத்தப் பட்டுள்ளது.
- தனது கடல்சார் அண்டை நாடுகளுடன் நட்புறவினை வளர்ப்பதற்காக இந்த கருத்தரங்கானது ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- இதில் இந்தியப் பெருங்கடலில் கரையோரம் அமைந்த 13 நாடுகளின் கடற்படைப் பிரதிநிதிகள் இணைய தளம் வாயிலாக பங்கேற்றனர்.
- இந்த ஆண்டிற்கான கருத்துரு, "கடல்சார் பாதுகாப்பு மற்றும் அதிகரித்து வரும் வழக்கமற்ற அச்சுறுத்தல்கள் : இந்தியப் பெருங்கடல் பகுதியின் கடற்படை திறன்பட செயல்படுவதற்கான ஒரு சூழ்நிலை" (Maritime Security and Emerging Non-Traditional Threats: A Case for Proactive Role for IOR Navies) என்பதாகும்.

## பொருட்காட்சி மற்றும் மாநாட்டு மையங்களுக்கு "உள்கட்டமைப்பு" எனும் தகுதி

- பொருட்காட்சி மற்றும் மாநாட்டு மையங்களுக்கு "உள்கட்டமைப்பு" எனும் ஒரு தகுதியினை நிதி அமைச்சகம் வழங்கியுள்ளது.
- இது மாதிரியான கட்டமைப்புகளுக்கு வங்கிக் கடன் வழங்குதலை இது எளிதாக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது.
- சமூக மற்றும் வணிகக் கட்டமைப்பு துணைத் துறையின் கீழான உள்கட்டமைப்பு துணைத் துறைகளின் இசைவானது முதன்மைப் பட்டியலில் இந்தப் பொருட்காட்சி மற்றும் மாநாட்டு மையங்கள் சேர்க்கப்பட்டுள்ளன.
- இந்தப் பிரிவின் கீழ் இடம் பெறுவதற்கு, இந்தக் கட்டமைப்புகளில் குறைந்தபட்சம் 1,00,000 சதுர மீட்டர் பரப்பானது பொருட்காட்சிக்காகவோ (அ) மாநாட்டிற்காகவோ பிரத்தியேகமாக ஒதுக்கப் பட்டிருக்க வேண்டும்.
- இந்தப் பட்டியலில் சேர்க்கப் படுவதால் குறிப்பிட்ட துணைத் துறை கட்டமைப்பு பணிகளுக்குச் சலுகை நிதிகளைப் பெறுதல், கட்டுமான மேம்பாடு மற்றும் கட்டுமானப் பணிகளைத் தொடர்தல் போன்றவற்றில் உதவி பெற இயலும்.

## ஐஎன்எஸ் ராஜ்புத் கப்பல் பணியிலிருந்து விடுவிப்பு

- இந்தியக் கடற்படையின் முதல் தாக்குதல் (அழிப்பு) கப்பலான ஐஎன்எஸ் ராஜ்புத் கப்பலானது மே 21 ஆம் தேதியன்று பணியிலிருந்து விடுவிக்கப்பட்டது.
- இந்தக் கப்பலானது 1980 ஆம் ஆண்டு மே 04 ஆம் தேதி படையில் சேர்க்கப்பட்டது.
- 41 வருட பணிக்குப் பிறகு இந்தக் கப்பலானது விசாகப்பட்டினத்திலுள்ள இந்தியக் கடற்படையின் கப்பற்கட்டும் தளத்தில் பணியிலிருந்து விடுவிக்கப் பட்டுள்ளது.
- இந்தக் கப்பலானது ரஷ்யாவின் 61 கம்யூனார்ட்ஸ் கப்பல்கட்டும் தளத்தில் கட்டமைக்கப்பட்டது.
- இதனுடைய ரஷ்யப் பெயர் 'நாடெஷ்னி' (Nadezhny) என்பதாகும்.
- இந்தக் கப்பலானது மேற்கு மற்றும் கிழக்கு கடற்படைகளில் பயன்படுத்தப்பட்டது.
- இதனை வழிநடத்திய முதலாவது தலைமை அதிகாரி கேப்டன் குலாப் மோகன்லால் ஹீரா நந்தனி என்பவராவார்.
- இந்திய இராணுவப் படைப் பிரிவில் (ராஜ்புத் படைப்பிரிவு) சேர்க்கப்பட்ட முதல் இந்தியக் கடற்படை கப்பல் இதுவாகும்.
- இந்தக் கப்பலானது ஆபரேஷன் அமன், ஆபரேஷன் பவன், ஆபரேஷன் காக்டஸ் போன்ற பல நடவடிக்கைகளில் பங்கேற்றுள்ளது.




## DIPCOVAN

- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி அமைப்பின் உடலியல் மற்றும் உடலியல்சார் அறிவியலுக்கான பாதுகாப்பு ஆய்வகமானது "DIPCOVAN" எனப்படுகின்ற ஆன்டிபாடிகளை கண்டறியும் ஒரு கருவியை உருவாக்கியுள்ளது.
- இந்தக் கருவியானது DRDO அமைப்பின் அறிவியலாளர்கள் மற்றும் டெல்லியிலுள்ள வேன்கார்டு டயக்னோஸ்டிக்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனம் ஆகியவற்றால் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்டது.

- DIPCOVAN என்பது ஆன்டிபாடிகளை கண்டறியும் ஒரு கருவியாகும்.
- இந்தக் கருவியானது ஒரு நபர் ஏற்கனவே கோவிட்-19 தொற்றினால் பாதிக்கப் பட்டு இருந்தால் அதற்கான ஆன்டிபாடிகள் அவர் உடலில் உள்ளதா எனக் கண்டறிவதற்கு உதவும்.
- ஆன்டிபாடிகளை கண்டறிவதே இதன் செயல்பாடாகும்.
- இவை செரோ-ஆய்வு போன்ற கோவிட்-19 தொற்றுநோயியல் ஆய்வுகளில் பயன்படுத்தப் படும்.
- நமது உடலில் கோவிட் ஆன்டிபாடிகள் உள்ளனவா எனக் கண்டறியவும் இதனைப் பயன்படுத்தலாம்.




## இந்தியாவில் மேற்கொள்ளப்பட்ட சிறந்த கோவிட் நடவடிக்கைகள் – சுகாதார அமைச்சகம்


- மத்திய சுகாதார அமைச்சகமானது மாநிலங்கள்/ஒன்றியப் பிரதேசங்கள் கோவிட்-19 பெருந்தொற்றினை கையாளுவதற்காக மேற்கொண்ட சிறந்த நடவடிக்கைகளைப் பட்டியலிட்டு அந்த மாநிலங்களுக்கு அனுப்பியுள்ளது.
- இதில் ராஜஸ்தானின் நடமாடும் வெளிநோயாளிகள் நல சேவை மையம், தமிழ்நாட்டின் டாக்சி ஆம்புலன்ஸ் சேவை மற்றும் 12 இதர தனித்துவம் வாய்ந்த சில முன்னெடுப்புகளும் அடங்கும்.
- ராஜஸ்தானில் கிராமப் பகுதிகளுக்குத் தொகுதி வாரியாக சென்று கோவிட் தொற்று சாராத அத்தியாவசியச் சேவைகளை வழங்குவதற்காக வேண்டி தொடங்கப்பட்ட நடமாடும் வெளி நோயாளிகள் நல சேவை வழங்கும் மையத்தையும் பிகானேர் பகுதியின் ஒவ்வொரு மருத்துவமனைகளிலும் ஆக்சிஜன் வீணாவதைக் கண்காணிப்பதற்காக

"ஆக்சிஜன் மித்ரா" என்ற விதிமுறை விதிக்கப்பட்டதையும் சுகாதாரச் செயலாளர் பட்டியலிட்டுள்ளார்.

- உத்தரப் பிரதேசத்தின் ரேபரேலியில் உள்ள கிராமப் புறப்பகுதிகளில் RAT (Rapid Antigen Test) மற்றும் RT-PCR (reverse transcription - polymerase chain reaction) ஆகியவற்றினைப் பயன்படுத்தி வீடு வீடாகச் சென்று பரிசோதனை செய்வதையும் அவர் இதில் குறிப்பிட்டுள்ளார்.
- இதன் மூலம் 38 சதவீதமாக இருந்த கோவிட் பாதிப்பு ஒரே மாதத்தில் 2.8 சதவீதமாக குறைந்தது.
- மருத்துவமனைகளில் முறையான ஆக்சிஜன் பயன்பாட்டினை உறுதி செய்வதற்காக கேரளாவில் ஆக்சிஜன் செவிலியர்கள் பயன்படுத்தப்பட்டது, ஹரியானாவிலுள்ள குருகிராமில் உள்ள கோவிட் தடுப்பூசி மையங்களின் மூலம் மேற்கொள்ளப்பட்ட இயக்கம் மற்றும் பணிமனைகளிலேயே தடுப்பூசி மையங்களை அமைத்தல் போன்றவற்றினையும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## யாஸ் புயல்


- யாஸ் புயலானது அதிதீவிரப் புயலாக மாற வாய்ப்புள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
- யாஸ் புயலானது ஒடிசா மற்றும் மேற்கு வங்காளத்தின் கடற்கரையோரப் பகுதிகளைத் தாக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது.
- 'யாஸ்' எனும் பெயர் ஒமன் நாட்டினால் வழங்கப் பட்டதாகும்.



## கியாசானூர் வன நோய்

- கியாசானூர் வன நோயினை விரைவில் கண்டறிவதற்கான ஒரு அதிக உணர் திறனுடைய, நோயாளியை வைத்திருக்கும் இடத்திலேயே (Point of Care) சோதனை செய்யும் ஒரு புதிய முறையை ஆராய்ச்சியாளர்கள் சமீபத்தில் கண்டறிந்து உள்ளனர்.

- இந்த வகை பரிசோதனை முறையானது இந்திய மருத்துவக் கழகத்தின் தேசிய நச்சுயிரியல் கல்வி நிறுவனத்தினால் உருவாக்கப்பட்டுள்ளது.
- இந்த முறையானது குரங்குக் காய்ச்சல் எனப்படும் கியாசானூர் வனநோயைக் கண்டறியவும் பயனுள்ளதாக இருக்கும்.
- இது இந்தியாவின் தென்மேற்குப் பகுதியைப் பிறப்பிடமாகக் கொண்ட, ஒரு ஒட்டுண்ணியால் (ticks) உண்டாகக் கூடிய இரத்த இழப்பினை ஏற்படுத்தும் ஒரு வைரஸ் நோயாகும்.
- இது ஃபிளாவிவிரிடே (Flaviviridae) எனும் குடும்பத்தைச் சேர்ந்த வைரசினால் உண்டாக்கப் படுகிறது.
- பாதிக்கப்பட்ட ஒட்டுண்ணிகள் கடிப்பதன் மூலம் மனிதர்களுக்கு இந்நோய் பரவுகிறது.




## இந்தியாவில் சிறுத்தைகள் மீண்டும் அறிமுகம்

- 2021 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் மத்தியப் பிரதேசத்திலுள்ள குனோ தேசியப் பூங்காவில் சிறுத்தைகள் அறிமுகப்படுத்தப்பட உள்ளன.
- இந்தியாவில் 1947 ஆம் ஆண்டில் தான் கடைசி சிறுத்தை கண்டறியப்பட்டது.
- அது இறந்த பிறகு 1952 ஆம் ஆண்டில் சிறுத்தையானது அழிந்துவிட்ட இனமாக இந்தியாவில் அறிவிக்கப் பட்டது.
- இந்தியாவில் ஆப்பிரிக்கச் சிறுத்தைகளை அவற்றிற்கு உகந்த வாழிடத்தில் அறிமுகம் செய்வதற்கு 2020 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் உச்சநீதிமன்றம் அனுமதி வழங்கியது.
- சிறுத்தை மறு அறிமுகத் திட்டமானது இந்திய வனவிலங்கு நிறுவனத்தினால் (Wildlife Institute of India) உருவாக்கப் பட்டது.

## சமூகப் பரவல்

- தொற்றுநோய் பரவத் தொடங்கியதிலிருந்து இந்திய நாடானது தன்னை "சமூகப் பரவல்" நிலையில் (Community Transition – CT) உள்ளதாக குறிப்பிடவே இல்லை என உலக சுகாதார அமைப்பு கூறுகிறது.
- அதற்குப் பதிலாக "நோய்த் தொற்றுத் திரள்" எனப்படும் குறைவான மிததீவிரமான வகைப்பாட்டினையே இந்தியா பயன்படுத்துகிறது.
- அமெரிக்கா, பிரேசில், ஐக்கிய ராஜ்ஜியம், பிரான்சு உள்ளிட்ட நாடுகள் தம்மை சமூகப் பரவல் நிலையில் உள்ளதாக அறிவித்துள்ளன.

- அதிக எண்ணிக்கையிலான உறுதி செய்யப்பட்ட தொற்றுகளை கொண்ட 10 நாடுகளில் இத்தாலியும் ரஷ்யாவும் மட்டுமே தம்மை சமூகப் பரவல் நிலையில் உள்ள நாடுகளாக அறிவிக்க வில்லை.
- சமூகப் பரவல் என்பது கடந்த 14 நாட்களில் ஏற்பட்ட புதிய நோய்த் தொற்றுக்கானது சர்வதேசப் பயணம் மேற்கொண்டவரிடையே பதிவாகாத, ஒரு குறிப்பிட்ட திரளுடன் இணைக்கப்பட இயலாத ஒரு பெருந்தொற்று நிலை ஆகும்.
- பெருந்தொற்றுப் பரவலில் உள்ள நான்கு நிலைகள்,
    - வெளிநாடுகளிலிருந்துப் பரவுதல்
    - உள்ளூர் பரவல்
    - சமூகப் பரவல் மற்றும்
    - பெருந்தொற்று ஆகியனவாகும்.




## உயிரிப் பொருட்கள் பயன்பாடு மீதான தேசியத் திட்டம்

- நிலக்கரி சார்ந்த அனல் மின் நிலையங்களில் உயிரிப் பொருட்களை பயன்படுத்துவது மீதான ஒரு தேசியத் திட்டத்தினை அமைக்க உள்ளதாக மத்திய ஆற்றல் அமைச்சகம் அறிவித்துள்ளது.
- விவசாயத் தாளடி எரிப்பினால் ஏற்பட்ட காற்று மாசுபாட்டுப் பிரச்சனைக்குத் தீர்வு காணும் நோக்கில் இந்த முடிவானது மேற்கொள்ளப் பட்டுள்ளது.
- இந்தத் திட்டமானது வழிகாட்டுக் குழுவினால் (Steering Committee) நிர்வகிக்கப்படும்.
- வழிகாட்டுக் குழுவானது ஆற்றல்துறை செயலாளரைத் தலைமையாகக் கொண்ட பெட்ரோலியம் மற்றும் புதிய & புதுப்பிக்கத்தக்க ஆற்றல்துறை அமைச்சகத்தின் பிரதிநிதிகள், பங்குதாரர்கள் உள்ளிட்ட அனைவரையும் உள்ளடக்கிய ஒரு குழு ஆகும்.

## இந்தோ-இஸ்ரேலிய வேளாண் செயல்திட்டம்

- இந்தியா மற்றும் இஸ்ரேல் ஆகிய நாடுகள் இணைந்து 2023 ஆம் ஆண்டு வரை தொடர உள்ள மூன்றாண்டு கூட்டுச் செயல் திட்டம் ஒன்றைத் தொடங்கியுள்ளன.
- இந்தக் கூட்டுச் செயல் திட்டமானது வேளாண்மையில் ஒத்துழைப்பினை அதிகரிக்கும் நோக்கில் தொடங்கப் பட்டுள்ளது.
- இந்தப் புதிய செயல்திட்டத்தின் கீழ்,
    - இஸ்ரேலிய நாட்டின் வேளாண் மற்றும் நீர்ப்பாசன தொழில் நுட்பங்கள் பற்றி இந்திய விவசாயிகளிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக 13 சிறப்பு நிறுவனங்கள் நிறுவப்படும்.
    - 8 மாநிலங்களில் 75 கிராமங்களுக்குள் "சிறப்புக் கிராமங்கள்" எனும் வேளாண் முன்மாதிரி சூழலமைப்புகள் உருவாக்கப்படும்.
- இந்தியாவுக்கும் இஸ்ரேலுக்கும் இடையிலான வேளாண் துறை சார்ந்த இரு தரப்பிலான உறவுகள் 1993 ஆம் ஆண்டில் தொடங்கியது.
- இந்தப் புதிய திட்டமானது 5வது இந்திய-இஸ்ரேலிய வேளாண் செயல்திட்டமாகும்.

## MCA21 பதிப்பு 3.0

- இந்தியாவின் திட்டமாதிரியில் அமைந்த முதல் மின் ஆளுகைத் திட்டமான MCA21 பதிப்பு 3.0 என்பதின் முதல் கட்டமானது தொடங்கப்பட்டுள்ளது.
- நிதி மற்றும் பெருநிறுவன விவகாரங்கள் துறை அமைச்சகத்தின் இணை அமைச்சரான அனுராக் தாகூர் அவர்களால் இத்திட்டமானது தொடங்கி வைக்கப் பட்டது.
- MCA21 என்பதின் இந்தப் பதிப்பானது தரவுப் பகுப்பாய்வு சார்ந்ததாகும்.
- MCA21 என்பது பெருநிறுவன விவகார அமைச்சகத்தின் இணையதளமாகும்.
- 2006 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட இந்தத் தளமானது நிறுவனங்கள் குறித்த அனைத்துத் தகவல்களையும் பங்குதார்களும் பொது மக்களும் எளிதில் அணுகும் வகையில் வழிவகை செய்துள்ளது.
- MCA21 பதிப்பு 3.0 ஆனது பெருநிறுவனங்களின் இணக்கத்தினையும் பங்குதாரர்களின் அனுபவங்களையும் சீரமைப்பதற்காக வேண்டி சில புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துகிறது.

## கோவாக்சின் தடுப்பு மருந்திற்கு WHO மற்றும் EU ஆகியவற்றின் ஒப்புதல்

- ஐரோப்பியப் பகுதியைச் சாராத நாடுகளிலிருந்து முழு தடுப்பு மருந்தினையும் செலுத்திக் கொண்ட சுற்றுலாப் பயணிகளை சில வரையறைகளுடன் அனுமதிப்பதற்கான ஒரு முன்மொழிதலுக்கு ஐரோப்பிய ஒன்றிய உறுப்பினர் நாடுகள் சமீபத்தில் ஒப்புதல் அளித்துள்ளன.
- இதற்காக அந்த சுற்றுலாப் பயணிகள் செலுத்திக் கொண்ட தடுப்பூசியானது உலக சுகாதார அமைப்பின் அவசரகாலப் பயன்பாட்டுப் பட்டியலில் இடம் பெற்றிருக்க வேண்டும்.

- இதுபற்றி ஆராய்ந்து, உலக சுகாதார அமைப்பின் அவசரகாலப் பயன்பாட்டுப் பட்டியலில் கோவாக்சின் தடுப்பு மருந்தினை இடம்பெறச் செய்வதற்கான உதவியைப் பெறுதல் போன்ற பொறுப்புகள் வெளியுறவுத் துறை அமைச்சகத்திடம் வழங்கப் பட்டுள்ளன.

## தீர்வு காணும் மையத் திட்டம்

- மத்தியப் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகமானது 9 நாடுகளில் 10 தூதரகத் திட்டங்களின் கீழ் One Stop Centre எனும் தீர்வு காணும் மையங்களை (One Stop Centre Scheme – OSC) அமைக்க உள்ளது.
- இது பெண்களுக்கு எதிரான வன்முறைகளைத் தடுப்பதற்காக அமைக்கப்படும்.
- குவைத், ஓமன், பஹ்ரைன், ஐக்கிய அரபு அமீரகம், கத்தார், கனடா, ஆஸ்திரேலியா மற்றும் ஆகிய ஒவ்வொரு நாட்டிலும் ஒரு தீர்வு காணும் மையமானது அமைக்கப் படும்.
- சவுதி அரேபியாவில் இரணடு மையங்கள் அமைக்கப்படும்.
- மேலும் இந்தியா முழுவதும் 300 மையங்கள் அமைக்கப் படும்.
- வெளியுறவு அமைச்சகத்தினால் இயக்கப்படும் இந்த மையங்களுக்கு பெண்கள் மற்றும் குழந்தை மேம்பாட்டு அமைச்சகமானது உதவிகளை வழங்கும்.
- மத்திய அரசின் ஆதரவு பெற்ற இந்த மையங்களுக்கு நிர்பயா நிதியின் மூலம் நிதி உதவிகள் வழங்கப் படும்.




## சட்ட அறிக்கை

- மத்திய தொழிற்துறை காவல் படையின் தற்போதைய தலைமை இயக்குநராக பணி புரியும் 1985 ஆண்டு இந்தியக் காவல் பணி அதிகாரிகள் பிரிவைச் சேர்ந்த (மகாராஷ்டிரா வட்டாரம்) சுபோத் குமார் ஜெய்ஷ்வால் அவர்களை இரண்டு வருட காலத்திற்கு மத்தியப் புலனாய்வு அமைப்பின் இயக்குநராக மத்திய அரசு நியமித்து உள்ளது.
- மூன்று அதிகாரிகள் அடங்கிய குழுவின் மூலம் அரசு இவரைத் தேர்ந்தெடுத்தது.

- இவர்கள் பிரதமர், மக்களவையின் மிகப்பெரிய எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் இந்தியத் தலைமை நீதிபதி ஆகியோர் அடங்கிய குழு மூலம் தேர்ந்தெடுக்கப் படுகின்றனர்.
- இவர்கள், பிரதமர் தலைமையிலான அமைச்சரவையின் நியமனக் குழுவினால் நியமிக்கப் படுகின்றனர்.
- பிரதமர் தலைமையிலான குழுவில், இந்தியத் தலைமை நீதிபதி N.V. ரமணா அவர்கள், ஓய்வு பெறுவதற்கு ஆறு மாதங்களுக்கும் குறைவான காலமே உள்ள அதிகாரிகளை மத்தியப் புலனாய்வு அமைப்பின் இயக்குநராக நியமிப்பதைத் தவிர்க்க கோரி தனது ஆலோசனையை கூறினார்.
- இது "சட்டத்தின் அறிக்கை" (Statement of Law) என அழைக்கப்படுகிறது.
- இந்தியத் தலைமை நீதிபதியின் படி, இக்குழுவின் அதிகாரிகளைத் தேர்வு செய்யும் முறையானது பிற்காலத்தில் சட்டத்தின் ஆய்விற்கு உட்படுத்தப் படுவதைத் தாங்கும் வல்லமை கொண்டதாக இருக்க வேண்டும்.

## SeHAT OPD தளம்

- பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் அவர்கள் "மின்னணு சுகாதார உதவி மற்றும் தொலைதூர ஆலோசனை சேவை" (Services e-Health Assistance & Tele-consultation – SeHAT) எனும் வெளிநோயாளிகள் நல சேவைத் தளம் ஒன்றினைத் தொடங்கி வைத்தார்.
- ஆயுதப் படைவீரர்களுக்கு தொலைதூர மருத்துவச் சேவைகளை வழங்குவதற்காக இந்தத் தளமானது தொடங்கப்பட்டுள்ளது.
- வழக்கமான பணிகளில் ஈடுபட்டுள்ள பாதுகாப்புத் துறை மருத்துவர்களினால் இந்த சேவையானது வழங்கப்படும்.
- இதில் 75 மற்றும் அதற்கும் மேற்பட்ட வயதினர் காத்திருக்காமல் விரைவில் மருத்துவரை அணுகலாம்.

## UNITE AWARE

- ஐக்கிய நாடுகள் அமைதி காப்புப் படையினர்கள் பணியில் ஈடுபட்டிருக்கும் போது அவர்களின் பாதுகாப்பினை மேம்படுத்துவதற்காக "UNITE AWARE" எனப்படும் கைபேசி தொழில்நுட்ப தளம் ஒன்றினை இந்தியா தொடங்க உள்ளது.
- இது 2021 ஆம் ஆண்டின் ஆகஸ்ட் மாதத்தில் ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையின் தலைமைப் பொறுப்பினை (ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையின் தலைமைப் பொறுப்பில் ஒவ்வொரு உறுப்பினர் நாடும் ஒரு மாத காலத்திற்கு வகிக்க இயலும்) இந்தியா ஏற்கும் போது தொடங்கப்படும்.
- UNITE AWARE ஆனது நிலப்பரப்பு சார்ந்த தகவல்களை வழங்கி அமைதிகாப்புப் படையினரிடம் சூழ்நிலை குறித்த ஒரு விழிப்புணர்வை அதிகரிக்கும்.

## பொது தனியார் கூட்டமைப்பு அடிப்படையிலான முதல் ஆராய்ச்சி உலை

- அணுசக்தி துறையானது (Department of Atomic Energy – DAE) பொது–தனியார் கூட்டமைப்பு அடிப்படையிலான நாட்டின் முதல் ஆராய்ச்சி உலை ஒன்றினை அமைக்க உள்ளதாக அறிவித்துள்ளது.

- பாபா அணு ஆராய்ச்சி மையத்தினால் வடிவமைக்கப்பட உள்ள இந்த ஆராய்ச்சி உலையானது ரேடியோ ஐசோடோப்புகளை உற்பத்தி செய்யும்.
- இதனால் இந்தியாவில் மேற்கொள்ளப்படும் புற்றுநோய் சிகிச்சையில் பயன்படுத்தப் படும் அணுசக்தி மருந்துகளின் விலையானது குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- அணுசக்தித் துறையானது இதற்கான மூலதனத்தை வழங்கி தனது துணை அமைப்பான இந்திய அணுசக்தி கழகத்தின் மூலம் இந்த ஆலையினைக் கட்டமைக்கும்.

## தாராவி முன்மாதிரி

- மும்பையிலுள்ள தாராவி எனும் ஒரு குடிசைப் பகுதியில் 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் நாளொன்றிற்கு 99 கோவிட்-19 தொற்றுகள் பதிவாகி இருந்தன.
- ஆனால் கடந்த சில நாட்களாக தொற்றுகளின் எண்ணிக்கையானது படிப்படியாக குறைந்து வருகிறது.
- தாராவி முன்மாதிரியின் கோவிட்-19 மேலாண்மை மற்றும் தடுப்பூசி இயக்கமானது அந்த குடிசைப் பகுதியில் கோவிட் தொற்றின் இரண்டாம் அலையினைத் தடுப்பதில் உதவியதாக அதிகாரிகள் கூறுகின்றனர்.
- தாராவி முன்மாதிரியில் தடமறிதல், கண்காணித்தல், சோதனை செய்தல் மற்றும் சிகிச்சையளித்தல் (Tracing, Tracking, Testing and Treating – 4T) போன்றவை அடங்கும்.
- கோவிட்-19 தொற்றின் முதல் அலையின் போதே இந்த முன்மாதிரியானது உலக சுகாதார அமைப்பினால் வெகுவாக பாராட்டப்பட்டது.
- இந்த மாதிரியின் கீழ் வீட்டுக்கு வீடு சென்று அறிகுறிகளைக் கண்டறிதல், தீவிர சோதனை மற்றும் வழக்கமான உடல் ஆய்வு போன்றவை மேற்கொள்ளப்பட்டன.

## மதிய உணவுத் திட்டம் - நேரடி பயன் பரிமாற்றம்

- மதிய உணவுத் திட்டத்தின் கீழ் நேரடி பயன் பரிமாற்றம் மூலம் மாணவர்களுக்கு நிதி உதவியை வழங்குவதற்கான முன்மொழிதலுக்கு மத்திய கல்வி அமைச்சர் ரமேஷ் பொக்ரியால் "நிசாங்க்" அவர்கள் ஒப்புதல் அளித்துள்ளார்.
- இந்த திட்டத்தை அமல்படுத்துவதற்காக மாநில அரசுகள் மற்றும் ஒன்றியப் பிரதேச நிர்வாகங்களுக்கு 1200 கோடி ரூபாய் கூடுதல் நிதியினை மத்திய அரசு வழங்கும்.
- இந்தியாவிலுள்ள 11.20 லட்சம் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் ஒன்றாம் வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை கல்வி பயிலும் மாணவர்களுக்கு ஒருமுறை பயனளிக்கும் ஒரு சிறப்பு நலத் திட்டமாக இது விளங்கும்.

## இணையதள விளையாட்டுகளுக்கு GST விதிப்பு – ஆய்வுக் குழு

- இணையதள விளையாட்டுகளின் மீது சரக்கு மற்றும் சேவை வரி விதிப்பதற்காக வேண்டி அவற்றின் சேவை மதிப்பீட்டினை ஆய்வு செய்வதற்காக துணைநிலை அமைச்சர்கள் அடங்கிய குழு ஒன்றினை இந்திய அரசு அமைத்துள்ளது.
- கேளிக்கை விளையாட்டு மற்றும் பந்தய விளையாட்டுத் தளங்கள் வழங்கும் சேவையைப் பற்றியும் இக்குழு ஆய்வு செய்யும்.

- இந்தியாவில் இணையதள விளையாட்டுகள் அதன் ஆரம்ப கட்டத்தில் தான் உள்ளன என்பதால் வரிவிதிப்பு மற்றும் மதிப்பீடு போன்றவை தொடர்பான சிக்கல்களுக்கு இது வழிவகுக்க இருக்கிறது.
- எனவே, இந்த நிறுவனங்களின் சேவை மதிப்பீடு சார்ந்த நிச்சயமற்ற தன்மையைப் புரிந்து, ஆய்வு செய்து அதற்கான தீர்வினை உருவாக்குவதற்காக இந்தக் குழுவானது அமைக்கப் பட்டுள்ளது.
- மாநில நிதி அமைச்சர்கள் அடங்கிய நிதி அமைச்சர் தலைமையிலான சரக்கு மற்றும் சேவை வரி மன்றத்திடம் இக்குழுவானது ஆறு மாதத்தில் தமது அறிக்கையினைச் சமர்ப்பிக்கும்.

## லட்சத்தீவுப் பிரச்சினை

- லட்சத்தீவின் நிர்வாக அதிகாரியான பிரஃபுல் கோடா படேல் அவர்களின் சமீபத்திய கொள்கைகளுக்கு லட்சத்தீவின் மக்களும் அரசியல்வாதிகளும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர்.
- நில உரிமையாளர்களை வெளியேற்றுதல் போன்ற பரவலான அதிகாரங்களுடன் லட்சத்தீவு மேம்பாட்டு ஆணையமானது சமீபத்தில் உருவாக்கப்பட்டது.
- எந்தவொரு பகுதிக்கான விரிவான மேம்பாட்டுத் திட்டங்களை உருவாக்கவும் நகரத் திட்டமிடல் அல்லது எந்தவொரு மேம்பாட்டு நடவடிக்கைக்காகவும் லட்சத்தீவில் வாழும் மக்களை அவர்களுடைய பகுதியிலிருந்து வெளியேற்றவோ (அ) வேறொரு இடத்திற்கு மாற்றுவதற்கோ வேண்டி இந்தச் சட்டமானது அந்த ஆணையத்திற்கு ஒரு அதிகாரத்தினை அளிக்கிறது.
- மனை விற்பனை நிறுவனங்களின் அழுத்தத்திற்கு இணங்க அந்தத் தீவில் வாழும் மக்களுக்கு எதிராக இந்த ஆணையம் செயல்படுவதாக எதிர்ப்புகள் வருகின்றன.
- மேலும் 2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் சமூக எதிர்ப்பு நடவடிக்கைகள் தடுப்புச் சட்டமும் அறிமுகப் படுத்தப்பட்டது.
- இதன்படி, எந்தவொரு பொது அறிவிப்பும் இன்றி ஒரு நபரை ஓராண்டு வரை காவலில் வைத்திருக்க இயலும்.

*குறிப்பு*

- இந்திய அரசியல்வாதியான பிரஃபுல் கோடா படேல் அவர்கள் தாத்ரா & நாகர் ஹவேலி மற்றும் டாமன் & டையூ மற்றும் லட்சத்தீவு ஆகிய ஒன்றியப் பிரதேசங்களின் நிர்வாக அதிகாரி எனும் பொறுப்பினை வகிக்கிறார்.
- தாத்ரா & நாகர் ஹவேலி மற்றும் டாமன் & டையூவின் முதல் நிர்வாக அதிகாரியும் இவரே ஆவார்.
- இந்தியக் குடிமைப் பணி அதிகாரிகளை நிர்வாக அதிகாரியாக நியமிக்கும் முந்தைய வழக்கத்திற்கு மாறாக 2020 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் லட்சத்தீவின் நிர்வாக அதிகாரியாக இவர் நியமிக்கப்பட்டார்.
- நிர்வாக அதிகாரிகள் இந்திய குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படுகின்றனர்.

# சர்வதேசச் செய்திகள்

## சன்ட்லெர் நல்லரசு குறியீடு

- இது ஒரு வருடாந்திரக் குறியீடாகும்.
- இது உலகம் முழுவதுமுள்ள 104 அரசுகளின் திறமைகளையும் செயல்திறன்களையும் மதிப்பிடுவதற்காக அரசினை நடத்துபவர்களால் அரசினை நடத்துபவர்களுக்காக உருவாக்கப் பட்டதாகும்.
- சன்ட்லெர் நல்லாட்சி நிறுவனமானது (CIG) சிங்கப்பூரைத் தலைமையிடமாகக் கொண்ட ஒரு சர்வதேச லாப நோக்கமற்ற நிறுவனமாகும்.
- இக்குறியீட்டில் இந்தியா 49வது இடத்தில் உள்ளது.
- ஆசிய அளவில் சிங்கப்பூர் முதலிடத்தில் உள்ளது.


| Overall Rank | |
|---|---|
| 1 | Finland |
| 2 | Switzerland |
| 3 | Singapore |
| 4 | Netherlands |
| 5 | Denmark |
| 6 | Norway |
| 7 | Sweden |
| 8 | Germany |
| 9 | New Zealand |
| 10 | Canada |

## கண் இமை அழற்சி நோய் ஒழிப்பு – கேம்பியா

- டிராக்கோமா எனப்படும் கண் இமை அழற்சி நோயினை ஒழித்த இரண்டாவது ஆப்பிரிக்க நாடாக கேம்பியா மாறியுள்ளது.
- கண் பார்வை இழப்பினை ஏற்படுத்துவதற்கான முதன்மைக் காரணிகளுள் ஒன்றாக இந்நோய் உள்ளது.
- 2018 ஆம் ஆண்டில் இந்நோயினை முற்றிலும் ஒழித்த முதல் ஆப்பிரிக்க நாடு கானா ஆகும்.
- இந்நோய் புறக்கணிக்கப்பட்ட வெப்ப மண்டல நோய்களுள் (NTD - Neglected Tropical Diseases) ஒன்றாகும்.
- இந்நோய் கிளாமிடியா டிராக்கோமாடிஸ் (Chlamydia trachomatis) எனும் பாக்டீரியத்தால் ஏற்படுகிறது.

## உலகளாவிய நோய் தடுப்பு உத்தி – உலக சுகாதார அமைப்பு

- இந்த உத்தியானது உலகளவில் நோய்த் தடுப்பு சேவைகளை அதிகரிக்கும்.
- 2030 ஆம் ஆண்டுக்குள் குழந்தைப் பருவத்திலும் இளம் பருவத்திலும் அளிக்கப்படும் அத்தியாவசியத் தடுப்பூசிகளில் 90% வரையிலான இலக்கை எட்டுவதே இதன் நோக்கமாகும்.




## 2021 ஆம் ஆண்டு டைம் இதழின் பட்டியல்




- ரிலையன்ஸ் இன்டஸ்ட்ரீஸ் நிறுவனத்தின் ஒரு தொழில்நுட்ப நிறுவனமான ஜியோ இயங்குதளங்கள் மற்றும் மின்னணு வழியில் கற்றலுக்கான புத்தாக்க நிறுவனமான பைஜுஸ் ஆகிய இரண்டு இந்திய நிறுவனங்கள் டைம் இதழ் முதல்முறையாக வெளியிடும் 100 செல்வாக்கு மிக்க நிறுவனங்கள் பட்டியலில் இடம் பெற்றுள்ளன.
- 'Disruptors' என்ற பிரிவில் டெஸ்லா, ஹீவாவே, சாப்பிஃபை, எர்பிஎன்பி மற்றும் டிடி சூசிங் ஆகியவற்றுடன் பைஜுஸும் பட்டியலிடப் பட்டுள்ளது.
- புத்தாக்க நிறுவனங்கள் பிரிவில் சூம், அடிடாஸ், டிக்டாக், ஐகியா, மோடேர்னா மற்றும் நெட்பிளிக்ஸ் ஆகியவற்றுடன் ஜியோ இயங்குதளமும் பட்டியலிடப் பட்டுள்ளது.

## உலக இராணுவச் செலவினங்களின் போக்கு - அறிக்கை

- ஸ்டாக்ஹோம் சர்வதேச அமைதி ஆராய்ச்சி நிறுவனமானது சமீபத்தில் தனது "உலக இராணுவச் செலவினங்களின் போக்கு" என்ற அறிக்கையினை வெளியிட்டது.
- இந்த அறிக்கையின்படி உலகிலேயே அதிகளவில் இராணுவச் செலவினங்களை மேற்கொள்ளும் நாடுகள் அமெரிக்கா, சீனா மற்றும் இந்தியா ஆகியனவாகும்.
- உலகளாவிய இராணுவச் செலவினங்களில் இந்த நாடுகளின் பங்கு மட்டும் 62% ஆகும்.
- இந்தியாவின் இராணுவச் செலவினம் 2.1 சதவீதமும், சீனாவின் இராணுவச் செலவினம் 1.9 சதவீதமும், மற்றும் அமெரிக்காவின் இராணுவச் செலவினம் 4.4 சதவீதமும் அதிகரித்துள்ளது.

## நோய்த் தடுப்புச் செயல்பாட்டு நிரல்கள் 2030

- நோய்த் தடுப்புச் செயல்பாட்டு நிரல்கள் 2030 (Immunisation Agenda – IA) என்ற ஒரு கருத்துருவானது உலக சுகாதார அமைப்பு, GAVI மற்றும் யுனிசெப் (UNICEF) ஆகியவற்றால் தொடங்கப் பட்டதாகும்.
- தடுப்பூசிகளின் உயிர்காக்கும் விளைவினை அதிகரிக்கச் செய்வதே இதன் நோக்கம் ஆகும்.
- இந்த IA 2030 என்ற நிரல் உலக நோய்த் தடுப்பு வாரத்தின் போது தொடங்கப்பட்டது.
- கைக்குழந்தைகள், சிறுவர்கள் மற்றும் இளம் பருவத்தினருக்குத் தடுப்பூசிகள் அளிப்பதை 90% என்ற இலக்கு வரை எட்டுவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- மேலும், தடுப்பூசிகள் போடப்படாத குழந்தைகளின் எண்ணிக்கையை 2030 ஆம் ஆண்டுக்குள் பாதியளவாக குறைப்பதையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

## ஆர்மேனியர்கள் படுகொலை என்பது இனப்படுகொலை

- முதல் உலகப் போரின் போது ஆர்மேனியர்கள் படுகொலை செய்யப்பட்டதை அமெரிக்க அதிபர் ஜோ பைடன் இனப்படுகொலை எனக் கூறுகிறார்.
- 1915 ஆம் ஆண்டில் ஆர்மேனியர்களுக்கு இழைக்கப்பட்ட அட்டூழியங்களை இவ்வகையில் விவரித்த முதல் அமெரிக்க அதிபர் ஜோ பைடன் ஆவார்.
- துருக்கி நாடானது, அந்த அட்டூழியங்களை ஒப்புக் கொண்டாலும் "இனப்படுகொலை" என்று அதனைக் கூறுவதை ஏற்க மறுக்கிறது.

***பின்னணி***

- 1915 ஆம் ஆண்டில் காகசஸ் என்ற இடத்தில் நடைபெற்ற போரில் ஒட்டமான் பேரரசானது ரஷ்யர்களிடம் ஒரு அவமானமிக்க தோல்வியைச் சந்தித்தது.
- அப்போது ஆர்மேனியர்கள் தேசத்துரோகம் செய்ததாக துருக்கியர்கள் குற்றம் சாட்டினர்.
- எனவே ஆர்மேனிய வீரர்கள், அறிஞர்கள் மற்றும் எழுத்தாளர்கள் ஆகியோர் தூக்கிலிடப் பட்டனர்.
- குழந்தைகள் உட்பட நூற்றாயிரக்கணக்கான ஆர்மேனியர்கள் சிரியாவின் பாலைவனத்திற்கு வலுக் கட்டாயமாக இடம் மாற்றப்பட்டனர்.

- இந்தப் பயணத்தின் போது பலர் உயிரிழந்தனர், மேலும் பலர் அந்தப் பாலைவனத்திலுள்ள சித்திரவதை முகாம்களை அடைந்த பின்னர் உயிரிழந்தனர்.
- மொத்தத்தில் 1915 முதல் 1922 ஆம் ஆண்டு வரையிலான காலங்களில் நடைபெற்ற முதல் உலகப் போரில் ஆயிரக்கணக்கான ஆர்மேனியர்கள் கொலை, பசி மற்றும் நோயினால் அழிந்து போயினர்.

## இந்தியா – ரஷ்யா 2+2 அமைச்சரவைகளுக்கு இடையேயான பேச்சுவார்த்தை

- சமீபத்தில் 2+2 என்ற அமைச்சரவைகளுக்கு இடையேயான பேச்சுவார்த்தையினை மேற்கொள்வதற்கு பிரதமர் நரேந்திர மோடி மற்றும் ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதின் ஆகியோர் ஒப்புக் கொண்டுள்ளனர்.
- "2+2 எனும் அமைச்சரவைகளுக்கு இடையேயான பேச்சுவார்தையானது" பாதுகாப்பு அமைச்சர்கள் மற்றும் வெளியுறவுத் துறை அமைச்சர்கள் ஆகியோரிடையே மேற்கொள்ளப் படும் ஒரு பேச்சுவார்த்தை முறை ஆகும்.
- இந்தியா இது போன்ற பேச்சுவார்த்தைகளை அமெரிக்கா, ஆஸ்திரேலியா, மற்றும் ஜப்பான் போன்ற நாடுகளுடன் மேற்கொள்கிறது.
- இந்திய நாடானது இம்மாதிரியில் பேச்சுவார்தை மேற்கொள்ளும் முதல் குவாட் (QUAD) அமைப்பின் உறுப்பினரல்லாத நாடு ரஷ்யாவாகும்.
- 2021 ஆம் ஆண்டில் இந்தியா-ரஷ்யா இருதரப்பு உச்சிமாநாட்டினை நடத்துவதற்காக ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதின் இந்தியாவிற்கு வருகை தர உள்ளார்.
- இந்த உச்சி மாநாடு இந்தியாவில் ஒருமுறையும் மற்றொரு முறை ரஷ்யாவிலும் என மாறி மாறி நடத்தப்படுகிறது.
- தற்போது இந்தியாவிற்கு அதிகளவில் பாதுகாப்புக் கருவிகளை வழங்கும் நாடு ரஷ்யாவாகும்.

## உலகளாவிய மின்சார வாகனக் கண்ணோட்ட அறிக்கை

- சர்வதேச எரிசக்தி முகமையானது (IEA - International Energy Agency) சமீபத்தில் உலகளாவிய மின்சார வாகனக் கண்ணோட்ட அறிக்கையினை வெளியிட்டது.
- இந்த அறிக்கையின்படி
  - 2020 ஆம் ஆண்டில் 3 மில்லியன் புதிய மின்சார கார்கள் பதிவு செய்யப் பட்டு உள்ளன.
  - இது 2019 ஆம் ஆண்டில் பதிவானதை விட 41% அதிகமாகும்.
  - உலகிலேயே அதிக எண்ணிக்கையில் ஹைட்ரஜன் கார்களை விநியோகம் செய்துள்ள நாடு தென் கொரியாவாகும்.
  - 2030 ஆம் ஆண்டில் இந்தியாவில் விற்பனை செய்யப்பட உள்ள கார்களில் 30% கார்கள் மின்சார கார்களாக இருக்கும்.

## உலகின் மிகப்பெரிய விமானம்

- ஸ்ட்ராட்டோலாஞ்ச் என்ற நிறுவனத்தால் (Stratolaunch) கட்டமைக்கப்பட்ட உலகின் மிகப்பெரிய விமானமானது சமீபத்தில் அமெரிக்காவின் கலிபோர்னியாவிலுள்ள மொஜாவே விமானம் மற்றும் விண்வெளி துறைமுகத்திலிருந்து தனது இரண்டாவது சோதனை ஓட்டத்தை நிறைவு செய்துள்ளது.
- இந்த விமானத்திற்கு "ROC" எனப் பெயரிடப்பட்டுள்ளது.
- ஸ்ட்ராட்டோலாஞ்ச் நிறுவனமானது 2011 ஆம் ஆண்டில் பால் ஆலென் என்பவரால் தொடங்கப் பட்டது.
- இவர் மைக்ரோ சாப்ட் நிறுவனத்தின் இணை நிறுவனராவார்.

## விலங்குகளுக்கான கொரோனா தடுப்பூசி

- ரஷ்யா சமீபத்தில் விலங்குகளுக்கான கொரோனா தடுப்பூசியின் முதல் தொகுதியினை உற்பத்தி செய்தது.
- அந்த தடுப்பூசியின் பெயர் கார்னிவாக்–கோவ் என்பதாகும்.
- மனிதர்களுக்கும் வைரஸ்களுக்குமிடையே வைரஸ் பரவுவதற்கான சாத்தியம் உள்ளதாக உலக சுகாதார அமைப்பானது சமீபத்தில் உறுதிபடுத்தியது.
- கார்னிவாக்-கோவ் தடுப்பூசியானது ரஷ்யாவிலுள்ள கால்நடை மற்றும் தாவர நலக் கண்காணிப்புக்கான (Veterinary and Phytosanitary Surveillance) ஒரு கூட்டாட்சி சேவை அமைப்பான ரோசல்கோஸ்னாட்ஸர் (Rosselkhoznadzor) என்ற அமைப்பால் உருவாக்கப் பட்டது.

## உலகளாவிய வன இலக்குகள் அறிக்கை

- ஐக்கிய நாடுகள் சபையானது சமீபத்தில் 2021 ஆம் ஆண்டிற்கான உலகளாவிய வன இலக்குகள் அறிக்கையை வெளியிட்டது.
- பல நாடுகளில் கோவிட்-19 தொற்றானது காடுகளை நிர்வகிப்பதில் உள்ள சவால்களை அதிகரித்துள்ளது என இந்த அறிக்கை கூறுகிறது.
- இந்த அறிக்கையின் படி
  - 1.6 மில்லியன் மக்கள் காடுகளை சார்ந்துள்ளனர்.
  - இது உலக மக்கள் தொகையில் 25% ஆகும்.
  - உலகிலுள்ள கிராமப்பகுதிகளில் 40% மக்கள் சவானா (புல்வெளி) பகுதிகளிலும் காடுகளிலும் வாழ்கின்றனர்.
  - இது உலக மக்கள்தொகையில் 20% ஆகும்.
- இந்திய நாடானது ஆண்டுக்கு 2,00,000 ஹெக்டேர் அளவுக்கு மரங்கள் மற்றும் காடுகளின் பரவலை அதிகரிப்பதை இலக்காக நிர்ணயித்துள்ளது.

## பிராண்ட் பைனான்ஸ் காப்பீடு 100 அறிக்கை – 2021

- ❖ அரசுக்குச் சொந்தமான பெரும் காப்பீட்டு நிறுவனமான "ஆயுள் காப்பீட்டு கழகம் (LIC)" நிறுவனமானது உலகளவில் மூன்றாவது வலுவான மற்றும் பத்தாவது மதிப்பு மிக்க ஒரு காப்பீட்டு நிறுவனமாக உருவெடுத்துள்ளது.
- ❖ இது 2021 ஆம் ஆண்டு பிராண்ட் பைனான்ஸ் காப்பீடு 100 என்ற அறிக்கையின்படி கூறப்பட்டு இருக்கிறது.
- ❖ இந்த வருடாந்திர அறிக்கையானது லண்டனிலுள்ள பிராண்ட் பைனான்ஸ் எனப்படும் ஒரு மதிப்பீட்டு ஆலோசனை நிறுவனத்தினால் வெளியிடப்படுகிறது.
- ❖ இந்த அறிக்கையானது உலகளவிலான மதிப்பு மிக்க வலுவான காப்பீட்டு நிறுவனங்களை அடையாளம் காண்கிறது.

*குறிப்பு*

- ❖ மிகவும் மதிப்பு மிக்க உலகளாவிய காப்பீட்டு நிறுவனம் – பிங் ஆன் காப்பீடு (Ping An Insurance), சீனா.
- ❖ மிகவும் வலுவான உலகளாவிய காப்பீட்டு நிறுவனம் – போஸ்தே இத்தாலியானே (Poste Italiane), இத்தாலி.

## TPLF - தீவிரவாதக் குழு

- ❖ எத்தியோப்பிய அரசானது சமீபத்தில் தனது தீவிரவாதக் குழுக்கள் பட்டியலில் TPLF (Tigray People's Liberation Front) மற்றும் OLF-ஷேன் ஆகியவற்றைச் சேர்த்துள்ளது.
- ❖ 2020 ஆம் ஆண்டில் எத்தியோப்பியா, TPLFக்கு எதிராக ஒரு மாபெரும் இராணுவ நடவடிக்கையைத் தொடங்கியது.
- ❖ TPLF எத்தியோபியாவில் 1975 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட ஒரு அரசியல் கட்சியாகும்.
- ❖ மேலும் TPLF ஒரு ஆயுதமேந்திய இனம் சார்ந்த தேசியவாதக் கிளர்ச்சிக் குழுவாகும்.
- ❖ தைக்ரே அரசு மற்றும் எத்தியோப்பிய அரசுக்கு இடையேயான இந்த மோதல் கடந்த முப்பது ஆண்டுகளாக நடந்து வருகிறது.

## mRNA – 1273

- ❖ உலக சுகாதார அமைப்பானது சமீபத்தில் மாடெர்னா நிறுவனத்தின் mRNA நோய்த் தடுப்பு மருந்தினை அவசரகாலப் பயன்பாட்டிற்கு உபயோகிக்க அனுமதித்துள்ளது.
- ❖ உலக சுகாதார அமைப்பிடமிருந்து அவசரகாலப் பயன்பாட்டிற்கான அனுமதியைப் பெறும் ஐந்தாவது நோய்த் தடுப்பு மருந்து இதுவாகும்.
- ❖ mRNA-1273 என்பது மாடெர்னா நோய்த் தடுப்பு மருந்தின் தொழில்நுட்பப் பெயராகும்.

## சிறப்பு 301 அறிக்கை

- ❖ அமெரிக்க வர்த்தகப் பிரதிநிதிகள் நிறுவனமானது (USTR – United States Trade Representative) சமீபத்தில் சிறப்பு 301 அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- ❖ இந்த அறிக்கையானது 1974 ஆம் ஆண்டின் வர்த்தகச் சட்டத்தின் 301வது பிரிவின் கீழ் வெளியிடப்படுவதால் அதற்கு இப்பெயர் பெற்றது.

- இந்த அறிக்கை பொதுவாக அமெரிக்க நிறுவனங்களுக்குப் போதுமான அறிவுசார் சொத்துரிமைகளை வழங்காத நாடுகளைப் பட்டியலிடுகிறது.
- இந்திய நாடானது மற்ற எட்டு நாடுகளுடன் "முதன்மைக் கண்காணிப்புப் பட்டியலில்" (Priority Watch List) சேர்க்கப்பட்டுள்ளதாக இந்த அறிக்கை கூறுகிறது.
- மற்ற 23 நாடுகளும் "காண்காணிப்புப் பட்டியலில்" சேர்க்கப்பட்டுள்ளன.

## எபோலா பெருந்தொற்றின் முடிவு – காங்கோ

- வட கிவூவின் கிழக்கு மாகாணத்தில் தாக்கிய எபோலா வைரஸ் நோயின் 12வது பெருந்தொற்று முடிவுற்றதாக காங்கோ ஜனநாயகக் குடியரசு நாடு அறிவித்தது.
- எபோலா வைரசானது முதன்முதலாக 1976 ஆம் ஆண்டில் எபோலா நதியின் அருகில் கண்டுபிடிக்கப் பட்டது.
- அதன் பிறகு இந்த வைரசானது பல ஆப்பிரிக்க நாடுகளில் பரவியது.

## SEEDS அமைப்புடன் கைகோர்க்கும் பெப்சிகோ பவுண்டேசன் நிறுவனம்

- நிலையான சுற்றுச்சூழல் மற்றும் சூழல்சார் மேம்பாட்டு அமைப்பு (Sustainable Environment and Ecological Development Society – SEEDS) எனும் ஒரு இலாப நோக்கமில்லாத அமைப்புடன் பெப்சிகோ பவுண்டேசன் நிறுவனம் கைகோர்த்துள்ளது.
- இந்தக் கூட்டாண்மையானது கொரோனா (கோவிட்) சமுதாய நோய்த் தடுப்பு மருந்து வழங்கும் இயக்கத்தை (Community COVID-19 vaccination drive) தொடங்கவும் கொரோனா (கோவிட்) நல மையங்களை அமைக்கவும் வேண்டி தொடங்கப் பட்டுள்ளது.
- இவை மகாராஷ்டிரா, பஞ்சாப், மேற்கு வங்காளம், உத்தரப் பிரதேசம் மற்றும் தெலுங்கானா உள்ளிட்ட மாநிலங்களில் பணிகளை மேற்கொள்ளும்.
- இந்தக் கூட்டாண்மையின் ஒரு அங்கமாக SEEDS அமைப்பானது தடுப்பூசி மருந்துகளை வழங்குவதையும், படுக்கைகள் மற்றும் ஆக்சிஜன் கலன்கள் உள்ளிட்ட மருத்துவ வசதிகளுடன் கூடிய கோவிட் நல மையங்களை அமைக்கும் பணிகளையும் மேற்கொள்ளும்.



## R 21 / மேட்ரிக்ஸ் M

- R21 / மேட்ரிக்ஸ் M எனும் மருந்தானது ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தின் அறிவியலாளர்களால் உருவாக்கப்பட்டுள்ளது.
- இந்த மலேரியா தடுப்பு மருந்தானது இரண்டாம் கட்ட பரிசோதனைகளில் 77% அளவிற்கு அதிக செயல்திறனைக் கொண்டுள்ளதாக உறுதி செய்யப்பட்டுள்ளது.
- R21 / மேட்ரிக்ஸ் M எனப்படும் இந்தப் புதிய தடுப்பு மருந்தானது RTS,S எனும் தடுப்பு மருந்தினுடைய ஒரு மாற்றியமைக்கப் பட்ட வடிவமாகும்.
- இந்தத் தடுப்பு மருந்தானது பிளாஸ்மோடியம் பால்சிபாரம் எனப்படும் மலேரியாவை உண்டாக்கும் ஒட்டுண்ணியானது கல்லீரலுக்குள் நுழைவதைத் தடுப்பதற்காகவும் அதனால் ஏற்படும் மோசமான இரத்தநிலை மாறுபாடுகளைத் தடுப்பதற்காகவும் வடிவமைக்கப் பட்டுள்ளது.

## உணவு நெருக்கடிகள் மீதான உலகளாவிய அறிக்கை - 2021

- உணவு நெருக்கடிகள் மீதான உலகளாவிய அமைப்பானது (Global Network Against Food Crises – GNAFC) சமீபத்தில் 2021 ஆம் ஆண்டிற்கான உணவு நெருக்கடிகள் மீதான உலகளாவிய அறிக்கையினை வெளியிட்டது.
- GNATC என்பது ஐரோப்பிய ஒன்றியம், ஐக்கிய நாடுகள் அமைப்பு மற்றும் இதர அரசு மற்றும் அரசு சாரா நிறுவனங்கள் ஆகியவற்றால் அமைக்கப்பட்ட ஒரு சர்வதேசக் கூட்டணியாகும்.
- 2020 ஆம் ஆண்டில் 40 மில்லியன் மக்கள் பசியில் ஆழ்த்தப்பட்டதற்கான முக்கியக் காரணம் பொருளாதார நெருக்கடி தான் என்று இந்த அறிக்கை கூறுகிறது.
- 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது 24 மில்லியன் உயர்ந்துள்ளது.

*குறிப்பு*

- உணவுப் பற்றாக்குறையினால் மோசமாக பாதிக்கப்பட்டது ஆப்பிரிக்கக் கண்டம் ஆகும்.
- உலகளாவிய உணவுப் பற்றாக்குறைகளில் 63%க்கும் மேற்பட்டவை ஆப்பிரிக்காவில் பதிவாகியுள்ளது.
- பருவநிலைப் பிரச்சினைகளால் ஜிம்பாப்வே மற்றும் ஹைத்தி ஆகிய நாடுகளில் 15 மில்லியன் மக்களின் உணவுப் பாதுகாப்பானது பாதிக்கப்பட்டுள்ளது.

## பழமையான மனிதக் கல்லறை

- ஆப்பிரிக்காவில் பழமையான மனிதக் கல்லறை ஒன்றினை அறிவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- இந்த கல்லறையானது 78,000 ஆண்டுகள் பழமையானதாகும்.
- இந்தக் குகைப் பகுதியானது கென்யக் கடற்கரையோரத்தின் அருகே கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.
- இந்த இடமானது "பாங்கா யா சைதி" (Panga ya Saidi ) என அழைக்கப்படுகிறது.
- 2 முதல் 3 வயதுடைய ஒரு குழந்தையின் எலும்புகளே இந்தக் குகையினைக் கண்டுபிடிக்க வழிவகுத்தது.

- அறிவியலாளர்கள் அந்தக் குழந்தைக்கு "டோட்டோ" (mtoto) என புனைப் பெயரிட்டு உள்ளனர்.

## உணவு விலைக் குறியீடு

- 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் தொடர்ந்து 11வது மாதமாக உலக உணவு விலைகள் அதிகரித்துள்ளதாக ஐக்கிய நாடுகள் அமைப்பானது சமீபத்தில் அறிவித்து உள்ளது.
- இது 2014 ஆம் ஆண்டு மே மாதத்திலிருந்து இதுவரை இல்லாத அளவில் ஒரு உச்ச கட்ட நிலையை அடைந்துள்ளது.
- உணவு மற்றும் வேளாண் அமைப்பினால் வெளியிடப்படும் உணவு விலைக் குறியீட்டின் அடிப்படையில் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.
- உணவு விலைக் குறியீடானது எண்ணெய் வித்துக்கள், தானியங்கள், பால் உற்பத்திப் பொருட்கள், சர்க்கரை மற்றும் இறைச்சி போன்ற உள்ளடக்கப் பொருட்களின் விலைகளில் ஏற்படும் மாதாந்திர மாற்றங்களை கணக்கிடுகிறது.
- 2021 ஆம் ஆ,ண்டு ஏப்ரல் மாதத்தில் உணவு விலைக் குறியீடானது 120.9 ஆக உள்ளது.
- 2021 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் இந்தக் குறியீடானது 118.9 ஆக இருந்தது.

## ஆசிய மேம்பாட்டுக் கண்ணோட்ட அறிக்கை 2021




- ஆசிய மேம்பாட்டுக் கண்ணோட்ட அறிக்கை 2021 என்பது ஆசிய மேம்பாட்டு வங்கியினால் வெளியிடப்படும் ஒரு அறிக்கையாகும்.
- உலகின் ஆரோக்கியமான மீள்வு மற்றும் கோவிட் – 19 தடுப்பூசி உற்பத்தியில் ஏற்பட்ட ஆரம்ப கால வளர்ச்சி போன்றவற்றினால் ஜப்பான், ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து போன்ற நாடுகள் தவிர 45 நாடுகளின் வளர்ச்சியானது இந்த ஆண்டில் 7.3% அதிகரித்துள்ளதாக இந்த அறிக்கை கூறுகிறது.
- தடுப்பூசி விநியோகத்தில் ஏற்படும் தாமதம் (அ) புதிய தொற்றுகள் ஏற்படுவதின் காரணமாக இந்த பெருந்தொற்றானது ஆசியாவிற்கும் பசிபிக் பகுதிக்கும் (இந்தியா உட்பட) ஒரு பெரிய அச்சுறுத்தலாக இருந்தது.

- இந்த பகுதிகளில் 2020 ஆம் ஆண்டில் 2.8% ஆக இருந்து சராசரி பணவீக்கமானது 2021 ஆம் ஆண்டில் 2.3% ஆகக் குறையும் எனக் கணிக்கப் பட்டது.
- கிழக்கு மற்றும் தெற்கு ஆசியப் பகுதிகளில் வலுவான வளர்ச்சியும், மத்திய மற்றும் தென்கிழக்கு ஆசியப் பகுதிகளிலும் பசிபிக் பகுதிகளிலும் பெரும்பாலும் மிதமான வளர்ச்சியும் ஏற்படும் என இதில் கணிக்கப் பட்டுள்ளது.
- கோவிட் – 19 பெருந்தொற்றின் தற்போதைய இரண்டாவது அலையானது இந்தியப் பொருளாதாரத்தின் மீள்வினை ஆபத்தான சூழ்நிலையில் ஆழ்த்தக் கூடும் என இந்த அறிக்கை கூறுகிறது.
- வலுவான தடுப்பூசி வழங்கும் இயக்கமானது நடப்பிலிருப்பதால் இந்த பெருந்தொற்றின் இரண்டாம் அலையானது ஒருவேளை இல்லாதிருந்தால் இந்தியாவின் பொருளாதாரமானது 2021-22 ஆம் நிதி ஆண்டில் 11% வளர்ச்சியைக் காணும் என எதிர்பார்க்கப் பட்டதாக இந்த அறிக்கை கூறுகிறது.
- 2022 ஆம் ஆண்டில் இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியானது 7% வரை வளரும் என எதிர்பார்க்கப் பட்டது.

## PESCO அமைப்பில் அமெரிக்காவின் பங்கேற்பு

- நிரந்தரமாக கட்டமைக்கப்பட்ட ஒத்துழைப்பு அல்லது பெஸ்கோ அமைப்பின் (Permanent Structured Cooperation- PESCO) பாதுகாப்பு முன்னெடுப்பில் பங்கேற்பதற்காக நார்வே, கனடா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் விடுத்த கோரிக்கைகளுக்கு ஐரோப்பிய ஒன்றியமானது சமீபத்தில் ஒப்புதல் வழங்கியது.
- முதன்முறையாக ஐரோப்பிய மன்றமானது PESCO திட்டத்தில் பங்கேற்பதற்கு ஐரோப்பிய மன்றத்தைச் சாராத நாடுகளுக்கு அனுமதியினை வழங்கியுள்ளது.
- தற்போது இந்த நாடுகள் ஐரோப்பாவின் இராணுவ இயக்கத் திட்டத்தில் பங்கேற்க இயலும்.
- PESCO ஆனது ஐரோப்பிய ஒன்றியப் பாதுகாப்பு மற்றும் இராணுவக் கொள்கையின் ஒரு அங்கமாகும்.
- இந்தக் கொள்கையானது 2009 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப் பட்ட லிஸ்பன் ஒப்பந்தத்தினால் அறிமுகப் படுத்தப்பட்ட ஐரோப்பிய ஒன்றியத்தினுடைய ஒரு ஒப்பந்தத்தின் அடிப்படையிலானதாகும்.

## சைனோபார்ம் தடுப்பு மருந்திற்கு அனுமதி – WHO

- சைனோபார்ம் தடுப்பு மருந்தினுடைய அவசரகாலப் பயன்பாட்டிற்கு உலக சுகாதார அமைப்பானது (WHO) சமீபத்தில் ஒப்புதல் வழங்கியுள்ளது.
- ஆஸ்ட்ராசெனிகா, பைசர், பயோன்டெக், ஜான்சன் & ஜான்சன் ஆகிய நிறுவனங்கள் உருவாக்கிய கோவிட்-19 தடுப்பு மருந்துகளுக்கு சமீபத்தில் உலக சுகாதார அமைப்பானது அனுமதி வழங்கியது.
- சைனோபார்ம் தடுப்பு மருந்தானது சீனாவால் உருவாக்கப் பட்டது.
- உலக சுகாதார அமைப்பானது ஒரு சீன தடுப்பு மருந்திற்கு அனுமதி வழங்கியிருப்பது இதுவே முதல்முறையாகும்.

- COVAX திட்டத்தில் சீனாவின் சைனோபார்ம் தடுப்பு மருந்தும் சேர்க்கப்படலாம் என்பதற்கான அறிகுறியாகவும் இது தென்படுகிறது.
- சைனோபாம் தடுப்பு மருந்தானது 79% செயல்திறனுடையது என உலக சுகாதார அமைப்பு கூறுகிறது.
- சீனாவின் மற்றுமொரு பிரபலமான தடுப்பு மருந்தானது சைனோவாக் (sinovac) என்பதாகும்.





## இந்தியா, இஸ்ரேல் மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய நாடுகளின் முத்தரப்பு ஒப்பந்தம்

- "எகோப்பியா" (Ecoppia) எனப்படும் இஸ்ரேலிய நிறுவனமானது ஐக்கிய அரபு அமீரகத்தின் ஒரு திட்டத்திற்காக, சூரிய ஆற்றலூட்டப்பட்ட இயந்திர மனிதனால் (rotolic) இயக்கப்படும் தூய்மை செய்யும் தொழில்நுட்பம் ஒன்றினை இந்திய நாட்டில் தயாரிக்க உள்ளது.
- இந்தத் திட்டமானது இஸ்ரேல், இந்தியா மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய நாடுகளுக்கிடையேயான ஒரு முத்தரப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தத்தின் மூலம் மேற்கொள்ளப் படும்.
- இது இந்த மூன்று நாடுகளுக்கிடையே மேற்கொள்ளப்படும் முதல் வகையான ஒப்பந்தமாகும்.

## உலகளாவிய பிரதானக் குடியிருப்புக் குறியீடு

- லண்டனில் அமைந்துள்ள நைட் பிராங்க் எனும் சொத்து ரீதியிலான ஆலோசக நிறுவனத்தின் உலகளாவிய பிரதானக் குடியிருப்புக் குறியீட்டில் புதுடெல்லி மற்றும் மும்பை ஆகியவை முறையே 32 மற்றும் 36 ஆகிய இடங்களைப் பெற்றுள்ளன.
- இந்தக் குறியீடானது உலகம் முழுவதுமுள்ள 45க்கும் மேற்பட்ட நகரங்களில் அவற்றின் உள்நாட்டுப் பணமதிப்பில் பிரதானக் குடியிருப்புகளின் விலையில் ஏற்படும் மாற்றங்களைக் கண்காணித்து மேற்கொள்ளப்படும் ஒரு மதிப்பீட்டின் அடிப்படையில் ஆனதாகும்.
- 2021 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் பெங்களூரு நான்கு இடங்களுக்குப் பின் தள்ளப் பட்டு 40வது இடத்தைப் பெற்றுள்ளது.
- இந்தக் காலாண்டில் சென்சென், சாங்காய் மற்றும் குவான்சோ ஆகிய மூன்று சீன நகரங்கள் முன்னணியில் உள்ளன.

- இந்தக் காலாண்டில், உலகளவில் மிகவும் பலவீனமான நிலையில் உள்ள நகரமானது நியூயார்க் நகரமாகும்.




## 3வது ஆர்க்டிக் அறிவியல் துறை அமைச்சர்கள் சந்திப்பு


- 3வது ஆர்க்டிக் அறிவியல்துறை அமைச்சர்கள் சந்திப்பில் இந்தியா பங்கேற்றதாக புவி அறிவியல் துறை அமைச்சகமானது சமீபத்தில் அறிவித்தது.
- இந்த சந்திப்பில் மத்திய அமைச்சர் டாக்டர். ஹர்ஷ் வர்தன் அவர்கள் இந்தியாவின் சார்பாக பங்கேற்றார்.
- 2021 ஆம் ஆண்டிற்கான கருத்துரு, “Knowledge for a Sustainable Arctic” (ஒரு நீடித்த ஆர்க்டிக் பகுதிக்கான அறிவுக் களஞ்சியம்) என்பதாகும்.




- முதல் இரண்டு ஆர்க்டிக் அறிவியல்துறை அமைச்சர்கள் சந்திப்பானது 2016 ஆம் ஆண்டில் அமெரிக்காவிலும் 2018 ஆம் ஆண்டில் ஜெர்மனியிலும் நடைபெற்றது.
- இந்த ஆண்டு நடைபெற்ற இந்த சந்திப்பினை ஜப்பான் மற்றும் ஐஸ்லாந்து ஆகிய நாடுகள் ஏற்பாடு செய்தன.

- இந்த சந்திப்பானது ஆசியாவில் மேற்கொள்ளப் படுவது இதுவே முதல்முறையாகும்.
- 2013 ஆம் ஆண்டு முதல் இந்திய நாடானது ஆர்க்டிக் மன்றத்தில் ஒரு “பார்வையாளர் நாடாக” உள்ளது.

## சீனாவின் மக்கள்தொகை வளர்ச்சி




- கடந்த பத்தாண்டு காலத்தில் சீனாவின் வருடாந்திர மக்கள் தொகை வளர்ச்சியானது வெகுவாக குறைந்துள்ளது.
- இது அந்த நாட்டின் மக்கள் தொகையின் ஈவுத் தொகையினை ஆபத்தில் ஆழ்த்தி உள்ளது.
- 2020 ஆம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கெடுப்பில் சீனாவின் வருடாந்திர மக்கள் தொகை வளர்ச்சியானது 0.53% என்ற வீதத்தில் உள்ளது.
- 2010 ஆம் மக்கள்தொகைக் கணக்கெடுப்பில் இது 0.57% ஆக இருந்தது.

## எவரெஸ்ட்டில் கோவிட்-19 தொற்று வரம்பினை குறிக்கும் எல்லைக் கோடு

- எவரெஸ்ட் சிகரத்தில் கொரானா  வைரசின் தொற்றுப் பரவலைத் தடுப்பதற்காக அதன் உச்சியில் எல்லைகளைப் பிரித்து காண்பிப்பதற்கான எல்லை கோடு ஒன்றினை வரைய சீனா திட்டமிட்டுள்ளது.
- இந்த எல்லைக் கோடானது நேபாள நாட்டிலிருந்து மலை ஏறுபவர்களுக்கும் சீனத் தரப்பில் இருந்து மலை ஏறுபவர்களுக்கும் இடையேயான தொடர்பினை துண்டிக்கும்.

- நேபாளத்தில் தற்போது பெருந்தொற்றானது அதிகரித்து வருகிறது.
- ஆனால் சீனாவில் இந்த பெருந்தொற்றானது பெரும்பாலும் குறைக்கப்பட்டு விட்டது.

## BRICS அமைப்பின் வேலைவாய்ப்பிற்கான செயற்குழுச் சந்திப்பு

- முதலாவது BRICS அமைப்பின் வேலை வாய்ப்பிற்கான செயற்குழு சந்திப்பானது காணொலி மூலம் நடைபெற்றது.
- இந்த சந்திப்பானது இந்தியாவினால் ஏற்பாடு செய்யப்பட்டது.
- 2021 ஆம் ஆண்டில் இந்தியா BRICS அமைப்பின் தலைமைப் பொறுப்பை ஏற்று உள்ளது.
- BRICS நாடுகளுக்கிடையேயான சமூகப் பாதுகாப்பு ஒப்பந்தங்களை ஊக்குவித்தல், தொழிலாளர் வளத்தில் பெண்களின் பங்கேற்பு, தொழிலாளர் சந்தையை முறைப்படுத்துதல் போன்றவை குறித்து உறுப்பினர் நாடுகள் இந்த சந்திப்பில் விவாதித்தன.
- BRICS நாடுகளும் சர்வதேச தொழிலாளர் அமைப்பு மற்றும் சர்வதேச சமூகப் பாதுகாப்பு முகமை ஆகியவற்றின் உறுப்பினர் நாடுகளும் இந்தச் சந்திப்பில் பங்கேற்றன.

## பசிபிக் புட்பால் மீன்

- பசிபிக் புட்பால் எனும் மீன் சமீபத்தில், அமெரிக்காவின் கலிபோர்னியாவின் கடற்கரையில் கரை ஒதுங்கியது.
- இது பொதுவாக ஆழ்கடலில் காணப்படும் ஒரு மீனாகும்.
- கருப்பு நிறத்தில் இருப்பதால் இந்த மீன் ஆனது கோர "உருவமுடைய மீன்" (Monster Looking Fish) என்று கூறப்படுகிறது.



## அமெரிக்காவிலிருந்து கூகுள் பே மூலமாக இந்தியா மற்றும் சிங்கப்பூர்

- ஆல்பாபெட் (Alphabet Inc's) நிறுவனத்தின் ஒரு பிரிவான கூகுள், தனது அமெரிக்கப் பண வழங்கீட்டுச் செயலியின் உபயோகிப்பாளர்களுக்காக ஒரு சர்வதேச பணப்பரிமாற்ற கூட்டாண்மையைத் தொடங்கியுள்ளது.
- இதற்காக பண வரவு தொடர்பான வைஸ் மற்றும் வெஸ்டர்ன் யூனியன் கோ ஆகிய நிறுவனங்களுடன் கூட்டாண்மை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- அமெரிக்காவிலுள்ள கூகுள் பே உபயோகிப்பாளர்கள் இனி இந்தியா மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் உள்ள கூகுள்பே உபயோகிப்பாளர்களுக்குப் பணப் பரிமாற்றம் செய்ய இயலும்.
- இந்த ஆண்டின் இறுதிக்குள் வைஸ் நிறுவனம் மூலமாக 80 நாடுகளுக்கும் வெஸ்டர்ன் யூனியன் மூலமாக 200 நாடுகளுக்கும் இந்தத் திட்டமானது விரிவுபடுத்தப்படும்.

## Live Wire – ஹார்லி டேவிட்சன்

- ஹார்லி டேவிட்சன் நிறுவனமானது "Live Wire" (லைவ் வயர்) எனப்படும் தனது மின்சார வாகனத் தயாரிப்பினைத் தொடங்கியுள்ளது.
- இது வேகமாக வளர்ந்து வரும் மின்சார வாகனச் சந்தையின் போட்டித் தன்மைக்கு ஈடு கொடுப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட ஒரு சமீபத்திய முயற்சியாகும்.
- அடுத்த இளைய தலைமுறை மற்றும் சுற்றுச்சூழல் மீது அக்கறை கொண்ட வாகன ஓட்டிகளின் கவனத்தை ஈர்ப்பதையே நோக்கமாகக் கொண்டு இந்த மின்சார வாகன இலக்குப் பிரிவு செயல்படும்.

## OCHA அமைப்பின் புதிய தலைவர் - மார்டின் கிரிஃபித்ஸ்

- இங்கிலாந்தின் மூத்த இராஜதந்திரியான மார்டின் கிரிஃபித்ஸ் அவர்கள் ஐக்கிய நாடுகள் அமைப்பின் மனிதநேய விவகாரங்களுக்கான ஒருங்கிணைப்பு அமைப்பின் (Office of the Coordination of Humanitarian Affairs – OCHA) புதிய தலைவராக நியமிக்கப் பட்டுள்ளார்.
- இவரின் பதவிக்காலம் ஐந்தாண்டுகளாகும்.
- இவர் மார்க் லோகாக் (Mark Lowcock) என்பவருக்குப் பதிலாக OCHA அமைப்பின் மனித நேய விவகாரங்கள் மற்றும் நெருக்கடிக் கால நிவாரண ஒருங்கிணைப்பாளருக்கான ஒரு புதிய துணைப் பொதுச் செயலாளராக பொறுப்பேற்பார்.
- சிக்கலான நெருக்கடி நிலைகள் மற்றும் இயற்கைப் பேரிடர்களை எதிர்கொள்வதற்காக சர்வதேச நாடுகளின் திறனை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு இந்த அமைப்பு செயல்படுகிறது.



## செயற்கையான கஞ்சாப் பொருட்களுக்குத் தடை – சீனா

- ❖ அனைத்து வகையான செயற்கை கஞ்சாப் பொருட்களுக்குத் தடை விதித்த முதல் நாடு சீனாவாகும்.
- ❖ போதைப் பொருட்களின் உற்பத்தி மற்றும் கடத்தல்களைத் தடுக்கும் முயற்சியில் சீன அரசானது இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.
- ❖ இவை மின்னணு சிகரெட்டுகளில் சிகரெட் எண்ணெய்யாக உபயோகிக்கப் படுகின்றன என்பதால் செயற்கை கஞ்சாக்கள் அதிகளவில் மறைக்கப் படுகின்றன.
- ❖ செயற்கை கஞ்சாப் பொருட்கள் என்பவை மிகவும் தவறான முறையில் பயன்படுத்தப் படுகின்ற மனோவியலைப் பாதிக்கும் ஒரு புதிய பொருளாகும்.
- ❖ இவை தவறாகப் பயன்படுத்தப்படுவதால், வேண்டுமென்றேக் காயங்களை ஏற்படுத்திக் கொள்ளுதல் மற்றும் முறையற்ற வகையில் வாகனம் ஓட்டுதல் போன்ற சம்பவங்களை அதிகரிக்கச் செய்து சமுதாயத்திற்கு ஒரு பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்துகிறது.

## எலிகளின் எண்ணிக்கை உயர்வு – ஆஸ்திரேலியா

- ❖ ஆஸ்திரேலியாவில் எலிகளின் எண்ணிக்கையானது அதிவிரைவாக அதிகரித்துள்ளது.
- ❖ இவை பயிரிடப்பட்ட பயிர்கள் மற்றும் சேமிக்கப்பட்ட உணவு தானியங்களுக்குப் பெரும் சேதத்தை விளைவிக்கின்றன.
- ❖ இது "எலி மழை" எனவும் கூறப்படுகிறது.
- ❖ மேலும் இது அந்த நாட்டில் பிளேக் நோயின் எண்ணிக்கையையும் அதிகரித்துள்ளது.

## டலடோலோபஸ் கலோரம்

- ❖ தொல்லியல் வல்லுநர்கள் (palaeontologists) சமீபத்தில் பேசுகின்ற டைனோசர் (Talkative Dinosaur) எனப்படும் புதிய டைனோசர் இனம் ஒன்றைக் கண்டறிந்துள்ளனர்.
- ❖ இது மெக்சிகோவின் வடக்குப் பகுதியில் கண்டறியப் பட்டுள்ளது.
- ❖ மெக்சிகோவின் தேசிய மானுடவியல் மற்றும் வரலாற்று நிறுவனமானது இதற்கான ஆராய்ச்சியை மேற்கொண்டு வருகிறது.
- ❖ இந்த இனமானது "டலடோலோபஸ் கலோரம்" (Tlatolophus galorum) என அழைக்கப் படுகிறது.



- ❖ இது ஒரு தாவர உண்ணியாகும்.

- ❖ இந்த டைனோசர்கள் குறைந்த அதிர்வெண்ணுடைய ஒலிகளையும் கேட்கும் வகையிலான காதுகளையும் கொண்டிருந்தன.
- ❖ இவை இனப்பெருக்கத் தேவைகளுக்காகவும் தன்னை வேட்டையாட வரும் மிருகங்களைப் பயமுறுத்துவதற்காகவும் பலமான ஒலிகளை எழுப்பின.

## 2020 ஆம் ஆண்டின் பிரபஞ்ச அழகி – ஆண்ட்ரியா மெஸா

- ❖ மெக்சிகோ அழகியான (மிஸ் மெக்சிகோ) ஆண்ட்ரியா மெஸா என்பவர் 69வது 2020 ஆம் ஆண்டுக்கான பிரபஞ்ச அழகியாக தேர்ந்தெடுக்கப்பட்டு மகுடம் சூட்டப் பட்டார்.
- ❖ (மிஸ் இந்தியா) இந்திய அழகியான அட்லின் கேஸ்டிலினோ என்பவர் 4வது இடத்தைப் பெற்று உள்ளார்.
- ❖ பிரேசிலின் ஜுலியா காமா என்பவரும் பெருவின் ஜானிக் மெக்டா என்பவரும் இறுதிச் சுற்றிற்குத் தேர்வான முதல் இரண்டு நபர்களாவர்.
- ❖ இந்தியாவின் அட்லின் கேஸ்டிலினோ மற்றும் டொமினிகன் குடியரசின் சிம்பெர்லி பெரேஸ் ஆகியோர் முறையே இறுதிச் சுற்றிற்குத் தேர்வான மூன்றாவது மற்றும் நான்காவது நபர்களாவர்.
- ❖ இந்த ஆண்டு அழகிப் போட்டியானது அமெரிக்காவின் ஃபுளோரிடாவின் மியாமி நகரில் நடத்தப் பட்டது.
- ❖ தென் ஆப்பிரிக்காவைச் சேர்ந்த முன்னாள் பிரபஞ்ச அழகியான ஜோஜிபினி டுன்ஸி என்பவர் தற்போதைய பிரபஞ்ச அழகிக்கு வெற்றி மகுடத்தைச் சூட்டினார்.




## வின்ச்கோம்பே விண்கல்

- ❖ ஐக்கிய ராஜ்ஜியத்தின் க்ளூசெஸ்டர்சையரிலுள்ள (Gloucestershire) வின்ச்கோம்பே நகரில் மோதிய விண்கல் ஒன்றின் ஒரு பகுதியை, காட்சிக்கு வைக்க உள்ளதாக லண்டனில் அமைந்துள்ள தேசிய வரலாற்று அருங்காட்சியம் தெரிவித்துள்ளது.
- ❖ இந்த விண்கல்லானது 2021 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் ஐக்கிய ராஜ்ஜியத்தின் மண்ணில் வீழ்ந்தது.
- ❖ இந்த விண்கல்லானது 4.5 பில்லியன் வருடங்கள் பழமையானதாகும்.
- ❖ கரிம விண்கல் (carbonaceous meteorite) என்பதால் இது ஒரு அரிதான ஒன்றாகும்.
- ❖ இதுவரை மனித இனத்திற்குத் தெரிந்த 65,000 விண்கல் வகைகளில் வெறும் 1000 மட்டுமே

இந்த வகையைச் சேர்ந்தவை ஆகும்.

- ❖ வின்ச்கோம்ப்பே விண்கல்லானது ஹயபூசா 2 என்ற விண்கலத்தினால் புவிக்குக் கொண்டு வரப்பட்ட ஒரு விண்கல் மாதிரியினை ஒத்துள்ளது.



## இஸ்ரேல் – பாலஸ்தீன மோதல்

- ❖ ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையானது (UNSC) இஸ்ரேல் – பாலஸ்தீன மோதல் குறித்து ஒரு சந்திப்பினை நடத்தியது.
- ❖ இந்தச் சந்திப்பிற்கு சீன அரசுத் தரப்பு உறுப்பினரும் அந்நாட்டின் வெளியுறவுத் துறை அமைச்சருமான வாங்க் இ தலைமை தாங்கினார்.
- ❖ இது ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை மேற்கொண்ட இஸ்ரேல் – பாலஸ்தீன மோதல் குறித்த முதல் சந்திப்பாகும்.




## இரும்புக் கவசம் – இஸ்ரேல்

- ❖ காசாவின் ஹமாஸ் குழுவானது ராக்கெட்டுகளைக் கொண்டு இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தியது.
- ❖ இந்த ராக்கெட்டுகள் இஸ்ரேலின் இரும்புக் கவசம் எனும் பாதுகாப்பு அமைப்பினால் தடுக்கப்பட்டு அழிக்கப் படுகின்றன.
- ❖ இந்தச் செயல்பாடானது அந்த ராக்கெட்டுகள் கண்ணுக்குத் தெரியாத ஒரு கவசத்தைத் தாக்கியது போல் புலப்படுகிறது.



*இரும்புக் கவசம் அல்லது அயர்ன் டோம் பற்றிய தகவல்கள்*

- ❖ இது ஒரு வான்வழிப் பாதுகாப்பு அமைப்பாகும்.
- ❖ இது எந்த ஒரு ஏவுகணையையும் ராக்கெட்டுகளையும் தாக்கி அழிக்கிறது.
- ❖ இது குறுகிய வரம்புடைய மற்றும் வானிலேயே இலக்கைத் தாக்கி அழிக்கும் ஒரு பாதுகாப்பு அமைப்பாகும்.
- ❖ இது ராக்கெட்டுகள், சிறு பீரங்கிகள், விமானங்கள், ஹெலிகாப்டர்கள், சிறு பீரங்கிப் படை மற்றும் ஆளில்லா தாக்குதல் வாகனங்கள் போன்றவற்றையும் தாக்கி அழிக்கும்.
- ❖ அயர்ன் டோம் பாதுகாப்பு அமைப்பானது 2011 ஆம் ஆண்டில் பயன்பாட்டிற்கு வந்தது.

## நீண்டநேரம் வேலை செய்தல் பற்றிய ஆய்வு

- ❖ நீண்ட நேரம் வேலை பார்ப்பதால் ஒவ்வொரு வருடமும் நூற்றுக்கணக்கான மக்கள் உயிரிழப்பதாக உலக சுகாதார அமைப்பு மற்றும் உலக தொழிலாளர் அமைப்பு ஆகியவை மேற்கொண்ட ஒரு சமீபத்திய ஆய்வானது தெரிவிக்கிறது.
- ❖ இந்த ஆய்வில் பக்கவாதம் பற்றிய 22 ஆய்வுகளும் இதய நோய்கள் குறித்த 37 ஆய்வுகளும் அடங்கும்.
- ❖ மேலும் இது 194 நாடுகளில் மேற்கொண்ட 2,300க்கும் அதிகமான ஆய்வுகளின் தரவுகளையும் சேகரித்துள்ளது.
- ❖ ஒரு வாரத்தில் 55 மணிநேரம் வேலை செய்வது 35% பக்கவாதம் ஏற்படவும் 17% இதய நோய் ஏற்படவும் காரணமாக அமையும் என இந்த அறிக்கை கூறுகிறது.

## சீனா, வியட்நாம் மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளின் மீது பொருள் குவிப்பிற்கு எதிரான விசாரணை

- ❖ வர்த்தக அமைச்சகமானது சமீபத்தில் சீனா, வியட்நாம் மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளின் மீது பொருள் குவிப்பிற்கு எதிரான விசாரணையைத் தொடங்கியது.
- ❖ இந்த நாடுகளிலிருந்து சூரிய ஆற்றலூட்டப்பட்ட மின்கலங்கள் இறக்குமதி செய்யப்படுவதை எதிர்த்து இந்த விசாரணையானது மேற்கொள்ளப்படுகிறது.


- இந்திய சூரிய ஆற்றல் உற்பத்திக் கூட்டமைப்பினால் வழங்கப்பட்ட ஒரு மனுவைத் தொடர்ந்து வர்த்தக அமைச்சகமானது இந்த விசாரணையைத் தொடங்கியுள்ளது.
- சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் சூரிய ஆற்றலூட்டப்பட்ட மின்கலங்கள் இந்தியாவில் தயாரிக்கப்படுவதைக் காட்டிலும் 15 முதல் 20 சதவீதம் வரை விலை மலிவானவையாகும்.
- உள்நாட்டில் கிடைக்கும் மூலப் பொருட்களை கொண்டு சூரிய ஆற்றலூட்டப்பட்ட மின்கலங்கள் தயாரிக்கும் தொழிலை இது வெகுவாக பாதிக்கிறது.
- இறுதியில் உள்நாட்டில் உற்பத்தியாகும் சூரிய ஆற்றலூட்டப்பட்ட மின்கலங்களின் விலையும் இதனால் அதிகரிக்கிறது.

## 5 ஆழ்கடல் ஆய்வுகள்

- 5 ஆழ்கடல் ஆய்வுகளானது உலகின் ஆழமான ஐந்து பெருங்கடல்களின் ஆழ்கடல் பகுதியை அளவிட்டுக் கூறியுள்ளன.
- பசிபிக் பெருங்கடலிலுள்ள மரியானா அகழியிலுள்ள சேலஞ்சர் எனும் ஆழ்கடல் பகுதியே (10,924 மீ) உலகின் மிகவும் ஆழமான அகழியாக உள்ளது.
- பசிபிக் பெருங்கடலிலுள்ள டோங்கா அகழியிலுள்ள ஹாரிசான் ஆழ்கடல் பகுதியானது (10,816) உலகின் இரண்டாவது ஆழமான அகழியாக திகழ்கிறது.
- அமெரிக்காவினைச் சேர்ந்த ஆழ்கடல் ஆராய்ச்சியாளரான விக்டர் லான்ஸ் வெஸ்கோவா என்பவர் 2018 ஆம் ஆண்டில் ஐந்து ஆழ்கடல் ஆய்வுப் பயணம் ஒன்றினைத் தொடங்கி வைத்தார்.
- புவியின் ஐந்து பெருங்கடலின் ஆழமான பகுதியை அடைந்த முதல் ஆய்வுப் பயணம் இதுவாகும்.

### *பெருங்கடல் மற்றும் அதன் ஆழமான பகுதிகள்*

- அட்லாண்டிக் பெருங்கடல் – பியூர்ட்டோ ரைகோ அகழியிலுள்ள பிரவுன்சன் ஆழ்கடல் (Brownson Deep) பகுதி (8,378 மீ).
- தென் பெருங்கடல் – தெற்கு சான்ட்விச் அகழியிலுள்ள பேக்டோரியன் ஆழ்கடல் (Factorian Deep) பகுதி (7,432 மீ).



- இந்தியப் பெருங்கடல் – ஜாவா அகழியிலுள்ள 'Unnamed Deep' என்ற பகுதி (7,187 மீ).
- பசிபிக் பெருங்கடல் – மரியானா அகழியிலுள்ள (உலகின் மிக ஆழமான அகழி) சேலஞ்சர் ஆழ்கடல் பகுதி (Challenger Deep) (10,92 4மீ).
- ஆர்க்டிக் பெருங்கடல் - மொலோய் துளைப் பகுதி (5,551 மீ).

## 80 மில்லியன் தடுப்பு மருந்துகளைப் பகிர்ந்தளிக்கும் அமெரிக்க அரசு

- அடுத்த ஆறு வாரங்களில் உலகளவில் 80 மில்லியன் தடுப்பு மருந்துகளைப் பகிர்ந்தளிக்க உள்ளதாக அமெரிக்க அதிபர் அறிவித்துள்ளார்.
- அமெரிக்கா வழங்குவதாக உறுதியளித்துள்ள இந்த தடுப்பு மருந்துகளில்,
  - ஃபைசர், மாடர்னா, ஜான்சன் & ஜான்சன் மற்றும் ஆஸ்ட்ராசெனிகா உள்ளிட்ட 20 மில்லியன் தடுப்பூசிகளும்
  - ஆஸ்ட்ராசெனிகாவின் 60 மில்லியன் தடுப்பு மருந்துகளும் அடங்கும்.

## சுலவேசி தீவு

- மிகப் பழமையான படியெடுத்தல் என்ற முறையில் கையினால் வரையப்பட்ட ஒரு ஓவியமானது காலநிலை மாற்றம் காரணமாக தீவிரமான நிலையில் சிதைந்து வருவதாக புதிய ஆய்வு ஒன்று தெரிவிக்கிறது.
- இந்தோனேசியாவிலுள்ள சுலவேசி தீவில் 45,000 வருடங்களுக்கும் மேல் பழமையான குகை ஓவியங்கள் உள்ளன.
- சிவப்பு மற்றும் மல்பெர்ரி நிறமிகள் மூலம் வரையப்பட்ட இந்தப் பண்டைய குகை ஓவியங்களாவன வரலாற்றுக்கு முந்தைய காலத்தினைச் சேர்ந்த கலைகளில் முதன்முதலில் அறியப்பட்ட காட்சி ஓவியங்களாக திகழ்கின்றன.



## ஜான்சன் & ஜான்சன் – பயோலாஜிகல் இ

- ஹைதராபாத்தில் உள்ள பயோலாஜிகல் இ என்ற நிறுவனமானது தன்னுடைய தடுப்பு மருந்து உற்பத்தியுடன் சேர்த்து ஜான்சன் & ஜான்சன் நிறுவனத்தின் கோவிட் – 19 தடுப்பு மருந்தினையும் உற்பத்தி செய்ய உள்ளது.
- இது நாட்டினுடைய ஒட்டு மொத்த தடுப்பு மருந்து உற்பத்தியையும் அதிகரிக்கும்.
- அமெரிக்காவின் சர்வதேச நிதி மேம்பாட்டுக் கழகமானது (DFC - Development Finance Corporation) பயோலாஜிகல் இ நிறுவனத்திற்கு உதவி வழங்க இருக்கின்றது.

## மிகப்பெரிய அணுசக்தி மின்நிலையம் – ரஷ்யா மற்றும் சீனா

- ரஷ்யா மற்றும் சீனா ஆகியவை தங்களது மிகப்பெரிய அணுசக்தி மின்நிலையத்தின் அடிக்கல் நாட்டும் விழாவினை நடத்தி உள்ளன.
- இந்தத் திட்டத்தின் கீழ், மாஸ்கோவானது (ரஷ்ய நாடு) சீனாவின் இரு நகரங்களில் உயர் செயல்திறனுடைய நான்கு அணுசக்தி நிலையங்களை அமைக்க உள்ளது.
- 7வது மற்றும் 8வது அலகுகள் கட்டப்பட உள்ள தியான்வென் அணுசக்தி மின் நிலையம் சீனாவின் ஜியான்ங்சூ (Jiangsu) மாகாணத்திலுள்ள லியான்யுன்காங் (Lianyungang) நகரில் அமைந்துள்ளது.
- ரஷ்யா மற்றும் சீனா ஆகியவற்றால் இணைந்து கட்டமைக்கப்படும் சூடப்பு என்ற அணுசக்தி மின் நிலையத்தின் 3வது மற்றும் 4வது அலகுகள் லியாதிங் மாகாணத்தின் சிங்சேங் எனுமிடத்தில் அமைந்துள்ளது.
- வெவ்வேறு பிரச்சினைகளில் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றிடமிருந்து பல இன்னல்களைச் சந்தித்து வரும் ரஷ்யாவும் சீனாவும் இந்த அணுசக்தித் திட்டத்தின் மூலம் தங்களது நெருக்கமான நட்புறவினை உறுதிப்படுத்தி உள்ளன.

## ஏழை நாடுகளுக்கு 2 மில்லியன் கோவிட்-19 தடுப்பு மருந்துகள்

- அடுத்த 18 மாதங்களில் நடுத்தர மற்றும் குறைவான வருமானமுடைய ஏழ்மையான நாடுகளுக்கு 2 மில்லியன் அளவிற்கு கோவிட்-19 தடுப்பு மருந்துகளை வழங்க உள்ளதாக ஃபைசர் மற்றும் பயோன்டெக் ஆகிய நிறுவனங்கள் உறுதியளித்துள்ளன.
- இந்த அறிவிப்பானது இத்தாலி நாட்டினால் ஏற்பாடு செய்யப்பட்ட உலகளாவிய சுகாதார உச்சி மாநாட்டில் மேற்கொள்ளப்பட்டது.
- இந்த இரு நிறுவனங்களும் அமெரிக்கா மற்றும் ஐரோப்பா ஆகிய நாடுகளில் பயன்பாட்டுக்கு அனுமதிக்கப்பட்ட முதல் தடுப்பு மருந்தினை உருவாக்கின.
- ஃபைசர் நிறுவனமானது நியூயார்க் நகரில் அமைக்கப்பட்டுள்ள ஒரு பன்னாட்டு அமெரிக்க மருந்து நிறுவனமாகும்.
- பயோன்டெக் நிறுவனமானது ஜெர்மனியின் மைன்சில் (Mainz) அமைந்துள்ள ஒரு ஜெர்மானிய உயிரித் தொழில்நுட்ப நிறுவனமாகும்.

## உலகளாவிய G20 சுகாதார உச்சி மாநாடு – இத்தாலி

- உலகளாவிய G20 சுகாதார உச்சி மாநாடானது ஐரோப்பிய ஆணையத்துடன் இணைந்து G20 அமைப்பின் தலைமைப் பொறுப்பை வகிக்கும் இத்தாலி நாட்டினால் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.
- இந்த மாநாட்டில் கோவிட்-19 பெருந்தொற்றிலிருந்து மீள்வதற்கான செயல்பாட்டு நிரல்கள் ஏற்றுக் கொள்ளப் பட்டன.
- மேலும் ரோம் கொள்கைப் பிரகடனத்தை உருவாக்கி அதற்கு ஒப்புதல் வழங்கவும் இதில் முடிவு செய்யப் பட்டுள்ளது.

## 50 பில்லியன் டாலர் மதிப்பிலான உலகளாவிய தடுப்பூசி வழங்கும் திட்டம்

- சர்வதேச நாணய நிதியமானது 50 பில்லியன் டாலர் மதிப்பிலான உலகளாவிய தடுப்பூசி வழங்கும் திட்டம் ஒன்றினை முன்மொழிந்துள்ளது.
- இதன் மூலம் 2021 ஆம் ஆண்டின் இறுதிக்குள் உலக மக்கள்தொகையில் 40 சதவீதத்தினருக்குத் தடுப்பூசி வழங்கப்படும்.
- மேலும் 2022 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டிற்குள் உலக மக்கள் தொகையில் குறைந்த பட்சம் 60 சதவீதத்தினருக்குத் தடுப்பூசி வழங்கப்படும்.
- இந்தத் திட்டமானது உலக சுகாதார அமைப்பு, உலக வங்கி, கவி அமைப்பு (உலக தடுப்பு மருந்துக் கூட்டணி) மற்றும் ஆப்பிரிக்க ஒன்றியம் ஆகியவற்றினுடைய பணிகளின் வரிசையில் முன்மொழியப் பட்டுள்ளது.

## ஊடுருவல் இனங்கள் – ஆப்பிரிக்கா

- ஊடுருவல் இனங்களினால் ஆப்பிரிக்க வேளாண்மையில் வருடத்திற்கு 3.66 டிரில்லியன் டாலர் அளவிற்கு இழப்புகள் ஏற்படுகிறது என சமீபத்திய ஆய்வு ஒன்று தெரிவிக்கிறது.
- இது அனைத்து ஆப்பிரிக்க நாடுகளின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 1.5 மடங்குக்குச் சமமாகும்.
- தோரீமியா அப்சொலூட்டா எனப்படும் அந்துப்பூச்சி தான் (வண்டு) பெரும்பாலான இழப்புகளை ஏற்படுத்தியுள்ளதாகக் கண்டறியப் பட்டுள்ளது.
- இந்த அந்துப்பூச்சியானது தக்காளிச் செடிகளைத் தாக்கி ஆண்டுக்கு 11.4 பில்லியன் டாலர் மதிப்பிலான இழப்பினை ஏற்படுத்துகின்றது.
- மற்றப் பூச்சிகள் சோளம், மாங்காய், மரவள்ளிக் கிழங்கு மற்றும் சிட்ரஸ் வகைப் பயிர்களைத் தாக்கி ஆண்டுக்கு 21.5 பில்லியன் டாலர் மதிப்பிலான அளவிற்கு இழப்பினை ஏற்படுத்துகின்றன.

## நியிராகோங்கோ எரிமலை

- காங்கோவின் நியிராகோங்கோ எரிமலையானது சமீபத்தில் வெடித்தது.
- நியிராகோங்கோ எரிமலையானது விருங்கா மலைத்தொடரில் அமைந்துள்ள 3,740 மீ உயரமுடைய செயல்படும் நிலையிலுள்ள ஒரு அடுக்கு எரிமலையாகும்.



- நியிராகோங்கோ எரிமலையானது கோமாவிலிருந்து 10 கி.மீ. தொலைவில் அமைந்து உள்ளது.
- இது காங்கோ மக்களாட்சி குடியரசின் விருங்கா தேசியப் பூங்காவினுள்ளே அமைந்து உள்ளது.
- ஆப்பிரிக்க வரலாற்றில் இதுவரை ஏற்பட்ட எரிமலை வெடிப்புகளில் 40 சதவீதமானது நியிராகோங்கோ மற்றும் அதனருகே உள்ள நியாமுரகிரா ஆகிய எரிமலைகளினால் ஏற்பட்டவையாகும்.

## முழுவதும் டிஜிட்டல் மயமாக்கப்பட்ட எல்லை – பிரிட்டன்

- இது புள்ளிகளை அடிப்படையாகக் கொண்ட ஒரு குடியேற்ற முறையை அறிமுகப் படுத்துதல் உள்ளிட்ட நாட்டின் குடியேற்ற முறையில் மேற்கொள்ளப்பட்ட விரிவான சீரமைப்பு நடவடிக்கையின் ஓர் அங்கமாகும்.
- நுழைவு இசைவுச் சீட்டு (அ) குடியேற்றத் தகுதியின்றி பிரிட்டனுக்கு வருபவர்கள் மின்னணுப் பயண அங்கீகாரத்தினைப் பெற்றிருக்க வேண்டும் என்பதே இந்தப் புதிய நடவடிக்கையின் விதிமுறையாகும்.
- நுழைவு இசைவுச் சீட்டு விண்ணப்ப மையங்களுக்குச் செல்ல வேண்டிய தேவையைக் குறைப்பதற்காக வேண்டி டிஜிட்டல் அடையாள சோதனை முறைகள் பயன்படுத்தப் படும்.
- எல்லையை டிஜிட்டல் மயமாக்குவது மூலம், நாட்டினுள் எவரெவர் வருகிறார்கள், எத்தனை பேர் வெளியேறுகிறார்கள் மற்றும் இங்கு தங்க அவர்களுக்கு அனுமதி வழங்கப் பட்டுள்ளதா போன்றவற்றை அதிகாரிகள் கணக்கிட இயலும்.

## சீனாவின் 17+1 ஒத்துழைப்பு மன்றத்திலிருந்து வெளியேறும் லித்துவேனியா

- சீனாவிற்கும் மத்திய மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்கும் இடையிலான சீனாவின் 17+1 ஒத்துழைப்பு மன்றத்திலிருந்து லித்துவேனியா அரசு விலகியது.
- மேலும் சீனாவுடன் மிகவும் பயன்வாய்ந்த 27+1 அணுகுமுறையையும் தகவல் தொடர்பையும் கோருமாறு தனது சக ஐரோப்பிய ஒன்றிய உறுப்பினர்கள் நாடுகளையும் லித்துவேனியா வலியுறுத்தியுள்ளது.




- இந்த மன்றமானது வார்சாவில் 2012 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.
- இதற்கு முன்பாக இந்த மன்றமானது 17+1 என அறியப்பட்டது.

- ஆனால் 2021 ஆம் ஆண்டு மே மாதத்தில் லித்துவேனியா அரசு விலகியதையடுத்து இது 16+1 என அழைக்கப்படுகிறது.

## "One Health" (ஒரே மாதிரியான சுகாதாரம்) குழு

- 2020 ஆம் ஆண்டில் பிரான்சு மற்றும் ஜெர்மனி ஆகியவற்றால் தொடங்கப்பட்ட இந்த முன்னெடுப்பின் முதல் சந்திப்பானது 2021 ஆம் ஆண்டு மே மாதம் நடைபெற்றது.




- உலக சுகாதார அமைப்பானது மற்ற மூன்று சர்வதேச அமைப்புகளுடன் இணைந்து "One Health" குழு என்ற ஓர் உலகளாவியத் திட்டத்தை உருவாக்குவதில் உதவுவதற்கான நிபுணர் குழு ஒன்றை அமைத்துள்ளது.
- விலங்குவழித் தொற்று நோய்கள் பரவுவதைத் தடுப்பதில் இந்தக் குழு உறுதுணையாகச் செயல்படும்.
- விலங்குவழித் தொற்றுநோய் (அ) பெருந்தொற்று என்பது விலங்குகளிடமிருந்து மனிதர்களுக்கோ (அ) மனிதர்களிடமிருந்து விலங்குகளுக்கோ பரவக்கூடிய ஒரு தொற்றுநோயாகும்.

## 74வது உலக சுகாதார மன்றம்

- சுகாதார மற்றும் குடும்பநலத் துறை அமைச்சரும் உலக சுகாதார அமைப்பின் நிர்வாக வாரியத் தலைவருமான டாக்டர். ஹர்ஷ் வர்தன் அவர்கள் 74வது உலக சுகாதார மன்றத்திற்குத் தலைமை தாங்கினார்.
- உலக சுகாதார அமைப்பின் தலைமை இயக்குநரான டாக்டர். டெட்ரோஸ் அவர்களும் இந்நிகழ்வில் பங்கேற்றார்.
- COVAX வசதியின் கீழ் கோவிட்-19 தடுப்பு மருந்துகளை நியாயமான மற்றும் சமமான முறையில் அணுகச் செய்வதற்கான கூடுதல் முயற்சிகளை மேற்கொள்ளுமாறு நிர்வாக வாரியம் கோரியுள்ளது.

- இந்த வாரியமானது கோவிட்-19 பெருந்தொற்றினை எதிர்கொள்தல் மற்றும் மனநல ரீதியிலான தயார்நிலை குறித்த அறிக்கையை பரிசீலனை செய்தல் ஆகியவற்றுக்காக வேண்டி 74வது உலக சுகாதார மன்றத்திடம் பரிந்துரை செய்து உள்ளது.

## மாலியின் இராணுவ நடவடிக்கை

- மாலி நாட்டின் அதிபர், பிரதமர் மற்றும் தற்காலிக அரசின் பாதுகாப்பு அமைச்சர் ஆகியோரை மாலியின் இராணுவ அதிகாரிகள் கைது செய்தனர்.
- மாலியின் அதிபர் பா நடாவ், பிரதமர் மோக்டர் ஔவானே மற்றும் தற்காலிக அரசின் பாதுகாப்பு அமைச்சரான சௌலிமேனே டௌசௌர் ஆகியோர் அந்நாட்டின் தலைநகரான பமாகோவிற்கு வெளியே கதி என்னுமிடத்தில் கைது செய்யப்பட்டனர்.
- அரசாங்கத்தின் ஒரு மறுசீரமைப்பு நடவடிக்கையின் போது இரண்டு இராணுவ அதிகாரிகள் தங்கள் பதவியை இழந்ததையடுத்து அவர்கள் கைது செய்யப்பட்டனர்.

## மாலத்தீவுகளில் இந்தியாவின் புதிய தலைமைத் தூதரகம்

- 2021 ஆம் ஆண்டில் மாலத்தீவின் அடு நகரில் இந்தியாவின் புதிய தலைமைத் தூதரகத்தை நிறுவுவதற்கு பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.
- இந்தியா மற்றும் மாலத்தீவுகள் ஆகியவை தொன்மைக் கால ரீதியில் இனம், மொழி, கலாச்சாரம், சமயம் மற்றும் வணிக ரீதியிலானப் பண்புகளை பகிர்ந்து கொள்கின்றன.
- இந்திய அரசின் அண்டை நாடுகளுக்கு முன்னுரிமைக் கொள்கை மற்றும் SAGAR (பிராந்தியத்தில் அனைவருக்குமான பாதுகாப்பு மற்றும் வளர்ச்சி) ஆகிய குறிக்கோள்களில் மாலத்தீவுகளுக்கு முக்கிய இடம் உள்ளது.

## உலக சுகாதார அமைப்பின் உயிரி மையம்

- உலக சுகாதார அமைப்பானது ஸ்விட்சர்லாந்தின் ஸ்பியீஸ் (Spiez) என்ற இடத்தில் அதன் முதல் உயிரி மைய வசதி (Bio Hub Facility) ஒன்றை அமைக்க உள்ளது.
- உயிரி மையமானது ஆய்வகங்கள் மற்றும் பங்குதாரர்களிடையே நோய்க் கிருமிகளை (pathogens) விரைவான முறையில் பகிர்ந்து கொண்டு அவற்றை ஆராய்ந்து அதற்கு எதிரான தயார் நிலையை உருவாக்குவதற்கு வழிவகுக்கும்.
- மேலும் உயிரிப் பொருட்களைப் பாதுகாப்பான முறையில் பெற்று, வரிசைப்படுத்தி, பாதுகாத்து அவற்றை மற்ற ஆய்வகங்களுக்கு வழங்குவதற்காகத் தயார் நிலைப்படுத்துதல் போன்றவற்றிலும் இது உதவும்.
- உறுப்பினர் நாடுகளானது முன்பே மேற்கொள்ளப்பட்ட நிபந்தனைகள் மற்றும் ஒழுங்குமுறைகளின் கீழ் உயிரி மையங்களுடனும், அவற்றின் மூலமாகவும் உயிரிப் பொருட்களைப் பகிர்ந்து கொள்ள இது வழிவகை செய்யும்.
- இந்த நடவடிக்கையானது SARS Cov 2 மற்றும் புதிய நோய்க்கிருமிகளின் அபாயங்களை மதிப்பிட்டு அவற்றிற்கான எதிர்ப்பு நடவடிக்கைகளைத் தொடங்கச் செய்வதற்கான ஒரு சர்வதேச பரிமாற்ற அமைப்பினை நிறுவுவதில் உதவும்.

## உலகம் முழுவதுமுள்ள புகைபிடிப்பவர்களின் எண்ணிக்கை

- உலகளாவிய நோய்ச் சுமை குறித்த கூட்டமைப்பானது (Global Burden of Disease Collaboration) உலகம் முழுவதுமுள்ள புகைபிடிப்பவர்களின் எண்ணிக்கை குறித்த ஆய்வு ஒன்றினை வெளியிட்டுள்ளது.
- 2019 ஆம் ஆண்டில் புகைபிடிப்பவர்களின் எண்ணிக்கையானது 1.1 பில்லியனாக உயர்ந்துள்ளது என இந்த ஆய்வில் கூறப்பட்டுள்ளது.
- 2019 ஆம் ஆண்டில் இந்தியாவில் 15 முதல் 24 வயதிற்குட்பட்ட 2 கோடி பேர் புகைபிடிப்பவர்களாக இருந்தனர் என இந்த அறிக்கை கூறுகிறது.
- இந்தியா உலகளவில் இரண்டாவது மிக அதிக எண்ணிக்கையில் புகைபிடிப்பவர்களைக் கொண்டுள்ள அதே சமயம் இதில் சீனா முதலிடத்தில் இருக்கின்றது.
- மேலும் இந்தியாவில் 1990 ஆம் ஆண்டிலிருந்து 15 முதல் 24 வயதிற்குட்பட்டவர்களின் புகைபிடிக்கும் ஆண்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது எனவும் இந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## பலி பீடம் – சீனா

- சீனாவிலுள்ள சன்சிங்துயி எனும் சிதைந்த தளத்தில் பலிபீடமானது (குழிகள்) சமீபத்தில் கண்டறியப்பட்டுள்ளது.
- சிக்சுவான் மாகாணத்திலுள்ள சன்சிங்துயி தளத்தில் 6 புதிய பலிபீடங்களையும் சுமார் 500 பொருட்களையும் சீனத் தொல்லியலாளர்கள் கண்டறிந்துள்ளதாக சீனாவின் தேசியக் கலாச்சாரப் பாரம்பரிய நிர்வாக அமைப்பு கூறியுள்ளது.
- இவை 3000 ஆண்டுகள் பழமையானவை ஆகும்.
- இந்த 6 பலிபீடங்களுள் நான்கில் தங்க முகமூடிகள், தங்கத்தகடு, நுண்ணிய தந்தச் சிற்பங்கள், வெண்கல மரங்கள், வெண்கல முகமூடிகள், கார்பனேற்றப்பட்ட அரிசி மற்றும் விதைகள் ஆகியவற்றைத் தொல்லியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- சன்சிங்துயி என்பது சீனாவின் மிகப்பெரிய வெண்கல கால கலாச்சாரத் தளமாக விளங்கும் தொல்லியல் தளமாகும்.

## அமெரிக்கா மற்றும் திறந்தநிலை விண்வெளி ஒப்பந்தம்

- பிடன் தலைமையிலான அமெரிக்க நிர்வாகமானது ரஷ்யாவுடனான 'ஓபன் ஸ்கைஸ்' ஒப்பந்தத்தில் மீண்டும் இணைய விரும்பவில்லை என தெரிவித்துள்ளது.
- இந்த ஒப்பந்தமானது ஒரு முக்கிய ஆயுதக் கட்டுப்பாட்டு ஒப்பந்தமாகும்.
- இது இரு நாடுகளின் இராணுவப் பகுதிகளில் கண்காணிப்பு விமானங்களை பறக்க வழிவகை செய்யும்
- ரஷ்யா அந்த ஒப்பந்தத்துடன் ஒத்துப் போக தவறியது என்பதால் அமெரிக்கா இந்த ஒப்பந்தத்தில் இணைய விரும்பவில்லை என அமெரிக்க நிர்வாகம் தெரிவித்துள்ளது.
- "New START" என்ற ஒப்பந்தம் மட்டுமே தற்போது இருநாடுகளுக்கு இடையே நிலவும் ஒரேயொரு முக்கிய ஆயுதக் கட்டுப்பாட்டு ஒப்பந்தமாகும்.
- சமீபத்தில் அமெரிக்காவினால் இது மேலும் 5 ஆண்டுகளுக்கு நீட்டிக்கப்பட்டது

# பொருளாதாரச் செய்திகள்

## இந்திய ரிசர்வ் வங்கியின் புதிய வழிமுறைகள்

- பெருநிறுவன வங்கிகளுக்கான ஆட்சிமுறையை மேம்படுத்துவதற்காக இந்திய ரிசர்வ் வங்கியானது சமீபத்தில் ஒரு சில வழி முறைகளை வகுத்தது.
- மேலாண்மை இயக்குநர் (MD) மற்றும் தலைமை நிர்வாக அலுவலர் (CEO) போன்ற பொறுப்புகளில் ஒரே நபர் 15 வருடத்திற்கு மேல் பதவி வகிக்கக் கூடாது.
- இருப்பினும், அவர்கள் 3 வருட இடைவெளிக்குப் பிறகு மீண்டும் நியமிக்கப்படலாம்.
- இப்பதவிகளில் MD (அ) CEO ஆகியோர் 12 ஆண்டுகளுக்கு மேல் இந்தப் பதவிகளை வகிக்கக் கூடாது.
- இருப்பினும், அசாதாரணமான சூழ்நிலைகளில் அவர்கள் பதவிக் காலம் 15 ஆண்டுகள் வரை நீட்டிக்கப் படலாம்.
- இந்த நாட்டில் கிளையினை அமைத்துள்ள வெளிநாட்டு வங்கிகளுக்கு இந்த வழிமுறைகள் பொருந்தாது.
- தலைவர் (அ) நிர்வாகம் சாரா இயக்குநர் பதவிக்கு அதிகபட்ச வயது வரம்பு 75 வயதாக நிர்ணயிக்கப் பட்டுள்ளது.
- நிர்வாகம் சாரா இயக்குநர் பதவிக்கு (Non-executive Directors) ரூ.20 லட்சத்திற்கும் மேல் ஊதியம் வழங்கப்படக் கூடாது.

## நிதித்துறையைப் பசுமை மயமாக்குவதற்கான பிணையம்

- சமீபத்தில் நிதித்துறையைப் பசுமை மயமாக்குவதற்கான பிணையத்தில் (Network Greening the Financial System – NGFS) இந்திய ரிசர்வ் வங்கி இணைந்துள்ளது.
- இதில் இணைவதன் மூலம், இந்திய ரிசர்வ் வங்கியானது உலகளாவிய காலநிலை ஆபத்து மேலாண்மையில் பங்களிப்பதற்கும் அதிலிருந்து சில கருத்துகளை கற்பதற்கும் இயலும்.
- இறுதியாக, நீடித்தப் பொருளாதாரம் நோக்கிய மாற்றத்தை அடைவதற்கு RBI உலக நாடுகளுடன் இணைந்து செயல்படும்.
- நிதித்துறையைப் பசுமைமயமாக்குவதற்கான பிணையத்துடன் 83 மத்திய வங்கிகள் ஈடுபட்டுள்ளன.
- இவற்றுள் 75 நாடுகள் உறுப்பினராகவும் 13 நாடுகள் பார்வையாளர் நாடுகளாகவும் (Observer) உள்ளன.
- பசுமை நிதியத்தை அதிகரிப்பதும் விரைவாக ஏற்படுத்தச் செய்வதுமே இதன் முக்கிய நோக்கம் ஆகும்.
- நிதித்துறையில் காலநிலை கொள்கைகளை ஏற்படுத்தவும் காலநிலை ஆபத்துக் கால நெகிழ்திறனை மேம்படுத்தவும் உறுப்பினர்களுக்கு உதவுவதே இதன் நோக்கம் ஆகும்.

## உலகின் பழமையான நீர் – கனடா

- பார்பரா சேர்வுட் லோல்லர் (Barbara Sherwood Lollar) எனும் புவிசார் வேதியியலாளர் உலகின் ஆழமான சில சுரங்கங்களில் சுற்றித் திரிந்து பல மில்லியன் ஆண்டுகள் காலத்திய பழமையான நீரினைக் கண்டறிந்து அதனைப் பிரித்தெடுப்பதிலேயே தனது பெரும்பாலான வாழ்வைக் கழித்தார்.
- நேச்சர் கம்யூனிகேசன் எனும் இதழில் வெளியிடப்பட்ட ஆய்வில் 2009 ஆம் ஆண்டில் கனடாவின் ஒரு சுரங்கத்திலிருந்து அவர் பிரித்தெடுத்த நீர் 1.6 பில்லியன் ஆண்டுகள் பழமையானது எனக் கூறப்பட்டுள்ளது.
- இது நமது கோளில் கண்டெடுக்கப்பட்ட மிகப் பழமையான நீராகும்.

## T. ராபி சங்கர் – 4வது துணை ஆளுநர்

- இந்திய அரசானது சமீபத்தில் T. ராபி சங்கர் அவர்களை ரிசர்வ் வங்கியின் 4வது துணை ஆளுநராக நியமித்தது.
- இந்திய ரிசர்வ் வங்கியானது மத்திய இயக்குநரக வாரியத்தால் (Central Board of Directors) நிர்வகிக்கப் படுகிறது.
- இந்த மத்திய வாரியமானது ஆளுநர், நான்கு துணை ஆளுநர்கள், இரண்டு நிதி அமைச்சகப் பிரதிநிதிகள் மற்றும் உள்ளக வாரியங்களின் நான்கு இயக்குநர்கள் ஆகியோரை உள்ளடக்கியதாகும்.

## ரூ.1.41 லட்சம் கோடி GST வருவாய்

- இந்தியாவில் சரக்கு மற்றும் சேவை வரியின் மொத்த வருவாயானது 2021 ஆம் ஆண்டின் ஏப்ரல் மாதத்தில் ரூ.1.41 லட்சம் கோடியை எட்டி உள்ளது.
- தற்போதுள்ள கோவிட் – 19 பெருந்தொற்றின் இரண்டாவது அலையினால் பொருளாதார நடவடிக்கைகள் கடந்த ஆண்டைப் போல மோசமாகப் பாதிக்கப் பட வில்லை என்பதை இது அறிவுறுத்துகிறது.
- 2021 ஆம் ஆண்டின் மார்ச் மாதத்தில் வசூலான அதிகபட்ச வசூலான ரூ.1.24 லட்சம் கோடியை விட ஏப்ரல் மாத GST வசூலானது 14% அதிகரித்துள்ளது.
- அக்டோபர் மாதத்திலிருந்து தொடர்ச்சியாக ஏழாவது மாதமாக GST வருவாயானது ஒரு லட்சம் கோடி ரூபாயைக் கடந்து வருவதையும் இது குறிக்கிறது.

## உலகளாவிய அந்நிய நேரடி முதலீடு

- உலகளாவிய அந்நிய நேரடி முதலீடானது (Foreign Direct Investment - FDI) 2020 ஆம் ஆண்டில் 38% வரை குறைந்துள்ளது.
- இது 15 ஆண்டுகளில் இல்லாத அளவிலான சரிவாகும் (2005 ஆம் ஆண்டு முதல் ஏற்பட்ட சரிவிலேயே மிகவும் சரிவானது).
- பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டிற்கான அமைப்பினால் (OECD – Organization for Economic Cooperationa and Development) வெளியிடப்பட்ட புதிய தரவுத் தொகுப்பின் அடிப்படையில் இது கணக்கிடப்பட்டுள்ளது.
- 2020 ஆம் ஆண்டில் 64 பில்லியன் அமெரிக்க டாலர் முதலீட்டுடன் அந்நிய நேரடி முதலீட்டை அதிகளவில் பெறும் மூன்றாவது பெரிய நாடாக இந்தியா மாறியுள்ளது.
- அமெரிக்காவை (177 பில்லியன் அமெரிக்க டாலர்) விஞ்சிய சீன நாடானது (212 பில்லியன் அமெரிக்க டாலர்) அந்நிய நேரடி முதலீட்டை அதிகளவில் பெறும் பெரிய நாடாக உருவெடுத்துள்ளது.
- 4 ஆம் இடத்தில் லக்சம்பெர்க் உள்ளது.

## சிறப்பு நீண்டகால ரெப்போ நடவடிக்கை

- சிறு நிதியியல் வங்கிகளுக்கான 10000 கோடி ரூபாய் மதிப்பிலான தனது முதல் சிறப்பு (Special Long Term Repo Operation – SLTRO) நீண்டகால ரெப்போ நடவடிக்கையை மேற்கொள்ள உள்ளதாக இந்திய ரிசர்வ் (RBI) வங்கி சமீபத்தில் அறிவித்தது.
- 2021 ஆம் ஆண்டு மே முதல் ஒவ்வொரு மாதமும் SLTRO (Special Long Term Repo Operation) நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என RBI அறிவித்துள்ளது.
- SLTRO நடவடிக்கையானது 3 வருடங்களுக்குச் செல்லுபடியாகும்.
- அனைத்து சிறு நிதியியல் வங்கிகளும் SLTRO நடவடிக்கையில் பங்கேற்கலாம்.
- இருப்பினும், இந்திய ரிசர்வ் வங்கியிடமிருந்துப் பெறப்படும் தொகையானது முறை சாரா துறைகள் மற்றும் சிறு வணிக அலகுகள் போன்ற குறிப்பிட்ட பிரிவுகளுக்கு மட்டுமே கடனாக வழங்கப்படும் என்பதை அந்த வங்கிகள் உறுதி செய்ய வேண்டும்.
- இந்திய ரிசர்வ் வங்கியானது நாட்டின் சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளுள் ஒன்றாக இதனைத் தொடங்கியுள்ளது.

## கிரீன் உர்ஜா விருது

- இந்தியாவின் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மேம்பாட்டு நிறுவனத்திற்கு (Indian Renewable Energy Development Agency Limited – IREDA) இந்திய வர்த்தக சபையானது (Indian Chamber of Commerce – ICC) "கிரீன் உர்ஜா" என்ற விருதினை வழங்கியுள்ளது.
- புதுப்பிக்கத்தக்க ஆற்றல்களுக்கான நிதியியல் நிறுவனங்கள் மத்தியில் இந்த ஆண்டினுடைய முன்னணிப் பொதுத்துறை நிறுவனமாக விளங்குவதற்காக இந்த நிறுவனத்திற்கு இந்த விருதானது வழங்கப் பட்டுள்ளது.
- பசுமை ஆற்றலுக்கு நிதி வழங்குதலில் தான் ஆற்றும் முக்கிய மற்றும் மேன்மையான பங்கிற்காக IREDA (Indian Renewable Energy Development Agency Ltd) நிறுவனமானது இந்த

விருதினைப் பெறுகிறது.

- ❖ பிரதமரின் மதிப்புமிகு ஆத்ம நிர்பர் பாரத் திட்டத்தின் நோக்கத்தினுடைய பக்கபலத்துடன் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் துறையின் மேம்பாட்டிற்கான மகத்தான பங்களிப்பிற்கு இந்த விருதானது அங்கீகாரம் அளிக்கிறது.

## "I Choose My Number" வசதி

- ❖ ஜனா சிறு நிதியியல் வங்கியானது இந்தியா முழுவதுமுள்ள தனது அனைத்து நுகர்வோர்களுக்காக "I Choose My Number" (நான் எனது எண்ணினைத் தேர்வு செய்வேன்) எனும் வசதியைத் தொடங்க உள்ளதாக அறிவித்துள்ளது.
- ❖ நுகர்வோர்கள் தங்களுக்கு விருப்பமான எண்களை அவர்களின் வங்கிக் கணக்கு, சேமிப்பு (அ) நடப்புக் கணக்கு எண்ணுடைய கடைசி 10 இலக்கங்களாகத் தேர்வு செய்வதற்கு இது அனுமதி வழங்கும்.
- ❖ நுகர்வோரால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு எண்ணினை ஒதுக்குவதானது அந்த எண்ணினுடைய இருப்பினைப் பொறுத்ததாகும்.

***ஜனா சிறு நிதியியல் வங்கி***

- ❖ இது 2006 ஆம் ஆண்டு ஜூலை 24 ஆம் தேதி நிறுவப்பட்டது.
- ❖ இதன் தலைமையகம் பெங்களூருவில் உள்ளது.
- ❖ ஜனா சிறு நிதியியல் வங்கியின் முழக்கமானது "பைசா கி கதர்" (Paise Ki Kadar) என்பதாகும்.

## 2022 ஆம் ஆண்டில் இந்தியப் பொருளாதாரத்தின் வளர்ச்சி

- ❖ ஐக்கிய நாடுகள் அமைப்பினால் "உலகப் பொருளாதார நிலைமை மற்றும் வாய்ப்புகள்" (World Economic Situation and Prospects – WESP) எனும் அறிக்கையால் மேற்கொள்ளப் படும் ஒரு இடைக்கால அறிக்கையில் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியானது 2022 ஆம் ஆண்டில் 10.1% வளர்ச்சியடையும் என கணிக்கப் பட்டு உள்ளது.
- ❖ இது 2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதன்முறையாக வெளியிடப்பட்டது.
- ❖ 2022 ஆம் ஆண்டில் 10.1% எனும் வளர்ச்சி வீதத்துடன் உலகின் மிக வேகமாக வளர்ந்து வரும் மாபெரும் பொருளாதாரமாக இந்தியா விளங்கும் என இந்த அறிக்கையில் கூறப் பட்டுள்ளது.

- 2020 ஆம் ஆண்டில் மதிப்பிடப்பட்ட 6.8% குறைவுடன் 2021 ஆம் ஆண்டில் இந்தியாவின் வளர்ச்சியானது -7.5% என்ற அளவைப் பதிக்கும் என இந்த இடைக்கால அறிக்கையில் கூறப் பட்டுள்ளது.

## இடம்பெயர்வு மற்றும் மேம்பாடு குறித்த அறிக்கை

- உலக வங்கியானது சமீபத்தில் தனது இடம்பெயர்வு மற்றும் மேம்பாடு குறித்த அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளுக்குப் பணம் அனுப்புவது 2020 ஆம் ஆண்டில் 1.9% குறைந்துள்ளதாக இந்த அறிக்கை கூறுகிறது.
- இது 2020 ஆம் ஆண்டில் 540 பில்லியன் அமெரிக்க டாலர்களாகவும் 2019 ஆம் ஆண்டில் 548 பில்லியன் அமெரிக்க டாலர்களாகவும் இருந்தது.
- பணம் செலுத்தல் (வரவு) (Remittance) என்பது ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்கு அனுப்பப்படும் மொத்தத் தொகையின் அளவாகும்.
- இது வணிக வழங்கீடுகளாகவும் இருக்கலாம் (அ) குடும்ப உறுப்பினர், நண்பர்களுக்கு அனுப்பப்படும் பணமாகவும் இருக்கலாம்.
- வெளிநாட்டுப் பணத்திற்கு எதிராக ஒரு நாட்டின் பண மதிப்பை நிலையாக வைத்திருக்க இவை உதவுகின்றன.
- அந்நிய நேரடி முதலீட்டையடுத்து வளரும் நாடுகளுக்கான இரண்டாவது பெரிய மூலமாக இருப்பது பணம் செலுத்துதலே (வரவே) (Remittance) என்று உலக வங்கி கூறுகிறது.
- பண வரவு அதிகரிக்கும் போது அதனைப் பெறும் நாட்டினுடைய பண மதிப்பு உயர்வதோடு வெளிநாட்டு பணத்தின் மதிப்பும் குறைகிறது.


*குறிப்பு*

- 2008 ஆம் ஆண்டு முதல் இந்தியாவானது வெளிநாட்டிலிருந்துப் பணத்தைப் பெறுவதில் மிகப் பெரிய நாடாக உள்ளது
- 2020 ஆம் ஆண்டில் பணத்தை அனுப்புவதில் மிகப் பெரிய நாடாக அமெரிக்கா உள்ளது (68 பில்லியன் டாலர்)
- 2019 ஆம் ஆண்டில் இந்திய நாடானது 83.3 பில்லியன் டாலர் பணவரவினைப் பெற்று உள்ளது.
- இது 2020 ஆம் ஆண்டில் 0.2% என்ற அளவிற்குக் குறைந்துள்ளது.
- ஐக்கிய அரபு அமீரகத்திலிருந்து இந்தியாவிற்கு அனுப்பப்பட்ட பண வரவானது 17% என்ற அளவிற்கு குறைந்துள்ளது.

## 2020 ஆம் ஆண்டில் அதிக அளவில் பணவரவினைப் பெற்ற நாடு - இந்தியா

- 2020 ஆம் ஆண்டில் இந்திய நாடானது அதிகளவு பணவரவினைப் பெற்றுள்ளதாக "இடம்பெயர்வு மற்றும் மேம்பாட்டு அறிக்கை" கூறுகிறது.
- இந்த அறிக்கையானது உலக வங்கியினால் வெளியிடப்பட்டது.

- 2008 ஆம் ஆண்டிலிருந்து இந்திய நாடானது அதிகப் பண வரவினைப் பெறும் நாடாக உள்ளது.
- தற்போதைய அமெரிக்க டாலர் மதிப்பில் 2020 ஆம் ஆண்டில் அதிக பண வரவு பெற்ற முதல் ஐந்து நாடுகளாவன
    - இந்தியா
    - சீனா
    - மெக்சிகோ
    - பிலிப்பைன்ஸ் மற்றும்
    - எகிப்து
- 2020 ஆம் ஆண்டில் அதிகளவில் பணம் செலுத்தும் நாடு அமெரிக்கா (68 பில்லியன் டாலர்கள்) ஆகும்.
- 2020 ஆம் ஆண்டில் இந்தியாவிலிருந்து செலுத்தப்பட்ட பணத்தின் அளவு 7 பில்லியன் டாலர்களாகும்.
- 2019 ஆம் ஆண்டில் இது 7.5 பில்லியன் டாலர்களாக இருந்தது.




## டிஜிகோல்டு

- ஏர்டெல் பணவழங்கீட்டு வங்கியானது “டிஜிகோல்டு” எனும் திட்டத்தைத் தொடங்கி உள்ளது.
- இது வாடிக்கையாளர்கள் தங்கத்தில் முதலீடு செய்ய வழிவகை செய்யும் ஒரு டிஜிட்டல் தளமாகும்.
- இந்தத் திட்டமானது டிஜிட்டல் கோல்டு வழங்கும் ‘சேஃப் கோல்டு’ என்ற ஒரு நிறுவனத்துடன் இணைந்து தொடங்கப்பட்டுள்ளது.

- டிஜிகோல்டின் உதவியுடன் ஏர்டெல் பணவழங்கீட்டு வங்கியின் சேமிப்புக் கணக்கினை வைத்திருக்கும் வாடிக்கையாளர்கள் ‘ஏர்டெல் தேங்க்ஸ்’ என்ற ஒரு செயலியைப் பயன்படுத்தி 24 கேரட் தங்கத்தில் முதலீடு செய்ய இயலும்.
- மேலும் அதன் வாடிக்கையாளர்கள் ஏர்டெல் பண வழங்கீட்டு வங்கியில் சேமிப்புக் கணக்கினை வைத்துள்ள தங்களது குடும்பத்தினருக்கும் மற்றும் நண்பர்களுக்கும் டிஜிகோல்டினைப் பரிசாக அளிக்க இயலும்.




## மொத்த விற்பனை விலையில் பணவீக்கமானது 10.49% ஆக உயர்வு

- தொழில்துறை மற்றும் உள்நாட்டு வர்த்தக ஊக்குவிப்புத் துறையானது 2021 ஆம் ஆண்டின் ஏப்ரல் மாதத்திற்கான மொத்த விற்பனை விலைக் குறியீட்டினை சமீபத்தில் வெளியிட்டது.
- 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திற்கான வருடாந்திர பணவீக்க வீதமானது 10.49% ஆகும்.
- 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திற்கான மொத்த விற்பனை விலை 128.1 ஆக உள்ளது.
- மொத்த விற்பனை விலையைக் கணக்கிடுவதற்கான அடித்தள வருடமாக 2011-12 நிர்ணயிக்கப் பட்டுள்ளது.
- மொத்த விற்பனை விலையின் பணவீக்கமானது ஏப்ரல் மாதத்தில் இரட்டை இலக்கத்திற்கு உயர்ந்துள்ளது என்பது கடந்த 11 ஆண்டுகளில் இல்லாத அளவிலான ஒரு அதிவேக உயர்வாகும்.
- பணவீக்கமானது அதிகமாக இருப்பதற்கான காரணம்,
    - கச்சா பெட்ரோலியத்தின் விலை உயர்வு மற்றும்
    - தயாரிக்கப்பட்ட (பதப்படுத்தப்பட்ட) உணவுகளின் விலை உயர்வு ஆகியன ஆகும்.

## கௌதம் அதானி – ஆசியாவின் இரண்டாவது பெரும் பணக்காரர்

- அதானி குழுமத்தின் நிறுவனரும் அதன் தலைவருமான கௌதம் அதானி அவர்கள் சீனாவின் சோங் சான்சான் என்பவரைப் பின்னுக்குத் தள்ளி ஆசியாவின் இரண்டாவது பெரும் பணக்காரர் ஆகியுள்ளார்.
- ஆசியாவின் இரண்டாவது பெரும் பணக்காரர் எனும் தகுதியை அடைவதற்கு காரணமான இவரது நிகர சொத்து மதிப்பானது 67.6 மில்லியன் டாலர்களாகும்.


- இவர் உலகின் 14வது பணக்கார வர்த்தகர் ஆவார்.
- கௌதம் அதானி தற்போது ஆசியாவின் பெரும் பணக்காரரான (நிகர சொத்து மதிப்பு 76 மில்லியன் டாலர்கள்) ரிலையன்ஸ் இன்டஸ்ட்ரீஸ் நிறுவனத்தின் தலைவர் முகேஷ் அம்பானியை விட ஒரு படி தான் கீழே உள்ளார்.
- புளூம்பெர்க் பில்லியனெர்ஸ் குறியீட்டில் தற்போது கௌதம் அதானியை விட ஒரு படி மேலாக முகேஷ் அம்பானி அவர்கள் 13வது இடத்தில் உள்ளார்.

## பொதுமக்களிடம் புழக்கத்திலுள்ள பணத்தின் அளவு அதிகரிப்பு

- பொது மக்களிடையே புழக்கத்திலுள்ள பணத்தின் அளவானது 35,464 கோடி அளவு உயர்ந்து எந்தக் காலத்திலும் இல்லாத அளவு உயர்வான 28.39 லட்சம் கோடி ரூபாயை எட்டியுள்ளதாக இந்திய ரிசர்வ் வங்கி கூறியுள்ளது.
- பெருந்தொற்று ஏற்பட்டதிலிருந்து கடந்த 14 மாதங்களில் பொது மக்களிடையே பணப்புழக்கம் அதிகரித்துள்ளது.
- 2020 ஆம் ஆண்டு மார்ச் மற்றும் ஜுன் ஆகிய மாதங்களுக்கு இடையே ஊரடங்கு பிறப்பிக்கப் பட்டதன் காரணமாக பணப்பரிவர்த்தனைகளில் தேவை அதிகரித்ததால் மக்கள் வங்கிகளிலிருந்து அதிகளவில் பணத்தைத் திரும்ப எடுத்துள்ளனர்.
- தொற்றுகளின் எண்ணிக்கை குறைந்ததையடுத்து 2020 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் இதன் வேகம் குறைந்தது.
- இருப்பினும் தொற்றுகளில் எண்ணிக்கை மீண்டும் அதிகரிக்கத் தொடங்கியதால் 2021 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் இதன் வேகம் மீண்டும் அதிகரித்தது.
- 2016 ஆம் ஆண்டு நவம்பர் 08 ஆம் தேதியன்று பணமதிப்பிழப்பு அறிவிக்கப் பட்டதில் இருந்து இன்று வரை மக்களிடையேயான பணப்புழக்கமானது 58% வரை உயர்ந்து உள்ளது.

## இந்தியாவில் 2021 ஆம் ஆண்டு அந்நிய நேரடி முதலீடு

- இந்திய நாடானது 2020-21 ஆம் நிதியாண்டில் இதுவரை இல்லாத அளவில் 81.72 பில்லியன் டாலர் அளவிலான மொத்த அந்நிய நேரடி முதலீட்டினைப் பெற்றுள்ளது.
- இது கடந்த நிதி ஆண்டுடன் (2019-20) ஒப்பிடுகையில் (74.39 பில்லியன் டாலர்) 10% அதிகமாகும்.
- 2020-21 ஆம் நிதியாண்டில் மொத்த அந்நிய நேரடி முதலீட்டு விகிதத்தில் 37% பங்குடன் குஜராத் மாநிலம் முதலிடம் வகிக்கிறது.
- இதனையடுத்து மகாராஷ்டிரா (27%) மற்றும் கர்நாடகா (13%) ஆகியவை உள்ளன.
- குஜராத் மாநிலத்தின் பெரும்பாலான முதலீட்டுப் பங்குகள் பின்வரும் துறைகளிலேயே பதிவாகியுள்ளன.
  - கணினி மென்பொருள் & வன்பொருள் (94%)
  - கட்டுமான (உள்கட்டமைப்பு) பணிகள் (2%)




**'ரிக்கோசெட் தாக்கம்'**

- ❖ கோவிட்-19 பெருந்தொற்றினால் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள முயற்சிக்கும் வளர்ந்து வரும் நாடுகளின் பொருளாதாரமானது வளர்ந்து விட்ட நாடுகளின் பொருளாதாரத்தையும் பாதிப்புக்குள்ளாக்கும் என சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.
- ❖ மேலும் இந்த நெருக்கடியானது வளர்ந்த மற்றும் மேம்பட்ட நாடுகளின் பொருளாதாரத்தின் மீது ரிக்கோசெட் என்ற தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது எனவும் கூறப்பட்டுள்ளது.
- ❖ தடுப்பு மருந்துகளை நல்ல முறையிலும் சம அளவிலும் பெறுதல் மற்றும் சம அளவிலான மீள்வுத் தன்மை போன்றவற்றை உறுதி செய்தல் போன்றவற்றுக்கான அனைத்து ஏற்பாடுகளையும் மேற்கொள்ளுமாறு வளர்ந்து விட்ட நாடுகளுக்கு சர்வதேச நாணய நிதியம் பரிந்துரைத்துள்ளது.
- ❖ ஏழை நாடுகளின் பொருளாதாரமானது வளாச்சியடையவில்லை என்றாலும் வட்டி விகிதங்கள் அதிகரிப்பதற்கான அபாயத்தை அவை எதிர்கொண்டுள்ளன.
- ❖ சர்வதேச நாணய நிதியமானது வாசிங்டன் டி.சி.யில் அமைந்துள்ள ஒரு சர்வதேச நிதி நிறுவனமாகும்.
- ❖ இதில் 190 நாடுகள் உறுப்பினராக உள்ளன.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்


## சுரோங்

- செவ்வாய்க் கிரகத்தில் சுற்றித் திரிய இருக்கும் சீனாவின் முதல் விண்கலத்திற்கு (rover) அந்நாட்டின் பாரம்பரிய நெருப்பிற்கான தெய்வத்தின் பெயரான "சுரோங்" என்ற பெயர் சூட்டப் பட்டுள்ளது.
- "சுரோங்" ஆனது தற்போது சீனாவின் செவ்வாய்க் கிரக ஆய்வு விண்கலமான தியான்வென் – 1 என்ற விண்கலத்தில் பொருத்தப்பட்டுள்ளது.
- செவ்வாய்க் கிரகத்தின் மேற்பரப்பு மற்றும் நிலவியல் பற்றி ஆய்வு செய்து அவற்றை வரைபடமிடுதலையும், அக்கோளில் நீர்ப் பனிக்கட்டிகள் உள்ளனவா என ஆராய்வதையும், அதன் காலநிலை மற்றும் மேற்பரப்பு சூழல்களை ஆய்வு செய்வதையுமே நோக்கமாகக் கொண்டு சீனாவின் தியான்வென் – 1 ஆய்வுக்கலம் அனுப்பப் படுகிறது.

## அதிவேகக் கணினி – ஐக்கிய ராஜ்ஜியம்

- ஐக்கிய ராஜ்ஜியத்தில் வானிலையை கண்காணித்தலுக்கான அதிவேகக் கணினியை (Super Computers) அந்நாட்டின் வானிலை அலுவலகம் மற்றும் மைக்ரோசாஃப்ட் ஆகிய நிறுவனங்கள் இணைந்து அமைக்க உள்ளன.
- இந்த அதிவேகக் கணினி உலகிலுள்ள 25 முன்னணி அதிவேகக் கணினிகளுள் ஒன்றாக இடம் பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- இந்த அதிவேகக் கணினி முழுமையாக புதுப்பிக்கக்கூடிய ஆற்றலால் இயக்கப்படும்.

## NEO – 01



- சீனாவின் விண்வெளிக்கான புத்தாக்க நிறுவனமானது சமீபத்தில் NEO-01 என்ற இயந்திர மனிதனை விண்ணில் ஏவியது.
- இது புவியின் தாழ்மட்ட சுற்றுப்பாதையில் நிலை நிறுத்தப்பட்ட ஒரு ரோபோடிக் (இயந்திர) இயங்குதளமாகும்.
- விண்வெளி சிதைவுப் பொருட்களை நீக்கும் தொழில் நுட்பம் பற்றிய ஆய்வினை இந்த ரோபோ மேற்கொள்ளும்.

- NEO-01 ரோபோ ஆனது லாங்க் மார்ச் 06 என்ற ராக்கெட்டின் மூலம் விண்ணில் செலுத்தப் பட்டது.

## டியான்காங் விண்வெளி நிலையம்

- சீனாவானது தியான்ஹே முதன்மைப் பெட்டக வானறை (Tianhe Core Module Cabin) எனப்படும் தனது சொந்த விண்வெளி நிலையத்தின் முதல் பகுதியினை (பாகத்தினை) முன்பே நிர்ணயிக்கப்பட்ட சுற்றுப்பாதையில் வெற்றிகரமாக செலுத்தி உள்ளது.
- இது வென்சாங்க் என்ற விண்வெளித் தளத்திலிருந்து லாங்க் மார்ச் – 5BY2 என்ற ஏவுகலன் (ராக்கெட்) மூலம் விண்ணில் செலுத்தப்பட்டது.
- இந்த தியான்ஹே முதன்மைப் பெட்டக வானறை விண்வெளி வீரர்களுக்குத் தேவையான வாழ்வாதாரக் கருவிகள் மற்றும் வாழிடத்தைக் கொண்டிருக்கும்.
- தியான்காங் விண்வெளி நிலையம் என்றால் "சொர்க்க லோக அரண்மனை" (Heavenly Palace) என்று பொருளாகும்.

## பைத்தான் 5

- வானிலிருந்தபடியே வானிலுள்ள இலக்குகளைத் தாக்கி அழிக்கும் பைத்தான் – 5 எனப்படும் ஒரு ஏவுகணையானது இலகுரகப் போர் விமானமான தேஜாசுடன் வெற்றிகரமாக இணைக்கப்பட்டதாக பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு அறிவித்துள்ளது.
- இந்த ஏவுகணைகள் கோவாவில் சோதனை செய்யப்பட்டு, அதில் இந்த ஏவுகணைகள் 100% இலக்குகளைத் தாக்கி அழித்தன.
- இது இஸ்ரேலிய ஆயுதத் தயாரிப்பாளரான ரஃபேல் மேம்படுத்தப் பட்ட பாதுகாப்பு அமைப்பு என்ற நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட வானிலிருந்த படியே வானிலுள்ள இலக்குகளை தாக்கி அழிக்கும் ஒரு ஏவுகணையாகும் (Air to Air Missile).

## ALISC

- இந்தியாவின் முதல் பிரத்தியேக சூரிய விண்வெளித் திட்டத்தின் கீழ் ஒரு சமுதாய சேவை மையம் அமைக்கப்பட்டுள்ளது.
- இந்த மையம் ALISC என்றழைக்கப்படுகிறது.
- ALISC என்றால் ஆதித்யா L-1 உதவி வழங்கும் மையமாகும் (Aditya L1 Support Cell).
- இந்த மையம் உத்தரகாண்ட் மாநிலத்தின் ஹால்த்வானி என்ற இடத்தில் ARIES அமைப்பில் அமைக்கப்பட உள்ளது.
- ALISC மையம் ஆனது இஸ்ரோ மற்றும் ARIES ஆகியவற்றின் ஒரு கூட்டு முயற்சியாகும்.
- ALISC அமைப்பினால் வழங்கப்பட உள்ள தகவல்கள் அயனிச் செறிவு மண்டலத்தில் உள்ள (Heliosphere) அம்சங்களை சூரியனின் மேற்பரப்புடன் தொடர்புபடுத்தி ஆய்வு செய்ய அறிவியலாளர்களுக்கு உதவும்.
- ஆதித்யா L1 என்பது சூரியனையும் மற்றும் புவிக்கும் சூரியனுக்கும் இடைப்பட்டப் பகுதிகளையும் ஆய்வு செய்யும் ஒரு இந்திய விண்வெளித் திட்டமாகும்.

## வெடித்துச் சிதறும் நிலையிலுள்ள முதல் அண்டம்

- அமெரிக்காவின் மின்னசோட்டா வானியல் இயற்பியலுக்கான நிறுவனத்தின் வானியல் இயற்பியல் வல்லுநர்கள் "ஜெமினி தொலை நோக்கியை" பயன்படுத்தி வெடித்துச் சிதறும் நிலையிலுள்ள முதல் அண்டத்தினைக் கண்டுபிடித்துள்ளனர்.
- இந்த அண்டத்திற்கு Pox 186 எனப் பெயரிடப்பட்டுள்ளது.
- வெடித்துச் சிதறும் நிலை என்பது ஹைட்ரஜன் திரள்கள் நீக்கப்படும் ஒரு நிலை ஆகும்.
- இந்த நிகழ்வு ஒளியினை வெளியேறச் செய்கிறது.
- இந்த வெடித்துச் சிதறும் நிலையானது அழியும் நிலையிலுள்ள மீவுளிர் விண்முகில்களால் (Super novas) ஏற்படுத்தப் பட்டிருக்கலாம்.

## யுரேனியம் – 214


- சமீபத்தில் அறிவியலாளர்கள் யுரேனியத்தின் இலகுரக வடிவத்தினை உருவாக்கி உள்ளனர்.
- இது யுரேனியம் – 214 என அழைக்கப்படுகிறது.
- இது சீனாவின் லான்சோவிலுள்ள (Lanzhou) கனரக அயனி ஆராய்ச்சி மையத்தில் உருவாக்கப் பட்டது.
- கண்டுபிடிக்கப்பட்ட இந்தப் புதிய ஐசோடோப்பானது அதன் சிதைவின் போது தனித்துவம் வாய்ந்த செயல்முறைகளைக் கொண்டுள்ளதாக கண்டுபிடிக்கப்பட்டு உள்ளது.
- இந்த புதியக் கண்டுபிடிப்பானது ஆல்பா சிதைவு எனப்படும் ஒரு கதிரியக்கச் செயல்முறையைப் புரிந்து கொள்ள இந்த அறிவியலாளர்களுக்கு உதவும்.

## மில்லி விநாடி பல்சர்கள்

- வானியலாளர்கள் குழு ஒன்று 8 மில்லி விநாடி பல்சர்களை (செயல்பாடற்ற நட்சத்திரத்தின் ஒரு வகை) கண்டறிந்துள்ளது.
- இவை "குளோபுலர் கிளஸ்டர்ஸ்" எனப்படும் அடர்த்தியான ஒரு நட்சத்திரக் குழுவினுள் அமைந்துள்ளன.
- தென் ஆப்பிரிக்காவில் அமைந்துள்ள MeerKAT என்ற ஒரு தொலைநோக்கியைப் பயன்படுத்தி இந்த பல்சர்கள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன.
- மில்லி விநாடி பல்சர்களானது இதுவரை மனிதகுலம் அறிந்ததிலேயே மிக நுண்ணிய நட்சத்திரங்களாகும்.
- மில்லி விநாடி பல்சர்கள் நியூட்ரான்களால் ஆனவை.
- இவற்றின் நிறையானது புவியினுடைய நிறையை விட நூறாயிரம் மடங்காகும்.
- இவை ரேடியோ அலைகளை வெளியிடுகின்றன.

## வெள்ளிக் கோளிலிருந்து வெளிப்படும் ரேடியோ சமிக்ஞைகள்

- நாசாவின் விண்கலமான பார்க்கர் சூரிய ஆய்வுக் கலமானது வெள்ளிக் கோளிலிருந்து இயற்கையாகவே ரேடியோ சமிக்ஞைகள் வெளிப்படுவதை கண்டறிந்துள்ளது.
- இந்த ஆய்வுக்கலமானது வெள்ளிக் கோளினுடைய வளிமண்டலத்தின் மேல்பகுதியில் பறந்து கொண்டிருந்த போது இந்த சமிக்ஞைகளைக் கண்டறிந்தது.
- பார்க்கர் சூரிய ஆய்வுக் கலமானது வெள்ளிக் கோளினுடைய வளிமண்டலத்தை அளவிட்டுள்ளது.
- பார்க்கர் சூரிய ஆய்வுக் கலத்தின் கண்டுபிடிப்புகளின்படி, புவியைப் போலவே வெள்ளிக் கோளும் அயனி மண்டலம் எனப்படும் தனது வளிமண்டலத்தின் மேற்பகுதியில் மின்னூட்டப்பட்ட வாயுக்களைக் கொண்டுள்ளது.




- இந்த அடுக்கிலுள்ள மின்னூட்டப்பட்ட துகள்களின் திரள்களிலிருந்து ரேடியோ சமிக்ஞைகள் ஆய்வுக் கலத்தினால் பெறப்பட்டன.
- மேலும், வெள்ளியினுடைய வளிமண்டலத்தின் மேல்பகுதியானது, ஒரு சூரிய சுழற்சிக் காலத்தில் மாற்றங்களுக்கு உள்ளாகிறது எனவும் இந்த விண்வெளி ஆய்வுக்கலம் உறுதி செய்துள்ளது.

*சூரிய சுழற்சி*

- சூரியன் என்பது ஒரு பெரிய மின்னூட்டப்பட்ட சூடான வாயுப் பந்தாகும்.
- இந்த வாயுக்கள் நகர்வதால் ஒரு சக்தி வாய்ந்த காந்தப்புலமானது உருவாகிறது.
- சூரியனின் இந்த காந்தப்புலமானது ஒவ்வொரு 11 ஆண்டுகளுக்கு ஒரு முறையும் மாற்றத்திற்கு உள்ளாகிறது.
- இதுவே சூரியச் சுழற்சி எனப்படும்.

## மேஃபிளவர் 400

- மேஃபிளவர் 400 (Mayflower 400) என்பது உலகின் முதலாவது செயற்கை நுண்ணறிவுக் கப்பலாகும்.
- இந்த கப்பலானது கடல் மாசுபாட்டினை ஆய்வு செய்வதற்கும் நீரில் உள்ள நெகிழிப் பொருட்களைப் பற்றி பகுப்பாய்வு செய்வதற்கும் உருவாக்கப்பட்டுள்ளது.
- இந்தக் கப்பலானது முழு அளவில் தன்னிச்சையாகச் செயல்படும்.

- மாலுமிகள் நோய்வாய்ப்படக் கூடிய அல்லது புயல்களால் பாதிக்கப்படக் கூடிய மோசமான வானிலையைக் கொண்டிருக்கும் கடல்களின் மேற்பகுதிகளை ஆய்வு செய்வதற்கு மேஃபிளவர் 400 கப்பல் உதவும்.

## முதலாவது மரபணு மாற்றப்பட்ட கொசு

- அமெரிக்காவிலுள்ள ஆக்சிடெக் எனப்படும் ஒரு உயிரித் தொழில்நுட்ப நிறுவனம் மரபணு மாற்றப்பட்ட கொசுக்களின் மீதான களச் சோதனையினை ஃபுளோரிடாவில் தொடங்கியது.
- சிகா (zika), சிக்குன்குன்யா, டெங்கு மற்றும் மஞ்சள் காய்ச்சல் போன்ற கொசுக்களால் பரவும் அனைத்து நோய்களுக்கும் ஏடிஸ் எஜிப்தி வகை கொசுக்களே காரணமாகும்.
- ஆராய்ச்சியாளர்கள் ஏடிஸ் எஜிப்தி ஆண் கொசுக்களில் உயிரி பொறியியல் முறையில் (bioengineered) சில மரபணு மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளனர்.
- அவை அடுத்த தலைமுறை கொசுக்களுக்கு கடத்தப்பட்டு அவற்றுள் பெண் கொசுக்களை மட்டும் ஆரம்ப கால லார்வா நிலையிலேயே அழிக்கும் மரபணு ஒன்றினை ஏடிஸ் எஜிப்தி ஆண் கொசுவினுள் அவர்கள் செலுத்தியுள்ளனர்.

## ஆஸ்டியோசைட்ஸ்

- கர்வானின் மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் குழு ஒன்று முதன்முறையாக ஆஸ்டியோசைட்டுகளைக் கண்டறிந்துள்ளனர்.
- ஆஸ்டியோசைட்டுகள் என்பது நீள்வட்ட வடிவிலான எலும்பு செல்களாகும்.
- இவை எலும்புத் திசுக்களில் காணப்படுகின்றன.
- ஆஸ்டியோசைட்டுகளின் ஒட்டு மொத்த அமைப்பினையும் இந்த ஆராய்ச்சியாளர்கள் வரைபடமாக உருவாக்கியுள்ளனர்.
- எலும்பின் ஆரோக்கியத்தைக் கண்காணிப்பதில் இந்த அமைப்பானது முக்கிய பங்கு வகிக்கிறது.
- இது வயதினைப் பொறுத்து மாறுகிறது.
- ஆஸ்டியோசைட்டுகளுக்குள்ளே செயல்படும் பெரும்பாலான மரபணுக்கள் எலும்புகளில் எந்தவொரு பங்கும் வகிப்பதில்லை என ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- அதாவது அவை கட்டளைகளை மட்டுமே வழங்குகின்றன என அவர்கள் கண்டறிந்து உள்ளனர்.
- உண்மையில் எலும்புக் கூட்டினை எது கட்டுப்படுத்துகிறது என்பதைப் புரிந்து கெள்ள இந்தக் கண்டுபிடிப்பானது உதவும்.

## ஸ்டார்சிப் SN15 – Space X

- ஸ்பேஸ் X (Space X) நிறுவனமானது தனது ஸ்டார்சிப் SN15 ராக்கெட்டினை வெற்றிகரமாக விண்ணில் ஏவி அதை வெடிக்காமல் தரையிறக்கியுள்ளது.
- ஸ்டார்சிப் SN15 ராக்கெட்டானது ஸ்பேஸ் X நிறுவனத்தினுடைய சோதனையில் தோல்வியடையாத முதல் ஸ்டார்சிப் முன்மாதிரியாகும்.


- ஸ்பேஸ் X நிறுவனத்தின் முந்தைய ஸ்டார்சிப் முன் மாதிரிகளான SN8, SN9, SN10 மற்றும் SN11 ஆகியவை தரையிறங்கும் போது அல்லது தரையிறங்கிய பின்னர் வெடித்துச் சிதறியன.

## Lightening Cleanser

- வளிமண்டலத்தின் தூய்மைப் படுத்தும் திறன் அல்லது பசுமை இல்ல வாயுக்களை சிதைக்கும் திறனை மின்னல் கற்றைகள் அதிகரிப்பதாக ஆராய்ச்சியாளர்கள் குழு ஒன்று கண்டறிந்துள்ளது.
- மின்னல் ஏற்படும் போது ஹைட்ராக்சைல் (OH) மற்றும் ஹைட்ரோபெராக்சைல் ($HO_2$) போன்ற மூலக்கூறுகள் அதிகளவில் வெளியிடப் படுகின்றன.
- OH மூலக்கூறானது வேதிவினையைத் தொடங்கி மீத்தேன் போன்ற பசுமை இல்ல வாயுக்களின் மூலக்கூறுகளை சிதைக்கிறது.

## 2 நானோமீட்டர் அளவிலான சில்லுகள் தயாரிக்கும் தொழில்நுட்பம்

- 2 நானோமீட்டர் அளவிலான சில்லுகளை (Chips) தயாரிப்பதற்கான உலகின் முதல் தொழில்நுட்ப முறையினை IBM நிறுவனம் அறிமுகப் படுத்தியுள்ளது.
- இந்த தொழில்நுட்பமானது முதன்மையாகப் பயன்படுத்தப்படும் 7 நானோமீட்டர் அளவிலான சில்லுகளை (தற்கால மடிக் கணினிகள் மற்றும் கைபேசிகளில் பயன்படுத்தப் படுகிறது) விட 45% விரைவானதாக இருக்கும்.
- மேலும் இது 75% வரை அதிக ஆற்றல்திறன் உடையதாக இருக்கும்.
- இவை ஐபோன் 12 போன்ற உயர் ரக திறன் கைபேசிகளில் பயன்படுத்தப்படும் தற்கால முன்னணி சில்லுகளான 5 நானோமீட்டர் அளவிலான சில்லுகளை விட சிறியதாகவும் விரைவானதாகவும் இருக்கும்.



## இந்தியப் பெருங்கடலில் விழுந்தது சீனாவின் ராக்கெட்

- சீனாவானது 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் 28 அன்று லாங் மார்ச் 5B என்ற ராக்கெட்டினை (ஏவுகலத்தினை) விண்ணில் செலுத்தியது.
- இந்த ராக்கெட்டானது சீன விண்வெளி மையத்திற்கான தியான்ஹே முதன்மைப் பெட்டக வானறையினை (Core Module) சுமந்து சென்றது.
- 22.5 டன் எடையுள்ள தியான்ஹே முதன்மைப் பெட்டக வானறையானது கனமான விண்வெளிப் பெட்டக வானறைகளுள் ஒன்றாகும்.
- வளிமண்டலத்தின் இழுவிசை காரணமாக இந்த ராக்கெட்டின் முதல் நிலை பாகமானது சிதைவடையத் தொடங்கியது.
- இந்த ராக்கெட் இந்தியப் பெருங்கடலில் மாலத்தீவுகளின் அருகே கடலில் வீழ்ந்தது.




## நிலவிற்கு அனுப்பப்படும் DOGE – 1 செயற்கைக் கோள்

- முழுவதுமாக இணைய சங்கேதப் பணத்தினால் (Crypto Currency) நிதியளிக்கப்படும் DOGE-1 என்ற செயற்கைக் கோளினை ஸ்பேஸ் X நிறுவனமானது விண்ணில் செலுத்த உள்ளது.
- இது டோஜ்காயின் மூலம் பணம் செலுத்தப்படும் முதல் வணிக ரீதியிலான ஒரு விண்வெளிப் பொருளாகும்.
- இந்த செயற்கைக் கோளானது 40 கிலோகிராம் எடை கொண்டது.
- இந்த செயற்கைக் கோளானது 2022 ஆம் ஆண்டில் விண்ணில் செலுத்தப்பட உள்ளது.
- DOGE-1 செயற்கைக் கோளானது பால்கன் – 9 என்ற ஒரு ராக்கெட்டின் உதவி கொண்டு விண்ணில் ஏவப்படும்.

***டோஜ்காயின்***

- அடிப்படையில் இது ஒரு இணைய சங்கேதப் பணமாகும்.
- இது 2013 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது.
- இது IBM இன்ஜினியர்ஸ் என்ற நிறுவனத்தினால் உருவாக்கப்பட்டது.



## OSIRIS – Rex

- "OSIRIS – Rex" எனப்படும் நாசாவின் விண்கலமானது பூமிக்குத் திரும்புவதற்கான தனது இரண்டு வருட நீண்டப் பயணத்தைத் தொடங்கியுள்ளது.
- 2018 ஆம் ஆண்டில் இந்த விண்கலமானது பென்னு என்ற குறுங்கோளை அடைந்தது.
- பென்னு என்ற குறுங்கோளைப் பற்றி ஆய்வு செய்வதற்காக இந்த விண்கலமானது அனுப்பப் பட்டது.



## மிஷன் Ax – 1

- நாசா நிறுவனமானது சமீபத்தில் Axiom Space எனும் நிறுவனத்துடன் ஒரு ஒப்பந்தத்தை மேற்கொண்டுள்ளது.
- இந்த ஒப்பந்தத்தின்படி, Axiom நிறுவனமானது தனது விண்வெளி வீரர்களை சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு அனுப்ப உள்ளது.
- விண்வெளி நிலையத்திற்கு ஒரு தனியார் நிறுவனத்தினால் விண்வெளி வீரர்கள் அனுப்பப் படுவது இதுவே முதல்முறையாகும்.
- இந்தத் திட்டத்திற்கு Ax – 1 என்று பெயரிடப் பட்டுள்ளது.
- Axiom நிறுவனத்தின் விண்வெளி வீரர்கள் சர்வதேச விண்வெளி நிலையத்தில் எட்டு நாட்களுக்குத் தங்குவர்.

## சங்சே 2C ராக்கெட்


- ❖ சீனா சமீபத்தில் தனது சிச்சாங் செயற்கைக் கோள் ஏவுதளத்திலிருந்து சாங்சே 2C என்ற ராக்கெட்டினை விண்ணில் ஏவி உள்ளது.
- ❖ இது யோகன் என்ற வகை செயற்கைக் கோளாகும்.
- ❖ இந்தச் செயற்கைக் கோளானது 2017 ஆம் ஆண்டுக்குப் பிறகு விண்ணில் ஏவப்பட்ட ஏழு செயற்கைக் கோள்களின் குழுவுடன் அவற்றின் சுற்றுப் பாதையில் இணைந்தது.
- ❖ இந்தச் செயற்கைக் கோளானது மின்காந்த சுற்றுச்சூழல் ஆய்வு மற்றும் அது தொடர்பான தொழில்நுட்பச் சோதனைகளை மேற்கொள்வதற்குப் பயன்படுத்தப் படும்.

### *யோகன் செயற்கைக்கோள்*

- ❖ இது சீனாவின் கண்காணிப்பு செயற்கைக்கோளில் ஒன்றாகும்.
- ❖ கண்காணிப்புச் செயற்கைக் கோளானது இராணுவ (அ) உளவுத் துறைப் பயன்பாட்டிற்காக அனுப்பப் படும் ஒரு உளவு செயற்கைக் கோளாகும்.
- ❖ இருப்பினும், நில அளவீடு, பயிர் உற்பத்தி மதிப்பீடு, அறிவியல் சோதனைகள் மற்றும் பேரிடர் கண்காணிப்புப் பணி போன்றவற்றிற்காக யோகன் செயற்கைக்கோள்கள் அனுப்பப் பட்டதாக சீனா கூறுகிறது.

## TIFR நிறுவனத்தின் கார்பன் ஆக்சைடை மாற்றும் செயல்முறை

- ❖ டாடாவின் மூலாதார ஆராய்ச்சி நிறுவனத்தின் (Tata Institute of Fundamental Research – TIFR) அறிவியலாளர்கள் விலை மலிவான கார்பன் டை ஆக்சைடை மாற்றும் ஒரு செயல்முறையைக் கண்டுபிடித்துள்ளனர்.
- ❖ மெக்னீசியத்தினைக் கொண்டு மேற்கொள்ளப்படும் இந்தச் செயல்முறையில் மீத்தேன், மெத்தனால், பார்மிக் அமிலம் மற்றும் சில ஹைட்ரஜன் ஆகியவற்றைப் பெறுவதற்காக கார்பன் டை ஆக்சைடு, நீர் மற்றும் மெக்னீசியம் போன்றவை அறை வெப்பநிலையிலும் அறை அழுத்தத்திலும் ஒன்றோடு ஒன்று கலக்கப்படுகின்றன.
- ❖ மெக்னீசியம் கார்போனேட் என்பது இந்தச் செயல்முறையில் கிடைக்கும் ஒரு துணை விளைபொருளாகும்.
- ❖ இந்தச் செயல்முறையானது பசுமை சிமெண்ட் தயாரிப்பிலும் மருந்தியல் துறையிலும் பயன்படுத்தப் படுகிறது.



- இந்தச் செயல்முறையைக் கொண்டு செவ்வாய்க் கிரகத்தில் மீத்தேனை உருவாக்க இயலும்.
- இந்தச் செயல்முறையானது அங்கு சாத்தியமாகும் ஏனெனில்
    - செவ்வாய்க் கிரகத்தின் வளிமண்டலமானது முற்றிலும் கார்பன் டை ஆக்சைடால் நிரம்பியது என்பதாலும்,
    - செவ்வாய்க் கிரகத்தில் நீரானது பனிக்கட்டி வடிவில் இருப்பதாலும்
    - செவ்வாய்க் கிரகத்தின் மண்ணில் அதிகளவு மெக்னீசியம் இருப்பதாலும் ஆகும்

## பிளாஸ்மா அலை உமிழ்வு – வாயேஜர் 1

- வாயேஜர் 1 ஆய்வுக் கலமானது சமீபத்தில் ஒரு ரீங்கார ஒலியைப் பதிவு செய்துள்ளது.
- அறிவியலாளர்கள் இதற்கு “பிளாஸ்மா அலை உமிழ்வு” எனப் பெயரிட்டுள்ளனர்.
- இந்த ரீங்கார ஒலியானது நட்சத்திர மண்டலங்களுக்கு இடையேயான வாயு நிகழ்வு எனக் கூறப்படுகிறது.
- முன்னேறிச் செல்லும் வாயேஜர் 1 ஆய்வுக் கலமானது சூரியக் காற்றுக்கும் நட்சத்திர மண்டலங்களுக்கு இடையேயுள்ள ஊடகத்திற்கும் இடையேயான தொடர்புகளைப் புரிந்து கொள்ள விஞ்ஞானிகளுக்கு உதவும்.
- இந்த ரீங்கார ஒலியானது குறுகிய அதிர்வெண் அலைவரிசையைக் கொண்டதாகும்.

***வாயேஜர் 1***

- வாயேஜர் 1 எனும் கலமானது 2012 ஆம் ஆண்டில் சூரியனின் அயனிச் செறிவு மண்டலத்தினுள் நுழைந்த முதல் விண்கலமாகும்.
- இது 1977 ஆம் ஆண்டு விண்ணில் செலுத்தப்பட்டது.
- சூரிய மண்டலத்தின் வெளிப்பகுதியை ஆய்வு செய்யவும், அதன் வழியில் சனி மற்றும் வியாழன் போன்ற கோள்களைப் பற்றி ஆய்வு செய்யவும் வேண்டி இந்த விண்கலமானது அனுப்பப்பட்டது.

## Deep Shake

- டீப் சேக் (Deep Shake) என்பது நிலநடுக்கத்தின் போது நிலம் எவ்வகையில் அதிர்வுறும் என்பதைக் கணிக்க செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தும் வகையில் நிலநடுக்கத்தை முன்கூட்டியே அறிவிக்கும் எச்சரிக்கை அமைப்பாகும்.
- இந்த அமைப்பானது நிலநடுக்கம் வருவதற்குப் பல விநாடிகளுக்கு முன்பாகவே அது பற்றிய ஒரு அறிவிப்பினை வழங்கும்.
- இது செயற்கை நுண்ணறிவுக் கற்றலின் ஒரு பிரிவான ஆழ்ந்த நியூரான் வலையமைப்பினை (deep neural network) பயன்படுத்துகிறது.
- கடந்த காலத்தில் உருவான நிலநடுக்கத்தின் வடிவங்களைக் கண்டறிந்து, புதிய நிலநடுக்கத்தின் மூலம் எவ்வாறு நில அதிர்வானது பயணிக்கும் அதிர்வுறும் என்பதை கணித்திட எண்ணுகின்றது.
- டீப்சேக் என்ற அமைப்பானது ஸ்டான்ஃபோர்டு பல்கலைக்கழகத்தின் டேனியல் ஜே. அவோய் தத்தா, வெய்கியாங் சூ மற்றும் வில்லியம் எல்ஸ்வோர்த் ஆகியோரால் உருவாக்கப் பட்டதாகும்.

## செவ்வாயில் தியான்வென் 1 விண்கலம்


- ❖ சீனாவின் தியான்வென் 1 விண்கலமானது செவ்வாய்க் கிரகத்தில் வெற்றிகரமாக தரையிறங்கியது.
- ❖ இது 2020 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் லாங்க் மார்ச் 5 எனும் ராக்கெட் மூலம் விண்ணில் ஏவப்பட்டது.
- ❖ தியான்வென் 1 விண்கலமானது மூன்று மாதங்களாக செவ்வாய்க் கிரகத்தினைச் சுற்றி வந்தது.
- ❖ சுரோங் எனும் சுற்றித் திரியும் விண்கலத்தை (Rover) ஏற்றிச் சென்ற தரையிறங்கு விண்கலமானது தற்போது வெற்றிகரமாக செவ்வாய்க் கிரகத்தின் மேற்பரப்பில் தரை இறங்கியுள்ளது.
- ❖ இது உதோபியா பிளானிஸ்யா என்ற பகுதியில் தரையிறங்கியுள்ளது.

## ஆக்சிஜன் உற்பத்தியில் ஜியோலைட்டுகள்

- ❖ ஆக்சிஜன் உற்பத்தி ஆலையில் பயன்படுத்துவதற்கான 35 டன் ஜியோலைட்டுகளை ரோமிலிருந்து பெங்களூருவிற்கு ஏர் இந்தியா நிறுவனமானது விமானம் மூலம் ஏற்றி வந்தது.
- ❖ ஜியோலைட்டுகள் என்பது அழுத்த மாற்றப் பரப்பு ஈர்ப்பு முறையில் (Pressure Swing Adsorption) பயன்படுத்தப்படும் பரப்பு இழுபொருளாகும் (adsorbent material).
- ❖ ஆக்சிஜன் செறிவூட்டிகள் ஆனது வளிமண்டல நைட்ரஜனை உறிஞ்சி அதனை வெளியேற்றுவதற்கு ஜியோலைட்டுகளைப் பயன்படுத்துகிறது.
- ❖ இந்தச் செயல்முறையில் எஞ்சிய ஆக்சிஜன் வாயுவானது நோயாளிகளுக்கு வழங்கப் படும்.
- ❖ அதிக அழுத்தத்தில் ஜியோலைட்டுகளின் மேற்பரப்பு அதிகரிப்பதால் அது அதிக அளவில் நைட்ரஜன் உறிஞ்சும் திறனைப் பெற்று இருக்கிறது.

## செவ்வாய் கிரகத்தின் உத்தோபியா பிளானீசியா

- ❖ செவ்வாய்க் கிரகத்திற்கு அனுப்பப்பட்ட சீனாவின் தியான்வென் 1 விண்கலமானது சமீபத்தில் உத்தோபியா பிளானீசியா (Utopia Planitia) என்ற பகுதியில் தரை இறங்கியது.



- இது வைக்கிங் 2 என்ற தரையிறங்கு விண்கலம் தரையிறங்கிய இடமாகும்.
- செவ்வாய்க் கிரகத்தில் உள்ள உத்தோபியா பிளானீசியா எனும் இடமானது மோதலால் ஏற்பட்ட ஒரு பள்ளமான பகுதியாகும்.
- செவ்வாய்க் கிரகத்தின் மேற்பரப்பில் உள்ள இந்த வட்டவடிவ பள்ளமானது அதிஉயர் திசைவேகமுடைய சிறு வான்பொருட்கள் மோதியதால் உருவாகியதாகும்.
- இது விண்கற்களாலும் உண்டாகியிருக்கலாம்.

## Jupiter Icy Moon Explorer – ஐரோப்பிய விண்வெளி நிறுவனம்

- ஐரோப்பிய விண்வெளி நிறுவனத்தினால் அனுப்பப்பட்ட Jupiter Icy Moon Explorer என்ற விண்கலமானது சமீபத்தில் முக்கியமான தொடர் சோதனைகளில் ஈடுபடுத்தப் பட்டு உள்ளது.
- இது JUICE (Jupiter Icy Moon Explorer) என அழைக்கப்படுகிறது.
- இது ஐரோப்பிய விண்வெளி நிறுவனத்தினால் உருவாக்கப்பட்ட கோள்களுக்கிடையே இயக்கப் படும் ஒரு விண்கலமாகும்.
- இது இன்னும் அதன் கட்டுமானப் பணிநிலையில் தான் உள்ளது.
- இத்திட்டத்திற்கான முதன்மையான ஒப்பந்ததாரர் நிறுவனம் ஏர்பஸ் டிஃபென்ஸ் மற்றும் ஸ்பேஸ் (Airbus Defence and Space) எனும் நிறுவனம் ஆகும்.
- JUICE ஆய்வுக் கலமானது வியாழனின் மூன்று கலிலிய துணைக் கோள்களை ஆய்வுச் செய்யும்.
- அவை யுரோப்பா, கனிமேடே மற்றும் கலிஸ்டோ (Europa, Ganymede and Callisto) ஆகியன ஆகும்.
- இந்த மூன்று துணைக் கோள்களும் அவற்றின் மேற்பரப்புக்கு அடிப்பகுதியில் கணிசமான அளவில் நீரினைக் கொண்டுள்ளன.
- இந்த விண்கலமானது 2022 ஆம் ஆண்டு ஜுன் மாதத்தில் விண்ணில் ஏவப்படும்.
- இது 2029 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் வியாழனைச் சென்றடையும்.
- இது ஐந்து விதமான ஈர்ப்புச் சக்திக் கருவியின் உதவியுடன் வியாழனைச் சென்று அடையும்.
- ஈர்ப்புச் சக்தி உதவி என்பது மற்றொரு கோளின் (அ) விண்வெளிப் பொருளின் ஈர்ப்பு விசையைப் பயன்படுத்தி ஒரு விண்கலத்தின் வேகத்தை அதிகரித்தல் (அ) பாதையை மாற்றுதல் என்பதாகும்.
- இது உந்துபொருளை (propellant) சேமிக்கவும் அதன் செலவினைக் குறைக்கவும் வேண்டி பயன்படுத்தப்படுகிறது.

## சிமோர்க் அதிவேகக் கணினி

- ஈரான் நாடானது சிமோர்க் என அழைக்கப்படும் தனது அதிவேகக் கணினியை வெளியிட்டுள்ளது.
- இது ஈரானின் முந்தைய அதிவேகக் கணினிகளை விட 100 மடங்கு சக்தி வாய்ந்தது ஆகும்.

- இந்த அதிவேகக் கணினிக்கு பீனிக்ஸ் பறவையைப் போன்று இருக்கும் சிமோர்க் எனும் பறவையின் பெயரானது சூட்டப்பட்டுள்ளது.
- சிமோர்க் அதிவேகக் கணினியானது ஈரானின் தலைநகரான டெஹ்ரானிலுள்ள அமீர் கபிர் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தினால் உருவாக்கப்பட்டது.
- இது ஈரானிய உயர் செயல்திறன் கணினி ஆராய்ச்சி மையத்தில் அமைந்துள்ளது.

## கடலடி கம்பிவடப் பிணையம்

- தொலைதொடர்பு சேவை வழங்குநரான ரிலையன்ஸ் ஜியோ நிறுவனமானது இந்தியாவை மையமாகக் கொண்டு ஒரு மிகப்பெரிய சர்வதேச கடலடி கம்பிவடப் பிணையத்தினை அமைத்து வருகிறது.
- அதிகரித்துள்ள இணையத் தரவு தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக உலக நிறுவனங்களுடனும் சப்காம் (Subcom) எனும் கடலடி கம்பிவட வழங்கீட்டு நிறுவனத்துடனும் ரிலையன்ஸ் நிறுவனம் இணைந்துள்ளது.
- இந்த நிறுவனம் திட்டமிட்டுள்ள இரண்டு கடலடி கம்பிவட அமைப்புகளில் ஒன்று இந்தியாவினை ஆசிய பசிபிக் பகுதியுடனும் (சிங்கப்பூர், தாய்லாந்து & மலேசியா) மற்றொன்று இத்தாலி மற்றும் ஆப்பிரிக்காவுடனும் இணைக்கின்றன.

## SPOT

- அமெரிக்க அறிவியலாளர்கள் கோவிட்-19 தொற்றைக் கண்டறிய SPOT என்ற ஒரு புதிய உமிழ்நீர் சோதனை முறையைக் கண்டறிந்துள்ளனர்.
- SPOT என்றால் அளவிடக் கூடிய மற்றும் எளிதில் சுமந்து செல்லக் கூடிய ஒரு சோதனை முறையாகும் (Scalable and Portable Testing).
- கார்ல் இல்லினாய்ஸ் மருத்துவக் கல்லூரியின் ஆராய்ச்சியாளர்களால் SPOT முறை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
- இந்த முறையானது முப்பது நிமிடங்களில் கோவிட்-19 சோதனையின் முடிவுகளை வழங்குகிறது.
- இந்த முறையானது தலைகீழ் படியெடுத்தல் வலையமைப்பின் உதவியுடன் கூடிய சமவெப்பப் பெருக்க முறையை (RT – LAMP – Reverse Transcriptase Loop Mediated Isothermal Amplification) பயன்படுத்துகிறது.

## SBRIS Geo – 5 ஏவுகணை குறித்த எச்சரிக்கை வழங்கும் செயற்கைக்கோள்

- ஒன்றிணைந்த விண்கல ஏவுதலுக்கானக் கூட்டணியானது ஃபுளோரிடாவின் கேப் கேனவரல் விண்வெளி நிலையத்திலிருந்து அட்லஸ் V எனும் ராக்கெட்டினை விண்ணில் ஏவியது.
- அட்லஸ் V ராக்கெட்டானது ஏவுகணை குறித்த எச்சரிக்கைகளை வழங்கும் SBRIS Geo – 5 எனும் செயற்கைக் கோளைச் சுமந்து சென்றது.
- ஏவுகணை குறித்த முன்னச்சரிக்கைகள், போர்ப்பகுதிகள், ஏவுகணைப் பாதுகாப்பு போன்றவை பற்றிய முக்கியத் தகவல்களை இந்தச் செயற்கைக் கோளானது வழங்கும்.

## Fake Buster

- ரூபாரின் இந்திய தொழில்நுட்பக் கல்வி நிறுவனமும் மோனாஷ் பல்கலைக்கழகமும் (ஆஸ்திரேலியா) இணைந்து "Deep fake" எனும் கண்டுபிடிப்புக் கருவி ஒன்றை உருவாக்கியுள்ளன.
- Fake Buster எனும் இந்தக் கருவியானது காணொலி மூலம் நடைபெறும் நிகழ்வுகளில் எவரும் அறியாமல் பங்கேற்பவர்களை அடையாளம் காண உதவுகிறது.
- இதன் மூலம் ஒரு காணொலி நிகழ்வின் போது ஒருவரின் காணொலியானது இன்னொருவரால் கையாளப் படுகிறதா என்பதை அந்தக் காணொலி நிகழ்வை ஏற்பாடு செய்தவர் கண்டறிய இயலும்.
- இதனை இணையதள தேர்வுகளின் போதும் பணிகளுக்கான நேர்காணல்களின் போதும் பயன்படுத்த இயலும்.

## அதிஉயர் ஆற்றல் உடைய காமா கதிர்கள்

- சீனாவின் மிகப்பெரிய அதிஉயர காற்றுத் தாரை ஆய்வகமானது (Large High Altitude Air Shower Observatory – LHAASO) சமீபத்தில் அதிஉயர் ஆற்றலுடைய காமா கதிர்களின் பன்னிரு மூல ஆதாரங்களைக் கண்டறிந்துள்ளது.
- LHAASO காஸ்மிக் கதிர் ஆய்வகமானது அதிஉயர் ஆற்றல் கொண்ட போட்டான்களின் 12 மூல ஆதாரங்களை கண்டறிந்துள்ளது.
- மேலும் இது 1.4 பீட்டா எலக்ட்ரான் வோல்ட் அளவிலான ஆற்றல் கொண்ட ஒரு போட்டானையும் கண்டறிந்துள்ளது.
- இவை இதுவரை கண்டறியப்படாத பொலிவான பால் வெளி காமா கதிர் மூலங்கள் ஆகும்.
- LHAASO என்பது சீனாவின் சிசுவான் மாகாணத்தில் உள்ள தாவ்செங்கில் (Daocheng) அமைந்துள்ள காமா கதிர் மற்றும் காஸ்மிக் கதிர் ஆய்கவகமாகும்.

## VIPER சுற்றித் திரியும் விண்கலம்

- அமெரிக்காவின் விண்வெளி நிறுவனமான நாசா 2023 ஆம் ஆண்டில் நிலவுக்குத் தனது முதல் நடமாடும் மனித எந்திரத்தை அனுப்ப உள்ளதாக அறிவித்துள்ளது.
- இந்த நடமாடும் மனித எந்திரமானது நிலவின் மேற்பரப்பு மற்றும் அடிப்பரப்புப் பகுதிகளில் பனிக்கட்டி மற்றும் மற்ற வளங்கள் உள்ளனவா என ஆய்வு செய்யும்.
- இந்தத் திட்டமானது 'மனித எந்திர அறிவியல் திட்டம்' மற்றும் 'மனித ஆய்வுகள்' ஆகியவை ஒரு சேர மேற்கொள்ளப்படுவதன் எடுத்துக்காட்டாக விளங்குகிறது.
- இந்த நடமாடும் மனித எந்திரமானது ஆர்ட்டிமிஸ் திட்டத்தின் ஓர் அங்கமாகும்.
- இது எளிதில் ஆவியாகும் பொருட்களை ஆய்வு செய்யும் துருவ ஆய்வுக்கான சுற்றித் திரியும் கலனிலிருந்து (Volatiles Investigating Polar Exploration Rover – VIPER) தரவுகளைச் சேகரிக்கும்.
- இது நிலவின் தென்துருவத்திலுள்ள வளங்களைப் பற்றிய வரைபடத்தை உருவாக்க அறிவியலாளர்களுக்கு உதவும்.

## ஆம்போடெரிசின் – பி

- மியூகோர்மைகோசிஸ் (அ) கருப்புப் பூஞ்சை நோய்க்குச் சிகிச்சையளிக்கப் பயன்படுத்தப் படும் ஆம்போடெரிசின்-பி எனும் மருந்திற்கு பல மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களில் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.
- ஆம்போடெரிசின்-பி என்பது ஒரு பூஞ்சை எதிர்ப்பு மருந்தாகும்.
- இது தீவிரமான பூஞ்சைத் தொற்று நோய்க்குச் சிகிச்சையளிக்கப் பயன்படுத்தப் படுகிறது.
- இது 1955 ஆம் ஆண்டில் ஸ்ட்ரெப்டோமைசிஸ் நோடோசலிருந்து (Streptomyces nodosus) பிரித்து உருவாக்கப்பட்டு 1958 ஆம் ஆண்டில் பயன்பாட்டிற்கு வந்தது.
- இந்த மருந்தானது பொதுவாக நரம்பின் மூலம் ஊசி வாயிலாக உட்செலுத்தப் படுகிறது.
- இது தொற்றினை ஏற்படுத்தும் பூஞ்சையின் வளர்ச்சியைக் குறைக்கிறது.
- இந்த மருந்தானது உலக சுகாதார அமைப்பின் 'சுகாதாரத் துறையில் அத்தியாவசிய, பாதுகாப்பான மற்றும் அதிசெயல்திறனுடைய மருந்துகள் பட்டியலில்' சேர்க்கப்பட்டு உள்ளது.

## நவீன ஜன்னல் தயாரிப்புப் பொருள்

- அசாமில் உள்ள குவாஹத்தியின் இந்திய தொழில்நுட்பக் கல்வி நிறுவனமானது கட்டிடத்தின் தட்பவெட்பத்தைத் தன்னிச்சையாக கட்டுக்குள் வைத்திருக்கும் ஒரு நவீன ஜன்னல் தயாரிக்கும் பொருள் ஒன்றினை உருவாக்கியுள்ளது.
- இந்தப் பொருளிற்கு மின்னழுத்தம் வழங்கப்படும் போது அதனுள் பாயும் வெப்பம் மற்றும் ஒளியின் அளவை இந்தப் பொருளானது திறம்பட கட்டுப்படுத்துகிறது.
- எனவே செயல்திறன்மிக்க தன்னிச்சையான தட்பவெட்பக் கட்டுப்பாடுகளை உருவாக்க இது உதவும்.


## Princess of Asturias விருது

- இந்தியப் பொருளாதார வல்லுநரும் நோபல் பரிசு பெற்றவருமான அமர்த்தியா குமார் சென் அவர்களுக்கு சமூக அறிவியல் எனும் பிரிவில் "Princess of Asturias" விருதானது வழங்கப் பட்டுள்ளது.
- இது ஸ்பெயின் நாட்டினுடைய முன்னணி (சிறந்த) விருதாகும்.
- "Poverty and Famines" எனும் இவரது சிறந்தப் படைப்பிற்காக இந்த விருதானது வழங்கப் பட்டு இருக்கிறது.

## டாக்டர் D. நாகேஷ்வர் ரெட்டி

- AIG மருத்துமனையின் தலைவரான டாக்டர் D. நாகேஷ்வர் ரெட்டி அவர்களுக்கு அமெரிக்க இரைப்பை உள்நோக்கியியல் அமைப்பின் ருடோல்ஃப் வி ஸ்கிண்ட்லெர் (Rudolf V Schindler) விருதானது வழங்கப்பட்டுள்ளது.

- ருடோல்ஃப் வி ஸ்கிண்ட்லெர் விருதானது டாக்டர். ஸ்கிண்ட்லெர் அவர்களின் நினைவாக வழங்கப் படும் மதிப்பு மிக்க (படிகத்தால் ஆன) ஒரு உயரிய விருதாகும்.
- டாக்டர். ஸ்கிண்ட்லெர் அவர்கள் “இரைப்பை உள்நோக்கியியலின் தந்தை” (the father of gastroscopy) எனக் கருதப் படுகிறார்.
- இந்த விருதைப் பெற்ற முதல் இந்திய மருத்துவர் எனும் பெருமையை டாக்டர் ரெட்டி அவர்கள் பெற்றுள்ளார்.
- இவர் பத்மபூசன் விருது பெற்றவர் ஆவார்.
- டாக்டர் ரெட்டி அவர்கள் இந்தியாவில் உள்நோக்கியலின் உபயோகத்தை முதன்முதலில் அறிமுகப் படுத்தியவர்களுள் ஒருவராவார்.



# சுற்றுச்சூழல் செய்திகள்

## மாவி ஓங்கில்கள் (டால்பின்கள்)

- நியூசிலாந்து அரசானது உலகளாவிய நிதியம் (World Wide Fund) மற்றும் சில மீன்பிடி நிறுவனங்களுடன் இணைந்து செயற்கை நுண்ணறிவினைப் பயன்படுத்தி ஒரு ஆளில்லா விமானத்தினை (Drone) வடிவமைக்க உள்ளது.
- மாவி (Maui) ஓங்கில்கள் நியூசிலாந்தின் மேற்குக் கடற்கரைப் பகுதிகளில் மட்டுமே காணப் படுகின்றன.
- இவை உலகளவில் காணப்படும் சிறிய வகை ஓங்கில்களின் சிற்றினங்களுன் ஒன்று ஆகும்.
- உலகில் 63 மாவி ஓங்கில்கள் மட்டுமே உள்ளன.
- சர்வதேச இயற்கைப் பாதுகாப்பு ஒன்றியமானது மாவி ஓங்கில்களை “மிகவும் அருகி வரும் இனங்கள்” (Critically Endangered Species) என்ற பட்டியலில் சேர்த்துள்ளது.



## ஆலிவ் ரெட்லி இன ஆமைகள் (சிற்றாமைகள்)

- ❖ லட்சக் கணக்கான ஆலிவ் ரெட்லி இன ஆமைகள் ருசிகுல்யா நதியின் முகத்துவாரத்தின் அருகே முட்டையிடுவதற்கு வலை அமைக்கும்.
- ❖ ஆலிவ் ரெட்லி இன ஆமைகள் முட்டையிடுவதற்காக வலையமைக்கும் காலம் ஜனவரி மாதம் முதல் மே மாதம் வரையாகும்.
- ❖ இந்த ஆமைகள் அரிபடாஸ் (Aribadas) எனப்படும் தனித்தன்மை வாய்ந்த அதிக எண்ணிக்கையில் முட்டையிடும் நிகழ்விற்குப் பெயர் பெற்றவையாகும்.
- ❖ அரிபடாஸ் காலத்தின் போது, ஆயிரக்கணக்கான பெண் ஆமைகள் கடற்கரையில் முட்டையிடுவதற்கு ஒன்றாக திரளும்.



***பிரச்சினை***

- ❖ இந்த ஆண்டு, அவை இன்னும் வலையமைக்கத் தொடங்கவில்லை.
- ❖ வலையமைப்பில் தாமதம் ஏற்படுவது சாதாரணமானது என சில அறிவியலாளர்கள் கூறினாலும் வளங்காப்பாளர்கள் இது பற்றி கவலை கொண்டுள்ளனர்.
- ❖ ஏனெனில் மே மாதத்தில் வளிமண்டலத்தின் வெப்பநிலை உச்சத்தை அடையும் என்பதால் கடற்கரை மணல் மிகவும் சூடானதாக இருக்கும்.
- ❖ எனவே ஆலிவ் ரெட்லி இன ஆமைகளின் அதிக எண்ணிக்கையில் முட்டையிடும் நிகழ்வு இந்த ஆண்டு தவிர்க்கப்பட வாய்ப்பு உள்ளது.
- ❖ இதற்கு முன்பு ஆமைகளின் முட்டையிடும் நிகழ்வானது 2002, 2007, 2016 மற்றும் 2019 ஆகிய ஆண்டுகளில் தவிர்க்கப் பட்டுள்ளது.

## குரோசிடுரா நோர்கொண்டமைகா

- இந்திய விலங்கியல் ஆய்வு நிறுவனத்தின் (Zoological Survey of India – ZSI) குழு ஒன்று அந்தமானின் நார்கொண்டம் தீவில் ஒரு புதிய பூச்சி உண்ணும் பாலூட்டி இனத்தைக் கண்டறிந்துள்ளது.
- இந்த விலங்கிற்கு குரோசிடுரா நோர் கொண்டமைகா (Crocidura Norcondamica) எனப் பெயரிடப் பட்டுள்ளது.
- இந்த விலங்கினமானது கிட்டத்தட்ட வீட்டு எலியின் அளவில் உள்ளது.
- பூச்சிகளை உட்கொள்ளும் இந்த விலங்கினமானது காட்டுப் பகுதிகளில் வாழ்கிறது.
- இவை அடர்ந்த நார்கொண்டம் காடுகளில் உள்ள பூச்சிகளின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்துவதில் உதவுகின்றன.
- இவை ஷ்ரூஸ் குடும்பத்தைச் சார்ந்தவை.
- ஷ்ரூஸ் குடும்பத்தைச் சார்ந்த விலங்குகள் கொறிந்துண்ணிகள் (Rodents) அல்ல.



## சமையல் எண்ணெயிலிருந்து தயாரிக்கப்பட்ட உயிரி எரிபொருள் (பயோ டீசல்)

- மத்தியப் பெட்ரோலியத் துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான் அவர்கள் முதன்முறையாக உபயோகித்த சமையல் எண்ணெயிலிருந்துத் தயாரிக்கப்பட்ட உயிரி எரிபொருள் (பயோடீசல்) வழங்கீட்டினைத் தொடங்கி வைத்தார்.
- இது 'ஆர்வத்தின் வெளிப்பாடு' என்ற ஒரு திட்டத்தின் கீழ் (Expression of Interest) தொடங்கப் பட்டுள்ளது.
- இந்த திட்டமானது 2019 ஆம் ஆண்டில் தொடங்கப் பட்டது.
- உபயோகப்படுத்தப்பட்ட சமையல் எண்ணெயிலிருந்து தயாரிக்கப்பட்ட உயிரி எரிபொருளைக் கொள்முதல் செய்வதற்காக இந்தத் திட்டமானது தொடங்கப்பட்டது.
- உபயோகப்படுத்தப்பட்ட சமையல் எண்ணெயினை சேகரித்து உயிரி எரிபொருளாக (பயோ டீசல்) மாற்றுவதற்கான ஒரு அமைப்பினை உருவாக்குவதே இதன் முக்கிய நோக்கமாகும்.
- முதற்கட்டமாக உபயோகித்த சமையல் எண்ணெயிலிருந்து பிரித்தெடுக்கப்படும் 7% அளவிலான பயோ டீசலானது டீசலுடன் கலக்கப்படுகிறது.





## மீத்தேன் உமிழ்வு மீதான உலகளாவிய மதிப்பீடு

- உலகளாவிய மீத்தேன் மதிப்பீடானது காலநிலை மற்றும் தூயக்காற்று மீதான கூட்டணி (Climate and Clean Air Coalition – CCAC) மற்றும் ஐக்கிய நாடுகள் அமைப்பின் சுற்றுச்சூழல் திட்டம் (United Nations Environment Programme – UNEP) ஆகியவற்றால் இன்று வெளியிடப் பட்டது.
- மனிதனால் ஏற்படும் மீத்தேன் உமிழ்வினை இந்த பத்தாண்டுகளில் 45% வரை குறைக்க இயலும் என இந்த அறிக்கை கூறுகிறது.
- இதனால் 2045 ஆம் ஆண்டுக்குள் உலக வெப்பமயமாதலானது 0.3°C வரை குறைக்கப் படும்.
- மேலும் இது உலகளாவிய வெப்பநிலை உயர்வினை 1.5°C எனும் இலக்கு வரம்பினுள் வைத்திருப்பதற்கான பாரீஸ் காலநிலை உடன்படிக்கையின் ஒரு இலக்குடன் ஒத்திருக்கிறது.

## தானே சிற்றோடை பிளமிங்கோ சரணாலயம் - சுற்றுச்சூழல் பாதுகாப்பு மண்டலம்

- சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகமானது சமீபத்தில் தானே சிற்றோடை பிளமிங்கோ சரணாலயத்தைச் சுற்றியமைந்த 48.32 சதுர கிலோமீட்டர் அளவிலான நிலப்பரப்பினை சுற்றுச்சூழல் பாதுகாப்பு மண்டலமாக (Eco Sensitive Zone – ESZ) அறிவித்துள்ளது.
- சுற்றுச்சூழல் பாதுகாப்பு மண்டலங்களானது பாதுகாக்கப்பட்ட பகுதிகளுக்கான ஒரு இடையக மண்டலமாக (Buffer Zone) செயல்படும்.
- இவை தேசியப் பூங்காக்கள், பாதுகாக்கப்பட்ட பகுதிகள் மற்றும் வனவிலங்குச் சரணாலயங்கள் ஆகியவற்றைச் சுற்றியுள்ள 10 கி.மீ. அளவிலான சுற்றளவில் அமைந்திருக்கும் பொருளாதார ரீதியில் ஊக்குவிக்கப்படாத பகுதிகளாகும்.
- தேசியப் பூங்கா (அ) வனவிலங்குச் சரணாலயத்தை சுற்றியுள்ள பகுதிகளில் மேற்கொள்ளப் படும் மேம்பாட்டுத் திட்டங்களால் ஏற்படும் நெருக்கடியை இவை குறைக்கும்.




## மோதல் மற்றும் பாதுகாப்பு பற்றிய அறிக்கை

- சர்வதேச இயற்கைப் பாதுகாப்பு அமைப்பானது (IUCN) "உலகமயமாக்கப் பட்ட உலகின் இயற்கை, மோதல் மற்றும் பாதுகாப்பு" (Nature in Globalised World : Conflict and Conservation) என அழைக்கப்படும் ஒரு அறிக்கையினைச் சமீபத்தில் வெளியிட்டது.
- இயற்கைக்கும் ஆயுதமேந்திய மோதலுக்கும் இடையேயான ஒரு சிக்கலான தொடர்பினைப் பற்றி இந்த அறிக்கை விவரிக்கிறது.
- உலகில் மோதல்களால் விளைவிக்கப்படும் முக்கிய அபாயங்களாவன பாதுகாப்பு முயற்சிகளின் சீர்குலைவு, வனவிலங்குகளைக் கொல்லுதல், சுற்றுச்சூழலின் சீரழிவு போன்றவையாகும்.
- ஆயுதமேந்திய மோதல்கள் பெரும்பாலும் உலகிலுள்ள முக்கிய பல்லுயிர்ப் பெருக்கப் பகுதிகளில் நிலவுகின்றன.
- எடுத்துக்காட்டாக இந்தியா-பாகிஸ்தான் மற்றும் இந்தியா-சீனா ஆகிய எல்லை சார்ந்த மோதல்கள் இமாலயப் பல்லுயிர்ப் பெருக்கப் பகுதிகளில் நடைபெற்று வருகின்றன.
- இராணுவப் பயிற்சிகள் மற்றும் ஒழுங்கற்ற ஆட்சிமுறை போன்றவை, அச்சுறுத்தல் நிலையிலுள்ள 200 இனங்களுக்கு ஆபத்தை விளைவிக்கின்றன.
- இதில் மிகவும் அருகி வரும் ஒரு இனமான கிழக்கத்திய கொரில்லா போன்ற ஒரு தனித்தன்மை வாய்ந்த இனங்களும் அடங்கும்.
- ஒரு நாட்டில் விவசாயத்திற்குக் குறைவான நிலப்பரப்பே உள்ளது என்றாலோ (அ) நிலத்தினுடைய வேளாண் உற்பத்தித் திறன் குறைவாக இருந்தாலோ அந்த வகையிலான நாடுகளில் போர்கள் ஏற்பட வாய்ப்புகள் அதிகமாக உள்ளது.
- எப்பொழுதெல்லாம் அதிகளவில் வறட்சி ஏற்பட்டனவோ அப்போதெல்லாம் அடிக்கடி போர்கள் நடைபெற்றன.

## சீனாவின் பசுமை இல்ல வாயு உமிழ்வு

- பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டிற்கான அமைப்பின் (OECD – Organization for Economic Co-operation and Development) 37 உறுப்பினர் நாடுகளைக் காட்டிலும் சீன நாடானது அதிகளவு பசுமை இல்ல வாயுக்களை உமிழ்கிறது.
- இது ரோடியம் குழுமம் எனும் அமைப்பினால் வெளியிடப்பட்ட அறிக்கையில் கூறப் பட்டுள்ளது.
- 2019 ஆண்டில் உலகின் பசுமை இல்ல வாயுக்களில் 27 சதவீதத்தினை சீனா உருவாக்கி வெளியிட்டது.
- இதன் மூலம் உலகப் பருவநிலை மாசுபாட்டின் கால் பங்கிற்கு மேல் சீனாவினால் உற்பத்தி செய்யப்படுகிறது என்பது தெரிய வந்துள்ளது.
- பசுமை இல்ல வாயு மாசுபாட்டில் 11 சதவீதப் பங்குடன் அமெரிக்கா இரண்டாம் இடத்தில் உள்ளது.
- உலக பசுமை இல்ல வாயு உமிழ்வில் 6 சதவீதப் பங்குடன் இந்தியா மூன்றாமிடத்தில் உள்ளது.

## 2021 ஆம் ஆண்டு புதுப்பிக்கத்தக்க ஆற்றல் சந்தையின் மேம்பாடு

- "2021 ஆம் ஆண்டு புதுப்பிக்கத்தக்க ஆற்றல் சந்தையின் மேம்பாடு" எனும் ஒரு அறிக்கையினை சர்வதேச எரிசக்தி முகமையானது சமீபத்தில் வெளியிட்டது.
- சூரிய ஆற்றல் மற்றும் காற்று ஆற்றல் உற்பத்தியில் உலகளவில் 25% வளர்ச்சி ஏற்பட்டுள்ளதாக இந்த முகமையானது கணித்துள்ளது.
- 280 GW திறனுடைய புதுப்பிக்கத்தக்க ஆற்றல் நிலையங்களாவன 2020 ஆம் ஆண்டில் நிறுவப் பட்டன எனவும் இந்த அறிக்கை கூறியுள்ளது.
- 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், இது 45% வளர்ச்சியாகும்.
- இது கடந்த முப்பது ஆண்டுகளில் இல்லாத உயர்ந்தபட்ச வளர்ச்சியாகும்.
- இதன்படி காற்று ஆற்றலில் 90 சதவீதமும் சூரிய ஆற்றலில் (ஒளி ஆற்றல்) 50 சதவீதமும் வளர்ச்சி ஏற்பட்டுள்ளது.
- 2020 ஆம் ஆண்டில் உயிரி எரிபொருளுக்கானத் தேவை அதிகரித்துள்ளது.

## 300 ஆண்டுகளுக்குப் பிறகு அயர்லாந்திற்குத் திரும்பி வரும் நாரைகள்

- அயர்லாந்தின் நாட்டுப் புறக் கதைகளில் (பாரம்பரியக் கதைகள் மற்றும் நம்பிக்கைகள்) ஓர் அங்கமாக விளங்கிய நாரைகள் சமீபத்தில் அயர்லாந்தில் தென்பட்டுள்ளன.
- 300 ஆண்டுகளுக்குப் பிறகு இந்தப் பறவைகள் அவற்றின் இனப்பெருக்க காலத்தின் போது இந்த நாட்டில் தென்பட்டுள்ளன.

***நாரைகள்***

- அயர்லாந்தில் நாரைகள் 1700 ஆம் ஆண்டிலேயே அழிந்து விட்டன.
- அவற்றின் வாழ்விடங்கள் அழிக்கப் பட்டதே இதற்கு ஒரு காரணமாகும்.
- இவை ஆழமற்ற நீர்நிலைகளில் கூடுகளை அமைக்கும்.

- இவை ஒரு முறையில் இரண்டு முட்டைகளை மட்டுமே இடும்.
- இவை உலகின் மிக உயரமான (tallest) பறக்கும் பறவையாகும்.
- இவை நான்கு அடி உயரம் கொண்டவையாகும்.



## சுற்றுச்சூழல் இடர் கண்ணோட்ட அறிக்கை – 2021

- 2021 ஆம் ஆண்டிற்கான சுற்றுச்சூழல் இடர் கண்ணோட்ட அறிக்கையில் "நகர இடர் பகுப்பாய்வு" (City Risk Analysis) மீதான அறிக்கையினை வெரிஸ்க் மேப்பிள்கிராஃப்ட் எனும் நிறுவனமானது தயாரித்துள்ளது.
- இந்த அறிக்கையின்படி,
    - கான்பூர் 10வது இடத்தில் உள்ளது,
    - அதனைத் தொடர்ந்து ஜெய்ப்பூர் (22வது),
    - லக்னோ (24வது) மற்றும்
    - மும்பை (27வது) ஆகியவை உள்ளன.
- முதல் 100 நாடுகளில் 43 இந்திய நகரங்கள் இடம் பெற்றுள்ளதால் நமது நாடு உலகிலேயே மிகவும் ஆபத்தான நிலையில் உள்ள நாடாக திகழ்கிறது.
- இதற்கான முக்கிய காரணம் மாசுபாடு என அடையாளம் காணப்பட்டுள்ளது.

## சுற்றுச்சூழலுக்கு உகந்த மின்னணு தகன அமைப்பு

- ரூபாரின் இந்திய தொழில்நுட்பக் கல்வி நிறுவனமானது சுற்றுச்சூழலுக்கு உகந்த வகையிலான எளிதில் சுமந்து செல்லக்கூடிய மின்னணு தகன அமைப்பு ஒன்றினை உருவாக்கி உள்ளது.
- இது உடலை எரிக்க மரத்தைப் பயன்படுத்துகிறது என்றாலும் புகையை வெளியிடாத வகையிலான ஒரு வகை தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்டதாகும்.
- இது திரி அடுப்பு எனும் தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்டதாகும்.
- இது சீமா பாய்லர்ஸ் எனும் நிறுவனத்துடன் இணைந்து உருவாக்கப்பட்டுள்ளது.



## 2060 ஆம் ஆண்டுக்குள் பருவநிலை அழிவு நிலையை நோக்கி நகரும் அண்டார்டிகா

- சமீபத்தில் அண்டார்டிகா கண்டத்திலிருந்து ஒரு பனிப் பாறை உடைந்து நகரத் தொடங்கியுள்ளது.
- தற்போதைக்கு இந்தப் பனிப்பாறை தான் உலகிலேயே மிகப்பெரியப் பனிப் பாறை ஆகும்.
- இதற்கு A-76 எனப் பெயரிடப் பட்டுள்ளது.
- இது 170 கி.மீ. நீளமும் 25 கி.மீ. அகலமும் உடையது.
- இந்தப் பனிப்பாறையானது ஐரோப்பிய விண்வெளி நிலையத்தின் கோபர்நிகஸ் சென்டினல் எனும் செயற்கைக் கோளினால் கண்டுபிடிக்கப்பட்டது.

*குறிப்பு*

- அண்டார்டிக்காவின் பனிக்கட்டிகளானது 2060 ஆம் ஆண்டுக்குள் பருவநிலை அழிவு நிலையை அடையும் என புதிய ஆய்வு ஒன்று கூறுகிறது.
- பருவநிலை அழிவுநிலை (Climate tipping) என்பது ஒரு அமைப்பில் பெரிய மாற்றங்களை ஏற்படுத்தும் வரம்பு நிலையாகும்.
- இந்த நிலையானது பருவநிலை அமைப்பில் மீள இயலா மாற்றமாக வரையறுக்கப் பட்டுள்ளது.

## சர்வதேச எரிசக்தி முகமையின் சிறப்பு அறிக்கை

- சர்வதேச எரிசக்தி முகமையால் "2050 ஆம் ஆண்டுக்குள் நிகர சுழிய நிலை – உலகளாவிய ஆற்றல் துறைக்கான செயல்திட்டம்" ('Net Zero by 2050 - A Roadmap for the Global Energy Sector') எனும் ஒரு அறிக்கையானது வெளியிடப் பட்டுள்ளது.
- 2050 ஆம் ஆண்டுக்குள் நிகர சுழிய நிலையை எவ்வாறு அடைவது என்பதற்கான உலகின் முதல் விரிவான ஆய்வு அறிக்கை இதுவாகும்.
- நிலையான மற்றும் மலிவான ஆற்றல் வழங்கீடுகளை உறுதி செய்தல், உலகளவில் ஆற்றலை பெறும் வாய்ப்பினை வழங்குதல் மற்றும் வலுவான பொருளாதார வளர்ச்சியை செயல்பெறச் செய்தல் போன்றவற்றை அந்த நிலை வழங்குவதை உறுதி செய்திடும்.
- புதைபடிம எரிபொருட்களுக்குப் பதிலாக சூரிய ஆற்றல் மற்றும் காற்று போன்ற புதுப்பிக்கத் தக்க ஆற்றல்களினால் நிறைந்த தூய்மையான, செயல்மிக்க மற்றும்

நெகிழ்திறனுடைய ஆற்றல் பொருளாதாரத்தினை உருவாக்குவதற்கான ஒரு செலவு குறைந்த பொருளாதார ரீதியில் உற்பத்தித் திறன் மிகுந்த ஒரு செயல்திட்டத்தை இது முன்வைக்கிறது.

- மேலும் நிகர சுழிய நிலையை அடைவதில் உயிரி ஆற்றல், கார்பன் உமிழ்வைக் கைப்பற்றுதல் மற்றும் செயல்பாட்டு மாற்றங்கள் ஆகியவற்றின் பங்கு போன்ற முக்கிய நிச்சயமற்ற நிலைமைகளையும் இந்த அறிக்கை ஆய்வு செய்துள்ளது.




## உள்நாட்டு இடப்பெயர்வு குறித்த உலகளாவிய அறிக்கை – 2021

- 2021 ஆம் ஆண்டு உள்நாட்டு இடப்பெயர்வு குறித்த உலகளாவிய அறிக்கையினை உள்நாட்டு இடப்பெயர்வு கண்காணிப்பு மையமானது வெளியிட்டுள்ளது.




Figure 1: New displacements by conflict, violence and disasters per region

- 2020 ஆம் ஆண்டில் 40.5 மில்லியன் எண்ணிக்கையில் புதிய உள்நாட்டு இடப்பெயர்வுகள் நிகழ்ந்துள்ளதாக இந்த அறிக்கை கூறுகிறது.
- கடந்த 10 ஆண்டுகளில் இதுவே உயர்ந்தபட்ச வருடாந்திர பதிவாகும்.
- இவை உலகளவில் பேரிடர்களாலும் வன்முறைகளாலும் தூண்டடப்பட்டுள்ளன.
- 9.8 மில்லியன் இடம்பெயர்வுகள் மோதல் மற்றும் வன்முறைகளால் தூண்டப் பட்டவை ஆகும்.
- கடந்த ஆண்டில் பேரிடரால் ஏற்பட்ட 30.7 மில்லியன் இடப்பெயர்வுகளில் கிட்டத்தட்ட அனைத்துமே வானிலை சார்ந்த நிகழ்வுகளால் தூண்டப்பட்டுள்ளன.
- புயல்கள் மற்றும் வெள்ளங்கள் ஆகியவையே பெரும்பாலான இடப்பெயர்வுகளுக்கும் காரணமாக இருந்தன.
- 2020 ஆம் ஆண்டின் மே மாதத்தில் கிழக்கு இந்தியா மற்றும் வங்காள தேசத்தில் கரையைக் கடந்த அம்பன் புயலானது வங்காளதேசம், இந்தியா, பூடான் மற்றும் மியான்மர் ஆகிய நாடுகள் முழுவதும் கிட்டத்தட்ட 5 மில்லியன் இடப்பெயர்வுகளைத் தூண்டியுள்ளது.

## பான்னி புல்வெளிகளில் மேய்ப்பர்களுக்கான உரிமைக்கு தேசியப் பசுமைத் தீர்ப்பாயம் ஆதரவு

- சுற்றுச்சூழல் ரீதியாக உணர்திறன் வாய்ந்த பான்னி புல்வெளிகளில் 2018 ஆம் ஆண்டு மே மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆக்கிரமிப்பிற்கு எதிராக மல்தாரி சமூகத்தினர் வழக்குத் தொடுத்தனர்.
- 6 மாதத்திற்குள் குஜராத்தின் பான்னி புல்வெளிகளில் மேற்கொள்ளப்பட்ட அனைத்து ஆக்கிரமிப்புகளையும் அகற்றுமாறு தேசிய பசுமைத் தீர்ப்பாயம் ஆணையிட்டுள்ளது.
- மேலும் ஒரு மாதத்திற்குள் இதற்கான செயல்திட்டத்தைத் தயார் செய்யுமாறும் இணைக் குழுவிற்கு உத்தரவிட்டுள்ளது.
- 2006 ஆம் ஆண்டு வன உரிமைகள் சட்டத்தின் பிரிவு 3 என்ற பிரிவின் படி பான்னி புல்வெளிப் பகுதிகளில் சமூகக் காடுகளைப் பாதுகாப்பதற்காக மல்தாரி சமூகத்தினருக்கு வழங்கப்பட்டுள்ள உரிமையானது தொடர்ந்து செல்லுபடியாகும் எனவும் தீர்ப்பாயம் தெரிவித்துள்ளது.
- மல்தாரி சமூகத்தினர் இந்தியாவின் குஜராத் பகுதியில் வாழும் பழங்குடியின கால்நடை வளர்ப்புச் சமூகத்தினர் ஆவர்.
- மல்தாரி சமூகத்தினர் பான்னி வகை எருமைகளை வளர்க்கின்றனர்.
- பான்னி எருமைகள் இந்தப் பகுதியைப் பிறப்பிடமாகக் கொண்ட ஒரு உள்ளூர் இனம் ஆகும் (endemic).

## பாதுகாக்கப்பட்ட கோள் அறிக்கை 2020

- 2010 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் அமைப்பின் உயிரிப் பல்லுயிர்ப் பெருக்க மாநாட்டில் உலக நாடுகள் ஏற்றுக் கொண்ட இலட்சிய இலக்குகளை அடைவதில் உலக நாடுகள் அடைந்த முன்னேற்றத்தினைப் பற்றி பாதுகாக்கப்பட்ட கோள் அறிக்கை 2020 எனத் தலையிடப்பட்ட ஒரு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

- இந்த அறிக்கையானது உலகளாவிய ஒரு இலாப நோக்கமற்ற அமைப்பான தேசிய புவியியல் சமூக அமைப்பின் உதவியுடன் ஐக்கிய நாடுகள் அமைப்பின் சுற்றுச்சூழல் திட்ட அமைப்பின் உலக வளங்காப்பு கண்காணிப்பு மையம் மற்றும் சர்வதேச இயற்கைப் பாதுகாப்பு மன்றம் ஆகியவற்றால் வெளியிடப்படுகிறது.
- இது உலகம் முழுவதுமுள்ள பாதுகாக்கப்பட்ட மற்றும் வளங்காப்புப் பகுதிகளின் நிலையை மதிப்பிடும் வகையில் ஈராண்டிற்கு ஒருமுறை வெளியாகும் அறிக்கை ஆகும்.

### ஒரு வருடம் முதல் பத்தாண்டு காலம் வரையிலான உலகளாவிய பருவநிலை அறிக்கை

- இந்த அறிக்கையானது உலக வானிலை அமைப்பின் தலைமையிலான Met Office எனும் ஐக்கிய ராஜ்ஜியத்தைச் சேர்ந்த அமைப்பினால் வெளியிடப்பட்டதாகும்.
- இந்த அறிக்கை கூறியுள்ளது படி 2021-2025 ஆகிய ஆண்டுகளுக்குள் 1.5ºC வெப்பநிலை என்ற உயர்வு வரம்பினை உலகம் தற்காலிகமாக மிஞ்சும்.
- வருடாந்திர சராசரி உலக வெப்பநிலையானது தொழிற்துறை காலத்திற்கு முந்தைய வெப்பநிலைக்கும் அதிகமான 1.5ºC எனும் வரம்பினை மிஞ்சுவதற்கு 40% வாய்ப்பு உள்ளது .
- 1.5ºC என்பது பாரீஸ் பருவநிலை உடன்படிக்கையின் படி ஒரு எச்சரிக்கை வரம்பு ஆதாகும்.
- 2021-2025 என்ற காலகட்டத்தில் ஏதேனும் ஒரு வருடமானது வரலாற்றிலேயே மிகவும் அதிக வெப்பமானதாக இருப்பதற்கு 90% வாய்ப்பு உள்ளது.
- வருடாந்திர சராசரி உலக வெப்பநிலையானது 2021-25 என்ற காலகட்டத்திற்குள் தொழில்துறை காலத்திற்கு முந்தைய வெப்பநிலையைவிட 1ºC அதிக வெப்பமாக இருக்கும்.

# மாநிலச் செய்திகள்

### மின்னணுப் பஞ்சாயத்து புரஷ்கர் விருது 2021

- உத்தரப் பிரதேச அரசானது 2021 ஆம் ஆண்டிற்கான மின்னணுப் பஞ்சாயத்து (இ-பஞ்சாயத்து) புரஷ்கர் விருதினை வென்றுள்ளது.
- இதனையடுத்து அசாம் மற்றும் சத்தீஸ்கர் ஆகியவை இரண்டாமிடத்தில் உள்ளன.
- ஒடிசா மற்றும் தமிழ்நாடு ஆகியவை மூன்றாமிடத்தில் உள்ளன.
- ஒவ்வொரு வருடமும் கிராமப் பஞ்சாயத்துகளில் அதிகளவில் தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்த வழிவகை செய்யும் மாநிலங்களுக்கு மத்திய கிராமப் பஞ்சாயத்து அமைச்சகம் இந்த விருதுகளை வழங்குகிறது.

## மேகாலயாவில் சௌரோபோட்ஸ் டைனோசரின் எலும்புகள்



- இந்தியப் புவியியல் ஆய்வு மையத்தின் அறிவியலாளர்கள் சமீபத்தில் சௌரோபோட்ஸ் (தொன்மா) டைனோசர்களின் (Sauropod dinosaurs) எலும்புகளுடைய புதை படிமங்களைக் கண்டறிந்துள்ளனர்.
- இவை 100 மில்லியன் ஆண்டுகள் பழமையானவை.
- இந்த டைனோசர் எலும்புகள் மேகாலயாவின் மேற்கு காசி மலைக்குன்றுகள் மாவட்டத்தில் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன.
- இந்தப் பகுதியில் சௌரோபோட்ஸ் டைனோசர்கள் இருந்ததற்கான புதை படிமங்கள் கண்டுபிடிக்கப் படுவது இதுவே முதல் முறையாகும்.

## அசாமில் நிலநடுக்கம்

- அசாமின் சோனித்பூர் பகுதியில் அடிக்கடி நிலநடுக்கம் ஏற்படுவதற்கு ஒரு அசாதாரணமான நிலவியல் அமைப்பே (lineament) முக்கியக் காரணமாகும்.
- இந்தப் பகுதியில் கீழ்க்காணும் காரணங்களால் அடிக்கடி நிலநடுக்கம் ஏற்படுவதாக இந்தியப் புவியியல் ஆய்வு மையம் (GSI – Geological Suvey of India) கூறுகிறது.
    - அத்தெர்கேத் பிளவின் கிழக்கு – மேற்கு போக்கு
    - கோபிளி பிளவின் வடமேற்கு – தென்கிழக்கு போக்கு
    - வடக்கு-ற்கு போக்கில் அமைந்த நிலவியல் அமைப்பு
- அசாமில் ஏற்பட்ட சமீபத்திய நிலநடுக்கத்திற்கு இந்த நிலவியல் அமைப்பே முக்கிய காரணம் என்று GSI (Geological Survey of India) கூறியுள்ளது.
- இது நிலப்பரப்பில் நேராக அமைந்த ஒரு நில வடிவாகும் (புலப்படக் கூடிய வரி (அ) நீண்ட விரிசல் (அ) நீளமான புலப்படக் கூடிய பள்ளம் போன்றதாகும்).
- முகடுகளும் பள்ளங்களும் கூட இத்தகைய நிலவியல் வடிவமைப்புகளை (Lineament) குறிக்கின்றன.

## கிளைபோசேட்டு மருந்துகளுக்கு தடை – தெலுங்கானா

- ❖ தெலுங்கானா மாநில அரசானது சமீபத்தில் கிளைபோசேட்டின் பயன்பாட்டிற்குத் தடை வித்துள்ளது.
- ❖ கிளைபோசேட்டு என்பது பருத்தி பயிரிடப்படும் நிலங்களில் வளரும் களைகளை நீக்குவதற்குப் பயன்படுத்தப்படும் ஒரு சர்ச்சைக்குரிய களைக் கொல்லியாகும்.
- ❖ புற்றுநோயை உண்டாக்கக் கூடியது என்பதால் கிளைபோசேட்டுகளைப் பயன்படுத்துவதற்கு தடை விதிக்கப் பட்டுள்ளது.
- ❖ மேலும் HTBt பருத்தியை சட்டவிரோதமான முறையில் பயிரிடுவதைத் தடுப்பதற்காகவும் இதற்கு தடை விதிக்கப் பட்டுள்ளது.
- ❖ கிளைபோசேட்டு மருந்தானது இலைகளின் மூலம் உறிஞ்சப் படுகின்றன.
- ❖ இவை வேர்களால் குறைந்த அளவிலேயே உறிஞ்சப் படுகின்றன.
- ❖ 2015 ஆம் ஆண்டில் உலக சுகாதார அமைப்பானது கிளைபோசேட்டு மருந்துகளை “மனிதர்களில் புற்றுநோயை உண்டாக்கக் கூடும் மருந்துகள்” எனும் 2A பிரிவின் கீழ் வகைப்படுத்தியுள்ளது.




## வனத் தடாகங்கள் (குளங்கள்) – இமாச்சலப் பிரதேசம்

- ❖ இமாச்சலப் பிரதேச அரசானது “வனத் தடாகங்களை” (Forest Ponds) உருவாக்கி வருகிறது.
- ❖ இவை நிலத்தடி நீர் குறைவதைத் தடுப்பதற்காகவும் மழைநீரைச் சேமிப்பதற்காகவும் உருவாக்கப் படுகின்றன.

- அந்த மாநில அரசானது பர்வத் தாரா எனும் திட்டத்தின் கீழ் வனத் துறையின் உதவியுடன் நீர்வள ஆதாரங்களை மீளச் செய்வதற்கும் நீர்ப்பிடிப்புப் பகுதிகளைப் புதுப்பிப்பதற்குமான பணிகளைத் தொடங்கியுள்ளது.
- பர்வத் தாரா என்ற திட்டமானது நீர்நிலைகளை நீண்ட காலங்களுக்கு வற்றாமல் தடுப்பதன் மூலம் நீர்மட்டத்தை உயர்த்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## ஹர் கர் ஜல் – புதுச்சேரி

- ஒவ்வொரு கிராமப்புற வீடுகளுக்கும் குடிநீர்க் குழாய் இணைப்பினை ஏற்படுத்தியதன் மூலம் புதுச்சேரியானது “ஹர் கர் ஜல்” ஒன்றியப் பிரதேசமாக உருவெடுத்துள்ளது.
- கோவா, தெலுங்கானா மற்றும் அந்தமான் & நிக்கோபர் தீவுகள் ஆகியவற்றையடுத்து ஒவ்வொரு கிராமப்புற வீடுகளுக்கும் குடிநீர்க் குழாய் வசதியை ஏற்படுத்தி தந்த நான்காவது மாநிலம்/ஒன்றியப் பிரதேசம் புதுச்சேரியாகும்.
- ஹர் கர் ஜல் என்பது ஜல் ஜீவன் திட்டத்தின் கீழ் இயங்கும் ஒரு திட்டமாகும்.




## மிஷன் ஹவுஸ்லா

- உத்தரகாண்ட் காவல் துறையானது “மிஷன் ஹவுஸ்லா” எனப்படும் ஒரு இயக்கத்தை தொடங்கியுள்ளது.
- கோவிட்-19 தொற்றினால் பாதித்த நோயாளிகளுக்கு ஆக்சிஜன், படுக்கைகள் மற்றும் பிளாஸ்மா ஆகியவற்றைப் பெற உதவுவதே இதன் நோக்கமாகும்.
- இதன் ஒரு பகுதியாக ரேஷன் பொருட்களைப் பெறுதல், அவசர ஊர்திச் சேவையை ஏற்பாடு செய்தல் மற்றும் இறந்தவர்களின் உடல்களைத் தகனம் செய்தல் போன்றவற்றில் காவல் துறையானது பொது மக்களுக்கு உதவி செய்யும்.

## குரங்குகளின் கணக்கெடுப்பு – ஹரியானா

- இந்திய வனவிலங்கு நிறுவனமானது சமீபத்தில் ஹரியானா மாநிலத்தில் "குரங்குகள் கணக்கெடுப்பினை" மேற்கொண்டது.
- இந்தக் கணக்கெடுப்பானது ஹரியானா மாநிலத்தினுடைய 2021 ஆம் ஆண்டின் வனவிலங்குக் கணக்கெடுப்பின் ஓர் அங்கமாகும்.
- இந்திய வனவிலங்கு நிறுவனமானது உள்ளூர் மக்களை இந்தக் கணக்கெடுப்பில் பங்கேற்க அழைப்பு விடுத்தது, இந்த கணக்கெடுப்பின் தனித்துவம் வாய்ந்த ஒரு அம்சமாகும்.
- சுமார் 600 பேர் மூன்று நாட்களில் 6000 குரங்குகளைக் கண்டனர்.
- இந்தக் கணக்கெடுப்பானது முதல்முறையாக 'Wildlife Census Haryana' எனப்படும் ஒரு செயலியைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டது.
- இந்தச் செயலியானது இந்திய வனவிலங்கு ஆணையத்தினால் உருவாக்கப்பட்டது.

## மகாராஷ்டிரா மிஷன் ஆக்சிஜன் திட்டம்

- மகாராஷ்டிரா மாநில அரசானது சமீபத்தில் "மகாராஷ்டிரா மிஷன் ஆக்சிஜன்" என்ற திட்டத்தைத் தொடங்கி உள்ளது.
- இந்தத் திட்டத்தின் கீழ், மாநிலத்தின் தினசரி ஆக்சிஜன் உற்பத்தி அளவானது 3000 டன்களாக உயர்த்தப் படும்.
- இத்திட்டத்திற்காக மாநில அரசானது 200 கோடி ரூபாயினை ஒதுக்கியுள்ளது.
- ஆக்சிஜன் உற்பத்தி அலகுகளாக செயல்பட விரும்பும் தனியார் நிறுவனங்களுக்குச் சிறப்பு சலுகைகளை இது வழங்கும்.
- ஒரு நாளைக்கு 2,300 மெட்ரிக் டன் அளவு ஆக்சிஜன் உற்பத்தி செய்வது எனும் குறுகிய கால இலக்கானது அடுத்த ஆறு மாதங்களில் நிறைவேற்றப்படும்.

## COVAX வசதி – பஞ்சாப்

- கோவிட்-19 தடுப்பு மருந்து வழங்கீடுகளை அதிகரிக்கும் பொருட்டு COVAX என்ற வசதியில் இணைவதாக பஞ்சாப் அரசானது சமீபத்தில் அறிவித்துள்ளது.
- COVAX வசதியானது தற்போது வரையில் தேசிய அளவில் மட்டுமே செயல்பட்டு வருகிறது.
- தடுப்பூசி தொடர்பான தேசியவாதத்தைத் தடுப்பதற்காக COVAX செயல்படுகிறது.
- இது குறைந்த மற்றும் அதிக வருமானமுடைய நாடுகளுக்கும் கோவிட்-19 தடுப்பு மருந்துகள் சென்றடைவதை உறுதி செய்திடுவதை ஒரு நோக்கமாகக் கொண்டு செயல்படுகிறது.
- எனினும் இந்த வசதியில் ஒரு மாநிலமானது இணைய முடியுமா என்பது பற்றிய தெளிவான தகவல் இல்லை.

## கருப்புப் பூஞ்சை நோய் – ஹரியானா

- ஹரியானாவின் சுகாதாரத் துறை அமைச்சரான அனில் விஜ் அவர்கள் கருப்புப் பூஞ்சை நோயானது ஒரு அறிவிக்கப்பட்ட நோயாகப் பட்டியலிடப்பட்டுள்ளதாக அறிவித்தார்.
- இந்த நோயானது கண்டறியப் பட்டால் மருத்துவர்கள் சம்பந்தப் பட்ட தலைமை மருத்துவ அதிகாரியிடம் தெரிவிக்க வேண்டும்.
- அறிவிக்கப்பட்ட நோய்களாவன அறிவிக்கப்பட வேண்டிய நோய்கள் எனவும் அழைக்கப் படுகின்றன.
- இதன் பொருள் இது மாதிரியான நோய்கள் ஏற்பட்டால் சட்டப்படி அரசிடம் தெரிவிக்க வேண்டும் என்பதாகும்.

### *கருப்புப் பூஞ்சை*

- கோவிட்-19 தொற்றானது சில நோயாளிகளின் உடலில் மியூகோர்மைகோசிஸ் (அ) கருப்புப் பூஞ்சை என்ற ஒரு தொற்றினைத் தூண்டியுள்ளது.
- மியூகோர்மைகோசிஸ் என்பது சுற்றுச்சூழலில் காணப்படும் மியூகோர்மைசெடிஸ்ஸ் எனப்படும் பூஞ்சைகளால் உண்டாக்கப்படும் தீவிரமான அதே சமயம் அரிதான ஒரு பூஞ்சைத் தொற்றாகும்.
- இது முன்கூட்டியே கண்டறியப்பட்டால் கண்பார்வை இழப்பு, மூக்கு (அ) தாடையில் ஏற்படும் பாதிப்பு போன்றவற்றையும் மூளை பாதிப்படைவதால் ஏற்படும் 50% உயிரிழப்பினையும் தடுக்க இயலும்.
- இது முக்கியமாக உடல்நலக் குறைபாடு உள்ளவர்கள் (அ) கிருமிகளையும் நோய்களையும் எதிர்த்திட வேண்டி உடலின் திறனைக் குறைக்கும் வகையிலான மருந்துகளை உட்கொள்பவர்கள் போன்றோரைத் தாக்குகிறது.

## முதலாவது வேளாண் பொருள் ஏற்றுமதி வசதி வழங்கும் மையம்

- மகாராஷ்டிரா வர்த்தகத் தொழில்துறை மற்றும் வேளாண் மன்றம் மற்றும் தேசிய வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி (NABARD - National Bank for Agriculture and Rural Development) ஆகியவை இணைந்து முதலாவது வேளாண் பொருள் ஏற்றுமதி வசதி வழங்கும் மையத்தினைத் தொடங்கியுள்ளன.
- மகாராஷ்டிர மாநிலத்தின் வேளாண் மற்றும் உணவுப் பொருட்களின் உற்பத்தியை அதிகரிப்பதில் இந்த மையமானது உறுதுணையாக செயல்படும்.
- மகாராஷ்டிரா மாநிலமானது,
    - அதிகளவில் வெங்காயம் உற்பத்தி செய்யும் மாநிலங்களுள் ஒன்றாக உள்ளது.
    - முன்னணி பருப்பு உற்பத்தி மாநிலமாக திகழ்கிறது.
    - மோட்டா தானிய (coarse cereals) உற்பத்தியில் இரண்டாமிடத்திலும்
    - சோயா பருப்பு, கரும்பு மற்றும் பருத்தி ஆகியவற்றின் உற்பத்தியில் இரண்டாவது இடத்திலும்
    - சூரியகாந்தி உற்பத்தியில் மூன்றாமிடத்திலும் உள்ளது.

## சட்டமேலவை – மேற்கு வங்காளம்

- ❖ மேற்கு வங்காள அரசானது சட்டமன்ற மேலவையை (விதான் பரிசத்) அமைக்க உள்ளது.
- ❖ சட்டமன்ற மேலவையை நிறுவுவதற்கு சட்டமன்ற கீழவையில் அதற்கான மசோதாவினைத் தாக்கல் செய்து அதற்கு ஆளுநரிடமிருந்து ஒப்புதல் பெற வேண்டும்.
- ❖ மேற்கு வங்காளத்தில் 1969 ஆம் ஆண்டு வரை மேலவையானது நடைமுறையில் இருந்தது.
- ❖ அரசியலமைப்புச் சட்டத்தின் 169வது சட்டப்பிரிவின் கீழ், ஒரு மாநிலத்தின் சட்டமன்ற கீழவையானது அங்கு சட்ட மேலவையை அமைப்பதற்காகவோ (அ) நீக்குவதற்காகவோ ஒரு தீர்மானத்தினைச் சிறப்புப் பெரும்பான்மையுடன் நிறைவேற்றியது என்றால் அந்த மாநிலத்தில் மேலவையை அமைக்கவோ (அ) நீக்கவோ வேண்டி ஒரு சட்டத்தினைப் பாராளுமன்றம் இயற்றலாம்.

## சுகாதாரம் மற்றும் ஆரோக்கிய நல மையங்களை நிறுவுவதில் கர்நாடகா முதலிடம்

- ❖ சுகாதாரம் மற்றும் ஆரோக்கிய நல மையங்களை நிறுவுவதில் முதலிடத்தினைப் பெற்று சிறந்த மாநிலமாக கர்நாடகா உருவெடுத்துள்ளது.
- ❖ ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின் கீழ், கிராமப்புறங்களில் விரிவான ஆரம்ப சுகாதார சேவைகளை இது வழங்க உள்ளது.
- ❖ 2,263 துணை சுகாதார மற்றும் ஆரோக்கிய நல மையங்களை அமைக்குமாறு மத்திய அரசு இலக்கு நிர்ணயித்திருப்பதாக அம்மாநில அரசு கூறியுள்ளது.
- ❖ மார்ச் 31 ஆம் தேதி வரை இந்த மாநிலத்தில் 3,300 மையங்கள் மேம்படுத்தப் பட்டு உள்ளன.
- ❖ இது நிர்ணயிக்கப்பட்ட இலக்கைவிட 146 சதவீதம் அதிகமாகும்.

## பொலிவுறு நகரங்கள் திட்டம் – ஜார்க்கண்ட்

- ❖ பொலிவுறு நகரங்கள் எனப்படும் ஸ்மார்ட் சிட்டி திட்டங்களை அமல்படுத்தும் செயல்முறையில் ஜார்க்கண்ட் மாநிலமானது முதலிடத்திற்கு முன்னேறியுள்ளது.
- ❖ மத்திய வீட்டுவசதி மற்றும் நகர விவகார அமைச்சகம் வெளியிட்ட சமீபத்திய தர வரிசையின் படி இது கூறப் பட்டுள்ளது.
- ❖ அதே சமயம் நூறு நகரங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் ஸ்மார்ட் சிட்டி திட்டங்களின் முன்னேற்ற நிலையில் ஜார்க்கண்ட் மாநிலத்தின் தலைநகரான ராஞ்சி 12வது இடத்திற்கு நகர்ந்துள்ளது.

## ஆயுஷ்மான் பாரத் – பிரதான் மந்திரி ஜன் ஆரோக்கிய யோஜனா ஆரோக்யஸ்ரீ

- ❖ ஆய்ஷ்மான் பாரத் – பிரதான் மந்திரி ஜன் ஆரோக்கிய யோஜனா திட்டத்தினை உடனடியாக அமல்படுத்த வேண்டி தேசிய சுகாதார வாரியமானது தெலுங்கானா அரசுடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொண்டுள்ளது.
- ❖ தெலுங்கானா அரசானது ஆயுஷ்மான் பாரத் திட்டத்தினை 'ஆரோக்யஸ்ரீ' எனும் தனது மாநிலத் திட்டத்துடன் இணைத்துக் கொண்டுள்ளது.
- ❖ அந்த இணைக்கப்பட்ட திட்டத்தின் புதிய பெயர் ஆயுஷ்மான் பாரத் பிரதான் மந்திரி ஜன் ஆரோக்ய யோஜனா ஆரோக்யஸ்ரீ என்பதாகும்.

- ஆயுஷ்மான் பாரத் திட்டத்தைத் தெலுங்கானா அரசு அமல்படுத்துவதோடுச் சேர்த்து தற்போது 33 மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்கள் இந்த திட்டத்தை அமல்படுத்துகின்றன.
- இந்தத் திட்டத்தின் கீழ் தகுதியுள்ளப் பயனாளிகளுக்கு இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலை மருத்துவ வசதிகளைப் பெறுவதற்காக வேண்டி ஒரு குடும்பத்திற்கு ஆண்டு ஒன்றுக்கு 5 லட்சம் ரூபாய் வரை இலவச சுகாதார நல சேவை வழங்கப்படும்.
- தனது பிரத்தியேக திட்டத்தைக் கொண்டிருக்கும் காரணத்தினால் மேற்கு வங்க மாநிலமானது இத்திட்டத்தை நிறைவேற்றுவதில்லை.

## கோவிட்-19 சம்பந்தப்பட்ட மருத்துவப் பொருட்கள் மீதான GST வரிகளைத் திரும்பச் செலுத்துதல்

- ஹரியானா மற்றும் குஜராத் ஆகிய மாநிலங்கள் அம்மாநிலம் சம்பந்தப்பட்ட மருத்துவப் பொருட்களுக்குச் செலுத்தப்பட்ட சரக்கு மற்றும் சேவை வரிகளைத் திரும்பச் செலுத்துவதாக அறிவித்த முதல் மாநிலங்களாக திகழ்கின்றன.
- ஆக்சிஜன் செறிவூட்டிகள், செயற்கை சுவாசக் கருவிகள் மற்றும் மருந்துகள் உள்ளிட்ட மருத்துவ வழங்கீட்டுப் பொருட்கள் அந்த மாநில அரசுகளுக்கு இலவசமாக வழங்கப் படும்.
- ஹரியானா மாநிலத்தில் ஜுன் 30 வரையிலும் குஜராத் மாநிலத்தில் ஜூலை 31 வரையிலும் இந்தத் தள்ளுபடியானது செல்லுபடியாகும்.

## வத்சல்ய யோஜனா

- உத்தரகாண்ட் மாநில முதல்வரான தீரத் சிங் ராவத் அவர்கள் முதலமைச்சர் வத்சல்ய யோஜனா எனும் திட்டத்தை அறிவித்தார்.
- இது கோவிட் – 19 தொற்றினால் பெற்றோரை இழந்த ஆதரவற்ற குழந்தைகளுக்கான திட்டமாகும்.
- இந்தத் திட்டத்தின் கீழ், அக்குழந்தைகளின் 21வது வயது வரை அவர்களின் பராமரிப்பு, கல்வி மற்றும் வேலை வாய்ப்பிற்கான பயிற்சி போன்றவற்றிற்கான செலவுகளை அரசே ஏற்கும்.
- இது போன்ற ஆதரவற்ற குழந்தைகளுக்கு மாதத்திற்கு 3000 ரூபாய் தொகையானது பராமரிப்பிற்கான கொடுப்பனவாக வழங்கப்படும் எனவும் அம்மாநில முதல்வர் அறிவித்தார்.

## ஆப்பிரிக்க ஊதா நிறப்பூச் செடி – மிசோரம்

- போபாலிலுள்ள இந்திய அறிவியல் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனமானது “ஆப்பிரிக்க ஊதா நிறப்பூச்செடி” (African Violet) எனும் புதிய ஒரு தாவர இனத்தினைக் கண்டறிந்துள்ளது.
- இது மிசோரத்தின் சில பகுதிகளிலும் அதனை ஒட்டியுள்ள மியான்மரின் சில பகுதிகளிலும் காணப் படுகிறது.

- போபாலின் இந்திய அறிவியல் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனமானது இந்தப் புதிய இனத்தினை "டிடிமோகார்டஸ் விக்கிஃபுன்கியே" (Didymocarpus Vickifunkiae) என குறிப்பிட்டுள்ளது.
- இவை "அருகி வரும் இனங்களாக" (endangered species) கருதப்படுகின்றன.



## புல்வாய் மான் – ஒடிசா


- கடந்த ஆறு ஆண்டுகளில் ஒடிசாவின் புல்வாய் மான்களின் (Blackbuck) எண்ணிக்கை இரட்டிப்பாகியுள்ளது.
- இந்த தகவல் தலைமை வன வளங்காப்பாளர் (வனவிலங்கு) வெளியிட்ட சமீபத்திய கணக்கெடுப்பின் படி கூறப்பட்டுள்ளது.
- இவ்வகை மான்கள் ஒடிசாவின் தெற்குப் பகுதியிலுள்ள கஞ்சம் மாவட்டத்தில் மட்டுமே காணப்படுகின்றன.
- சிவப்பு தரவுப் புத்தகத்தில் 'எளிதில் பாதிக்கப்படக்கூடிய' இனமாக இது சேர்க்கப் பட்டுள்ளது.
- ஒடிசா மற்றும் கஞ்சம் பகுதியில் இவ்வகை மான் ஆனது குருஷ் நஷ்ரா ம்ருகா (Krushnasara Mruga) என அறியப் படுகிறது.



# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## Where abouts – ஜீம்பா லஹிரி

- புகழ்பெற்ற அமெரிக்க நூலாசிரியரான ஜீம்பா லஹிரி "Where abouts" என தலைப்பிடப் பட்ட தனது புதிய புனைக் கதையினை வெளியிட்டுள்ளார்.
- இப்புத்தகம் "Ias Dove Mi Trovo" எனப்படும் ஒரு இத்தாலிய புனைக்கதையின் ஆங்கில மொழிப் பெயர்ப்பாகும்.
- அந்தப் புத்தகமும் ஜீம்பா லஹிரி எழுதிய புத்தகமே ஆகும்.
- இப்புத்தகம் 2018 ஆம் ஆண்டில் வெளியானது.




## ஆஸ்கார் விருது 2021

- 93வது அகாடெமி விருது வழங்கும் விழா ஏப்ரல் 25 அன்று நடைபெற்றது.
- இவ்விழாவானது லாஸ் ஏஞ்செல்சிலிலுள்ள டால்பி திரையரங்கம் மற்றும் யுனியன் ஸ்டேசன் ஆகிய இரு இடங்களிலிருந்து ஒளிப்பரப்பப் பட்டது.
- நொமேட்லாண்ட் படமானது சிறந்தத் திரைப்படம், சிறந்த இயக்குநர் (சோலி சாவோ, நொமேட்லாண்ட் – வெற்றியாளர்) மற்றும் சிறந்த நடிகை (மெக்டார்மண்ட்) ஆகியவற்றிற்காக ஆஸ்கார் விருதுகளை குவித்துள்ளது.
- "The Father" (தி ஃபாதர்) என்ற திரைப்படத்திற்காக சிறந்த நடிகர் விருதினை அந்தோனி ஹாப்கின்ஸ் பெற்று உள்ளார்.
- ஒளிப்பதிவு மற்றும் திரைப்பட வடிவமைப்பிற்காக டேவிட் பிஞ்செர்சின் "மேங்க்" (Mank) என்ற திரைப்படம் ஆஸ்கார் விருதினை வென்றது.

## மைக்கேல் கோலின்ஸ் மறைவு

- நிலவுக்கு அனுப்பப் பட்ட அப்பல்லோ 11 திட்டத்திற்கு விண்கல வீரராக (Pilot) இருந்து வழி நடத்திய அமெரிக்க விண்வெளி வீரரான மைக்கேல் கோலின்ஸ் சமீபத்தில் காலமானார்.
- இவர் தனது 90வது வயதில் உயிரிழந்தார்.
- 1969 ஆம் ஆண்டில் மூன்று வீரர்களுடன் அனுப்பப் பட்ட அப்பல்லோ 11 திட்டத்தில் அந்த விண்கலத்துடன் இணைக்கப்பட்ட ஒரு கட்டுப்பாட்டுப் பெட்டகத்தினை (Module) இயக்கிட கோலின்ஸ் அனுப்பப் பட்ட நேரத்தில், நீல் ஆம்ஸ்ட்ராங் மற்றும் புஷ் ஆல்ட்ரின் ஆகிய இரு விண்வெளி வீரர்களும் நிலவில் நடந்த முதல் மனிதர்கள் எனும் பெருமையைப் பெற்றனர்.
- மற்ற இரு வீரர்களும் திரும்பி வரும் வரை கோலின்ஸ் அந்தக் கட்டுப்பாட்டுப் பெட்டகத்தினுள்ளேயே 21 மணி நேரம் தனியாக இருந்தார்.
- மைக்கேல் எழுதிய சுயசரிதை “Carrying The Fire” என்பதாகும்.



## சோலி ஜஹாங்கீர் சொராப்ஜி மறைவு

- மூத்த வழக்குரைஞரும் முன்னாள் இந்திய அரசுத் தலைமை வழக்குரைஞருமான சோலி ஜஹாங்கீர் சொராப்ஜி சமீபத்தில் காலமானார்.
- அவர் இந்திய அரசுத் தலைமை வழக்குரைஞராக 1989 முதல் 1990 வரையிலான காலத்திலும் மீண்டும் 1998 முதல் 2004 வரையிலான காலத்திலும் பணியாற்றினார்.
- இவர் பத்மவிபூசன் விருது (2002) பெற்றவராவார்.
- இவர் தனது 91வது வயதில் உயிரிழந்தார்.



## “Order of Rising Sun” விருது

- ஜப்பானிய அரசு சமீபத்தில் பெங்களூருவைச் சேர்ந்த ஜப்பானிய மொழி ஆசிரியரான சியாமளா கணேஷ் அவர்களுக்கு “Order of Rising Sun” (உதிக்கும் சூரியனின் ஆணை) என்ற விருதினை வழங்கியது.
- ஜப்பானியக் கலாச்சார மேம்பாடு, சர்வதேச உறவுகளில் சாதனை, அவர்கள் துறையின் முன்னேற்றம், மற்றும் சுற்றுச்சூழல் வளங்காப்பு போன்றவற்றில் மகத்தான பணி ஆற்றியவர்களுக்காக இந்த விருது வழங்கப்படுகிறது.
- இந்த விருது ஜப்பானிய அரசால் வழங்கப்படும் மூன்றாவது உயரிய விருதாகும்.

## குரு தேக் பகதூரின் 400வது பிரகாஷ் பூரப்

- 2021 ஆம் ஆண்டு மே 01 அன்று இந்தியா குரு தேக் பகதூரின் 400வது பிரகாஷ் பூரப் தினத்தினைக் கொண்டாடியது.
- இவர் 9வது சீக்கிய மத குரு ஆவார்.
- இவர் 1621 ஆம் ஆண்டில் பஞ்சாபிலுள்ள அமிர்தசரசில் பிறந்தார்.



- இவர் குரு ஹர்கோபிந்த் சிங்கின் இளைய மகனாவார்.
- இவர் 115 பாடல்களை எழுதியுள்ளார், அவை குரு கிரந்த் சாகிப்பில் சேர்க்கப் பட்டு உள்ளன.
- ஔரங்கசீப்பின் ஆணையின்படி குருதேக் பகதூருக்கு மரண தண்டனை விதிக்கப் பட்டது.
- குரு தேக் பகதூருக்கு குருத்துவாரா சிஷ் கஞ்ச் சாகிப் (Gurudwara Sis Ganj Sahib) எனும் இடத்தில் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.
- குருதேக் பகதூரின் உடல் குருத்துவாரா ரக்கப் கஞ்ச் சாகிப் (Gurudwara Rakab Ganj Sahib) எனும் இடத்தில் தகனம் செய்யப்பட்டது.
- இவரது தியாகமானது ‘குரு தேக் பகதூரின் சாஹீதி திவஸ்’ (Shaheedi Divas of Guru Tegh Bahadur) என நினைவு கூறப்படுகிறது.
- இது ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 24 ஆம் தேதி அனுசரிக்கப் படுகிறது.

## நீதிபதி பிரஃபுல்லா சந்திர பந்த்

- தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் உறுப்பினரான நீதிபதி (ஓய்வு) பிரஃபுல்லா சந்திரா பந்த் அவர்கள், ஏப்ரல் 25 ஆம் தேதி முதல் அந்த ஆணையத்தின் செயல் அல்லது இடைக்கால தலைவராக செயல்படுவதற்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

- உச்சநீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதியான பந்த் அவர்கள் 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 22 அன்று தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் உறுப்பினராக நியமிக்கப் பட்டார்.
- இந்த ஆணையத்தின் தலைவர் பொறுப்பானது 2020 ஆம் ஆண்டு டிசம்பர் 02 ஆம் நாளன்று முன்னாள் இந்தியத் தலைமை நீதிபதி H.L. தத்துவின் பதவிக் காலம் முடிந்ததிலிருந்து காலியாகவே இருந்தது.

## சந்த்ரோ தோமர்

- "சூட்டர் தாதி" (Shooter Dadi) என்ற புனைப் பெயரோடு அழைக்கப்படும் துப்பாக்கி சுடும் வீரரான சந்த்ரோ தோமர் தனது 89வது வயதில் உயிரிழந்தார்.
- தோமர் துப்பாக்கியை முதன்முறையாக கையிலெடுத்த போது அவருக்கு வயது 60க்கும் மேலாகும், ஆனால் அதன் பிறகு அவர் மூத்த வீரர்களுக்கான பல தேசியப் போட்டிகளில் வெற்றி பெற்றார்.
- விருது பெற்ற பாலிவுட் திரைப்படமான "சாந்த் கி ஆன்ங்" எனும் திரைப்படமானது, துப்பாக்கியைக் கொண்டு துல்லியமாகச் சுடும் சந்த்ரோ தோமர் மற்றும் பிரகாசி தோமர் ஆகிய வீரர்களின் வாழ்க்கை வரலாற்றின் அடிப்படையில் உருவானதாகும்.



## யுனெஸ்கோ உலகப் பத்திரிக்கைச் சுதந்திர விருது 2021

- மரியா ரேசா என்பவர் 2021 ஆம் ஆண்டின் யுனெஸ்கோ/குயிலர்மோ கானோ உலகப் பத்திரிக்கைச் சுதந்திர விருதிற்காகத் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
- யுனெஸ்கோவின் கூற்றுப்படி, 25,000 டாலர் மதிப்பிலான இந்த விருதானது "குறிப்பாக ஆபத்தானத் தருணங்களில் பத்திரிக்கைச் சுதந்திரத்தைப் பாதுகாக்கவும் அதனை மேம்படுத்தவும் ஆற்றிய மகத்தானப் பங்களிப்பினை அங்கீகரிப்பதற்காக" வழங்கப் படுகிறது.
- இந்த விருதிற்கு கொலம்பியப் பத்திரிக்கையாளரான குயிலர்மோ கானோ ஐசாசா (Guillermo Cano Isaza) என்பவரின் நினைவாக இவ்வாறு பெயரிடப்பட்டுள்ளது.

## V. கல்யாணம் காலமானார்

- மகாத்மா காந்தியின் தனிச் செயலராக (personal secretary) இருந்த V. கல்யாணம் சமீபத்தில் காலமானார்.

- 1944 ஆம் ஆண்டு முதல் 1948 ஆம் ஆண்டு வரை இவர் மகாத்மா காந்தியின் தனிச் செயலராக இருந்துள்ளார்.
- காந்திஜி எழுதிய கடிதங்களையும், அவருடைய கையொப்பமுடைய காசோலையையும், காந்திஜியுடன் தொடர்புடைய இதர இலக்கிய நூல்களையும் கல்யாணம் பாதுகாத்து வைத்திருந்தார்.
- இவர் வங்காளம், இந்தி, தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் கற்றுக் தேர்ந்தவராவார்.
- இவர் மகாத்மா காந்தியின் தீவிரமான தொண்டராவார்.
- இவர் 1960களில் இராஜாஜியுடனும் தொடர்பில் இருந்தார்.




## அர்லைன் பச்த் குளோபல் விஷன் விருது 2021

- ஜம்மு & காஷ்மீர் உயர்நீதிமன்றத்தின் முன்னாள் தலைமை நீதிபதியான கீதா மிட்டல் அவர்கள் 2021 ஆம் ஆண்டிற்கான அர்லைன் பச்த் குளோபல் விஷன் விருதினைப் பெற தேர்ந்தெடுக்கப்பட்ட இருவருள் ஒருவராக அறிவிக்கப் பட்டு உள்ளார்.
- 2021 ஆம் ஆண்டு மே 07 ஆம் நாளன்று நடைபெற்ற இரு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் IAWJ (International Association of Women Judges) என்ற மாநாட்டின் காணொலி மூலமான துவக்க விழாவின் போது இந்த விருதானது வழங்கப்பட்டு உள்ளது.
- இவர் இந்த விருதினை மெக்சிகோவைச் சேர்ந்த மார்கரீட்டா லூனா ரமோசுடன் இணைந்து பெறுகிறார்.



- சர்வதேச பெண் நீதிபதிகள் கூட்டமைப்பானது (Internation Association of Women Judges - IAWJ) 2016 ஆம் ஆண்டில் இந்த விருதினை உருவாக்கியது.
- நீதிபதி மிட்டல் அவர்கள் இந்த விருதினைப் பெறும் முதல் இந்திய நீதிபதி ஆவார்.
- நீதிமன்றங்களின் அமர்வு / ஓய்வு பெற்ற நீதிபதிகள், IAWJ அமைப்பிற்கு ஆற்றியப் பங்களிப்பிற்கு அங்கீகாரம் அளிப்பதற்காக இந்த விருதானது வழங்கப்படுகிறது.

## டாக்டர் பிலிப்போஸ் மார் கிரைஸ்டோம் காலமானார்



- கேரளாவில் உள்ள மலங்கராவின் மார் தோமா சிரியன் தேவாலயத்தின் முன்னாள் தலைவரும் இந்தியாவிலேயே நீண்ட காலம் பிஷப்பாக சேவையாற்றியவருமான டாக்டர் பிலிப்பேஸ் மார் கிரைஸ்டோம் சமீபத்தில் காலமானார்.
- அவருடைய வயது 103 ஆகும்.
- குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் அவர்கள் 2018 ஆம் ஆண்டில் மார் கிரைஸ்டோமுக்கு பத்ம பூசன் விருதினை வழங்கினார்.
- இவர் 68 ஆண்டுகள் பிஷப்பாகப் பணியாற்றி உள்ளார்.

## கமி ரீட்டா ஷெர்பா



- நேபாளத்தைச் சேர்ந்த மலையேறும் வீரரான கமி ரீட்டா ஷெர்பா (52 வயது) அவர்கள் உலகின் உயரமான மலைச்சிகரமான எவரெஸ்ட் சிகரத்தில் 25வது முறையாக ஏறி சாதனை படைத்துள்ளார்.
- எவரெஸ்ட் சிகரத்தை பல முறை ஏறியதற்கான தனது சொந்த சாதனையை அவரே முறியடித்துள்ளார்.
- இவர் 2019 ஆம் ஆண்டில் 24வது முறையாக எவரெஸ்ட் சிகரத்தில் ஏறினார்.
- இவர் 1994 ஆம் ஆண்டு மே மாதத்தில் முதல் முறையாக எவரெஸ்ட் சிகரத்தில் ஏறினார்.

## அனுபம் கேர் – சிறந்த நடிகர் விருது

- நியூயார்க்கில் நடைபெற்ற சர்வதேச திரைப்பட விழாவில் 'Happy Birthday' எனும் குறும்படத்தில் நடித்ததற்காக அனுபம் கேர் என்பவருக்கு சிறந்த நடிகருக்கான விருது வழங்கப் பட்டது.
- இந்தப் படத்தின் இயக்குநர் பிரசாத் கடம் என்பவராவார்.
- அதன் தயாரிப்பு நிறுவனமானது FNP மீடியா ஆகும்.
- இந்த திரைப்படமானது சிறந்த குறும்படத்திற்கான விருதினையும் வென்றுள்ளது.

## மனோஜ் தாஸ் சர்வதேச இலக்கிய விருது

- ஒடிசா அரசானது புகழ்பெற்ற இலக்கிய எழுத்தாளரான (Literature) மனோஜ் தாஸ் அவர்களின் நினைவாக "மனோஜ் தாஸ் சர்வதேச இலக்கிய விருதினை" வழங்க உள்ளதாக ஒடிசா முதலமைச்சர் நவீன் பட்நாயக் அறிவித்துள்ளார்.
- ஆங்கில இலக்கியத்தில் ஆக்கப்பூர்வமான பங்களிப்பினை ஆற்றியதற்காக ஒடிசாவைச் சேர்ந்த இலக்கிய எழுத்தாளர்களுக்கு ஒவ்வோர் ஆண்டும் இந்த விருதானது வழங்கப்படும்.
- உயர்நிலைப் பள்ளி மாணவர்களிடையே ஒடியா மற்றும் ஆங்கில இலக்கியங்களைப் பற்றிய ஆர்வத்தை உருவாக்குவதற்காக வேண்டி, உயர் கல்விநிலை மாணவர்களின் ஆக்கப் பூர்வமானப் படைப்புகளுக்கு வேண்டி "மனோஜ்-கிசோர்" இலக்கியத் திறமை விருதானது வழங்கப்படும்.
- மனோஜ் தாஸ் அவர்கள் ஒடியா மற்றும் ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் நூல் இயற்றிய புகழ்பெற்ற இந்திய நூலாசிரியராவார்.
- இவர் சமீபத்தில் தனது 87வது வயதில் காலமானார்.

## K.R. கௌரி அம்மா மறைவு

- முன்னாள் அமைச்சரும் பழங்கால கம்யூனிஸ்ட் (பொதுவுடைமை) தலைவருமான K.R. கௌரி அம்மா அவர்கள் திருவனந்தபுரத்தில் காலமானார்.
- இவர் ஆலப்புழா மாவட்டத்தில் 1919 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 14 ஆம் நாள் பிறந்தார்.
- 1957 ஆம் ஆண்டில் கேரள சட்டசபைக்கான முதல் தேர்தல் நடைபெற்ற போது கௌரி அம்மா அவர்கள் மாநிலத்தின் முதல் வருவாய்த்துறை அமைச்சராக தேர்ந்தெடுக்கப்


பட்டார்.

- இவர் தனது வாழ்நாளில் 17 தேர்தல்களில் போட்டியிட்டு அவற்றுள் அவர் 13 தேர்தல்களில் வெற்றி பெற்று உள்ளார்.
- இவர் 6 அரசுகளில் அமைச்சர் பதவியினை வகித்திருந்தார்.



## 15வது சேக் சையது புத்தக விருது

- மும்பையில் பிறந்த டாக்டர் தஹேரா குத்புதீன் என்பவர் சிகாகோ பல்கலைக் கழகத்தில் அரபு மொழி இலக்கியப் பேராசியராகப் பணியாற்றுபவராவார்.
- இவர் 15வது சேக் சையது புத்தக விருதினைப் பெற்ற இந்திய வம்சாவளியைச் சேர்ந்த முதல் நபராவார்.
- இந்த விருதானது அரபு நாடுகளின் நோபல் பரிசாக கருதப்படுகிறது.
- "Arabic Oration – Art and Foundation" எனும் தனது சமீபத்திய புத்தகத்திற்காக இவருக்கு இந்த விருது வழங்கப் பட்டுள்ளது.
- இந்தப் புத்தகமானது 2019 ஆம் ஆண்டில் 'லெய்டன் ப்ரில் அகாடெமிக் பப்ளிசர்ஸ்' எனும் நிறுவனத்தினால் வெளியிடப்பட்டது.



## 2021 ஆம் ஆண்டு உலக உணவுப் பரிசு



- டாக்டர் சகுந்தலா ஹரக்சிங் தில்ஸ்டெட் (Dr Shakuntala Haraksingh Thilsted) என்பவர் 2021 ஆம் ஆண்டிற்கான உலக உணவுப் பரிசினைப் பெற்றுள்ளார்.
- இவர் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த உலகளாவிய ஊட்டச்சத்து நிபுணராவார்.
- மீன்வளர்ப்பு மற்றும் உணவு முறைகளில் முழுமையான, ஊட்டச்சத்து நுண்ணுணர்வுடைய அணுகுமுறைகளை உருவாக்குவதில் அவர் மேற்கொண்ட மகத்தான ஆராய்ச்சிக்காக இந்த விருதானது வழங்கப்பட்டுள்ளது.
- உலக உணவுப் பரிசானது உணவு மற்றும் வேளாண்மை போன்ற துறைகளில் மேற்கொள்ளப்பட்ட சாதனைகளுக்கு அங்கீகாரம் வழங்குவதை நோக்கமாகக் கொண்டதாகும்.
- உலக உணவுப் பரிசானது கடந்த ஆண்டிலும் ஒரு இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவருக்கே வழங்கப்பட்டது.
- 2020 ஆம் ஆண்டில் உலக உணவுப் பரிசானது இந்தியாவில் பிறந்து வளர்ந்த டாக்டர் ரத்தன் லால் என்பவருக்கு வழங்கப்பட்டது.
- இயற்கை வளங்களையும் பாதுகாத்து காலநிலை மாற்றங்களையும் எதிர்கொள்ளும் வகையில் உணவு உற்பத்தியை அதிகரிப்பதற்காக மண்ணினை அடிப்படையாகக் கொண்ட ஒரு அணுகு முறையை உருவாக்கியதற்காக இவருக்கு இந்த விருதானது வழங்கப்பட்டது.
- உலக உணவுப் பரிசானது 1986 ஆம் ஆண்டில் அமைதிக்கான நோபல் பரிசினைப் பெற்ற நார்மன் போர்லாஹ் என்பவரால் உருவாக்கப் பட்டது.
- தற்சமயம் இது உலக உணவுப் பரிசு அறக்கட்டளை அமைப்பினால் வழங்கப் படுகின்றது.

## நுக்லு ஃபோம் – விட்லே விருது

- 2021 ஆம் ஆண்டின் விட்லே விருதானது நாகலாந்தின் நுக்லு ஃபோம் என்பவருக்கு வழங்கப் பட்டுள்ளது.
- இந்த விருதினைப் பெறும் முதல் இந்தியர் இவராவார்.
- நுக்லு ஃபோம் அவர்கள் “நாகாலாந்தின் அமுர் ஃபால்கன் மனிதன்” (Amur Falcon Man of Nagaland) எனப் பிரபலமாக அறியப்படுகிறார்.

- விட்லே விருதுகளானது “கிரீன் ஆஸ்கார்” (பசுமை ஆஸ்கார்) எனவும் அழைக்கப் படுகிறது.
- விட்லே விருதுகள் ஆண்டுதோறும் “Whitley Fund for Nature” எனும் அமைப்பினால் வழங்கப் படுகிறது.
- அடிமட்ட நிலையிலுள்ள வளங்காப்பு தலைவர்களுக்கு அங்கீகாரம் அளிப்பதற்காக இந்த விருதானது வழங்கப் படுகிறது.



## V. சந்திரசேகர் மறைவு

- மூன்று முறை டேபிள் டென்ஸ் சாம்பியன் பட்டம் வென்றவரும் முன்னாள் சர்வதேச டேபிள் டென்னிஸ் வீரருமான V. சந்திரசேகர் சமீபத்தில் காலமானார்.
- இவர் தமிழக டேபிள் டென்னிஸ் கூட்டமைப்பின் தற்போதைய தலைவராக இருந்தார்.
- இவர் 1982 ஆம் ஆண்டில் அர்ஜுனா விருதினைப் பெற்றவராவார்.
- சீதா ஸ்ரீகாந்தின் உதவியுடன் சந்திரசேகர் தனது சுயசரிதையான ‘My fightback from Death’s Door’ என்ற புத்தகத்தை எழுதி உள்ளார்.

## ஜசிந்தா அர்டெர்ன்

- நியூசிலாந்தின் பிரதமரான ஜசிந்தா அர்டெர்ன் அவர்கள் 2021 ஆம் ஆண்டிற்கான உலகின் 50 பெருந்தலைவர்கள் பட்டியலில் முதலிடத்தில் உள்ளார்.
- இந்தப் பட்டியலானது Fortune என்ற இதழால் வெளியிடப்படுகிறது.
- 2021 ஆம் ஆண்டிற்கான உலகின் இந்தப் பட்டியலானது வருடந்தோறும் வெளியிடப் படும் இப்பட்டியலின் 8வது பதிப்பாகும்.
- கோவிட்-19 பெருந்தொற்றின் எதிர்பாராத சூழ்நிலைகளில் சில மாற்றங்களை உருவாக்கிய பிரபலமான மற்றும் பிரபலமற்ற தலைவர்களைக் கொண்டாடும் வகையில் இந்தப் பட்டியல் வெளியிடப்படுகிறது.
- சீரம் இந்திய நிறுவனத்தின் தலைமை நிர்வாக இயக்குநரான அதார் பூனாவாலா அவர்கள் இந்தப் பட்டியலின் முதல் 10 இடங்களில் இடம் பெற்ற ஒரே இந்தியர் ஆவார்.
- இவர் 10வது இடத்தினைப் பெற்றுள்ளார்.





## மிங்க்மா தென்ஜி செர்பா

- ❖ நேபாளத்தைச் சேர்ந்த மலை ஏறும் வீரர் ஒருவர், ஒரே பருவத்தின் குறைந்த காலக் கட்டத்தில் எவரெஸ்ட் சிகரத்தின் மீது இரண்டு முறை ஏறி சாதனை ஒன்றைப் படைத்துள்ளார்.
- ❖ மிங்க்மா தென்ஜி செர்பா அவர்கள் முதல்முறையாக மே 07 அன்று எவரெஸ்ட் சிகரத்தின் உச்சியை அடைந்தார்.
- ❖ பிறகு மே 11 ஆம் தேதியன்று காலையில் மீண்டும் உலகின் அந்த உயரமான மலையின் மீது ஏறி அவர் சாதனையினைப் படைத்து உள்ளார்.


## எழுத்தாளர் கி. ராஜநாராயணன்

- ❖ நவீனகால இலக்கியத்தின் பழம்பெரும் மனிதரும் தமிழில் சாகித்திய அகாடெமி விருது பெற்றவருமான கி. ராஜநாராயணன் சமீபத்தில் காலமானார்.
- ❖ இவரது வயது 98 ஆகும்.
- ❖ கோவில்பட்டி அருகே இடைசேவல் எனுமிடத்தில் பிறந்த இவர் கி.ரா என அறியப் படுகிறார்.
- ❖ “மாயமான்” எனும் அவருடைய முதல் சிறுகதையானது 1959 ஆம் ஆண்டில் “சரஸ்வதி” என்ற நாளிதழில் வெளியானது.
- ❖ அவரது கோபல்லபுரத்து மக்கள் எனும் புதினத்திற்காக 1991 ஆம் ஆண்டில் அவருக்கு சாகித்திய அகாடெமி விருது வழங்கப்பட்டது.
- ❖ கி.ரா. அவர்களின் முதல் புதினம் “கோபல்லகிராமம்” என்பதாகும்.
- ❖ கரிசல்காட்டு கடுதாசி மற்றும் அந்தமான் நாயக்கர் போன்ற அவரது மற்ற பிற படைப்புகளும் குறிப்பிடத் தக்கவையாகும்.




### பேராசிரியர் M.S. நரசிம்மன்

- பிரபல இந்தியக் கணிதவியலாளரான பேராசிரியர் M.S. நரசிம்மன் சமீபத்தில் காலமானார்.
- பேராசிரியர் நரசிம்மன் மற்றும் C.S. சேசாத்திரி ஆகியோர் நரசிம்மன் – சேசாத்திரி என்ற கோட்பாட்டினை நிரூபித்த பெருமைக்காக போற்றப் படுகிறார்கள்.
- அறிவியல் துறையில் கிங் பைசல் சர்வதேச விருதினைப் பெற்ற ஒரே இந்தியர் இவரே ஆவார்.



## International Invincible Gold Medal – டாக்டர் ரமேஷ் பொக்ரியால்

- இந்த ஆண்டின் International Invincible Gold Medal (வெல்ல முடியாத அளவிலான சர்வதேச தங்கப் பதக்கம்) ஆனது மத்தியக் கல்வி அமைச்சர் டாக்டர் ரமேஷ் பொக்ரியால் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.
- தனது எழுத்துகள், சமூகம் மற்றும் சிறப்புமிக்க பொது வாழ்வின் மூலம் மனித குலத்திற்கு அவர் ஆற்றிய சிறப்பானச் சேவைக்காகவும் அவரது அசாதாரணமான பங்களிப்பிற்காகவும் அவருக்கு இந்த விருதானது வழங்கப்பட்டுள்ளது.
- உலகம் முழுவதுமுள்ள மகரிஷி அமைப்பு மற்றும் அதன் பல்கலைக்கழகத்தினால் இந்த விருது வழங்கப்பட இருக்கின்றது.

## புமோரி மலையில் ஏறிய முதலாவது இந்தியப் பெண்கள்

- பல்ஜீத் கௌர் மற்றும் கன்பாலா சர்மா ஆகியோர் நேபாளத்திலுள்ள புமோரி மலையில் ஏறிய முதலாவது இந்தியப் பெண் வீராங்கனைகள் எனும் பெருமையைப் பெற்றுள்ளனர்.
- எவரஸ்ட் மசீஃப் சிகரத்தின் ஓர் அங்கமான இந்த மலையில் ஏறிய முதல் பெண்களும் இவர்களே ஆவர்.
- மசீஃப் சிகரத்தில் நான்கு மலைச் சிகரங்கள் உள்ளன, அவை புமோரி (7,161 மீ), நுப்சே (7,862 மீ), லோட்சே (8,516 மீ) மற்றும் எவரெஸ்ட் (8,848.86 மீ) ஆகியவையாகும்.
- புமோரி மற்றும் நுப்சே ஆகிய இரு மலைச் சிகரங்களும் ஏறுவதற்கு மிகவும் கடினமான மலைகளாக கருதப் படுகின்றன.


## உலக நடனக் கலை விருது 2020

- எம்மி விருதிற்குப் பரிந்துரைக்கப்பட்ட இந்திய நடன இயக்குநர் சுரேஷ் முகுந்த் அவர்கள் 10வது வருடாந்திர உலக நடனக்கலை விருதினை (2020) (நடன விருது எனவும் அழைக்கப்படுகிறது) வென்றுள்ளார்.
- இந்த மதிப்புமிக்க விருதினை வென்ற முதல் இந்தியரும் இவரே ஆவார்.
- 'World of Dance' எனும் பெரும்புகழ் பெற்ற அமெரிக்க மெய்நிகர் நிகழ்ச்சியில் அவர் ஆற்றியப் பணிக்காக "தொலைக்காட்சி மெய்நிகர் நிகழ்ச்சி (ரியாலிட்டி சோ/போட்டி நிகழ்ச்சிப் பிரிவில்" இவருக்கு இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.
- 2019 ஆம் ஆண்டு 'World of Dance' என்ற போட்டியில் வெற்றி பெற்ற "The Kings" எனும் இந்திய நடனக் குழுவின் இயக்குநரும் நடன இயக்குநரும் இவரே ஆவார்.
- "நடனத்திற்கான ஆஸ்கார்" எனப் பிரபலமாக போற்றப்படும் இந்த உலக நடனக் கலை விருது வழங்கும் விழாவானது லாஸ் ஏஞ்சல்ஸில் ஒவ்வொரு வருடமும் நடத்தப் படுகின்றது.

## சுந்தர்லால் பகுகுணா

- பிரபல சுற்றுச்சூழல் ஆர்வலரும் பத்ம விபூசன் விருது பெற்றவருமான சுந்தர்லால் பகுகுணா அவர்கள் சமீபத்தில் காலமானார்.
- இவர் சிப்கோ இயக்கத்தினை முன்னின்று நடத்தியவர்களுள் ஒருவராவார்.

- வாழ்நாள் முழுவதும் சுற்றுச்சூழல் ஆர்வலராகவே இருந்து சேவை ஆற்றிய இவர் சிப்கோ இயக்கத்தினைத் தொடங்கியப் பெருமைக்குரியவராவார்.
- சிப்கோ இயக்கமானது 1970களில் கர்வால் பகுதியை உலுக்கிய ஒரு சம்பவமாகும்.
- இது மரங்களைக் கட்டிப் பிடித்து அவற்றை வெட்ட விடாமல் தடுக்க அந்தப் பகுதியின் கிராம மக்களால் மேற்கொள்ளப்பட்ட ஒரு கடைமட்ட நிலையிலிருந்து எழுப்பப் பட்ட ஒரு இயக்கமாகும்.
- பிறகு 1990களில் தெஹ்ரி அணை கட்டுவதற்கு எதிரான இயக்கத்திற்கும் இவர் தலைமை ஏற்று, அதற்காக 1995 ஆம் ஆண்டில் சிறை தண்டனையும் பெற்றார்.



## டெம்பிள்டன் விருது 2021

- ஜான் டெம்பிள்டன் பவுண்டேசன் நிறுவனமானது 2021 ஆம் ஆண்டு டெம்பிள்டன் விருதினை உலகப் புகழ்பெற்ற விலங்கியல் நிபுணரும் வளங்காப்பாளருமான ஜேன் குடால் என்பவருக்கு வழங்கியுள்ளது.
- 1972 ஆம் ஆண்டில் வழங்கப்படத் தொடங்கியதிலிருந்து இன்று வரையில் இந்தப் விருதினை வென்ற முதல் விலங்கியல் நிபுணர் மற்றும் நான்காவது பெண் இவரே ஆவார்.
- இயற்கை உலகில் மனிதனின் பங்கு பற்றிய புரிதலையே மாற்றியமைத்த இவரது புதுமையான கண்டுபிடிப்புகளுக்காக இந்த விருது இவருக்கு வழங்கப்பட்டுள்ளது.



## எட்டியெனே கிளிகிச் விருது

- ஹாக்கி இந்தியா அமைப்பிற்கு மதிப்புமிகு எட்டியெனே கிளிகிச் விருது (Etienne Glichitch Award) வழங்கப் பட்டுள்ளது.
- நாட்டில் விளையாட்டுத் துறையின் உருவாக்கத்திலும் வளர்ச்சியிலும் இந்த அமைப்பு ஆற்றிய பங்களிப்பிற்கு அங்கீகாரம் அளிக்க வேண்டி இந்த விருதானது வழங்கப் பட்டுள்ளது.
- ஹாக்கி இன்வைட்ஸ் என்ற ஒரு காணொலி மாநாட்டின் போது விளையாட்டுப் போட்டிகளின் நிர்வாக அமைப்பான சர்வதேச ஹாக்கி கூட்டமைப்பினால் (International Hockey Federation – FIH) இந்த விருதுகள் அறிவிக்கப்பட்டன.
- இது FIH கௌரவ விருது வழங்கும் விழாவுடன் நிறைவடைந்த 47வது FIH மாநாட்டின் ஓர் அங்கமாகும்.

## நரீந்தர் பத்ரா

- நரீந்தர் பத்ரா அவர்கள் தொடர்ந்து இரண்டாவது முறையாக சர்வதேச ஹாக்கி கூட்டமைப்பின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- இவர் சர்வதேச ஹாக்கி கூட்டமைப்பின் (International Federation of Hockey – FIH) 47வது மாநாட்டின் போது தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- FIH அமைப்பானது தனது தலைவருக்கான பதவிக் காலத்தினை நான்கிலிருந்து மூன்று வருடங்களாகக் குறைத்ததையடுத்து இவர் 2024 ஆம் ஆண்டு வரைப் பதவியில் இருப்பார்.
- மேலும் இவர் இந்திய ஒலிம்பிக் கூட்டமைப்பின் தலைவராகவும் சர்வதேச ஒலிம்பிக் குழுவின் உறுப்பினராகவும் உள்ளார்.

## இந்திய உயிரிப் பல்லுயிர்ப் பெருக்க விருதுகள் 2021

- 2021 ஆம் ஆண்டின் இந்திய உயிரிப் பல்லுயிர்ப் பெருக்க விருதுகள் மே 22 ஆம் தேதியன்று அனுசரிக்கப்பட்ட சர்வதேச உயிரிப் பல்லுயிர்ப்பெருக்கத் தினத்தன்று வழங்கப் பட்டன.
- "உயிரி வளங்களை நிலையான முறையில் பயன்படுத்துதல்" எனும் பிரிவின் கீழ் கிருஷி அவம் பரிஷ்டிகி விகாஸ் சன்ஸ்தான் (KRAPAVIS - Krishi Avam Paristhitiki Vikas Sansthan) எனும் அமைப்பிற்கு ஒரு விருது வழங்கப்பட்டுள்ளது.
- கேரளாவில் "கிழங்குப் பயிர்களின் நாயகன்" என அழைக்கப்படுகின்ற N.M. சாஜி அவர்களுக்கு 'உள்நாட்டு உயிரினங்களைப் பாதுகாத்தல்' எனும் தனிப்பிரிவில் ஒரு விருது வழங்கப் பட்டுள்ளது.
- நாகலாந்திலுள்ள கோனோமா இயற்கை வளங்காப்பு மற்றும் டிராகோபன் சரணாலயம் 'உயிரிவளங்களை நிலையான முறையில் பயன்படுத்துதல்' எனும் பிரிவின் கீழ் ஒரு விருதினை வென்றுள்ளது.
- இந்தியா உயிரிப் பல்லுயிர்ப் பெருக்க விருதுகளுக்கான முன்னெடுப்பானது 2012 ஆம் ஆண்டில் சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகம், தேசிய உயிரிப் பல்லுயிர்ப் பெருக்க ஆணையம் மற்றும் ஐக்கிய நாடுகளின் மேம்பாட்டுத் திட்டம் ஆகியவற்றால் இணைந்து தொடங்கப் பட்டதாகும்.

## யுவான் லாங்பிங்



- சீன வேளாண் அறிவியலாளரான யுவான் லாங்பிங் அவர்கள் தனது 91வது வயதில் காலமானார்.
- இவர் சீனாவில் வேளாண் துறையில் ஆற்றிய பங்களிப்பிற்காக "கலப்பின அரிசி வகைகளின் தந்தை" (father of hybrid rice) எனப் போற்றப் படுபவராவார்.
- இவர் 1970களில் 'நான்-யூ எண்.2' எனும் முதல் கலப்பின அரிசி வகையினை உருவாக்கினார்.
- 2004 ஆம் ஆண்டில் இவருக்கு உலக உணவுப் பரிசு வழங்கப்பட்டது.
- 2001 ஆம் ஆண்டில் இவருக்கு ரமோன் மக்சேசே அறக்கட்டளையானது விருது வழங்கி கௌரவப் படுத்தியது.

## ஒலிம்பிக் தடகள வீரரான லீ இவான்ஸ் காலமானார்



- லீ இவான்ஸ் அமெரிஜ்காவினைச் சேர்ந்த ஒரு தடகள சாதனையாளர் ஆவார்
- 1968 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டியில் ஒரு எதிர்ப்பின் அடையாளமாக கருப்பு நிறத் தொப்பியை அணிந்தவர் ஆவார்.
- அதன் பின்பு சமூக நீதிக்கு ஆதரவாக மனிதநேயப் பணிகளில் அவர் தமது வாழ்வைக் கடத்தினார்.
- மெக்சிகோ நகரப் போட்டிகளில் 400 மீட்டர் தொலைவை 43.86 விநாடிகளில் கடந்து தங்கம் வென்ற முதல் ஆண் இவராவார்.

## கோல்டு ஸ்டீவி விருது 2021 – Spice Health

- 2021 ஆம் ஆண்டு ஆசிய பசிபிக் ஸ்டீவி விருது விழாவில் Spice Health அமைப்பானது கோல்டு ஸ்டீவி விருதினை (Gold Stevie) வென்றுள்ளது.
- ஸ்பைஸ் ஹெல்த் என்பது Spice Jet நிறுவனத்தின் விளம்பரதாரர் அமைப்பினால் நிறுவப்பட்ட ஒரு சுகாதார நிறுவனமாகும்.
- இந்த நிறுவனத்திற்கு கோவிட் – 19 தொற்றுகாலத்தில் "மதிப்புமிக்க மருத்துவ ரீதியிலான புதுமைகளை" உருவாக்கியதற்காக இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.




## ஓஎன்வி விருது

- இந்த ஆண்டு ஓஎன்வி விருதானது தமிழ்க் கவிஞரும் பாடல் ஆசிரியருமான வைரமுத்து அவர்களுக்கு வழங்கப்பட உள்ளது.
- மறைந்த மலையாளக் கவிஞரான ஓஎன்வி குரூப் அவர்களின் நினைவாக ஓஎன்வி கலாச்சார அகாடெமியினால் இந்த விருதானது நிறுவப்பட்டுள்ளது.
- மலையாளம் மற்றும் மற்ற இந்திய மொழியின் இலக்கிய கவிஞர்களுக்கு இது வழங்கப் படுகிறது.
- ஓஎன்வி விருதிற்கு கேரளாவைச் சாராத எழுத்தாளர் தேர்ந்தெடுக்கப்படுவது இதுவே முதல்முறையாகும்.

## முதலாவது விமானச் சோதனை ஓட்டப் பொறியாளர்

- விமானப் படை அதிகாரியான ஆசிரித்தா வி. ஒலெட்டி (Aashritha V Olety) என்பவர் இந்திய விமான சோதனை ஓட்டப் பொறியாளர் (flight test engineer) பொறுப்பைப் பெறும் முதல் பெண்மணி ஆவார்.
- விமானங்கள் மற்றும் அது சார்ந்த அமைப்புகள் ஆயுதப் படைகளில் சேர்க்கப் படுவதற்கு முன்பு அவற்றை மதிப்பீடு செய்யும் பொறுப்பு இவருடையதாகும்.
- கர்நாடகாவைச் சேர்ந்த இவர் 43வது விமான சோதனைக் கல்வியில் பட்டம் பெற்றவராவார்.



# விளையாட்டுச் செய்திகள்

## உலக ஸ்னூக்கர் சாம்பியன்

- ஸ்னூக்கர் போட்டியில் இங்கிலாந்தின் தொழில்முறை விளையாட்டு வீரரான மார்க் செல்பை என்பவர் நான்காவது முறையாக உலக ஸ்னூக்கர் சாம்பியன் ஆகியுள்ளார்.
- இங்கிலாந்தின் செஃப்பீல்டில் உள்ள குரூசிபில் தியேட்டரில் நடைபெற்ற போட்டியில் அவரது நாட்டின் சக விளையாட்டு வீரரான ஷான் மர்ஃபி என்பவரைத் தோற்கடித்து இவர் சாம்பியன் பட்டத்தை வென்றார்.
- இதற்கு முன்பாக செல்பை 2014, 2016, 2017 ஆகிய ஆண்டுகளில் சாம்பியன் பட்டத்தினை வென்றுள்ளார்.




## அர்ஷன் நக்வஷ்வல்லா

- நியூசிலாந்துக்கு எதிராக சௌத்தாம்டனில் நடைபெற உள்ள உலக டெஸ்ட் சாம்பியன்சிப்பின் இறுதிப் போட்டிக்குத் தேர்வான அர்ஷன் நக்வஷ்வல்லா என்பவர் இந்திய டெஸ்ட் அணியில் ரிசர்வ் வீரராக அறிவிக்கப் பட்டுள்ளார்.

- 23 வயதான இவர் குஜராத்தைச் சேர்ந்த ஒரு இடது கை வேகப்பந்து வீச்சாளராவார்.
- இவர் மகாராஷ்டிராவின் எல்லையருகேயுள்ள ஒரு கிராமத்தில் வாழும் பார்சி சமுதாயத்தினரைச் சேர்ந்தவராவார்.
- 1975 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரையில் தேசிய அணியில் இணைந்த முதல் பார்சி இனத்தவர் இவராவார்.



## 2021 ஆம் ஆண்டு லாரஸ் உலக விளையாட்டு விருதுகள்

**2021 Laureus World Sports Awards**

Sportsman of the Year Award: Rafael Nadal
Sportswoman of the Year Award: Naomi Osaka
Team of the Year Award: Bayern Munich
Breakthrough of the Year Award: Patrick Mahomes
The comeback of the Year Award: Max Parrot
Sport for Good Award: KICKFORMORE by KICKFAIR
Lifetime Achievement Award: Billie Jean King
Athlete Advocate of the Year Award: Lewis Hamilton
Sporting Inspiration Award: Mohamed Salah
Sporting Moment of the Year Award: Chris Nikic

- 2021 ஆம் ஆண்டு லாரஸ் உலக விளையாட்டு விருதுகள் வழங்கும் விழாவில் ஜப்பானைச் சேர்ந்த நவாமி ஒசாகா அவர்கள் "ஆண்டின் சிறந்த விளையாட்டு விராங்கனை" எனும் விருதினைப் பெற்றுள்ளார்.
- இது ஒசாகா பெற்ற இரண்டாவது லாரஸ் விளையாட்டு விருதாகும்.
- 2019 ஆம் ஆண்டில் இவர் "திருப்புமுனை ஆட்டக்காரர் விருதினை" பெற்றார்.
- ஆண்கள் பிரிவில் ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த ரபேல் நடால் 2021 ஆம் ஆண்டில் லாரஸ் சிறந்த விளையாட்டு வீரர் எனும் விருதைப் பெற்றார்.
- 2011 ஆம் ஆண்டில் ஒரு மதிப்பு மிக்க விருதைப் பெற்ற பிறகு நடாலுக்குக் கிடைத்த இரண்டாவது விருது இதுவாகும்.

## மருத்துவ ஆக்சிஜன்களை ஒதுக்கீடு செய்வதற்கான சிறப்பு தேசியப் படை

- ❖ கோவிட்-19 பெருந்தொற்று காலங்களில் மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்கள் ஆகியவற்றிற்கான மருத்துவ ஆக்சிஜன் ஒதுக்கீட்டினை மேற்கொள்ளச் செய்வதற்கான வழிமுறைகளை வகுப்பதில் உதவுவதற்காக வேண்டி 12 உறுப்பினர்கள் கொண்ட சிறப்பு தேசியப் படை ஒன்றினை இந்திய உச்சநீதிமன்றம் அமைத்துள்ளது.
- ❖ இந்தப் படையின் பதவிக் காலம் தற்போதைக்கு 6 மாதங்களாக நிர்ணயிக்கப் பட்டு உள்ளது.
- ❖ இதில், இரு தலைமை அலுவலர்களை நியமிக்குமாறு உச்சநீதிமன்றமானது மத்திய அரசிடம் கோரியுள்ளது.
- ❖ சிறப்புப் படைக்குத் தேவையான தளவாடங்கள், தகவல் தொடர்பு மற்றும் அதன் காணொலிச் சந்திப்புகளை ஏற்பாடு செய்தல் போன்றவை இந்தத் தலைமை அலுவலர்களின் பொறுப்பாகும்.


## இத்தாலிய ஓபன் 2021

- ❖ இத்தாலிய ஓபன் 2021 போட்டியில் ரஃபேல் நடால் வெற்றி பெற்றுள்ளார்.
- ❖ இது அவர் பெற்ற 10வது ரோம் மாஸ்டர்ஸ் பட்டமாகும்.
- ❖ ரஃபேல் நடாலுக்கும் நோவக் ஜோகோவிக்கும் இடையே இறுதிப் போட்டி நடத்தப் பட்டது.
- ❖ இந்தப் போட்டியானது ரோம் மாஸ்டர்ஸ் எனவும் அழைக்கப்படுகிறது.
- ❖ இத்தாலிய ஓபன் போட்டியானது களிமண் தளத்தில் நடைபெறும் ஒரு டென்னிஸ் போட்டியாகும்.
- ❖ ரஃபேல் நடால் ஒரு ஸ்பானிய டென்னிஸ் விளையாட்டு வீரராவார்.
- ❖ இவர் இதுவரை 20 கிராண்ட் ஸ்லாம் பட்டங்களையும் 13 பிரஞ்சு ஓபன் பட்டங்களையும் வென்றுள்ளார்.
- ❖ பெரும்பாலும் களிமண் தளத்தில்தான் இவர் அதிக வெற்றிகளை குவித்துள்ளார்.



## கோபி பிரையன்ட் – ஹால் ஆஃப் ஃபேம்

- லாஸ் ஏஞ்சல்சின் லேக்கர்ஸ் வீரரான கோபி பிரையன்ட் அவர்கள் நைஸ்மித் நினைவு கூடைப் பந்தாட்ட வாழ்த்தரங்கத்தினுள் (Hall of Fame) அவரது இறப்பிற்குப் பிறகு சேர்க்கப் பட்டுள்ளார்.
- இவர் 2016 ஆம் ஆண்டில் ஓய்வு பெற்றார்.
- ஐந்து முறை NBA சாம்பியன் பட்டம் பெற்ற 41 வயதான இவர் 2020 ஆம் ஆண்டின் ஜனவரி மாதத்தில் ஏற்பட்ட ஒரு ஹெலிகாப்டர் விபத்தில் உயிரிழந்தார்.




## 17 வயதிற்குட்பட்ட மகளிர் FIFA உலகக் கோப்பை – 2022

- 2022 ஆம் ஆண்டு அக்டோபர் 11 முதல் 30 வரை "17 வயதிற்குட்பட்ட மகளிர் FIFA உலகக் கோப்பை 2022" போட்டியை நடத்த இந்தியா தயாராக உள்ளது.
- இது இந்தியாவில் நடத்தப்பட உள்ள இரண்டாவது FIFA போட்டியாகும்.
- முன்பாக, 2021 ஆம் ஆண்டு நடத்தப்படவிருந்த 17 வயதிற்குட்பட்ட மகளிர் FIFA உலகக் கோப்பைப் போட்டியானது கோவிட்-19 பெருந்தொற்று காரணமாக ரத்து செய்யப் பட்டது.
- 17 வயதிற்குட்பட்ட FIFA மகளிர் உலகக் கோப்பைப் போட்டியை 2017 ஆம் ஆண்டிலும் இந்தியாவே நடத்தியது.

## டார்கெட் ஒலிம்பிக் அரங்க திட்டம்

- டார்க்கெட் ஒலிம்பிக் அரங்க திட்டத்தின் (Target Olympic Podium Scheme – TOPS) ஒரு முதன்மைக் குழுவில் ஐந்து விளையாட்டு வீரர்கள் சேர்க்கப்பட்டுள்ளதாக இந்திய அரசின் இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டு அமைச்சகம் தெரிவித்து உள்ளது.
- அவர்கள்,
  - டென்னிஸ் வீரரான அங்கிதா ரைனா,
  - மல்யுத்த வீரர்களான சுமீத் மாலிக் மற்றும் சீமா பிஸ்லா மற்றும்
  - படகுப் போட்டி வீரர்களான அர்விந்த் சிங் மற்றம் அர்ஜுன் லால் ஜாத்
- இந்தத் திட்டமானது 2014 ஆம் ஆண்டில் இந்திய அரசின் இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சகத்தின் கீழ் தொடங்கப்பட்டது.
- இந்தத் திட்டமானது 2016 ஆம் ஆண்டு ரியோ ஒலிம்பிக்ஸ், 2020 ஆம் ஆண்டு டோக்கியோ

ஒலிம்பிக்ஸ் மற்றும் இதர சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்களை வெல்வதற்கு இந்தியாவின் முன்னனி விளையாட்டு வீரர்களுக்கு நிதி உதவியினை வழங்குகிறது.




## 2021 ஆம் ஆண்டு PGA சாம்பியன்சிப்

- அமெரிக்கத் தொழில்முறை குழிப்பந்தாட்ட வீரரான பில் மைக்கேல்சன் தனது 50வது வயதில் 2021 ஆம் ஆண்டு PGA சாம்பியன்சிப்பினை வென்று வரலாறு படைத்து உள்ளார்.
- இந்த வெற்றியின் மூலம், PGA போட்டிகளின் வரலாற்றிலேயே முக்கியத்துவம் வாய்ந்த இந்தப் போட்டியினை வென்ற வயதான விளையாட்டு வீரர் எனும் பெருமையை மைக்கேல்சன் பெற்றுள்ளார்.
- இது இவர் பெற்ற 6வது வெற்றியாகும்.



## சாங் இன் ஹங்

- ஹாங்காங்கைச் சேர்ந்த மலையேறும் வீரரான சாங் இன் ஹங் என்பவர் எவரெஸ்ட் சிகரத்தை வெறும் 26 மணி நேரத்தில் ஏறி "உலகிலேயே எவரெஸ்ட் சிகரத்தில் மிக வேகமாக ஏறிய பெண்" எனும் சாதனையைப் படைத்துள்ளார்.
- இவர் 8,848.86 மீட்டர் உயரம் கொண்ட இந்த சிகரத்தை தனது மூன்றாவது முயற்சியில் வெறும் 25 மணி 50 நிமிடங்களில் ஏறி சாதனை படைத்தார்.


- இதற்கு முன்பாக 2017 ஆம் ஆண்டில் எவரெஸ்ட் மலை உச்சியில் ஏறிய முதல் ஹாங் காங் பெண்மணி எனும் சாதனையை இவர் படைத்தார்.
- இதற்கு முன்பு எவரெஸ்ட் சிகரத்தில் 39 மணி 6 நிமிடங்களில் ஏறிய நேபாளத்தைச் சேர்ந்த புன்ச்சோ ஜங்மு லாமா என்பவரின் சாதனையை இவர் முறியடித்துள்ளார்.



# முக்கிய தினங்கள்

## மகாராஷ்டிரா மற்றும் குஜராத் தினம் – மே 01

- மே 01 ஆம் தேதியானது மகாராஷ்டிர மாநில தினமாகவும் குஜராத் மாநில தினமாகவும் கொண்டாடப் படுகிறது.
- 1960 ஆம் ஆண்டில் பலமொழிகளை கொண்டிருந்த பம்பாய் மாநிலத்தை குஜராத் மற்றும் மகாராஷ்டிரா என இரு மாநிலங்களாகப் பிரிப்பதற்கான பம்பாய் மறுசீரமைப்புச் சட்டத்தை இந்தியப் பாராளுமன்றம் நிறைவேற்றியது.
- இச்சட்டம் 1960 ஆம் ஆண்டு மே 01 முதல் நடைமுறைக்கு வந்தது.
- இதற்கு முன்பு பம்பாய் மாநிலமானது மராத்தி, குஜராத்தி, கொங்கனி மற்றும் கட்ச் ஆகிய வெவ்வேறு மொழிகளைப் பேசும் மக்களைக் கொண்ட ஒரு மாநிலமாக இருந்தது.
- 1950களின் இடைப்பட்டக் காலங்களில் சம்யுக்தா மகாராஷ்டிரா அந்தோலன் எனும் ஒரு இயக்கமானது மராத்தி பேசும் மக்களுக்கென ஒரு தனி மாநிலத்தினைக் கோரத் தொடங்கியது.
- மகா குஜராத் இயக்கமானது குஜராத்தி பேசும் மக்களுக்கான ஒரு தனி மாநிலத்தை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டிருந்தது.
- இந்த இயக்கங்களின் கோரிக்கைகளினால் பம்பாய் மறுசீரமைப்புச் சட்டம் இயற்றப் பட்டது.




## சர்வதேச உழைப்பாளர்கள் தினம் – மே 1

- மே தினமானது சர்வதேச உழைப்பாளர்கள் தினம் (அ) தொழிலாளர் தினம் எனவும் அழைக்கப் படுகிறது.
- இத்தினமானது தொழிலாளர் வர்க்கத்தின் போராட்டத்தையும் அர்ப்பணிப்பையும் ஈடுபாட்டினையும் கொண்டாடுவதோடு, பெரும்பாலான நாடுகளில் இத்தினமானது வருடாந்திரப் பொது விடுமுறையாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.
- அமெரிக்காவின் சிகாகோவும் மற்ற சில நகரங்களும் 1886 ஆம் ஆண்டு மே 01 ஆம் தேதியன்று 8 மணி நேர வேலைநாள் கோரிக்கையினை முன் வைத்த வகையில் தொழிற்சங்கப் போராட்டங்களின் முக்கிய மையங்களாக இருந்தன.
- 1889 ஆம் ஆண்டில் சர்வதேசப் பொதுவுடமை மாநாடானது ஹேமார்க்கெட் நிகழ்வின் நினைவாக மே 01 ஆம் தேதியினை உழைப்பாளர்களுக்கான சர்வதேச விடுமுறையாக (சர்வதேச உழைப்பாளர்கள் தினம்) கடைபிடிக்கப்படும் என அறிவித்தது.
- இந்தியாவில் முதல் உழைப்பாளர் தினமானது 1923 ஆம் ஆண்டில் சிங்காரவேலு செட்டியினரால் ஆரம்பிக்கப் பட்ட லேபர் கிசான் கட்சியினால் சென்னையில் கடைபிடிக்கப் பட்டது.
- இது தொழிலாளர் சங்க இயக்கத்தினால் (Labour Union Movement) தொடங்கப்பட்டது.


## உலக சிரிப்பு தினம் – மே 02

- உலக சிரிப்பு தினமானது ஒவ்வொரு ஆண்டும் மே மாதத்தின் முதல் ஞாயிறு அன்று கொண்டாடப்படுகிறது.
- சிரிப்பு பற்றியும் சிரிப்பதனால் ஏற்படும் பல ஆரோக்கியப் பலன்கள் பற்றியும் ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்த இத்தினமானது கொண்டாடப்படுகிறது.
- 2021 ஆம் ஆண்டில் இத்தினமானது, மே 02 அன்று கொண்டாடப்படுகிறது.

- இத்தினமானது 'Laughter Yoga' என்ற உலகளாவிய இயக்கத்தின் நிறுவனரான டாக்டர் மதன் கட்டாரியாவின் முயற்சியினால் 1998 ஆம் ஆண்டு மே 10 அன்று மும்பையில் முதன்முறையாக அனுசரிக்கப்பட்டது.

## உலக பத்திரிக்கைச் சுதந்திர தினம் – மே 03

- உலக பத்திரிக்கைச் சுதந்திர தினமானது உலக பத்திரிக்கை தினம் எனவும் அழைக்கப் படுகிறது.
- இத்தினமானது தனது உயிரை இழந்த பத்திரிக்கையாளர்களுக்கு அஞ்சலி செலுத்துவதற்காகவும் கடைபிடிக்கப்படுகிறது.
- இந்த ஆண்டின் உலக பத்திரிக்கைச் சுதந்திர தினத்திற்கான கருத்துரு, 'Information as a Public Good' (தகவல் என்பது ஒரு பொதுச் சரக்கு) என்பதாகும்.





- ஆப்பிரிக்கப் பத்திரிக்கையின் சுதந்திரத்தை மேம்படுத்துவதற்காக 1993 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை உலக பத்திரிக்கைச் சுதந்திர தினத்தை நிறுவியது.
- இதனையடுத்து சுதந்திரமான அளவில் பத்திரிக்கையை நடத்துவதற்காக வேண்டி உருவாக்கப்பட்ட விண்ட்ஹுக் பிரகடனம் (Windhoek Declaration) நிறைவேற்றப் பட்டதை அடுத்து இத்தினம் அறிவிக்கப் பட்டது.
- இந்தப் பிரகடனம் மே 03 அன்று அறிவிக்கப்பட்டதால் இந்தச் சிறப்பு தினமானது ஒவ்வொரு ஆண்டும் மே 03 அன்று கடைபிடிக்கப்படுகிறது.

## சர்வதேச தீயணைப்பு வீரர்கள் தினம் – மே 04

- 1999 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு வருடமும் சர்வதேச தீயணைப்பு வீரர்கள் தினமானது கடைபிடிக்கப் படுகிறது.
- தீயணைப்பு வீரர்கள் தங்களது சமூகமும் சுற்றுச்சூழலும் முடிந்தவரை பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்பதற்காக மேற்கொள்ளும் தியாகங்களை அங்கீகரித்துக் கௌரவிப்பதற்காக இத்தினமானது கொண்டாடப்படுகிறது.
- 1998 ஆம் ஆண்டு டிசம்பர் 02 ஆம் தேதி ஆஸ்திரேலியாவிலுள்ள புல்வெளியில் ஏற்பட்ட மோசமான தீ விபத்தில் ஐந்து தீயணைப்பு வீரர்கள் இறந்ததை அடுத்து இந்தத் தினம் நிறுவப்பட்டது.

## உலக ஆஸ்துமா தினம் – மே 04

- உலக ஆஸ்துமா தினமானது ஒவ்வொரு ஆண்டும் மே மாதத்தின் முதல் செவ்வாய்க் கிழமையன்று அனுசரிக்கப்படுகிறது.
- இந்த ஆண்டில் உலக ஆஸ்துமா தினம் மே 04 ஆம் தேதியன்று கடைபிடிக்கப்பட்டது.
- இந்தத் தினமானது உலகம் முழுவதும் ஆஸ்துமா நோய் பற்றியும் அதற்கான மருத்துவ சிகிச்சை பற்றியும் விழிப்புணர்வைப் பரப்புகிறது.
- 2021 ஆம் ஆண்டிற்கான கருத்துரு, "ஆஸ்துமா பற்றிய தவறான கருத்துகளை வெளிக் கொணர்தல்" (Uncovering Asthma Misconceptions) என்பதாகும்.
- உலக ஆஸ்துமா தினமானது ஆஸ்துமாவிற்கான உலகளாவிய முன்னெடுப்பு (Global Initiative for Asthma – GINA) எனும் அமைப்பினால் ஒவ்வொரு வருடமும் ஏற்பாடு செய்யப் படுகிறது.
- 1998 ஆம் ஆண்டில் ஸ்பெயினின் பார்சிலோனாவில் நடைபெற்ற ஆஸ்துமா குறித்த முதல் உலகச் சந்திப்புடன் 35க்கும் மேற்பட்ட நாடுகளில் முதல் உலக ஆஸ்துமா தினமானது கொண்டாடப்பட்டது.




## உலக கை ஆரோக்கிய தினம் – மே 05

- இந்தத் தினமானது உலக சுகாதார அமைப்பினால் ஏற்பாடு செய்யப்படுகிறது.
- பல தீவிரமான தொற்றுக்களை விரட்டுவதில் கைகளின் ஆரோக்கியமானது எந்த அளவிற்கு முக்கியமானது என்பது பற்றி உலகம் முழுவதுமுள்ள மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக இத்தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- 2021 ஆம் ஆண்டிற்கான கருத்துரு, "Seconds Save Lives: Clean Your Hands'" என்பதாகும்.



## சர்வதேச மருத்துவத் தாதிகள் தினம் – மே 05

- சர்வதேச மருத்துவத் தாதிகள் தினமானது 1992 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் உலகம் முழுவதும் கடைபிடிக்கப் படுகிறது.
- மருத்துவத் தாதிகளின் பணிகளை அங்கீகரிக்கவும், தாய்மார்கள் மற்றும் அவர்களின் புதிதாக பிறந்த குழந்தைகளுக்கு மருத்துவத் தாதிகள் வழங்கும் சேவை எவ்வளவு அத்தியாவசியமானது என்பது பற்றிய ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும் இந்தத் தினமானது கடைபிடிக்கப்படுகிறது.
- 2021 ஆம் ஆண்டிற்கான கருத்துரு “Follow the Data: Invest in Midwives” என்பதாகும்.
- மருத்துவத் தாதிகளுக்கு அங்கீகாரம் வழங்கி அவர்களைக் கௌரவிப்பதற்காக ஒரு தினத்தை உருவாக்க வேண்டும் என்ற கருத்தானது 1987 ஆம் அண்டில் நெதர்லாந்தில் நடைபெற்ற சர்வதேச மருத்துவத் தாதிகள் கூட்டமைப்பில் உருவானது.




## சர்வதேச உணவுக் கட்டுப்பாடு இல்லா தினம் – மே 06


- சர்வதேச உணவுக் கட்டுப்பாடு இல்லா தினத்தின் சின்னமானது வெளிர்நீல நிற நாடாவாகும் (light blue ribbon).
- இது கொழுப்பினை ஏற்றுக் கொள்ளும் தன்மை மற்றும் உடல் வடிவின் பன்முகத் தன்மை உள்ளிட்ட உடலின் ஏற்புத் தன்மையைக் கொண்டாடும் ஒரு வருடாந்திர நிகழ்வாகும்.
- எந்த ஒரு அளவிலும், ஆரோக்கியம் மீதான கவனத்துடன் கூடிய ஆரோக்கியமான வாழ்க்கை முறையை மேம்படுத்துவதற்கும் உணவுக் கட்டுப்பாட்டை மேற்கொள்ளச் செய்வதன் மூலம் ஏற்படக் கூடிய அபாயங்கள் பற்றியும் அதனால் பலன் பெறாமல் போகக் கூடிய சாத்தியக்கூறுகள் பற்றியும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும் வேண்டி இந்தத் தினமானது கடைபிடிக்கப் படுகிறது.

## உலக போர்ச்சுக்கீசிய மொழி தினம் – மே 05

- இந்த நாளானது (மே 05), போர்ச்சுக்கீசிய மொழி பேசும் நாடுகளின் சமுதாய அமைப்பினால் (Community of Portuguese – Speaking Countries) 2009 ஆம் ஆண்டில் உலக போர்ச்சுக்கீசிய மொழி தினமாக அதிகாரப் பூர்வமாக அறிவிக்கப்பட்டது.
- போர்ச்சுக்கீசிய மொழி பேசும் நாடுகளின் சமுதாய அமைப்பானது 2000 ஆம் ஆண்டிலிருந்து யுனெஸ்கோவுடன் அதிகாரப் பூர்வமாகக் கூட்டாண்மையிலிருக்கும் அரசுகளுக்கிடையேயான ஒரு அமைப்பாகும்.

- 2019 ஆம் ஆண்டில் நடைபெற்ற யுனெஸ்கோவின் 40வது பொது மாநாட்டுக் கூட்டத்தில் ஒவ்வொரு வருடமும் மே 05 ஆம் நாளினை உலக போர்ச்சுக்கீசிய மொழி தினமாக கடைபிடிப்பதற்கான முடிவானது மேற்கொள்ளப்பட்டது.

## உலக தடகள தினம் – மே 07




- 2021 ஆம் ஆண்டின் உலக தடகள தினமானது மே 07 ஆம் நாளன்று கடைபிடிக்கப் படுகிறது.
- இந்த தேதியானது மாறக் கூடியதாகும்.
- உலக தடகள தினத்திற்கான தேதியினை சர்வதேச முறைசாரா தடகளக் கூட்டமைப்பு தான் (IAAF – International Amateur Athletic Federation) தீர்மானிக்கிறது.
- இருப்பினும் இந்த தினமானது மே மாதத்தில் தான் அனுசரிக்கப்படும்.
- முதன்முறையாக உலக தடகள தினமானது 1996 ஆம் ஆண்டில் அனுசரிக்கப்பட்டது.
- தடகளப் போட்டிகளில் இளைஞர்களின் பங்கேற்பை ஊக்குவிப்பதே இதன் அடிப்படை நோக்கமாகும்.

## எல்லை சாலைகள் அமைப்பின் 61வது எழுச்சி தினம் – மே 07

- எல்லை சாலைகள் அமைப்பானது (BRO – Border Roads Organisation) 1960 ஆம் ஆண்டு மே 07 ஆம் தேதியன்று அமைக்கப்பட்டது.
- இந்தியாவின் எல்லைகளைப் பாதுகாத்தல் மற்றும் இந்தியாவின் வடக்கு மற்றும் வடகிழக்கு மாநிலங்களின் தொலைதூரப் பகுதிகளில் உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல் போன்றவற்றை ஒரு முதன்மையான நோக்கமாகக் கொண்டு இந்த அமைப்பானது உருவாக்கப்பட்டது.
- 2021 ஆம் ஆண்டு மே 07 ஆம் தேதியன்று BRO தனது 61வது எழுச்சி (நிறுவப்பட்ட நாள்) தினத்தினைக் கொண்டாடியது.

*எல்லைச் சாலைகள் அமைப்பு*

- இது பாதுகாப்பு அமைச்சகத்தின் கீழ் இயங்கும் ஒரு முன்னணி சாலைக் கட்டமைப்பு அமைப்பாகும்.
- இந்திய எல்லைப் பகுதிகளில் சாலை இணைப்பினை உருவாக்குவதே இதன் முதன்மையான நோக்கமாகும்.
- மேலும் இந்த அமைப்பானது இந்தியாவின் அனைத்து உத்திசார் மற்றும் மூலோபய இலக்குகளை அடைவதற்காக இந்திய எல்லைகளினூடே உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கியும் மேம்படுத்தியும் அவற்றைப் பராமரித்தும் வருகிறது.

## உலக செஞ்சிலுவை மற்றும் செம்பிறை நாள் – மே 08

- சர்வதேச செஞ்சிலுவை மற்றும் செம்பிறை இயக்கத்தின் கொள்கைகளைக் கொண்டாடும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் உலக செஞ்சிலுவை மற்றும் செம்பிறை நாளானது அனுசரிக்கப்படுகிறது.
- மக்களின் இன்னல்களைக் குறைப்பதற்கும் சுதந்திரம், மனிதநேயம், வேற்றுமை காட்டாதிருத்தல், பொதுவுடைமை, ஒற்றுமை மற்றும் நடுநிலைமை ஆகியவற்றுடன் கூடிய கண்ணியமான வாழ்க்கையைப் பெற அவர்களுக்கு உதவுவதற்கும் வேண்டி இந்த தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- 2021 ஆம் ஆண்டிற்கான கருத்துரு, “Unstoppable” (தடுத்து நிறுத்த முடியாதது) என்பது ஆகும்.
- மேலும் இந்த தினமானது ஹென்றி டியூனந்தின் (Henry Dunant) பிறந்த நாளினையும் (மே 08, 1828) குறிக்கிறது.
- ஹென்றி டியூனந்த் என்பவர் சர்வதேச செஞ்சிலுவைக் குழு அமைப்பின் (International Committee of Red Cross – ICRC) நிறுவனராவார்.




- இவர் முதலாவது அமைதிக்கான நோபல் பரிசினைப் பெற்றவராவார்.
- ICRC அமைப்பின் தலைமையகமானது சுவிட்சர்லாந்தின் ஜெனீவா என்னுமிடத்தில் அமைந்துள்ளது.

## உலக தலசீமியா தினம் – மே 08

- தலசீமியாவால் (அரிவாளணு இரத்தச் சோகை) பாதிக்கப்பட்டு உயிரிழந்தவர்களை நினைவு கூறவும் இந்நோயால் பாதிக்கப்பட்டு உயிர் வாழ போராடிக் கொண்டு இருக்கும் நோயாளிகளுக்கு ஊக்கமளிக்கவும் வேண்டி உலக தலசீமியா தினமானது ஒவ்வோர் ஆண்டும் கடைபிடிக்கப் படுகிறது.
- 2021 ஆம் ஆண்டிற்கான உலக தலசீமியா தினத்தின் கருத்துரு, "Addressing Health Inequalities Across the Global Thalassaemia Community" (உலகளாவிய சமூகத்தின் ஊடாக சுகாதார ஏற்றத் தாழ்வுகளை சரி செய்தல் ) என்பதாகும்.
- தலசீமியா என்பது குறைவான ஹீமோகுளோபின் மற்றும் வழக்கமான இரத்த செல்களை விடக் குறைவான இரத்த செல்களையே உற்பத்தி செய்யும் ஒரு இரத்தக் குறைபாட்டு நோயாகும்.




## சர்வதேச அர்கேனியா தினம் – மே 10

- 2021 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது இந்த தினத்தினை அறிவித்துள்ளது.
- இதற்கான தீர்மானமானது மொரோக்கோவால் சமர்ப்பிக்கப்பட்டு ஐக்கிய நாடுகள் அமைப்பின் 113 உறுப்பினர் நாடுகளின் ஒப்புதலுடன் ஒரு மனதாக ஏற்றுக் கொள்ளப் பட்டது.
- வறண்ட மற்றும் மிதமான வறட்சியுடைய பகுதிகளில் வளரும் ஆர்கர் மரமானது (அர்கேனியா ஸ்பினோசா) மொரோக்கோவின் தென்மேற்குப் பகுதியில் உள்ள துணை சஹாரா என்ற பகுதியைப் பிறப்பிடமாகக் கொண்டதாகும்.
- ஆர்கன் மரமானது வருமான உயர்வை ஏற்படுத்துதல், நெகிழ்திறனை அதிகரித்தல் மற்றும் காலநிலைக்கான தகவமைப்பினை மேம்படுத்துதல் போன்று பலவகையில் பயன்படக் கூடியதாகும்.
- உள்ளாட்சி நிலையில் (பொருளாதாரம், சமூகம் மற்றும் சுற்றுச்சூழல் சார்ந்த வகையில்) நிலையான மேம்பாட்டின் மூன்று பரிமாணங்களையும் அடைவதில் இந்த மரமானது மிகவும் முக்கியமான பங்கினை ஆற்றுகிறது.

## தேசியத் தொழில்நுட்ப தினம் – மே 11




- இந்த தினத்தைக் கொண்டாடுவதற்காக அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகமானது ஒவ்வோர் ஆண்டும் நாடு முழுவதும் பல்வேறு நிகழ்சிகளை ஏற்பாடு செய்து வருகிறது.
- இந்த ஆண்டிற்கான கருத்துரு, "நிலையான வருங்காலத்திற்கான அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்" (Science and Technology for a Sustainable Future) என்பதாகும்.
- இந்தியாவில் தேசியத் தொழில்நுட்ப தினமானது பின்வரும் இரண்டு காரணங்களுக்காக கொண்டாடப் படுகிறது. அவையாவன
  - 1998 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட பொக்ரான் அணு ஆயுதச் சோதனைகளின் நிறைவு ஆண்டினை நினைவு கூறவும்,
  - நாட்டின் தொழில்நுட்ப வளர்ச்சிகளின் முக்கியத்துவத்தைச் சுட்டிக் காட்டச் செய்வதற்காகவும் இந்த தினமானது கொண்டாடப்படுகிறது.

## சர்வதேச செவிலியர்கள் தினம் – மே 12

- செவிலியர்களைக் கௌரவிப்பதற்காக ஒவ்வோர் ஆண்டும் சர்வதேச செவிலியர்கள் தினமானது அனுசரிக்கப் படுகிறது.
- சர்வதேச செவிலியர்கள் தினமானது 1965 ஆம் ஆண்டில் சர்வதேச செவிலியர்கள் மன்றத்தினால் தொடங்கப் பட்டது.
- இந்தத் தினமானது பிரபலமான பிளாரன்ஸ் நைட்டிங்கேல் அவர்களின் பிறந்த நாளாகும்.
- இவர் இங்கிலாந்தைச் சேர்ந்த செவிலியர், சமூக சீர்திருத்தவாதி மற்றும் புள்ளியியல் நிபுணராவார்.
- இந்த ஆண்டிற்கான கருத்துரு, "A Voice to Lead A Vision for Future Healthcare" (எதிர்கால ஆரோக்கியத்திற்கான ஒரு தொலைநோக்குப் பார்வையை உருவாக்கச் செய்திட வேண்டி ஒரு குரல்) என்பதாகும்.




## சர்வதேச குடும்பங்கள் தினம் – மே 15

- சர்வதேச சமுதாயத்தில் குடும்பங்களுக்கு அளிக்கப்படும் ஒரு முக்கியத்துவத்தைப் பிரதிபலிக்கும் வகையில் ஆண்டுதோறும் சர்வதேச குடும்பங்கள் தினமானது அனுசரிக்கப் படுகிறது.
- குடும்பங்கள் தொடர்பான பிரச்சினைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும் குடும்பங்களின் மீது தாக்கத்தை ஏற்படுத்தும் சமூக, பொருளாதார மற்றும் மக்கள்தொகை சார்ந்த செயல்முறைகள் பற்றிய அறிவினை மேம்படுத்தவும் இந்த நாளானது ஒரு வாய்ப்பினை அளிக்கிறது.
- 2021 ஆம் ஆண்டு சர்வதேச குடும்பங்கள் தினத்தின் கருத்துரு, "குடும்பங்கள் மற்றும் புதிய தொழில்நுட்பங்கள்" (Families and New Technologies) என்பதாகும்.
- 1993 ஆம் ஆண்டில் ஐ.நாவின் பொதுச் சபையானது ஒரு தீர்மானத்தில் ஒவ்வோர் ஆண்டும் மே 13 ஆம் நாளானது சர்வதேச குடும்பங்கள் தினமாக அனுசரிக்கப்பட வேண்டுமென தீர்மானித்தது.




## உலக வேளாண் சுற்றுலா தினம் – மே 16

- இந்த ஆண்டு உலக வேளாண் சுற்றுலா தினத்தன்று சர்வதேச வேளாண் சுற்றுலா மாநாட்டினை மகாராஷ்டிர அரசின் வேளாண் சுற்றுலா மேம்பாட்டுக் கழகமானது ஏற்பாடு செய்ய உள்ளது.
- 2021 ஆம் ஆண்டிற்கான கருத்துரு, "வேளாண் சுற்றுலா மூலம் கிராமப் பெண்களுக்கு நிலையான தொழில்முனைவு வாய்ப்புகளை ஏற்படுத்துதல்" (Rural Women Sustainable Entrepreneurship Opportunities through Agri Tourism) என்பதாகும்.



***வேளாண் சுற்றுலா – மஹாராஷ்டிரா***

- ❖ நாட்டின் வேளாண் சுற்றுலாத் துறையினை உருவாக்குவதிலும் மேம்படுத்துவதிலும் மகாராஷ்டிரா மாநிலம் முன்னோடியாக உள்ளது.
- ❖ 2020 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் மகாராஷ்டிரா அரசானது வேளாண் சுற்றுலாக் கொள்கையினை நிறைவேற்றியது.
- ❖ இந்தக் கொள்கையானது சுற்றுலாப் பயணிகளுக்கு வேளாண் சார்ந்த மகிழ்ச்சி உணர்வினை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டதோடு விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்கவும் உதவுகிறது.

***வேளாண் – சுற்றுலா***

- ❖ வேளாண் சுற்றுலாவில் நகர்ப்புற சுற்றுலாப் பயணிகள் விவசாயிகளின் வீட்டில் தங்கியிருப்பர்.
- ❖ அவர்கள் அங்கு தங்கியிருக்கும் போது விவசாய வேலைகள், டிராக்டர் பயணம், மாட்டு வண்டிப் பயணம் போன்றவற்றில் ஈடுபடுவர்.
- ❖ அவர்கள் சுத்தமான விவசாய விளைபொருட்களை வாங்கிச் செல்வர்.
- ❖ இது விவசாயிகளுக்கு ஒரு கூடுதல் வருமானமாக இருக்கும்.

## சிக்கிம் மாநில நிறுவன தினம் – மே 16

- ❖ சிக்கிம் ஆனது 1975 ஆம் ஆண்டு மே 16 ஆம் தேதியன்று இந்திய ஒன்றியத்துடன் இணைந்தது.
- ❖ அதன் பிறகு ஒவ்வொரு ஆண்டும் மே 16 ஆம் தேதியன்று சிக்கிம் மாநில நிறுவன தினமானது கொண்டாடப்படுகிறது.
- ❖ 1950 ஆம் ஆண்டில் இந்தோ சிக்கிமிய ஒப்பந்தமானது கையெழுத்தானது.
- ❖ இதன் மூலம் சிக்கிமானது இந்தியாவின் பாதுகாப்பு பெற்ற ஒரு மாநிலமாக மாறியது.
- ❖ 1975 ஆம் ஆண்டு வரை சிக்கிமை நம்க்யால் வம்சமானது ஆட்சி செய்தது.
- ❖ இந்தியப் பாராளுமன்றமானது 35வது திருத்தச் சட்டத்தில் சில நிபந்தனைகளை விதிக்கச் செய்து அதனை ஒரு "இணை மாநிலமாக" (Associate State) அறிவித்தது.
- ❖ இந்த நிலையைப் பெற்ற ஒரே மாநிலம் சிக்கிமாகும்.
- ❖ 36வது திருத்தச் சட்டமானது 35வது திருத்தச் சட்டத்தை ரத்து செய்து சிக்கிமை ஒரு முழு அளவிலான மாநிலமாக அறிவித்தது.

## தேசிய டெங்கு தினம் – மே 16

- ❖ இந்தியாவில் டெங்கு பற்றியும் அதன் தடுப்பு நடவடிக்கைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும் வேண்டி தேசிய டெங்கு தினமானது அனுசரிக்கப் படுகின்றது.
- ❖ இது சுகாதார மற்றும் குடும்பநல அமைச்சகத்தின் ஒரு முன்னெடுப்பாகும்.
- ❖ டெங்கு நோயானது பெண் கொசு (ஏடிஸ் ஏஜிப்தி) கடிப்பதன் மூலம் பரவுகிறது.




## உலகத் தொலைதொடர்பு மற்றும் தகவல் சமூக தினம் – மே 17

- இத்தினமானது முதல் சர்வதேச தந்தி உடன்படிக்கை கையெழுத்தான தினத்தையும் சர்வதேச தொலைதொடர்பு ஒன்றியமானது நிறுவப்பட்ட தினத்தையும் குறிக்கிறது.
- தொலை தொடர்பின் முக்கியத்துவம் பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தவும் ஐ.நா. அமைப்பின் நிலையான மேம்பாட்டு இலக்குகளை அதிகரிப்பதில் கவனம் செலுத்திடவும் வேண்டி இத்தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- மேலும் உலகம் முழுவதும் தகவல் எவ்வாறு பரவுகிறது என்பது மீதான கவனத்தையும் இது செலுத்துகிறது.
- 2021 ஆம் ஆண்டிற்கான கருத்துரு, "சவாலான சமயங்களில் டிஜிட்டல் மாற்றத்தை முடுக்கி விடுதல்" (Accelerating digital transformation in challenging times) என்பதாகும்.




## உலக உயர் இரத்த அழுத்த தினம் – மே 17

- இது உலக உயர் இரத்த அழுத்த மன்றத்தினால் ஆண்டுதோறும் கடைபிடிக்கப் படுகிறது.
- இது உயர் இரத்த அழுத்த நோய், அதனைத் தடுத்தல், அதனைக் கண்டறிதல் மற்றும் அதனைக் கட்டுப்படுத்துதல் குறித்த ஒரு விழிப்புணர்வினைப் பரப்புவதற்காக வேண்டி கடைபிடிக்கப் படுகிறது.
- இதய நோய் ஏற்படுவதற்கான ஒரு முக்கிய காரணி உயர் இரத்த அழுத்தமாகும்.

- இத்தினமானது 2005 ஆம் ஆண்டு மே மாதத்தில் முதன்முதலாக கொண்டாடப்பட்டது.
- உயர் இரத்த அழுத்தமானது ஒரு "அமைதியான கொலையாளி" (சைலன்ட் கில்லர்) எனவும் அழைக்கப் படுகிறது.
- 2021 ஆம் ஆண்டிற்கான இந்நாளின் கருத்துரு, "உங்கள் இரத்த அழுத்தத்தை அளவிடுங்கள், கட்டுப்படுத்துங்கள், நீண்ட நாள் வாழுங்கள்" (Measure Your Blood Pressure Accurately, Control It, Live Longer) என்பதாகும்.





## ஐ.நா.வின் உலகளாவிய சாலைப் பாதுகாப்பு வாரம் (மே 17 – 23)

- ஐ.நா.வின் 6வது உலகளாவிய சாலைப் பாதுகாப்பு வாரமானது உலகம் முழுவதுமுள்ள நகரங்கள், சிறுநகரங்கள் மற்றும் கிராமங்களில் 30 கி.மீ/மணி எனும் ஒரு வேக வரம்பானது விதிக்கப் படவேண்டுமென்பதை அறிவிக்கிறது.
- ஐ.நாவின் உலகளாவிய சாலைப் பாதுகாப்பு வாரமானது உலக சுகாதார அமைப்பினால் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை ஏற்பாடு செய்யப்படும் ஒரு உலகளாவிய சாலைப் பாதுகாப்புப் பிரச்சாரமாகும்.
- இந்த ஆண்டிற்கான கருத்துரு, "Streets for Life" (வாழ்க்கைக்காகவே சாலைகள்) என்பது ஆகும்.
- இந்த ஆண்டின் சாலைப் பாதுகாப்பு வாரத்திற்கான முழக்கம் #Love30 என்பதாகும்.
- இந்தச் சாலைப் பாதுகாப்பு வாரமானது சாலைப் பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தச் செய்வதோடு சாலை விபத்துகளால் ஏற்படும் உயிரிழப்புகளின் எண்ணிக்கையைக் குறைப்பதற்கான சில மாற்றங்களை உருவாக்குவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.



## ஹோமோஃபோபியா, டிரான்ஸ்போபியா, பைஃபோபியா ஆகியவற்றிற்கு எதிரான சர்வதேச தினம் – மே 17

- உலகம் முழுவதுமுள்ள LGBT சமூகத்தினருக்கு எதிராக மேற்கொள்ளப்படும் பாகுபாடு, வன்முறை மற்றும் அடக்குமுறைக்கு எதிரான விழிப்புணர்வை அதிகப்படுத்துவதே இந்த நாள் அனுசரிக்கப்படுவதன் நோக்கமாகும்.
- ஹோமோஃபோபியா என்பது ஓர் பாலின ஈர்ப்புடையவர்கள் மீது வெறுப்பு காட்டுதலாகும்.
- டிரான்ஸ்போபியா என்பது திருநர்கள் மீது வெறுப்பு காட்டுவதாகும்.
- பைஃபோபியா என்பது இருபாலின மக்கள் மீது வெறுப்பு காட்டுதலாகும்.
- இத்தினத்தை நிறுவியர் லூயிஸ் ஜியார்ஜ்ஸ் டின் என்பவராவார்.





## சர்வதேச அருங்காட்சியக தினம் – மே 18

- அருங்காட்சியகங்கள் பற்றி மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஒவ்வொரு வருடமும் மே 18 ஆம் தேதியன்று சர்வதேச அருங்காட்சியக தினமானது கடைபிடிக்கப்படுகிறது.
- கலாச்சாரப் பரிமாற்றத்திற்கும் மக்களிடையேயான பரஸ்பர புரிதல், ஒத்துழைப்பு மற்றும் அமைதி ஆகியவற்றை மேம்படுத்துவதற்குமான ஒரு முக்கிய வழியாக அருங்காட்சியகங்கள் உள்ளன.



- 2021 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "அருங்காட்சியகங்களின் வருங்காலம் : மீட்டெடுத்தல் மற்றும் மறுசீரமைத்தல்" என்பதாகும்.

## உலக தேனீ தினம் – மே 20




- இந்த தினத்தில் தான் தேனீ வளர்ப்பின் முன்னோடியான அன்டோன் ஜான்சா அவர்கள் 1734 ஆம் ஆண்டில் ஸ்லோவேனியாவில் பிறந்தார்.
- சுற்றுச்சூழலில் தேனீக்கள் மற்றும் மற்ற மகரந்த சேர்ப்பிகள் ஆற்றும் பங்கினை பறைசாற்றுவதே தேனீ தினத்தின் ஒரு முக்கிய நோக்கமாகும்.
- உலகின் 33% உணவு உற்பத்தியானது தேனீக்களையே சார்ந்துள்ளது என்பதால் பல்லுயிர்ப் பெருக்கம், இயற்கையில் சுற்றுச்சூழலின் சமநிலை போன்றவற்றைப் பாதுகாப்பதிலும் மாசுபாட்டைக் குறைப்பதிலும் இவை முக்கியப் பங்கினைக் கொண்டவையாக திகழ்கின்றன.
- 2021 ஆம் ஆண்டிற்கான உலக தேனீ தினத்தின் கருத்துரு, "Bee Engaged : Build Back for Bees" (தேனீக்களுடன் இணைந்திருங்கள் : தேனீக்களுக்காக நல்ல கட்டமைப்பினை உருவாக்குங்கள்) என்பதாகும்.

## சர்வதேச தேநீர் தினம் – மே 21

- இந்தியாவின் பரிந்துரையின் பேரில் உலகம் முழுவதும் மே 21 ஆம் தேதியன்று சர்வதேச தேநீர் தினமானது கடைபிடிக்கப்படுகிறது.
- தேயிலை உற்பத்தியாளர்கள் மற்றும் தேயிலைப் பணியாளர்களின் நிலையை மேம்படுத்த முயற்சிப்பதே இந்த தினம் கடைபிடிக்கப் படுவதன் நோக்கமாகும்.
- சர்வதேச தேநீர் தினத்திற்கு ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் வேளாண் அமைப்பு அங்கீகாரம் வழங்கியுள்ளது.
- உலகெங்கும் பரவியுள்ள தேநீரின் ஆழமான கலாச்சார மற்றும் பொருளாதார முக்கியத்துவத்தைப் பற்றிய விழிப்புணர்வைப் பரப்புவதும் பசி மற்றும் வறுமையை போக்குவதில் அதன் முக்கியத்துவத்தினை மேம்படுத்துவதுமே இதன் நோக்கமாகும்.


## பேச்சுவார்த்தை மற்றும் மேம்பாட்டிற்கான கலாச்சாரப் பன்முகத் தன்மையின் உலக தினம் – மே 21




- இந்த தினமானது ஒவ்வோர் ஆண்டும் உலகம் முழுவதும் கடைபிடிக்கப்படுகிறது.
- உலகக் கலாச்சாரங்களின் செழுமையைக் கொண்டாடுவதும் அமைதி மற்றும் நிலையான மேம்பாட்டினை அடைவதில் ஒரு உள்ளார்ந்த நேர்மறை மாற்றமாக உலகின் பன்முகத்தன்மை விளங்குவது பற்றிய அதன் முக்கியத்துவத்தைப் பறைசாற்றுவதுமே இந்த தினத்தின் நோக்கமாகும்.
- 2001 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகளின் கல்வி, அறிவியல் மற்றும் கலாச்சார அமைப்பானது பாமியானின் (Bamiyan) புத்தர் சிலைகள் 2001 ஆம் ஆண்டில் சிதைக்கப் பட்டதை அடுத்து "கலாச்சாரப் பன்முகத்தன்மை மீதான பிரகடனத்தை" ஏற்றுக் கொண்டது.
- பிறகு 2002 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது தனது 57/249 தீர்மானத்தில் மே 21 ஆம் தேதியினைப் பேச்சு வார்த்தை மற்றும் மேம்பாட்டிற்கான கலாச்சாரப் பன்முகத் தன்மையின் உலக தினமாக அறிவித்தது.


## தேசிய தீவிரவாத எதிர்ப்பு தினம் – மே 21

- இந்தியாவில் தேசிய தீவிரவாத எதிர்ப்பு தினமானது இந்தியாவின் முன்னாள் பிரதமரான ராஜீவ் காந்தி அவர்களின் நினைவு நாளினை நினைவு கூறுவதற்காக அனுசரிக்கப் படுகின்றது.
- மேலும் மக்களிடையே அமைதி, நல்லிணக்கம் மற்றும் மனிதநேயம் பற்றிய தகவல்களை பரப்புவதற்கும் மக்களிடையே ஒற்றுமையை மேம்படுத்துவதற்கும் இந்த தினமானது கடைபிடிக்கப்படுகிறது.
- ராஜீவ் காந்தி அவர்கள் இந்தியாவின் இளம் பிரதமர் ஆவார்.
- இவர் இந்தியாவின் 6வது பிரதமராக நியமிக்கப்பட்டு 1984 ஆம் ஆண்டு முதல் 1989 ஆம் ஆண்டு வரை பிரதமராக நாட்டிற்குச் சேவை செய்தார்.
- இவர் 1991 ஆம் ஆண்டு மே 21 ஆம் தேதியன்று ஒரு மனித வெடிகுண்டின் மூலம் படுகொலை செய்யப்பட்டார்.
- V.P. சிங் அரசின் கீழ் மே 21 ஆம் தேதியினைத் தேசிய தீவிரவாத எதிர்ப்பு தினமாக மத்திய அரசு அறிவித்தது.




## அருகி வரும் இனங்களுக்கான தேசிய தினம் – மே 21

- அருகி வரும் இனங்களுக்கான தேசிய தினமானது ஒவ்வொரு வருடமும் மே மாதத்தின் மூன்றாவது வெள்ளிக் கிழமையன்று கடைபிடிக்கப் படுகிறது.
- இந்த வருடம் அருகி வரும் இனங்களுக்கான தேசிய தினமானது மே 21 ஆம் தேதியன்று வருகிறது.
- எத்தனை விலங்கினங்கள் அருகி வரும் நிலைக்குத் தள்ளப்படும் நிலையில் உள்ளன என்பதையும் முன்பு ஒரு காலத்தில் அமைதியாக நிலவிய ஒரு சுற்றுச்சூழலிற்கு காலநிலை மாற்றங்களின் கடும் விளைவுகள் எவ்வளவு இன்னல்களை விளைவிக்கின்றன என்பது பற்றியும் ஒரு மறுசீராய்வினை மேற்கொள்ளச் செய்வதற்கு இந்த தினமானது நமக்கு உதவுகிறது.




## உலகக் கடல் ஆமைகள் தினம் – மே 23

- கடல் ஆமைகள் பற்றியும் அவற்றின் வாழிடங்கள் பற்றியும் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக வேண்டி உலகக் கடல் ஆமைகள் தினமானது அனுசரிக்கப் படுகின்றது.

- 2000 ஆம் ஆண்டு முதல், “அமெரிக்க ஆமை மீட்பகம்” (American Tortoise Rescue) எனும் ஒரு இலாப நோக்கமற்ற அமைப்பானது இத்தினத்தை அனுசரிப்பதற்கான ஆதரவுகளை வழங்கி வருகின்றது.
- 2021 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, “Turtle Rocks!” என்பதாகும்.
- “உலகக் கடல் ஆமைகள் தினம்” எனும் சொற்கூறினை சுசன் டெல்லம் (Susan Tellem) என்பவர் வழங்கினார்.

## சர்வதேச மகப்பேறியல் புழை ஒழிப்பு தினம் – மே 23

- ஐக்கிய நாடுகள் அமைப்பானது இந்த தினத்தை 2013 ஆம் ஆண்டு முதல் அனுசரித்து வருகின்றது (United Nations International Day to End Obstetric Fistula).
- இது மகப்பேறியல் புழையை தடுத்தல் மற்றும் அதற்கு சிகிச்சை அளித்தல் போன்றவற்றிற்கான நடவடிக்கைகளை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- மகப்பேறியல் புழை என்பது வளர்ந்து வரும் நாடுகளில் பல சிறுமிகள் மற்றும் பெண்களைப் பாதிக்கின்ற, குழந்தை பிறப்பின் போது ஏற்படும் ஒரு நிலையாகும்.
- 2021 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, “பெண்களின் உரிமைகள் மனித உரிமைகளாகும்! மகப்பேறியல் புழையை தற்போதே ஒழித்தல்” (“Women’s rights are human rights! End fistula now!”) என்பதாகும்.

## காணாமல் போன குழந்தைகளுக்கான சர்வதேச தினம் – மே 25

- உலகளவில் இந்த தினமானது
    - காணாமல் போன குழந்தைகள்,
    - குற்றங்களினால் பாதிக்கப்பட்டவர்களை நினைவு கூறுதல்,
    - காணாமல் போனவர்களை தேடுவதற்கான தொடர் முயற்சி போன்றவற்றிற்காக அனுசரிக்கப் படுகிறது.
- ‘Forget me – not flower’ (என்னை மறந்தாலும் பூவை மறக்காதே) என்பதை ஒரு சின்னமாகக் கொண்டு, காணாமல் போன குழந்தைகள் தினமாக மே 25 ஆம் தேதியானது குறிப்பிடப் படுகின்றது.
- இந்த தினமானது 1983 ஆம் ஆண்டில் அமெரிக்க அதிபர் ரொனால்டு ரீகன் அவர்களால் அறிவிக்கப்பட்டது.

## உலக தைராய்டு தினம் – மே 25

- தைராய்டு சுரப்பியின் முக்கியத்துவம் பற்றியும் தைராய்டு சம்பந்தப்பட்ட நோய்களைத் தடுத்தல் மற்றும் அதன் சிகிச்சைப் பற்றியும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக உலக தைராய்டு தினமானது கடைபிடிக்கப் படுகிறது.
- இந்தத் தினமானது 2008 ஆம் ஆண்டில் நிறுவப் பட்டது.

- தொண்டைப் பகுதியில் ஒரு வண்ணத்துப் பூச்சியின் வடிவில் அமைந்த தைராய்டு சுரப்பியானது T3 (தைராக்சின்) மற்றும் T4 (டிரைஅயாடோதைரோனின்) போன்றவற்றை உற்பத்தி செய்கிறது.
- இது தைராய்டு தூண்டுதல் ஹார்மோன்களால் (TSH) பராமரிக்கப் படுகிறது.

## வெசாக் தினம் – மே 26

- உலகம் முழுவதும் மே 26 ஆம் தேதியன்று வெசாக் தினமானது அனுசரிக்கப்பட்டது.
- முழுநிலவு தினமான வெசாக் தினமானது உலகம் முழுவதும் உள்ள புத்தர்களால் புனித தினமாக அனுசரிக்கப் படுகிறது.
- இந்த தினத்தில் தான் கௌதம புத்தர் அவர்கள் ஞானம் பெற்றார்.
- இந்த தினமானது 2000 ஆம் ஆண்டு முதல் ஒவ்வோர் ஆண்டும் ஐக்கிய நாடுகளால் அனுசரிக்கப்பட்டு வருகின்றது.

## பெண்களின் ஆரோக்கியத்திற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான சர்வதேச தினம் – மே 28

- இந்த தினமானது 1987 ஆம் ஆண்டு முதல் ஒவ்வோர் ஆண்டும் உலகம் முழுவதும் அனுசரிக்கப் படுகின்றது.
- உலகெங்கிலும் உள்ள அனைத்துப் பெண்களுடைய பாலியல் மற்றும் மகப்பேறு சார்ந்த சுகாதாரம் மற்றும் உரிமைகளை மேம்படுத்துவதே இந்த தினத்தின் முக்கிய நோக்கமாகும்.
- இந்த தினமானது பெண்களின் மகப்பேறு சார்ந்த உரிமைகளுக்கான உலகளாவிய பிணையத்தினால் (Women's Global Network for Reproductive Rights) ஒருங்கிணைக்கப் படுகிறது.

## உலக மாதவிடாய் சுகாதார தினம் – மே 28

- மாதவிடாய் தொடர்பான சமூக களங்கங்களை மாற்றுவதே இந்த தினத்தின் முக்கிய நோக்கமாகும்.
- பெரும்பாலான பெண்களின் சராசரி மாதவிடாய் சுழற்சிக் காலம் 28 நாட்கள் என்பதாலும் அவர்களின் மாதவிடாய் காலம் 5 நாட்கள் என்பதாலும் மே 28 ஆம் தேதியானது தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது.
- எனவே மே மாதம் 28 ஆம் தேதியானது (28/5) உலக மாதவிடாய் சுகாதார தினமாக கடைபிடிக்கப் படுகிறது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "மாதவிடாய் சுகாதாரம் மற்றும் ஆரோக்கியம் ஆகியவற்றிற்கான நடவடிக்கை மற்றும் முதலீடு" (Action and Investment in Menstrual Hygiene and Health" என்பதாகும்.

## உலக பசி தினம் – மே 28

- உலகம் முழுவதுமுள்ள நீண்டகாலமாக பசியில் வாடும் 815 மில்லியன் மக்களைக் குறித்த விழிப்புணர்வை உலகெங்கிலும் பரப்புவதற்காக வருடந்தோறும் உலக பசி தினமானது அனுசரிக்கப் படுகிறது.
- மேலும் பசி மற்றும் வறுமைக்கான நீடித்த தீர்வினை கொண்டாடுவதையும் இந்த தினம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- உலக பசி தினத்திற்கான முன்னெடுப்பானது 2011 ஆம் ஆண்டில் The Hunger Project எனும் அமைப்பினால் தொடங்கப்பட்டது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Access Ends Hunger" (அணுகும் வசத் பசியினை ஒழிக்கும்) என்பதாகும்.




## சர்வதேச எவரெஸ்ட் தினம் – மே 29

- எவரெஸ்ட் சிகரத்தில் ஏறிய நேபாளத்தின் தென்சிங் நோர்கே மற்றும் நியூசிலாந்தின் எட்மண்ட் ஹிலாரி ஆகியோரின் நினைவாக சர்வதேச எவரெஸ்ட் தினமானது மே 29 ஆம் தேதியன்று அனுசரிக்கப் படுகின்றது.
- 1953 ஆம் ஆண்டில் இதே நாளில் தான் மனிதர்கள் முதன்முறையாக இந்த உயரத்தை அடைந்தனர்.
- 2008 ஆம் ஆண்டில், புகழ்பெற்ற மலையேறும் வீரரான ஹிலாரி உயிரிழந்ததை அடுத்து நேபாள அரசு இந்த நாளை சர்வதேச எவரெஸ்ட் தினமாக அனுசரிக்க முடிவு செய்தது.

## கோவா மாநில நிறுவன நாள் – மே 30

- 1987 ஆம் ஆண்டில் இதே நாளில் தான் கோவா இந்தியாவின் 25வது மாநிலமாக உருவாக்கப் பட்டது.
- இதற்கு முன்பாக டாமன் மற்றும் டையூ ஆகியவற்றுடன் சேர்த்து கோவாவும் ஒரு ஒன்றியப் பிரதேசமாக இருந்தது.
- 1961 ஆம் ஆண்டில் டிசம்பர் 19 ஆம் தேதியன்று இந்திய இராணுவமானது ஆபரேஷன் விஜய் என்ற ஒரு நடவடிக்கையின் மூலம் போர்ச்சுக்கீசியர் மீது போர் தொடுத்து வெற்றி பெற்றதன் வாயிலாக கோவா, டாமன் & டையூ தீவுகள் ஆகியவற்றை இந்தியாவுடன் இணைத்தது.




# இதரச் செய்திகள்

## DANTAK திட்டம்

- ❖ பூடானில் இத்திட்டம் தொடங்கப்பட்டு 60 ஆண்டுகள் நிறைவு பெற்று உள்ளது.
- ❖ 1961 ஆம் ஆண்டில் பூடானின் மூன்றாம் அரசர் மற்றும் முன்னாள் இந்தியப் பிரதமர் ஜவஹர்லால் நேரு தலைமையின் கீழ் DANTAK திட்டம் தொடங்கப்பட்டது.
- ❖ இத்திட்டம் பூடானில் சாலை மேம்பாடு, தகவல் தொலைத் தொடர்புப் பிணையங்கள் மற்றும் அது போன்ற மற்ற பிற உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கும் ஒரு நோக்கத்தோடு தொடங்கப் பட்டுள்ளது.
- ❖ இதனை அமல்படுத்தும் முதன்மை நிறுவனம் எல்லைச் சாலைகள் அமைப்பு (BRO – Border Roads Organisation) ஆகும்.

## சி.டி. மதிப்பு

- ❖ RT-PCR சோதனையின் சி.டி. மதிப்பு (CT Value) என்றால் Cycle Threshold Value (பயன்பாட்டு நிலையின் சுழற்சி மதிப்பு) என்று பொருள் ஆகும்.
- ❖ இந்த மதிப்பு ஒரு நோயாளி கொரோனாவால் பாதிக்கப்பட்டவரா (நேர்மறை) இல்லையா (எதிர்மறை) என நிர்ணயிக்கிறது.
- ❖ ஒரு நபர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளார் என்பதை நிர்ணயிக்க சி.டி. மதிப்பு 35 ஆக இருக்க வேண்டும் என இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகம் (ICMR) சமீபத்தில் அறிவித்தது.
- ❖ ஒரு நபரின் சி.டி. மதிப்பு 35 என்ற அளவிற்குக் குறைவாக இருந்தால் அவர் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளவர் ஆவார்.

- ஒருவேளை சி.டி. மதிப்பு 35 என்ற அளவிற்கு மேல் இருந்தால் அந்த நபர் கொரோனா தொற்றால் பாதிக்கப் படாதவர் ஆவார்.


## பதப்படுத்தப்பட்ட கர்ப்பிணிப் பெண்ணின் உடல்

- போலந்து நாட்டின் ஆராய்ச்சியாளர்கள் சமீபத்தில் முதலாவது பதப்படுத்தப்பட்ட கர்ப்பிணிப் பெண்ணின் உடலினைக் கண்டுபிடித்துள்ளனர்.
- பதப்படுத்தப்பட்ட உடலில் அறிவியலாளர்கள் ஒரு கருவைக் கண்டறிந்தது உலக வரலாற்றில் இதுவே முதல்முறையாகும்.
- இந்த பதப்படுத்தப்பட்ட உடல் தேபேசிலுள்ள ராயல் டோம்பில் (ராஜ கல்லறை) கண்டெடுக்கப் பட்டது.
- தேபீஸ் எனும் இடம் நைல் நதியோரத்தில் அமைந்த ஒரு பண்டைய எகிப்து நகரமாகும்.
- 1826 ஆம் ஆண்டில் இந்த உடல் முதலில் வார்சாவிற்கு கொண்டு வரப்பட்டது.



## புவியினுடைய அச்சில் ஏற்படும் மாற்றத்தில் அதிகரிப்பு

- அமெரிக்க புவிசார் இயற்பியல் ஒன்றியம் மேற்கொண்ட ஒரு சமீபத்திய ஆய்வில் பனிப்பாறை உருகும் நிகழ்வானது புவியினுடைய அச்சில் ஏற்படும் மாற்றத்தை அதிகரிக்கிறது எனக் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.
- காலநிலை மாற்றங்கள் பனிப்பாறை உருகுதலை அதிகரித்துள்ளதாகவும் இதன் காரணமாக புவியின் துருவங்கள் புதிய திசைகளில் நகர்வதாகவும் இந்த புதிய ஆய்வில் கூறப்பட்டுள்ளது.



- புவியின் சுழல் அச்சானது ஆண்டுக்கு சுமார் 10 செ.மீ. நகர்வதாக நாசா கூறுகிறது.
- வட துருவமானது கிழக்கு நோக்கி நகர்வதற்கு முக்கிய காரணம் நீர் மண்டலங்களில் ஏற்படும் மாற்றங்களாகும்.

## SUTRA மாதிரி

- கான்பூர் மற்றும் ஹைதராபாதில் அமைந்துள்ள இந்திய தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்களின் அறிவியலாளர்கள் இந்தியாவில் கோவிட் பற்றிய தரவுகளைக் கணிப்பதற்காக, "எளிதில் பாதிக்கப்படக் கூடிய, கண்டறியப்படாத, சோதிக்கப்பட்ட (நேர்மறை) மற்றும் நீக்கப்பட்ட அணுகுமுறை" (Susceptible, undetected, Tested (positive) and Removed Approach - (SUTRA) எனும் ஒரு மாதிரியைப் பயன்படுத்தியுள்ளனர்.
- இந்த மாதிரியானது பெருந்தொற்றின் போக்கினைக் கணிப்பதற்காக மூன்று முக்கிய அளவுருக்களைப் பயன்படுத்துகிறது.
- முதலாவது அளவுருவானது ஒரு நாளைக்கு எத்தனை நபர்கள் பாதிக்கப்படுகின்றனர் என கணக்கிடும் பீட்டா (அ) தொடர்பு வீதமாகும் (beta or contact rate).
- இது தொற்று ஏற்பட்ட நபர்கள் தங்களது நோய்த் தொற்று காலங்களில் எத்தனை நபர்களுக்கு வைரஸைப் பரப்புகின்றனர் என்பதை அளவிடும் RO என்ற மதிப்புடன் தொடர்புடையதாகும்.
- இரண்டாவது அளவருவானது பெருந்தொற்றினால் மக்கள் எந்த அளவிற்கு பாதிக்கப் படுகின்றனர் என்பதை கணக்கிடும் "எல்லை (reach)" என்பதாகும்.
- மூன்றாவது அளவுருவானது கண்டறியப்பட்ட மற்றும் கண்டறியப்படாத தொற்றுகளுக்கிடைப்பட்ட விகிதமான எப்சிலான் (epsilon) என்பதாகும்.

## பனிச் சிறுத்தையின் வாழ்விடங்கள்

- பனிச் சிறுத்தையின் 70 சதவிகித்திற்கும் மேலான வாழ்விடங்கள் இன்னும் கண்டறியப்படாமல் உள்ளதாக உலக வனவிலங்கு நிதியமானது சமீபத்தில் தெரிவித்துள்ளது.
- "பனிச் சிறுத்தையின் வாழ்விட வரம்புகளைப் பற்றிய புரிதல் நிலையின் தெளிவான பரவலான மறுசீராய்வு" (A spatially explicit review of the state of knowledge in the snow leopard range) எனும் அறிக்கையின்படி இது கூறப்பட்டுள்ளது.
- பெரும்பாலான பனிச் சிறுத்தை தொடர்பான ஆராய்ச்சிகளை நேபாளம், இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகளும் அதனையடுத்த நிலையில் மங்கோலியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளும் மேற்கொண்டுள்ளன.
- உலகில் 4000 பனிச் சிறுத்தைகள் மட்டுமே எஞ்சியிருக்கக்கூடும்.
- அவற்றின் வாழ்விடங்கள் அழிக்கப்படுவதாலும் சமுதாயத்துடனான மோதல் மற்றும் வேட்டையாடுதல் போன்ற காரணங்களாலும் தொடர்ந்து அவை அச்சுறுத்தல்களை எதிர்கொள்கின்றன.
- இந்தியாவில் பனிச் சிறுத்தைகள் அருணாச்சலப் பிரதேசம், சிக்கிம், உத்தரகாண்ட், இமாச்சலப் பிரதேசம், ஜம்மு & காஷ்மீர் ஆகிய பகுதிகளில் காணப்படுகின்றன.

- 2009 ஆம் ஆண்டு முதல் இந்திய அரசானது பனிச் சிறுத்தை (Project Snow Leopard) திட்டத்தினை மேற்கொண்டு வருகிறது.



## வெள்ளைப் பூஞ்சை நோய்

- வெள்ளைப் பூஞ்சை எனும் தொற்றுநோய் மக்களை தாக்குவதாகக் கண்டறியப் பட்டு உள்ளது.
- இது கருப்புப் பூஞ்சை நோயை விட மிகவும் ஆபத்தானதாகும்.
- குறைவான நோய் எதிர்ப்பு சக்தியினாலோ அல்லது இந்த மாதிரியான பூஞ்சைகள் காணப்படும் பகுதிகளைத் தொடுவதினாலோ இந்த வெள்ளைப் பூஞ்சைத் தொற்று ஏற்படுகிறது.
- சர்க்கரை நோயாளிகள், புற்றுநோயாளிகள் மற்றும் நீண்ட காலமாக மருந்து உட்கொள்பவர்கள் போன்றவர்களுக்கு இந்த நோய்த் தொற்று ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகமாகும்.
- ஆக்சிஜன் உதவியுடன் சிகிச்சை பெறும் கொரோனா வைரஸ் நோயாளிகளை இந்த வெள்ளைப் பூஞ்சை நோய்த் தொற்று தாக்குகிறது.
- இந்த நோயாளிகளின் நுரையீரலை இந்த நோயானது நேரடியாகத் தாக்குகிறது.
- வெள்ளைப் பூஞ்சை நோய்த் தொற்று ஏற்பட்டவர்கள் கொரோனாத் தொற்றின் அறிகுறிகளையே கொண்டிருப்பர், ஆனால் கொரோனா சோதனையில் எதிர்மறை முடிவையே அவர்கள் கொண்டிருப்பர்.
- இந்தத் தொற்றினை சிடி ஸ்கேன் (அ) X-கதிர் ஆய்வு மூலம் கண்டறிய இயலும்.
- வெள்ளைப் பூஞ்சை நோயானது பாதிக்கப்பட்ட நபரின் நுரையீரல், நகங்கள், தோல், வயிறு, சிறுநீரகம், மூளை, உடலின் அந்தரங்க பாகங்கள் மற்றும் வாய் போன்ற பகுதிகளைப் பாதிக்கும்.
- சுற்றுப்புறங்களை தூய்மையாக வைத்திருப்பதன் மூலம் இந்த வெள்ளைப் பூஞ்சை நோய்த் தொற்றினைத் தடுக்க இயலும்.
- மேலும் ஆக்சிஜன் (அ) செயற்கை சுவாசக் கருவிகளை முறையாக சுத்தப்படுத்தச் செய்யவும் வேண்டும்.

## மஞ்சள் பூஞ்சை நோய்

- கருப்பு மற்றும் வெள்ளைப் பூஞ்சை நோய்களை அடுத்து சமீபத்தில் கண்டறியப்பட்ட மஞ்சள் பூஞ்சைத் தொற்றானது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.
- மஞ்சள் பூஞ்சையானது ஆரம்பத்தில் சுற்றுப்புறத்தில் காணப்படும் பூஞ்சையினால் உருவாக்கப் படுகிறது.
- இது சோம்பல், தடிப்புகள், தோலின் மீது எரியும் உணர்வு போன்ற அறிகுறிகளுடன் காணப்படும்.
- இது உடலின் உள்ளுறுப்புகளுள் நுழைந்து அவற்றின் மொத்தச் செயல்பாட்டினையும் பாதிக்கும்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★